# ஆண்டறிக்கை
# 2014

மத்திய சுற்றாடல் அதிகார சபை

சுற்றாடல் அமைச்சு

# தொலை நோக்கு

*“உன்னதமான சேவையினூடாக*

*சுத்தமான மற்றும்*

*பசுமையான*

*சுற்றாடல்”*

# அரும்பணி

*“மக்கள் பங்கேற்பு*

*சட்ட அமுலாக்கம்*

*உயர் தொழில்நுட்ப இடையீட்டுதவி*

*அத்துடன்*

*சுற்றாடல் கல்வியின் மூலம்*

*சுற்றாடலின் மேன்மையைப் பாதுகாத்துக்*

*கையாளும் தேசத்தின் முன்னோடி”*

# முன்னுரை

2014ஆம் ஆண்டுக்கான இந்த அறிக்கை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரிவுகள்/அலகுகள் 15, 09 மாகாண அலுவலகங்களின் பணிப்பாளர்கள், பிரிவுத் தலைவர்கள் மற்றும் சுற்றாடல் சபையினால் வழங்கப்பட்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றங்களும் அவை சம்பந்தமான தகவல்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. தலைமை அலுவலகத்தின் பிரதான பிரிவுகள்/அலகுகள் மற்றும் மாகாண அலுவலகங்களின் முன்னேற்றங்கள் ஒழுங்கின்படி தொகுக்கப்பட்டுள்ளன.

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் பிரகாரமும் கூட்டுத்திட்ட அறிவுரைப்புகளின் பிரகாரமும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முன்னேற்றங்கள், வருடாந்த கணக்கு அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வெளியிட வேண்டியதுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவும் வேண்டும்.

இந்த ஆண்டறிக்கையைத் தயாரிப்பதற்காக அந்தந்த பிரிவுகள்/அலகுகள் மாகாண அலுவலகத் தலைவர்கள் மற்றும் கருத்திட்டப் பணிப்பாளர்கள் தேவையான தகவல்களை வழங்கி நல்கிய ஒத்துழைப்பிற்கும் பங்களிப்புக்கும் கண்காணிப்பு பிரிவு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

திட்ட, கண்காணிப்பு பிரிவு

# 2014 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை பற்றிய தலைவரின் செய்தி

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின்(ம.சு.அ) ஆண்டிறிக்கையை சமர்ப்பிப்பதில் நான் மகிழ்சியடைகிறேன்.இந்த கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட கணக்குகள் 2014 டிசம்பர்31 ஆம் திகதி முடிவடைந்த நிதி ஆண்டுக்கான செம்மதி ஐந்தொகை,காசுப் பாச்சல்கூற்று மற்றும் கணக்காயவாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது சுழலியல் முக்கியத்துவங்ளை நாட்டின் துரித அபிவிருத்தி செயற்பாடுகளுடன் ஒருங்கிணைக்கும் மத்திய அமைப்பு என்பதன் அடிப்படையில் அதன் முயற்ச்சிகளை பல்வேறு பிரிவுகளின் கீழ் தொடர்ந்தது.

சூழலியற் தாக்கங்களை குறைக்கும் அதே வேளையில் நாட்டின் துரித அபிவிருத்தி செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் நடைமுறையிலுள்ள சு.தா.ம( EIA/IEE) ஒழுங்குவிதிகளை நவீனமயப்படுத்தியுள்ளது. ஆகையால். சு.தா.ம( EIA/IEE) ஒழுங்குவிதிகள் மீலாய்வுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் இறுதியாக்கப்பட்டு அங்கீகாரம் பெறும் வகையில் சட்ட வரைவுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.மேலும், ஜப்பான் மற்றம் இலங்கைக்கு இடையிலான சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA) பற்றிய ட்டுவினிங்(Twining)நிகழ்ச்சித்திட்டமானது ஆசிய சுற்றாடல் இணக்கப்பாடு மற்றும் வலுவூட்டல் வலையமைப்பு(AECEN) ஆகியவற்றுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டதுடன். அத்த நிகழ்ச்சித்திட்டம் 2014ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இடம்பெற்றது.

நீர் நிலைகளின் தரத்கை பேணுதல் மக்களுக்கு நன்மையளிக்கக் கூடியதாகவுள்ளதால் அச்செயற்பாடானது மிகவும் அவசியமான விடயமாக கருதப்படுகின்றது.ஆயினும்,கைத்தொழிற்சாலை கழிவுகளை முறையற்ற விதமாக அகற்றுவதால் நீர் வளங்கள் தொடர்ந்தும் துரித கதியில் சீரழிவுக்கு உட்பட்டுவருகின்றன. ஆகையால், இவ்வாண்டில் ம.சு.அ யின் ஆய்வுகூடமானது இலங்கையிலுள்ள பாரிய நீர் நிலைகளில் இருந்து மாதிரிகளை சேகரித்து அவற்றை பகுப்பாய்வுக்கு உட்படுத்தக் கூடியதாக இருக்கும்.இவை வர்த்தக அடிப்படை,ஒழுங்கான கண்காணிப்பு மற்றும் சட்டத் தேவைகள் ஆகியவற்றிக்காக EPL ற்கு சேகரித்த கைத்தொழிற்சாலை கழிவுகள் மற்றும் பல்வேறு நீர் நிலைகளின் மேற்பரப்பு மற்றும் நிலத்தடியில் இருந்து பெற்றுக்கொண்ட நீர் மாதிரிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

2014ஆம் ஆண்டில். மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது இயற்கை வளங்கள் முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து முகவராண்மைகளுடன் இணைந்து இயற்கை வளங்கள் முகாமைத்துவத்துவம் பற்றிய மூன்று முகவராண்மைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடாத்தியதுடன் அக்குழுவானது நிலத்து நீர் முகாமைத்துவம் மற்றும் நீர் தேக்கப்பகுதிகளை பாதுகாத்தல் பற்றிய பிரதான தீர்மானங்களை எடுத்தது.அதற்கிணங்க,வர்த்தக தேவைகளுக்காக நிலத்து நீரை பிரித்தெடுத்தலை ஒழுங்கமைக்கும் வகையில் நீர் வளங்கள் சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுங்குவிதிகள் வரைவு செய்யப்பட்டதுடன் அவை அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்று வர்த்தமானியில் வெளியிடுவதற்கு

அவசியமாகும் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க அமைச்சு மற்றும் நீர் வழங்கள் சபை ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டன.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது மேற்கொண்ட மற்றுமொரு மிகவும் முக்கியமான விடயமானது யாதெனில் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள்/கைத்தொழில்கள் பற்றிய புவிசார் இடம் பற்றிய தரவுத் தளமொன்றை விருத்தி செய்யம் பொறுப்பை ஏற்றுக்கொண்டதாகும். பங்குதாரர்கள் இந்த தரவுத்தளத்தை பயன்படுத்தி இலங்கையில் அமைந்துள்ள மாசுபடுத்தும் கைத்தொழில்களின் தற்போதைய பங்களிப்பின் நிலைமையை மீயாள்வு செய்யலாம்.

நாட்டில் இலத்திரனியல் பொருட்களுக்கு உயர் கேள்வியொன்று காணப்படுவதால், கடந்த சில வருடங்களில் இலத்திரனியல் பொருட்கழிவுகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளன. இந்த இலத்திரனியல் பொருட்கள் தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்களை கொண்டள்ளதால் முறையான கவனிப்பு அவசியமாகின்றது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது தனது ஒழுங்கமைப்பு வகிபாகத்திற்கு புறம்பாக முன்னுரிமை அடிப்படையில் கவனத்தையும் செலுத்தி இலத்திரனியல் பொருட்கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கு பல வெற்றிகரமான முன்னெடுப்புகளை கடந்த ஐந்து வருட காலத்தில் மேற்கொண்டள்ளது. தனியார் மற்றும் அரசாங்கத் துறை கம்பனிகளுடனான தேசிய ஒருங்கிணைப்பு பங்குடமை நிகழ்ச்சித்திட்டம், நிகழ்வுகளை ஒவ்வொன்றாக வெளியிலெடுத்தல், பல்வேறு துறைகளின் அடிப்படையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன அவ்வாறான சில முன்னெடுப்புகளாகும்.

பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் கல்வியூட்டல் ஆகியவற்றின் ஊடாக சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் அவர்களின் பங்குபற்றலை ஊக்குவித்து சுற்றாடல் பற்றிய கரிசனையை மேம்படுத்தும் பொறுப்பை மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது தன்னகத்தே கொண்டுள்ளது. எனவே, மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது சுற்றாடல் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்கள் மேல் ஏற்படுத்தும் பல்வேறு கல்விசார் மற்றும் விழிப்னுணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. மேலும், சிறிய தீவுகள் மற்றும் காலநிலை மாற்றம் என்ற தொனிப் பொருளின் கீழ் உலக சுற்றாடல் தினம் -2014 ஐ கொழும்பு ரோயல் கல்லூரியில் 2014 ஜுன் 05ஆம் திகதி கொண்டாடியது. கழிவு முகாமைத்துவம் தொடர்பாக வீடுகள், வர்த்தக தாபனங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகியவற்றிலிருந்து இருந்து கழிவுகளை சேகரித்தல் உள்ளூர் அதிபாரசபைகளின் பிரதான பொறுப்புகளில் ஒன்றாகும்.இச்செயற்பாட்டிற்கு பற்றாக்குறையாகவுள்ள கழிவு போக்குவரத்து வானங்கள் தடையாகவுள்ளதால் இக்குறைபாடானது துரித கதியில் நிவர்த்தி செய்யப்படும். மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கீழ் நிறைவேற்றப்பட்ட பிலிசறு கருத்திட்டமானது 60 ட்ரெயிலர்களுடனான 60 டரக்டர்கள்,06 ஸ்கிட் ஸ்டியர் லோடர்கள் மற்றும் 03 அமுக்கிகள்(compactors) ஆகியவற்றை கொள்வனவு செய்து அவற்றை உள்ளூர் அதிகாரசபைகளுக்கு இடையில் விநியோகம் செய்தது. மேலும். 21 நொறுக்கும் இயந்திரங்கள் கொள்வனவு செய்து உள்ளூர் அதிகாரசபைகளின் கூட்டுப் பசளை அமைவிடங்களின் பயனுறுதித்தன்மையை மேம்படுத்தும் வகையில் அவற்றுக்கு வழங்கியது.

எமது நாளாந்த வாழ்கையை கொண்டு நடாத்துவதற்கு பிலாஸ்டிக் உற்பத்திகள் அத்தியாவசியமாக இருக்கின்ற போதும், அவற்றின் எளிய உக்கும் இயல்பின் காரணமாக சுற்றாடலுக்கு பாரிய தீங்கை வியளவிக்கும் காரணிகளில் ஒன்றாக பிலாஸ்டிக் உருவெடுத்துள்ளது. ஆகையால், மத்திய சுற்றாடல் அதிகாரசபை தேசிய நுகர்வுக்குப் பின்னரான கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தை (NPCPWMP) 2014 ஆண்டு நடைமுறைப்படுத்தி நுகர்வுக்குப் பின்னரான கழிவு முகாமைத்துவத்தை சுற்றாடல் சிநேகபூர்வமான முறையில் மேற்கொண்டது. இக்கருத்திட்டம் பிலாஸ்டிக்/பொலிதீன் கழிவு மீள்சுழற்சி கைத்தொழிற்துறைக்கு உதவியளிக்கும் அதேவேளையில் நாட்டில் சாத்தியக்கூறு செயற்பாட்டில் சிறந்து விளங்கும் உள்ளூர் அதிகாரசபைகளின் பிலாஸ்டிக்/பொலிதீன் கழிவு களஞ்சிய வசதியை மேம்படுத்தவும் வழிசமைக்கின்றது.மேலும் இக் கருத்திட்டமானது பிலாஸ்டிக்/பொலிதீன் கழிவு மீள்சுழற்சி செயற்பாட்டு இயலுமையை (தற்போதைய) 40% இல் இருந்து 2016 ஆம் ஆண்டளவில் 80% வரை அதிகரிப்பதற்கான நடைமுறை ஒன்றை மேற்கொண்டு வருகின்றது.

அரசாங்கமும் தனியார் துறையும் பல்வேறு அபிவிருத்தித் கருத்திட்டங்களை முன்னெடுக்கும் அதேவேரளயில் வழமையாக, நாம் (ம.சு.அ) சுற்றாடல் நிலைத்தன்மையை முகாமைத்துவம் செய்வதற்காக பல்வேறு உபாயங்களை பின்பற்றுகின்றோம். அபிவிருத்தியாளர்கள் சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு ம.சு.அ சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட செயல்நுனுக்க மாதிரியை பின்பற்றலாம்.

மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் (ம.சு.அ) நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு பங்களிப்பு செய்தமைக்காக ம.சு.அ சபையின் பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ பணியாட்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவிக்க விரும்புகின்றேன்.மேலும், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முகாமைத்துவ அலுவல்களில் எனக்கு வழங்கிய ஒத்துழைப்பு,வழிகாட்டல், ஆலோசனை மற்றும் ஆதரவு ஆகியவற்றுக்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் மற்றும் சுற்றாடல் கவுன்சில் உறுப்பினர்கள் ஆகியோருக்கும் நன்றியை தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்கின்றேன்.மேலும், சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் செயலாளர்,மேலதிக செயலாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் அவர்கள் நல்கிய ஒத்துழைப்பு,கவனம் மற்றும் ஆலோசனை தொடர்பில் எனது பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன். மேலும், சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் கௌரவ சுசில் பிரேம ஜயந்த அவர்கள் வழங்கிய சிறந்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டட்கள் ஆகியவற்றுக்காக அவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தலைவர்

## மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நிறுவனக் கட்டமைப்பு



## மத்திய சுற்றால் அதிகார சபையின் சிரேஷ்ட முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| திரு.டீ.டபிள்யூ. பிரதாபசிங்க | தலைவர் | கலைமாணி (பொது) |
| திரு. வைத்திய சாரங்க அழஹப்பெரும | பணிப்பாளர் தலைமை அதிபதி | ஏம்.பி.பி.எஸ்., இதழியல் டிப்ளோமா (இலத்திரனியல் ஊடகம்) |
| திரு.கே.எச்.முத்துக்குடஆரச்சி | பிரதிப் பணிப்பாளர் தலைமை அதிபதி (சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| பொறி. ஜே.எம். யூ. இந்திரரத்ன | பிரதிப் பணிப்பாளர் தலைமை அதிபதி (ம.வ.அ, நிருவாகம் மற்றும் நிதி) | வர்த்த நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம், பட்டய பொறியியலாளர் FIT. (SL) MIE (Aus) |
| திரு யூ. கே. டீ. ஜே. ஜயசிங்ஹ | பதில்/ பணிப்பாளர் தலைமை அதிபதி (சுற்றாடல் முகாமைத்துவ, மதிப்பீடு) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| திரு.எம்.ஜே.ஜே. பெர்னாந்து | பிரதிப் பணிப்பாளர் தலைமை அதிபதி (சுற்றாடல் கல்வி, வழிப்புணர்லு) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி, பட்டப் பின்படிப்பு டிப்ளோமா (RS & GIS) |
| திரு. எம். கே. எஸ். நானாயக்கார | பணிப்பாளர் (நிதி) | வணிக முதுமாணி (சிறப்பு) கணக்கீட்டு நிறுவன அங்கத்தவர். பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அதிகாரம் பெற்றவர் |
| திருமதி கே. டி. சில்வா | பணிப்பாளர் (சுற்றாடல் தாக்க மதிப்பீடு) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| திரு. எம். எஸ் ஏ.ஈ திஸ்மல்பொல | பணிப்பாளர் (ம.ச.அ.) අධ්‍යක්ෂ (මා.ස.සං./ රාජකාරී ආවරණ, පරිපාලන) | சட்டத்தரணி, மனித வள முகாமைத்துவம் பற்றிய பட்டப் பின்படிப்பு டிப்ளோமா |
| திரு. எம். ஏ. ஏ. என் ஹேமகுமார | பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் விசேட கருத்திட்டங்கள்) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| திரு. நீல் பெரேரா | பணிப்பாளர் (சு கல்வி மற்றும் வழிப்பூட்டல்) | கலைமாணி (சிறப்பு), கலை முதுமாணி (பொருளியல்) முகாமைத்துவ டிப்ளோமா |
| மனுஷா விமலசேன | பணிப்பாளர் (சட்டம்) | சட்டமாணிப் பட்டம் (இலங்கை), சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு, (சிங்களம்/ஆங்கிலம்) சத்தியப்பிரமாண ஆணையாளர், கம்பனிச் செயலாளர் |
| திரு.ரீ.எம்.ஏ.எஸ்.கே.ரொட்றிகு | பணிப்பாளர் (இயற்கை வள முகாமைத்துவம், மேற்பார்வை) | கலைமாணி, கலைமுதுமாணி (காட்டியல்) |
| கலாநிதி திரு ஆர். எம். எஜ. ரத்நாயக்க | பணிப்பாளர் (சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு) | பட்டய இரசாயவிளலாளர், இரசாயனவியல் டிப்ளோமா (ரோக்கியோ இரசாயனவியல் நிறுவனம் - யப்பான்) விஞ்ஞான முதுமாணி (சிறப்பு) கலாநிதி |
| திருமதி வசந்த விஜேசிங்க | பணிப்பாளர் (ஆய்வுகூடச் சேவைகள்) | விஞ்ஞானமாணி (இரசாயனவியல் சிறப்பு) விஞ்ஞான முதுமாணி (பகுப்பாய்வு இரசாயனவியல்) M.I.chem., பட்டயம் பெற்ற இரசாயனர். |
| திரு.ஜீ.ஏ.வீரசுந்தர | பணிப்பாளர் (கழிவுப்பொருள் முகாமைத்துவம்) | விஞ்ஞான முதுமாணி, மெய்யியல் |
| திரு.ஆர். வல்பொல | பணிப்பாளர் (பிலிசறு கருத்திட்டம்) | கலைமாணி (சிறப்பு), கலைமுதுமாணி சமூகவியல்) |

| | | |
|---|---|---|
| திருமதி குமாரி குலதிலக | பிரதிப் பணிப்பாளர் (திட்ட, மேற்பார்வை) | கலைமாணி |
| திரு சுனில் டி சில்வா | நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர் / பகுப்பாய்வாளர் | விஞ்ஞானமாணி, பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (கனணி தொழில்நுட்பம்) MBCS, CITP |
| திருமதி டீ. விதானகே | பணிப்பாளர் (கைத்தொழில் உறவுகள்) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி (சுற்றாடல் முகாமைத்துவம்), பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (சூழலியல்) |
| திருமதி ஏ. சீ. பீ. தாபரே | தலைமை நூலகர் | கலைமாணி, விஞ்ஞான முதுமாணி, பட்டய நூலகர் |
| திருமதி யூ. விதானஆரச்சி | உள்நிலை கணக்காளர் | கணக்கீட்டு நிறுவன அங்கத்தவர், பட்டயக் கணக்காளர், நிறுவக அதிகாரம் பெற்றவர்.HDM |
| திரு. கே. ஜீ. ரீ. என் கிரிஎல்ல | பணிப்பாளர் (மத்திய மாகாணம்) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| திரு.கே.ஏ.பீ. வலிகன்னனே | பணிப்பாளர் (சபரகமுவ மாகாணம்) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி, கலைமாணி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (சூழலியல்) மனித வள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் டிப்ளோமா |
| திரு எம் சிவகுமார் | பணிப்பாளர் (கிழக்கு மாகாணம்) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| திரு.எச்.எஸ்.பிறேமசந்திர | பணிப்பாளர் (கம்பஹா மாவட்டம்) | விஞ்ஞானமாணி கௌரவ (சிறப்பு) கலைமாணி பட்டய சூழலியலாளர் M.I.Biol, MIEPSL, MPMI (US) |
| திரு என். எஸ. கமகே | பணிப்பாளர் (மேல் மாகாணம்) | விஞ்ஞானமாணி, தத்துவமாணி |
| திரு சுசந்த வெதகே | பி.பணிப்பாளர் (ஊவா மாகாணம்) | விஞ்ஞானமாணி |
| திருமதி சமன்தா மலேபதிரண | பிரதிப் பணிப்பாளர் (தென் மாகாணம்) | விஞ்ஞானமாணி, விஞ்ஞானமுதுமாணி |
| திரு.ஜீ.எம்.கே. பெரேரா | பிரதிப் பணிப்பாளர் (வடமத்திய மாகாணம்) | விஞ்ஞானமாணி, விஞ்ஞானமுதுமாணி (காட்டியல்) பட்டப்பின் டிப்ளோமா (சூழலியல்) |
| திருமதி விஜிதா சத்தியகுமார் | உதவிப் பணிப்பாளர் - வட மாகாணம் | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (சுழலியல்) |
| திரு.டீ.எம்.கே. திசாநாயக்க | ப.க. பிரதிப் பணிப்பாளர் (வடமேல் மாகாணம்) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |

# பொருளடக்கம்

1.0. மத்திய சுற்றாடல் அதிகார சபை ........ 1
1.1.அறிமுகம் ........ 1
1.2. நோக்கங்கள் ........ 1
1.3. தத்துவங்கள், பணிகள், பொறுப்புக்கள் ........ 1
1.4. அதிகாரசபையின் உறுப்பினர்கள் ........ 2
1.5 சுற்றாடல் மன்றம் ........ 3
2.0. அதிகாரசபையின் பொறுப்புகளும் பணிகளும் ........ 8
3.0.சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவு ........ 16
3.1சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு ........ 16
3.1.2 கொள்கை மேம்பாடு ........ 18
3.1.3 சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல். ........ 19
3.1.4 சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுக்கான விசேட கருத்திட்டங்கள் ........ 22
3.2.ஆய்வுகூடம் ........ 25
3.3 கழிவுப்பொருள் முகாமைத்துவ அலகு ........ 39
4.0.சுற்றாடல் முகாமைத்துவ, மதிப்பீட்டுப் பிரிவு ........ 43
4.1 சுற்றாடல் தாக்க மதிப்பீடு (சு.தா.ம) அலகு ........ 43
4.1.3.2 நீர்வள மற்றும் நீர்ப்பாசனத் துறை சார்ந்த மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு ஆய்வு ........ 54
4.2. இயற்கைவள முகாமைத்துவ, கண்காணிப்பு அலகு ........ 55
4.3. ஆராய்ச்சி, அபிவிருத்தி அலகு ........ 66
5.0.சட்ட அலகு ........ 75
6.0.சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வு பிரிவு ........ 81
6.1 அமைச்சின் நிதி ஒதுக்கீட்டைக்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ........ 81
6.2 திறைசேரியின் நிதியைக்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் (மீண்டெழும், நிதி) ........ 81
6.1 பிற நிகழ்ச்சித்திட்டங்கள் ........ 82
6.2.3 அச்சு ஊடகம் ........ 85
6.2.4 சொபாகெத்த வானொலி நிகழ்ச்சித்திட்டம் ........ 85
6.3 ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள் ........ 99
7.0. திட்டமிடல், கண்காணிப்பு பிரிவு ........ 104
8.0.முறைப்பாட்டு அலகு ........ 108
9.0. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பன்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் ........ 115
9.1 மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரங்களை மாகாண அலுவலகங்களுக்குப் பன்முகப்படுத்தல். ........ 115
9.3. மாவட்ட சுற்றாடல் சட்டங்களை வலுப்படுத்தும் குழு (னுநுடுநுஊ) ........ 116
10.0. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதேசமயமாக்கல் வேலத்திட்டம். ........ 117

10.3.புதிய கைத்தொழில்களுக்கென சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை விநியோகித்தல் ....................... 119

10.4. சுற்றாடல் மாசுபடுதல், அதனாலான விளைவுகள், இயற்கை வளங்களின் மிகைப் பயன்பாடு தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகளைத் தீர்த்தல். ........................................................................ 121

10.5.ஐஎஸ்ஓ 14000 தரச் சான்றிதழ் தொடர்பில் மேல்மாகாண அலுவலகத்தின் பங்களிப்பு ..................... 123

10.6.சுற்றாடல் முகாமைத்துவம் ........................................................................................................... 124

11.0 மத்திய சுற்றாடல் அதிகார சபையின் விசேட கருத்திட்டங்கள் ...................................................... 129

11.1 பாவனைக்குப் பிற்பட்ட பிளாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் ................... 129

11.2 சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் ...................................................................................... 138

11.3. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆய்வுகூடங்களைப் பயன்படுத்தி அதனூடாக நாடெங்கிலும் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தல். ................................................ 145

11.4.தொம்பே மாளிகாவத்தை பிரதேசத்தில் அமைக்கப்படும் ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் ........................................................................................................................................ 145

11.5 இலங்கையில் திண்மக் கழிவுப் பொருள் அகற்றல் கருத்திட்டம் (கொரிய பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம்) ........................................................................................................ 161

11.5 சுற்றாடல் பாதுகாப்பு, பேணல் கருத்திட்டம் .................................................................................. 176

12.0.நிருவாக அறிக்கை .......................................................................................................................... 178

13.0. மனிதவள அபிவிருத்தி, நிருவாக மற்றும் நிதிப்பிரிவு ..................................................................... 181

13.1 மனிதவள அபிவிருத்தி அலகு ......................................................................................................... 181

13.2 மனிதவள முகாமைத்துவ அலகு ..................................................................................................... 183

14.0 பிலிசறு தேசிய திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவக் கருத்திட்டம் ............................................ 228

15. நிதிக்கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ..................................................... 273

## சுருக்கங்கள்

| | | |
|---|---|---|
| BOD | - | உயிரியல் ஆக்சிஜன் தேவை |
| BOI | - | முதலீட்டுச் சபை |
| CEA | - | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| COD | - | கெமிக்கல் ஆக்சிஜன் டிமாண்ட் |
| CETRAC | - | கட்டுமான உபகரணங்கள் பயிற்சி மையம் |
| DDG | - | துணை இயக்குனர் ஜெனரல் |
| DEO | - | பிரதேச சுற்றாடல் அதிகாரி |
| DO | - | மாவட்ட அலுவலகம் |
| E & NR | - | சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்கள் |
| EE & A | - | சுற்றுச்சூழல் கல்வி விழிப்புணர்வு |
| EIA | - | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு |
| EM & A | - | சுற்றுச்சூழல் மேலாண்மை மதிப்பீடு |
| EMS | - | சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு |
| EPC | - | சுற்றுச்சூழல் மாசு கட்டுப்பாடு |
| EPL | - | சுற்றுச்சூழல் பாதுகாப்பு லைசென்ஸ் |
| GSMB | - | புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கபீரோ |
| HRD | - | மனித வள மேலாண்மை |
| HWM | - | அபாயகரமான கழிவு மேலாண்மை |
| IEE | - | பூர்வாங்க சுற்றாடல் பரீட்சை |
| IEMP | - | ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் |
| ITI | - | தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் |
| JBIC | - | சர்வதேச ஒத்துழைப்பு, ஜப்பான் பேண்ட் |
| KPS | - | குருவிட்ட பிரதேச சபை |
| NBRO | - | தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு |
| LLF | - | சுமை அடிப்படையில் லைசென்ஸ் கட்டணம் |
| NEA | - | தேசிய சுற்றாடல் சட்டம் |
| NEIC | - | தேசிய சுற்றுச்சூழல் தகவல் மையம் |
| NERD | - | தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் |
| OP & M | - | செயல்பாடு திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு |
| PO | - | மாகாண அலுவலகம் |
| PVC | - | பொலிவீனைல் குளோரைட் |
| SEO | - | மூத்த சுற்றுச்சூழல் அதிகாரி |
| SLTB | - | இலங்கை போக்குவரத்து சபை |
| SRO | - | துணை வட்டார அலுவலகம் கண்டி சுழு |
| TPS | - | தமன்கடுவ பிரதேச சபை |
| WDF | - | கழிவு நீர் வெளியேற்ற கட்டணம் |
| WEA | - | வயம்ப சுற்றாடல் அதிகார சபை |
| WWMA | - | மேற்கு மாகாணம் கழிவு மேலாண்மை |
| WPO | - | மேற்கு மாகாண அலுவலகம் |
| CPO | - | மத்திய மாகாண அலுவலகம் |
| SaPO | - | சப்ரகமுவ மாகாண அலுவலகம் |
| SuPO | - | தென் மாகாண அலுவலகம் |
| NCPO | - | வட மத்திய மாகாண அலுவலகம் |
| EPO | - | கிழக்கு மாகாண அலுவலகம் |
| UPO | - | ஊவா மாகாண அலுவலகம் |
| NPO | - | வடக்கு மாகாண அலுவலகம் |
| JAICA | - | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு தொழில் |
| IQMU | - | காற்று தரம் கண்காணிப்பு பிரிவு |
| PM | - | நுண் துகள்கள் |
| KECO | - | கொரிய சுற்றுச்சூழல் ஒத்துழைப்பு |

| | | |
|---|---|---|
| NCC | - | தேசிய ஒருங்கிணைப்புக் குழு |
| TACMIC | - | தொழில்துறை கெமிக்கல்ஸ் மேலாண்மை தொழில்நுட்ப ஆலோசனைக் குழு |
| MEEE | - | மின்னணு மற்றும் மின்சார உபகரணங்களை மேலாண்மை |
| BMICH | - | பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் |
| CFL | - | காம்பாக்ட் ஒளிரும் விளக்கு |
| PAA | - | கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் நிறுவனம் |
| NRM&M | - | இயற்கை வள மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அலகு |
| EM&A | - | சுற்றாடல்மேலாண்மை விழிப்புணர்வு |
| NWP | - | தேசிய நன்செய் நிலம் கொள்கை |
| NWSC | - | தேசிய நன்செய் நிலம் ஸ்டீரிங் குழு |
| DWLC | - | வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் |
| UDA | - | நகர அபிவிருத்தி அதிகாரசபை |
| ICASL | - | இலங்கை பட்டயக் கணக்குகள் நிறுவனம் |
| SLLRDC | - | இலங்கை காணி மீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் |
| GN | - | கிராம சேவகர் |
| DS | - | பிரதேச செயலாளர் |
| CCD | - | கரையோர பாதுகாப்புத் திணைக்களம் |
| MC | - | மாநகர சபை |
| EE&A | - | சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு |
| EPP | - | சுற்றுச்சூழல் பயனீர் திட்டம் |
| WED | - | உலக சுற்றுச்சூழல் தினம் |
| TRC | - | தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு |
| DELEC | - | மாவட்ட சுற்றுச்சூழல் சட்டம் குழு |
| NWS&DB | - | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை |
| LGA | - | உள்ளூராட்சி அதிகாரசபை |
| MENR | - | சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வள அமைச்சு |
| MERE | - | சுற்றுச்சூழல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு |
| PP | - | பிலிசரு திட்டம் |
| NSWMSC | - | தேசிய திட கழிவு மேலாண்மை துணை மையம் |
| KMC | - | குருநாகல் மாநகர சபை |
| ICTAD | - | கட்டுமான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் |
| EDCF | - | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் |
| PPA | - | திட்டம் தயாரித்தல் உதவியாளர் |
| NPD | - | தேசிய திட்டமிடல் திணைக்களம் |
| ERD | - | வெளி வள துறை |
| NSWMC | - | தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ மத்திய நிலையம் |
| WPWMA | - | மேற்கு மாகாணம் கழிவு மேலாண்மை ஆணையம் |
| CLG | - | உள்ளூராட்சி ஆணையாளர் |
| BOQ | - | அளவைப்பட்டியல் |
| ISWM | - | ஒருங்கிணைந்த திட கழிவு மேலாண்மை |

# 1.0. மத்திய சுற்றாடல் அதிகார சபை

## 1.1.அறிமுகம்

1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் தாபிக்கப் பெற்ற மத்திய சுற்றாடல் அதிகாரசபை 2014ஆம் ஆண்டில் தனது 33 வருடத்தைப் பூர்த்தி செய்தது. சுற்றாடல் அமைச்சின் கீழ் இயங்கி வரும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது சுற்றாடல் அமைச்சினால் உருவாக்கப்பட்ட சுற்றாடல் கொள்கையை அமுலாக்கும் பிரதான நிறுவனங்களில் ஒன்றாகும். 2014ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மூலம் 2014ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் செயலாற்றுகை மற்றும் திறைசேரி நிதியினையும் வெளிநாட்டு நிதியுதவிகளையும் பிரயோகித்து 09 மாகாண அலவலகங்கள், 15 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் ஒன்றிணைப்பு அலுவலகம் ஒன்றினதும், 2014ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடைமுறைப்படுத்திய விசேட கருத்திட்டகளின் அடைவுகள் தொடர்பான முழுமையான அறிக்கையினை வழங்கும்பொருட்டு அவ்வாண்டில் ஈட்டிய வெற்றிகள் மாத்திரமின்றி தோல்விகள் தொடர்பான மதிப்பீடும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## 1.2. நோக்கங்கள்

1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க சுற்றாடல் சட்டம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் முறை 1988ஆம் ஆண்டின் 56ஆம் இலக்கச் சட்டத்தாலும், 2000ஆம் ஆண்டின் 53ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பெற்றுள்ளது. 1980ஆம் ஆண்டின் சுற்றாடல் சட்டம் பின்வரும் பிரதான தத்துவங்களைக் கொண்டுள்ளது.

- தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை அமுலாக்குவதற்காக சுற்றாடலில் அபாயகரமானதும் அபாயகரமானதாக அமையக்கூடியதுமான கழிவுப்பொருட்களை விடுவித்தல், படிவுசெய்தல் அல்லது ஏனைய மாசு வழிகளின் தன்மை, அளவு, செறிவு மற்றும் தாக்கத்தை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல் அத்துடன் பேணுதல்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டடினைப் பயன்படுத்தி முறையாக மதிப்பீடு செய்யப்பட்ட சுற்றாடல் பிரச்சனைகளினூடாக சுற்றாடல் நேயமுள்ள அபிவிருத்தியினை உறுதிசெய்து நாட்டின் இயற்கை வளத்தொகுதியைப் பாதுகாத்தல்.
- சுற்றாடலைப் பாதுகாப்பதில் பொது மக்களின் ஒத்துழைப்பினையும் பங்களிப்பினையும் பெற்றுக்கொள்ளல். குறிப்பாக பாடசாலைச் சிறார்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவிய சுற்றாடல் பிரச்சனைகள் தொடர்பாக மக்களை விழிப்பூட்டுதல
- அனுசரணையாளர்களில் பெருமளவிலானோருக்கு சேவைகளை வழங்கி சுற்றாடல் சார்ந்த தகவல்களையும் தரவுகளையும் வழங்கும் மையமாகத் தொழிற்படுதல்.

## 1.3. தத்துவங்கள், பணிகள், பொறுப்புக்கள்

1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தத்துவங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை தற்போது கீழே குறிப்பிட்டுள்ள பிரதான தத்துவங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகள் மீது தனது கவனத்தைச் செலுத்திவருகிறது.

- தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளையும் அதன் கீழ் ஆக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளையும் அமுலாக்குதல்.

- மாசடைதலுக்கான ஏதுக்கள், தன்மை, அளவு மற்றும் மாசடைதலைத் தடுத்தல் தொடர்பான மதிப்பீடுகளையும் விசாரணைகளையும் மேற்கொள்ளலும் அத்துடன் அத்தகைய ஏனைய ஆட்கள் அல்லது அமைப்புகளுக்கு உதவியளித்தலும் ஒத்துழைப்பு வழங்கலும்.

- சுற்றாடல் பாதிப்புடன் தொடர்புடைய ஏதேனும் துறையுடன் சம்பந்தப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளல், மேம்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் அத்துடன் சுற்றாடலைப் பாதுகாக்கவும் முன்னேற்றுவதற்குமான வரையறைகளை மேற்கொள்ளுதல்,

- சுற்றாடலின் பயன்மிகு பயன்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான தரங்கள், மாதிரிவடிவங்கள் மற்றும் வரையறைகளை நிர்ணயித்தல்.

- சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்தின் எந்தவோர் அம்சம் தொடர்பிலும் அறிக்கைகளையும் தகவல்களையும் பிரசுரித்தல்.

- சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் விருத்தி செய்தல் தொடர்பாக மக்களுக்கு தகவல்களையும் கல்வியையும் வழங்குதல்.

1998 மற்றும் 2000ஆம் ஆண்டில் தேசிய சுற்றாடல் சட்டத்தின் மீதான திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதன் காரணமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு பரவலான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இத்தகைய திருத்தங்களினால் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட பிரதானமான அதிகாரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- சுற்றாடலுக்கு மாசுக் காரணிகளை வெளியேற்றும் சந்தர்ப்பங்களில் அச்செயற்பாடுகள் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் குறித்துரைக்கப்பட்ட தரங்கள் மற்றும் நியமங்களுக்கு ஏற்ப மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட உரிமத்தின் கீழ் மேற்கொள்வதன் தேவைப்பாடு.

- சுற்றாடலுக்கு மிக மோசமான விளைவுகளை கொண்டு வரக்கூடிய ஒருசில திட்டவட்டமான அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாக அவை சுற்றாடல் தாக்க மதிப்பீட்டினை மேற்கொள்வதன் தேவைப்பாடு.

- குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கையாக சுற்றாடலுக்கு கழிவுப்பொருட்களை வெளியேற்றுதல், படியவிடுதல் மற்றும் விடுவிப்பதை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள தரங்களுக்கும் நியமங்களுக்கும் அமைவாக செயற்படுவதற்கும் மற்றும் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட உரிமமின்றி எந்தவொரு நபராலும் குறித்துரைக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதில்லையென்பதை உறுசெய்தல்.

## 1.4. அதிகாரசபையின் உறுப்பினர்கள்

தேசிய சுற்றாடல் சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு உட்பட்டதாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரை வினவி சனாதிபதியவர்களால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களை அதிகார சபை கொண்டிருக்கும். இவர்களில் இருவர் சுற்றாடல் விடயத்துறையில் போதுமான துறைசார் அறிவினையும் அனுபவத்தையும் கொண்டுவர்களாகவும் ஒருவர் சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பான சிறப்புத் தேர்ச்சிகளையும் அனுபவத்தையும் கொண்டிருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 2014.01.20ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவராக திரு.டீ.டபிள்யூ. பிரத்தாபசிங்ஹவை நியமித்தல். மேலும், முன்னாள் தலைவர் திரு. விமல்

ரூபசிங்ஹ ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியடமிக்கப்பட்டார். சனாதிபதி அவர்களினால் திரு. லலித் டி சில்வா மற்றும் சமன் டி சில்வா ஆகியோர் அதிகாரசபையின் பணப்பாளர் சபை உறுப்பினர்களாக 2013.05.17ஆம் திகதி நியமிக்கப்பட்டனர். அதன்படி பின்வருவோர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாவர்.

1. திரு.டீ.டபிள்யூ. பிரத்தாபசிங்ஹ - தலைவர், ம.சு.அ.
2. திரு.எம்.. லலித் டி சில்வா - உறுப்பினர்
3. திரு. சமன் டி சில்வா - உறுப்பினர்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமை அதிபதி வைத்தியர் திரு. சாரங்க அழஹப்பெரும சுற்றாடல் சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி பணிப்பாளர் சபையின் செலாளராகக் கடமையாற்றுவார்.

கடந்த ஆண்டில் அதிகாரசபையின் நெறிப்படுத்தலில் சுற்றாடல் முகாமைத்துவம் சம்பந்தப்பட்டதாக நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை 11 ஆகும்.

## 1.5 சுற்றாடல் மன்றம்

### 1.5.1.அறிமுகம்

1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 07ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மன்றம் தாபிக்கப்பட்டுள்ளது.

**சுற்றாடல் மன்றத்தின் பிரதான தொழிற்பாடுகள்**

மேற்படியான சட்டத்திற்கமைய மன்றத்தின் பிரதான தொழிற்பாடுகள் பின்வரமாறு

- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பொறுப்புக்கள், அதிகாரங்கள், செயற்பொறுப்புக்கள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்
- மத்திய சுற்றாடல் அதிகாரசபயினால் சுற்றாடல் மன்றத்திற்கு முன்வைக்கப்படும் எந்தவொரு விடயம் தொடர்பிலும் ஆலோசனை வழங்குதல்.

**சுற்றாடல் மன்றத்தின் கட்டமைப்பு**

திருத்தப்பட்டவாறான 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு சுற்றாடல் மன்றம் சுற்றாடல் அமைச்சரினால் நியமிக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். 2014ஆம் ஆண்டில் கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு சுற்றாடல் மன்றத்தின் 12வது கூட்டத்தொடர் நடைபெற்றது.

**12 வது கூட்டத்தொடர்**

சுற்றாடல் அமைச்சரினால் கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு சுற்றாடல் மன்றத்தின் 12வது கூட்டத்தொடருக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

| | **சுற்றாடல் மன்ற உறுப்பினர்களின் பெயர்கள்** | **பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சு** |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.டீ.ஏ.பி. பொரலெஸ்ஸ | மேலதிக செயலாளர் (காணி)<br>காணி, காணி அபிவிருத்தி அமைச்சு |
| 2 | திரு.எம்.ஏ. அல்லாம் | மேலதிக செயலாளர் (நிருவாகம்)<br>கைத்தொழில், வாணிப அமைச்சு |
| 3 | திரு.எம்.சீ.எல். பெர்னாந்து | மேலதிக செயலாளர் (நிருவாகம்)<br>பெருந்தெருக்கள், துறைமுக மற்றும் கப்பற்றுறை அமைச்சு |
| 4 | திரு. அசோக சிறிவர்தன | மேலதிக செயலாளர் (நிருவாகம்)<br>விவசாய அமைச்சு |
| 5 | திரு.எஸ்.ஏ.எம்.எல். குணதிலக | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்)<br>மாகாண சபைகள் அமைச்சு |
| 6 | திரு.ஜே.ஜீ.எல்.சுலக்ஷன ஜயவர்தன | பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)<br>மின்வலு, எரிசக்தி அமைச்சர் |
| 7 | திரு.எச்.எம்.கே.ஜே.பி. குணரத்ன | பணிப்பாளர் (சமூக அபிவிருத்தி)<br>மீன்பிடி, நீரக வளமூலங்கள் அமைச்சு |
| 8 | திரு.கே.ஜீ.ஆர்.ஜீ.ஆர். விக்கிரமவர்தன | உதவிப் பணிப்பாளர்<br>நிதி, திட்டமிடல் அமைச்சு |
| 9 | வைத்தியர் திரு. சரத் அமுணுகம | பிரதிப் பணிப்பாளர் தலைமை அதிபதி (பொதுமக்கள் சுகாதார சேவை)<br>சுகாதார அமைச்சு |
| 10 | திரு.ஜே.கே.பீ. குருகுலசூரிய | மேலதிக செயலாளர் (நகர அபிவிருத்தி)<br>பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு |
| 11 | திரு. மொன்ரி ரணதுங்க | பணிப்பாளர் (பிரதேச அபிவிருத்தி)<br>பொருளாதார அபிவிருத்தி அமைச்சு |
| 12 | வைத்தியர் திரு. சாரங்க அழஹப்பெரும | பணிப்பாளர் தலைமை அதிபதி,<br>மத்திய சூற்றாடல் அதிகாரசபை<br>**செயலாளர்/சுற்றாடல் மன்றம்** |

**சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பான நிபுணர்கள்**

| | | |
|---|---|---|
| 1 | பேராசிரியர் திரு.டபிள்யூ.எம்.டீ.வி. வன்னிநாயக்க | பேராசிரியர், கடல்சார், சிரேஷ்ட உயிரியல், விஞ்ஞானி,<br>கடல்சார் பல்கலைக்கழகம் |
| 2 | கலாநிதி (திருமதி) பல்லேவத்த | பிரிவுத் தலைவர், விலங்கியல் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம் |
| 3 | கலாநிதி சுதீரா ரன்வல | சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம் |
| 4 | திரு. ஜகத் குணரத்ன | சட்டத்தரணி, சூழலியலாளர்<br>(தலைவர்/சுற்றாடல் மன்றம்) |

**தன்னார்வ நிறுவனங்களின் பிரதிநிதிகள்**

| | | |
|---|---|---|
| 1 | திரு. நிவ்ரன் குணரத்ன | முன்னாள் தலைவர்,<br>இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் |
| 2 | ஷியாமன் விதானகே | நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்,<br>சுற்றாடல் பாதுகாப்பிற்கான அனைத்துலக சங்கம் |
| 3 | திரு. டக்லஸ் திசேரா | பணிப்பாளர், கண்டல் தாவர நிகழ்ச்சித்திட்டம்,<br>குட்டி மீனின மன்றம் |
| 4 | திரு. திலக் காரியவசம் | தலைவர், சுற்றாடல் பாதுகாப்பு பொறுப்பு |

**நடாத்தப்பட்ட கூட்டத்தொடர்கள்**

2014ஆம் ஆண்டில் சனவரி தொடக்கம் டிசெம்பர் வரையான காலத்தில் பன்னிரண்டு கூட்டத்தொடர்கள் நடாத்தப்பட்டுள்ளன. அவற்றின் விபரங்கள் வருமாறு:

| நடத்தப்பட்ட கூட்டத்தொடர்கள் | நடத்தப்பட்ட மாதம் | திகதி |
|---|---|---|
| 242 - 2 வது கூட்டத்தொடர் | ஜனவரி | 30 |
| 243 - 3 வது கூட்டத்தொடர் | பெப்ரவரி | 20 |
| 244 - 4 வது கூட்டத்தொடர் | மார்ச் | 20 |
| 245 - 5 வது கூட்டத்தொடர் | ஏப்ரல் | 24 |
| 246 - 6 வது கூட்டத்தொடர் | மே | 23 |
| 247 - 7 வது கூட்டத்தொடர் | யூன் | 19 |
| 248 - 8 வது கூட்டத்தொடர் | யூலை | 17 |
| 249 - 9 வது கூட்டத்தொடர் | ஆகஸ்ட் | 21 |
| 250 - 10 வது கூட்டத்தொடர் | செப்ரெம்பர் | 18 |
| 251 - 11 வது கூட்டத்தொடர் | ஒக்ரோபர் | 23 |
| 252 - 12 வது கூட்டத்தொடர் | நவம்பர் | 20 |
| 253 - 13 வது கூட்டத்தொடர் | டிசம்பர் | 18 |

| | | |
|---|---|---|
| 241 - 1 வது கூட்டத்தொடர் | டிசம்பர் 2013 | 19 |

**கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**

- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படும் சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள்.
- நகரங்களை அழகுபடுத்துவதற்குப் பொருத்தமான தாவரங்களை சிபாரிசு செய்தல்.
- வடமேல் மாகாணத்திலுள்ள "சேம் ரிசோட்" ஹோட்டலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை.
- வட மாகாணத்தில் சுற்றாடல் முகாமைத்துவ திணைக்களத்தின் பொறுப்புகள் பற்றி அறிமுகம்
- புஜ்ஜம்பொல கிறியேட்டிவ் பொலிமெட் தனியார் கம்பனிக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை வழங்குதல்.

- வறாதென்ன ஹக்கிந்த பிரதேசத்தை சுற்றாடல் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்வதற்கான முன்மொழிவினை மேற்கொள்ளுதல்.
- நாயாறு கடனீரேரிக்குக் குறுக்காகப் பாலமொன்றை அமைக்குமுகமாக செய்யப்பட்ட மீட்டலின் பாதிப்புகள்
- கண்டல் தாவரங்கள் அழிவடைதல்.
- தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை அண்டியதாகக் காணப்படும் ஆக்கிரமிப்பு இனத் தாவரங்கள்.
- நீர்ப்பிடி முகடு பாதுகாப்பிற்கான கொள்கைகள்/சட்ட வரைவு.
- முறையற்ற விவசாய இரசாயனங்களின் பயன்பாடு.
- தொடக்கநிலை சுற்றாடல் பாதிப்புகள்/சுற்றாடல் தாக்க மதிப்பீடு அறிக்கைகளில் காணப்படும் குறைபாடுகள்.
- மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் பதிவு பெற்றுள்ள உசாத்துணை நிறுவனங்களின் தரம்.
- காணி மீட்டல், அபிவிருத்தி செய்தலுக்கான அறிவுரைப்பு வழிகாட்டிகள்.
- கொலொன்னாவ கூட்டுப் பசளைத் தொகுதி பற்றிய விடயங்களை முன்வைத்தல்.
- கல் துளைக்கும் இடங்கள் சார்ந்த பிரச்சினைகள்.
- காடுகளுக்குத் தீ வைக்கப்படுவதைத் தடுப்பதற்கென இணைந்த பொறிமுறையொன்றைத் தயாரிப்பதற்கான முன்மொழிவு.
- ‘ப்லெக் காப்’ இறக்குமதி.
- நீர்வீழ்ச்சிகளின் பாதுகாப்பு.
- மன்னார் மறிச்சுக்கட்டி / சிற்றாறு கடற்படுக்கையை பாதுகாத்தல்.
- வடக்கு அதிவேக நெடுஞ்சாலை.
- யல்கும்புர சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள்.
- நீர்த்தேக்கங்களில் நீர்ப்பரப்பின் நேர் எதிர்ப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல்.
- கொராகுளம் ஈரநிலத்தில் சுவீகரிக்க அத்துமீறிய கையகப்படுத்தல்கள்.
- கப்புரு எல்ல, மஹஓயா பற்றிய விடயங்களை முன்னிலைப்படுத்தல்.
- சிப்பிகள் மனித நுகர்வுக்காக பயன்படுத்துவது பற்றிய தகவல்கள்.

## 2.0. அதிகாரசபையின் பொறுப்புகளும் பணிகளும்

மத்திய சுற்றாடல் அதிகாரசபை தாபிக்கப்பட்டதற்கான குறிக்கோள்களை அடைவதற்கென, கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு தொழில்நுட்ப ரீதியில் முக்கியத்துவம் பெற்ற அதன் கட்டமைப்பு 04 துறைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

- சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுப் பிரிவு
- சுற்றாடல் முகாமைத்துவ, மதிப்பீட்டுப் பிரிவு
- சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வுப் பிரிவு
- மனிதவள அபிவிருத்தி, நிதி மற்றும் நிருவாகப் பிரிவு

சுற்றாடல் முகாமைத்துவத் துறையில் நிறைந்த அனுபவமும், கல்வி மற்றும் தொழில்சார் அறிவுமுடைய அலுவலர்கள் இப்பிரிவுகளின் தலைவர்களாகப் பணியாற்றுவர்.

**சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுப் பிரிவு**

இப்பிரிவின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மூன்று அலகுகளின் பணிகள் பின்வருமாறு;

**சூற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு**

- முதலீட்டுச்சபை கருத்திட்டங்களுக்கு சுற்றாடல் சார்ந்த இணக்கப்பாட்டினைத் தெரிவித்தல். (புதிய சுற்றாடல் விதப்புரைகளும், சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களும்.)
- தொலைத்தொடர்புக் கம்பங்களை அமைப்பதற்கான இடங்களை விதந்துரைத்தல்.
- தொலைத்தொடர்புக் கம்பங்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்குதல்.
- சுற்றாடல் மாசுறுதல் தொடர்பிலான முறைப்பாடுகளைத் தீர்த்தல்.
- கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் செயல்முறையில் பங்கெடுத்தல்.
- சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுக்கான தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல்.
- மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் நீதிமன்றத்தில் நிபுணத்துவ சாட்சியாளர்களாகத் தோன்றுதல் மற்றும் பாராளுமன்றக் குழுக்கள், மனித உரிமைகள் குழுக்கள், நீதிமன்றத்திற்கு தொழில்நுட்ப அறிக்கைகளை வழங்குதல்.
- சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுக்கென வினைத்திறன் மிக்க புதிய நுட்பங்களையும் சாதனங்களையும் அறிமுகம் செய்தல்.

**கழிவுப்பொருள் முகாமைத்துவ அலகு**

- தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருள் முகாமைத்துவச் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் அறிமுகம் செய்து அமுலாக்குதல்.
- திண்மக் கழிவுப்பொருள் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் அமுல்படுத்துவதற்கென தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.

- கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான பிரதான கருத்திட்டங்களை வரைதலும் கண்காணித்தலும்.
- ஒத்திசைவு கண்காணிப்பு.
- கழிவு முகாமைத்துவத்துக்கான தொழில்நுட்ப ஒழுங்குபடுத்தல் முறைகளை மேம்படுத்தல்.
- அனைத்துலக சுற்றாடல் உடன்படிக்கைகளை அமுலாக்குதல் (பாசல் உடன்படிக்கை – ரொடர்டேம் உடன்படிக்கை)
- கைத்தொழில் பிரச்சினைகளை முகாமைத்துவம் செய்தல்.
- கைத்தொழில் இரசாயனப் பொருட்களை முகாமைத்துவம் செய்தல்.
- கழிவு முகாமைத்துவக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- சட்ட அமுலாக்கத்திற்கான தொழில்நுட்பம் சார்ந்த ஒத்துழைப்பினை வழங்குதல்.
- திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கான முன்னோடிக் கருத்திட்டங்களைத் தயாரித்தல்.
- பொதுமக்களின் முறைபாடுகளை விசாரித்தல்.
- கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- கழிவு முகாமைத்துவக் கருத்திட்டங்களை மேற்பார்வை செய்தல்.
- வழங்கப்பட்ட விதப்புரைகளைப் பின்தொடர் ஆய்வு செய்தல்.
- பிற நிறுவனங்களின் கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்குதல்.

**வளி, நீர்த் தர ஆய்வுகூட அலகு**

- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளுக்கும் மாவட்ட செயலகங்களுக்கும் தேவையான பகுப்பாய்வு சேவைகளை வழங்குதல்.
- சுற்றாடல் தர நியமங்களைக் கண்காணித்தல்.
- தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நிரந்தர மற்றும் வளித்தர கண்காணிப்பு.
- வளி, ஒலி, அதிர்வு மற்றும் வளித்தரம் பற்றிய சுற்றாடல் ஆராய்ச்சிகளையும் மதிப்பீடுகளையும் மேற்கொள்ளல்.
- ஒலி, வளித்தரம் மற்றும் நீர்த்தரம் தொடர்பான ஒழுங்குவிதிகளைத் தயாரித்தளித்தல்.

**சுற்றாடல் முகாமைத்துவ, மதிப்பீட்டுப் பிரிவு.**

- சுற்றாடல் முகாமைத்துவ, மதிப்பீட்டுப் பிரிவு மூன்று அலகுகளைக் கொண்டுள்ளது.

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகு**

- தொடக்க நிலை சுற்றாடல் ஆய்வுச் செயற்பாட்டினை முன்னெடுத்தல்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டை முன்னெடுத்தலும், கண்காணித்தலும்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீடு, தொடக்கநிலை சுற்றாடல் ஆய்வு பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீடு மன்றும் தொடக்கநிலை சுற்றாடல் ஆய்வுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளைத் தயாரித்தல்.
- மூலோபாய சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டை அறிமுகம் செய்தலும் நடைமுறைப்படுத்தலும்.

**இயற்கை வள முகாமைத்துவ அலகு**

- சுற்றாடல் தாக்க மதிப்பீடு, தொடக்கநிலை சுற்றாடல் ஆய்வுச் செயற்பாட்டினுள் அடங்காத கருத்திட்டங்களுக்கு சுற்றாடல் விதப்புரைகளை வழங்குதல்.
- கருத்திட்டங்களைக் கண்காணித்தல்.
- இயற்கை வளத் தேர்வு தொடர்பான பொது மக்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்தல்.
- இயற்கை வளப் பேணுகை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களை பிரகடனம் செய்தல்.
- கொள்கை அமுலாக்கம் பற்றிய ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டிகளைத் தயாரித்தல்.

**ஆராய்ச்சி, விசேட கருத்திட்டங்கள்**

- புவியியல்சார் தகவல்களின் அடிப்படையில் தரவுகளைச் சேகரித்தல்.
- சுற்றாடல் கூருணர்வு மிக்க பிரதேச முகாமைத்துவக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- மாவட்ட விவர படமாக்கல் பணிகள்.
- சுற்றாடல் ஆராய்ச்சி இணைப்பு மற்றும் ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை வழங்குதல்.

**சுற்றாடல் கல்வி விழிப்புணர்வு அலகு**

- அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் மற்றும் குழுத் தொடர்பாடல் ஊடாக சுற்றாடல் பற்றிய கல்வியையும் விழிப்புணர்வையும் வழங்குதல்.
- பிரதேச மற்றும் தேசிய மட்டத்தில் பயிற்சி செயலமர்வுகளையும் கண்காட்சிகளையும் நடத்துதல்.
- பொது மக்களுக்கு சுற்றாடல் பற்றிய தகவல்களை வழங்குதல்.
- அரசு சார்பற்ற அமைப்புகளுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதலும் பெற்றுக்கொள்ளுதலும்.

- சுற்றாடல் தின அனுஷ்டிப்பு.
- ‘‘சொபாகெத்த’’ நிலையங்களை அமைத்தலும் தொழிற்படுத்தலும்.

**தேசிய சுற்றாடல் தகவல் மையம்**

- சுற்றாடல் பற்றிய தகவல்களைச் சேகரித்தலும் மேம்படுத்தலும்.
- நூலக வலையமைப்பு மற்றும் வலையமைப்பில் அடங்காத நூலகங்களை ஒன்றிணைத்தலும்.
- தேசிய சுற்றாடல் தகவல்கள் தேவைப்படும் அனைவருக்கும் அவற்றை வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்தல்.

**செவிப்புல, கட்புல அலகு**

- சகல நிகழ்ச்சித்திட்டத் தயாரிப்பாளர்களுக்கான செவிப்புல, கட்புல சாதனங்களை வழங்கல்.
- மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் சுற்றாடல் அமைச்சு நடாத்திய சகல நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் செவிப்புல, கட்புல சாதனங்கள் வழங்கல்.
- கல்வி, விழிப்புணர்வுக்கான காணொளிகளைத் தயாரித்தல்.
- காணொளிகளைத் தயாரிப்பதற்கான வசதிகளை வழங்கல்.

**மனிதவள அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் நிதிப்பிரிவு**

இப்பிரிவானது மனிதவள அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் நிதி ஆகிய மூன்று அலகுகளைக் கொண்டுள்ளது.

**மனிதவள அபிவிருத்தி அலகு**

- மனிதவள முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல்.
- தெரிவு செய்தல், ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு வழங்குதல்.
- பணியாட்டொகுதியினரைப் பயிற்றுவித்தல்.
- தனிநபர் செயல்நிறைவேற்றத்தைப் பதிப்பிடல்.
- பயிற்சிக்கான தேவைப்பாடுகளைக் கண்டறிந்து தகுதியானவர்களை உள்நாட்டு / வெளிநாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுத்தல்.
- பணியாட்டொகுதியினருக்கு நேர்ந்துள்ள அநீதிகளைக் கண்டறிந்து அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- மனிதவளம் பற்றி தரவுத்தொகுதியொன்றைத் தயாரித்தல்.

**நிருவாக அலகு**

- கொள்வனவு, சுவீகரிப்பு மற்றும் மூலதனச் சொத்துக்களைப் பராமரித்தல்.
- சேவை நிபந்தனைகளை வெளியிடுதலும் புதுப்பித்தலும்.
- காப்புறுதி வசதி மேம்பாடு.

- நிறுவன சுகாதாரப் பாதுகாப்பும் சேமநலனும்.
- பொது நிருவாகம்.

**நிதி அலகு**

- ஆண்டு வருமானம் / செலவு கணிப்பீடும் இறுதி நிதியறிக்கையைச் சமர்ப்பித்தலும்.
- இறுதி முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தலும், மாதாந்த வருமானம் / செலவு பற்றிய கட்டுப்பாட்டு அறிக்கையைத் தயாரித்தலும்.
- வேதனம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தலும், கொடுப்பனவுகளைச் செலுத்தலும்.
- கருத்திட்டங்களின் கணக்குகளைப் பேணி வருதல்.
- விளைவுப்பெருக்க செலுத்துகைகள்.

**சட்ட அலகு**

- தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சட்ட வரைவுகளில் திருத்தங்களைச் செய்தல் மற்றும் ஒழுங்கு விதிகளை ஆக்குதல்.
- தேசிய சுற்றாடல் சட்டத்தைப் பயனுறச் செய்தல் மற்றும் ஒழுங்கு வதிகளை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுதல்.
- சுற்றாடல் சட்டத்தின் 12 மற்றும் 24ஆம் வாசகங்களின் கீழான கட்டளைகளைப் பிறப்பித்தல்.
- விநியோகித்துள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை இடைநிறுத்தம் செய்தல் / இரத்துச் செய்தல் மற்றும் நிராகரிதல்.
- நிறுவனங்களின் கழிவகற்றல் தொடர்பில் 23 S வாசகத்தின் கீழான கட்டளைகளைப் பிறப்பித்தல்.
- சுற்றாடல் பாதுகாப்பு உரிம நிபந்தனைகளை அங்கீகரித்தல் மற்றும் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல்.
- மத்திய சுற்றாடல் அதிகாரசபை சபையினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளிலும், மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கெதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளிலும் தோற்றுதல்.
- அமைச்சில் நடைபெறும் விசாரணைகளுக்கும், மேன்முறையீடுகளை விசாரிப்பதற்குமான வசதிகளை ஏற்படுத்தல்.
- சட்ட நடவடிக்கைகள் தொடர்பான ஆவணங்களைத் தயாரித்தல்.
- சுற்றாடல் யாப்பினை சட்டமாக்குதல் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதலும், வளவாளர்களாக செயலாற்றுதலும்.
- சுற்றாடல் சார்ந்த சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஏனைய பிரிவுகளுக்கும் நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்குதல்.

- உடன்படிக்கை வரைதலும் அங்கீகரித்தலும்.
- முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுவதற்கு பொலிஸ் திணைக்களத்துடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.

**திட்ட, கண்காணிப்பு அலகு**

- அடிப்படைத் தரவுச் சேகரிப்பு, தேவையான தரவு மற்றும் தரவு மூலங்களை அறிமுகம் செய்தல் அத்துடன் தரவு மூலங்களையும் தரவுச் சேகரிப்பு வழிமுறைகளையும் தொடர்புபடுத்துதல்.
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கூட்டிணைத் திட்டத்தைத் தயாரித்தல்.
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கூட்டிணைத்திட்டம், வருடாந்த திட்டம் மற்றும் மத்திய கால வேலைத்திட்டங்களை ஆதாரமாகக்கொண்டு அந்தந்த ஏற்பாடுகளின்கீழ் செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்.
- கண்காணித்தல் தொடர்பாகத் திட்டங்களைத் தயாரித்தல்.
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பல்வேறு பிரிவுகள் மற்றும் மாகாண / மாவட்ட அலுவலகங்களுக்கிடையிலான தொடர்பினைப் பேணிவருதல்.
- மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.
- முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தலும் சம்பந்தப்பட்ட பிற நிறுவனங்களுக்கு அவற்றை வழங்குதலும்.
- ஆண்டறிக்கைத் தயாரிப்பு.
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முன்னேற்றம் பற்றி உள்நாட்டு – வெளிநாட்டு நிதியுதவி நிறுவனங்கள், சம்பந்தப்பட்ட தனியார்துறை நிறுவனங்களுக்கும் பிற நிறுவனங்களுக்கும் தெளிவுபடுத்துதல்.

**முறைப்பாட்டு அலகு**

- சுற்றாடல் பிரச்சினைகள், பாதிப்புகள் மற்றும் தீங்கு நேர்தல் பற்றிய முறைப்பாடுகளைப் பொதுமக்களிடமிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளுதல்.
- பெறப்பட்ட முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தல் மற்றும் உரிய நடவடிக்கை எடுத்தல்.

**உள்ளகக் கணக்காய்வு அலகு**

- கணக்கீட்டு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டுச் செயல் ஒழுங்கு பற்றிய மீளாய்வு.
- நிதி மற்றும் கணக்குத் தகவல் புலனாய்வு.
- நிறுவனத் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு, வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறன் பற்றியும் நிதி சார்ந்தும் சாராததுமான கட்டுப்பாடுகள் பற்றியுமான முன்னேற்ற மீளாய்வு.

- நிறுவனத்தின் ஒழுங்குவிதிகள் (உள்ளக / வெளியக), முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை ஆராய்தல்.
- முகாமைத்துவத்தினால் யாப்பிற்கமைவாக ஒப்படைக்கப்பட்டுள்ள விசேட நிதிசார் புலனாய்வுகள்.

**மாகாண அலுவலகங்கள்**

சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பான கீழ்க்காட்டப்பட்டுள்ள பணிகள் மாகாண அலுவலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண / மாவட்ட அலுவலகங்களின் வகிபொறுப்புக்கள்.**

- உத்தேச அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான பூர்வாங்க சுற்றாடல் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- புதிய கைத்தொழில்களை உரிய இடத்தில் நிறுவுதல் பற்றிய சுற்றாடல் விதப்புரைகளை வழங்குதல்.
- கைத்தொழில்கள் பற்றி விதித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் / சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்குதல் (உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரமளிக்கப்படாத)
- உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குமிடையிலான இணைப்பாக்கம், கண்காணிப்பு மற்றும் தேவை அடிப்படையில் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.
- இயற்கை வள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- தொடக்கநிலை சுற்றாடல் ஆய்வுக்கும், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்கும் உட்படாத அதாவது, மாணிக்கக்கல் அகழ்வு, காணி மீட்டல், மரங்களைத் தறித்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு அதிகாரசபையின் விதப்புரைகளை வழங்குதல்.
- சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பிரதேச மட்டத்தில் நடைபெறும் சுற்றாடல் சம்பந்தபட்ட கூட்டங்களிலும் செயற்பாடுகளிலும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை சார்பாகப் பங்கேற்றல்.
- அரச நிறுவனங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், சமூக மட்ட அமைப்புகள், இதர தன்னார்வ நிறுவனங்கள், கைத்தொழில்கள் மற்றும் வர்த்தக சங்கங்கள், பாடசாலைகள் அத்துடன் இளைஞர் சங்கங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- பாடசாலைகளினூடாக மாவட்ட, பிரதேச செயலக மட்டத்திலும் கிராமிய மட்டத்திலும் சுற்றாடல் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் கண்காணித்தலும்.
- சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பான தகவல்களையும் தரவுகளையும் பிரதேச மட்டத்தில் சேகரித்தல், தரவுத் தொகுதியொன்றைப் பேணுதல் மற்றும் இற்றைப்படுத்தல்.
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஐந்தாண்டுத் திட்டத்திற்கமைவாக மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்.

**அதிகாரசபையின் செயல் நிறைவேற்றம்**

2012ஆம் ஆண்டில் மாகாண அலுவலகங்களின் அந்தந்தப் பிரிவுகளினதும் அலகுகளினதும் செயல் நிறைவேற்றம் கீழ்வரும் அத்தியாயத்தில் காட்டப்பட்டுள்ளது.

# 3.0.சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவு

## 3.1சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு

சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவின் கீழ் இயங்கும் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு சுற்றாடல் மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பொறுப்புக் கூறுகிறது. சுற்றாடல் மாசுபடுவதைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய வழிமுறைகளைத் தயாரித்து அறிமுகம் செய்வதும், இந்த நடவடிக்கைகளை உரிய முறையில் கண்காணிப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும். இந்த நோக்கங்களை அடையும்பொருட்டு சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகு எப்போதும் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக பிற நிறுவனங்களை ஊக்கவிக்குமுகமாக, நிறுவனங்களுக்கும் கைத்தொழில்களுக்குமிடையில் பசுமை அணுகுமுறையைப் போஷிக்கும் நோக்கத்துடன் தேசிய பசுமை விருதுகள் நிகழ்ச்சித்திட்டத்தை 2011ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் நடத்தி வருகின்றது. மத்திய சுற்றாடல் அதிகாரசபை சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுக்கான சட்ட ஏற்பாடாக சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்குதலை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இச்செயற்பாட்டை இலகுபடுத்தும் வகையில் குறித்த விடயப்பரப்பு நான்கு வகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. ஒழுங்குபடுத்தலும் கண்காணிப்பும்
2. கொள்கை மேம்பாடு
3. தொழில்நுட்ப வசதியளிப்பு
4. சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுக்கான விசேட கருத்திட்டங்களும் நிகழ்ச்சித் திட்டங்களும்.

### 3.1.1 ஒழுங்குபடுத்தலும் கண்காணிப்பும்

#### 3.1.1.1 சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்குதல்

1533/16ஆம் இலக்க மற்றும் 2008.01.25ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் செல்லுபடியாகும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுப் பிரிவு உரிமம் வழங்கும் பணியை மேற்கொள்கிறது.

கத்தொழில்களினால் ஏற்படும் சூழல் மாசடைவு குறித்து நடைமுறையில் கவனம் செலுத்திய பின்னர், சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பிரமாணங்கள் வர்த்தமானப் பத்திரிகையில் “அ”, “ஆ” மற்றும் “இ” வகுதிகளில் பட்டியலிடப்பட்டுள்ளன. அதன்படி, வகுதி “அ” பாரியளவில் மாசுக் காரணிகளைக் கொண்ட 80 கைத்தொழில்களையும், வகுதி “ஆ” நடுத்தரளவு மாசுக்காரணிகளைக் கொண்டுள்ள 33 கைத்தொழில்களையும், வகுதி “இ” சிறியளவிலான மாசுக் காரணிகளைக் கொண்டுள்ள 25 கைத்தொழில்களையும் கொண்டுள்ளது. வகுதி “அ”, “ஆ” இற்குரிய கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்கும் செயற்பாடு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுவதோடு, “இ” வகுதியல் அடங்கும் கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்கும் செயற்பாடு உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளப்படும்.

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுப் பிரிவு பாரியளவிலான மாசுக் காரணிகளைக் கொண்ட கைத்தொழில்கள் தொடர்பில் முறையான தரவுத் தொகுதியொன்றைப் பேணி வருகிறது.

கைத்தொழில்களைக் கண்காணிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின்படி சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்பட்ட 21 கைத்தொழில்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

### 3.1.12 இலங்கை முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்ட கருத்திட்டங்களுக்கு இணக்கம் தெரிவித்தல்

முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவுக்கமைய முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்ட கருத்திட்டங்களுக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இணக்கம் தெரிவிக்கப்பட்ட பின்னர் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படும். ஆகவே, முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள கைத்தொழில்கள் / கருத்திட்டங்களுக்கு இணக்கம் தெரிவிக்கும்போது குறித்த செயற்பாடுகளினால் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாடு தொடர்பில் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுப் பிரிவு பெரும் பங்கு வகிக்கின்றது.

முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட கருத்திட்டங்கள் / கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்குதல் மற்றும் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்கு இணக்கம் தெரிவித்தல்.

| **இணக்கம் தெரிவிக்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை** | **2014** |
|---|---|
| புதிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களின் எண்ணிக்கை | 36 |
| புதுப்பிக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களின் எண்ணிக்கை | 325 |
| நிறுவ உத்தேசித்துள்ள புதிய கருத்திட்டங்களுக்கு இணக்கம் தெரிவித்தல் | 72 |
| **சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்பட்ட கைத்தொழில்களைக் கண்காணித்தல்** | 48 |

### 3.1.1.3 முறைப்பாடுகளை விசாரித்தலும் கண்காணிப்பும்

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுப் பிரிவு பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதுடன், கைத்தொழில் நடவடிக்கைகளினால் ஏற்படுகின்ற சுற்றாடல் மாசுக்கட்டுப்பாடு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை (கழிவு நீர்த்தர அறிக்கை, ஒலி மற்றும் அதிர்வு கணிப்பீட்டு அறிக்கை) களை ஆராயும் பணியையும் மேற்கொள்கிறது. சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகு முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்கள் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகளையும், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் தலைமை அதிபதியினால் நேரடியாக ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய முறைப்பாடுகளையும் விசாரணை செய்கிறது. 2014ஆம் ஆண்டில் முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பந்தப்பட்டதாகக் கிடைத்த 70 முறைப்பாடுகளில் 27 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளன. தீர்க்கப்படாத முறைப்பாடுகள் தகுந்த நடவடிக்கைக்காக உரிய மாகாண அலுவலகங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் ஆற்றுப்படுத்தப்பட்ட 44 முறைப்பாடுகள் மீதான அடுத்த கட்ட

நடவடிக்கையை மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட மாகாண அலுவலகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஆற்றுப்படுத்தப்படுள்ளன.

#### 3.1.1.4 ஏற்றுமதி வலயங்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்குதல்

இலங்கை முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ள 12 வலயங்கள் காணப்படுகின்றன. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின்படி இந்த வலயத்திலுள்ள கைத்தொழில்கள் வர்த்தமானப் பத்திரிகையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு பாரிய மாசுக் காரணிகள் கொண்ட கைத்தொழில்கள் எனலாம். மத்திய சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினூடாக இந்த வலயங்களில் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டை மேற்கொள்கிறது. மேலும், இக்கைத்தொழில்கள்மூலம் பிறப்பிக்கப்படுகின்ற கழிவு நீர் மற்றும் வெளியேற்றப்படுகின்ற மாசுக் காரணிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுவதோடு தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன்படி, மாவத்தகம முதலீட்டு வலயம் தவிர்ந்த ஏனைய சகல முதலீட்டு வலயங்களுக்குமான களப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றன. பியகம மற்றும் வத்துபிட்டிவல முதலீட்டு வலயங்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.1.2 கொள்கை மேம்பாடு

#### 3.1.2.1 கழிவுநீர் வெளியேற்றம் தொடர்பான நியமங்கள் ஒழுங்குவிதிகள் மீதான திருத்தம்.

சீவராசிகளுக்குப் பயன்படும் விதத்தில் நீர்த் தரத்தைப் பேணுவது இன்றியமையாததாகும். எவ்வாறாயினும், நீர் மூலங்களுக்கு வெளியேற்றப்படும் கழிவு நீரின் அளவு நிகழ்காலத்தில் படிப்படியாக அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது.

எனவே, கைத்தொழில்களிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவு நீர் தொடர்பான நீர்த்தர நியமங்களை ஒழுங்குபடுத்துவதற்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கும் நடைமுறையைப் பயன்படுத்த முடியும்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை பல்வேறு செயற்பாடுகள் தொடர்பில் கழிவுநீர் வெளியேற்றத்திற்கான நீர்த்தர நியமங்களைத் தயாரித்துள்ளது. தற்போது வலுவிலுள்ள 1534/18ஆம் இலக்க மற்றும் 2008.02.01 திகதிய வர்த்தமானப் பத்திரிகையின்படி செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது பல்வேறு சிக்கல்களைத் தவிர்க்கும் நோக்கத்துடனும், காணப்படுகின்ற நீர் மூலங்களைத் தரமுயர்த்தும் நோக்கத்துடனும் கைத்தொழில் மாசுக் கட்டுப்பாடு தொடர்பான இந்த நியமங்களில் திருத்தம் கொண்டுவருவதற்கு நீர்முகாமைத்துவத்துடன் சம்பந்தப்பட்ட நிபுணத்துவ நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களைக்கொண்ட விற்பன்னர் குழுவின் கருத்துக்களும் யோசனைகளும் பெறப்பட்டுள்ளன.

தற்போதுள்ள நியமங்களுக்கு மேலதிகமாக, கழிவு நீரை வெளியேற்றுவதற்கான சில புதிய முறைவழிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை திருத்தியமைக்கப்பட்டுள்ள நீர்த்தர நியமங்களில் காணப்படும் சிறப்பம்சமாகும். ஆய்வுகூட பகுப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் பெரும்பாலும் தீர்க்கப்பட்டுள்ளன. இன்றளவில் தயாரிப்புப் பணிகள் நிறைவுபெற்றுள்ள நீர்த்தர நியமங்கள் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்பட்டு சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கென ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டின் நடுக்கூற்றில் வர்த்தமானப் பத்திரிகையை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**3.1.2.2 விதந்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கான புதிய மூலோபாயங்களைத் தயாரித்தல்.**

1533/16ஆம் இலக்க மற்றும் 2008.01.25ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் தரப்பட்டுள்ள விதந்துரைக்கப்பட்ட செயற்பாடுகளைத் திருத்துவதற்கான வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

வரைவு தயாரிக்கப்பட்ட போது அந்தந்தப் பிரதேச அலுவலகங்களுக்குரிய கைத்தொழில்களினால் ஏற்படும் சுற்றாடல் மாசுபடும் அளவினை ஆராய்வதற்காக மாகாணப் பணிப்பாளர்களுடன் தொடர் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. இதன்போது திருத்தப்பட்ட புதிய பட்டியலின் அடிப்படையில் செயற்பாடுகள் 1அ, 2அ, ஆ மற்றும் இ என 04 வகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. அதன்படி “அ” வகுதியிலுள்ள செயற்பாடுகளை முறையான கண்காணிப்பிற்கு உட்படுத்த முடியும்.

**3.1.2.3 சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கும் செயல் ஒழுங்கு தொடர்பான ஒழுங்குவிதிகள் மீதான திருத்தம்.**

2008.01.25ஆம் திகதிய மற்றும் 1533/16ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் தரப்பட்டுள்ள விதந்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் மீதான திருத்தத்திற்கென தயாரிக்கப்பட்டதும் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்டதுமான வரைவில் புதிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்திற்கான கட்டணமொன்று (1அ, 2அ, ஆ மற்றும் இ வகுதிகளில்) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ள இதற்கான ஒழுங்குவிதிகள் தேவைப்படுத்தப்படும் திருத்தங்களை மேற்கொள்வதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பூரணப்படுத்தப்படும் ஒழுங்குவிதிகள் 2014ஆம் ஆண்டு நடுக்கூற்றில் வலுவுக்கு வரும்.

மத்திய சுற்றாடல் அதிகார சபை சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டை பேணுவதற்குத் தேவையான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்கும் பொறுப்பினைக் கொண்டுள்ளது. விதந்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் அடங்கிய பட்டியல் 2013ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது.

**3.1.3 சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.**

**3.1.3.1. சுற்றாடல் கூருணர்வுள்ள வலயங்களில் பாரிய மற்றும் நடுத்தரளவு மாசுக் காரணி கைத்தொழில்களைக் கண்காணிப்பதற்கான குழு.**

ஏற்றுமதி செயல்முறை வலயங்கள் மற்றும் கைத்தொழில் பேட்டைகளுக்குப் புறம்பான இடங்களில் பாரிய மற்றும் நடுத்தரளவு மாசுக்காரணிகளைக் கொண்ட கைத்தொழில்களை நிறுவுதல் பற்றிய முடிவுகளை எடுப்பதற்காக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இது புதிய கைத்தொழில்களை நிறுவுதல் பற்றிய முடிவுகள் மேற்கொள்ளும் முறைப்படுத்தப்பட்ட இந்தத் தொழில்நுட்பக் குழு இலங்கை முதலீட்டுச் சபை, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, கைத்தொழில் அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபை அத்துடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நிறைவேற்று தொழில்நுட்ப அலுவலர்களைக் கொண்டமைக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்கான நீர்த்தேவையில் 75% ஐப் பூர்த்திசெய்யும் அம்பத்தலை நீர்சுத்திகரிப்பு நிலையத்திற்கு களனி கங்கையிலிருந்து நீர் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. எனவே, கைத்தொழில் சார்ந்த கழிவு நீரிலிருந்து களனிகங்கை மாசடைவதைக் கட்டுப்படுத்துதல் இக்குழுவின் பிரதான நோக்கமாகும். இந்தக் குழு மேலும் களனி கங்கையை அண்டியுள்ளதும் பாரியளவில் கழிவு நீரை

வெளியேற்றுவதுமான பாரிய, நடுத்தரளவு கைத்தொழில்கள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகின்றது.

2014ஆம் ஆண்டில் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பிரிவு 12 கூட்டங்களை நடாத்தியுள்ளதோடு, கைத்தொழிலாளர்களால் முன்வைக்கப்பட்டிருந்த 34 கருத்திட்ட மதிப்பீடு செய்து 24 முன்மொழிவுகளுக்கு அங்கீகாரம் வழங்கியது. 8 கைத்தொழில்கள் நிராகரிக்கப்பட்டன. மேலும் ஆராய்வதற்கென பிற்போடப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை 04.

இக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட புதிய கருத்திட்ட அறிக்கைகளுக்காக ரூபா 10,000ஐ அறிவிட்டுக்கொள்வதற்கான அங்கீகாரத்தைக் கோரி இலங்கை முதலீட்டுச் சபை சமர்ப்பித்திருந்த பணிப்பாளர் சபை குறிப்பிற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

### 3.1.3.2 சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (EIA) க்கான தொழில்நுட்ப உதவி வழங்குதல்.

சுற்றாடல் மாசுக்கட்டுப்பாடு குறித்து தொழில்நுட்பக் குழுவில் விசேட உறுப்பினர்களாகப் பணியாற்றும் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பிரவின் அலுவலர்கள் குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களின் சுற்றாடல் தாக்கத்தினை மதிப்பீடுசெய்தல் மற்றும் தொடக்கநிலை சுற்றாடல் ஆய்வு போன்றவற்றை மேற்கொள்கின்றனர். EIA/IEE அலுவலர்கள் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு தொடர்பான அறிவுறுத்தல்களையும் விதப்புரைகளையும் வழங்கி வருகின்றனர்.

18 கருத்திட்டங்கள் தொடர்பில் தொழில்நுட்பக் குழு உறுப்பினர்களாக பங்கேற்று சுற்றாடல் மாசுக்கட்டுப்பாடு பற்றிய தொழில்நுட்ப உதவிகளை வழங்கியுள்ள சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பிரிவின் அலுவலர்கள் கூட்டாக மேற்கொள்ளப்பட்ட 5 களப் பரிசோதனைகளிலும் பங்கேற்றுள்ளனர்.

### 3.1.3.3 கைத்தொழில் நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப உதவிகள்

அ) தொழில்நுட்ப நிபுணத்துவ ஆலோசனை நிறுவனங்களையும் ஆய்வுகூடங்களையும் ஆண்டுதோறும் பதிவுசெய்தல்.

தொழிற்சாலைகளினால் ஏற்படுகின்ற சுற்றாடல் மாசடைவினை மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மட்டத்தில் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்கள், நிபுணத்துவத்தை கைத்தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ளுமுகமாக ஆய்வுகூடங்கள் / தொழில்நுட்ப நிபுணத்துவ மற்றும் ஆலோசனை வழங்கும் நிறுவனங்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றன.

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுப் பிரிவு 2014ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஆய்வுகூட மற்றும் ஆலோசனை சேவைகள் தொடர்பாக நடாத்தப்பட்ட செயலமர்வுகளில் சுமார் 90 பேர் பங்கேற்றனர்.

கைத்தொழிலாளர்களுக்குக் குறைந்த செலவில் தரமான தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதன்மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பினைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இதனூடாக, ஆய்வுகூட சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கும் ஆலோசனை சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கும் தத்தமது நிறுவனங்களிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து விரிவான சேவைகளை வழங்க முடிந்துள்ளது.

அதன்படி, 2014ஆம் ஆண்டில் 33 ஆய்வுகூடங்களும், 45 தொழில்நுட்ப நிபுணத்துவ சேவைகள் வழங்கும் நிறுவனங்களும் பதிவுசெய்துகொள்வதற்கென விண்ணப்பித்திருந்தன. கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மூலப்பிரமாணங்களின் அடிப்படையில் மதிப்பீட்டாய்வு செய்யப்பட்ட பின்னர் 29 ஆய்வுகூடங்களும் தொழில்நுட்ப நிபுணத்துவ சேவைகளை வழங்கும் 39 நிறுவனங்களும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டன. இவை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின்

இணையத்தளத்திலும் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளதோடு சம்பந்தப்பட்ட தகவல் அடங்கிய பிரசுரங்கள் அச்சிடப்பட்டு கைத்தொழிலாளர்களுக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டின் இறுதியில் 2014ஆம் ஆண்டில் நிறுவனங்களைப் பதிவு செய்யவதற்காக மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

### 3.1.3.4 ஆரோக்கியமான வாழ்வுக்கு சுற்றாடல் நேய கால்நடைப் பண்ணைகளை வைத்திருத்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

கால்நடைப் பண்ணைகளினால் ஏற்படுகின்ற சுற்றாடல் மாசடைவைக் கட்டுப்படுத்துதல் நாளுக்கு நாள் தீவிரமடைந்துவரும் ஒரு பிரச்சினையாகும். சிறிய அளவிலான கால்நடைப் பண்ணைகளில் அநேகமானவை குடியிருப்புப் பிரதேசங்களிலேயே அமைந்துள்ளன. எனவே, அவற்றினால் பிறப்பிக்கப்படுகின்ற தூசி, துகள்கள், துர்நாற்றம் மற்றும் நீர் மாசடைதல் பற்றிய முறைப்பாடுகள் அனுதினமும் கிடைத்த வண்ணமுள்ளன.

கால்நடைப் பண்ணைகள் சார்ந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென மத்திய சுற்றாடல் அதிகாரசபை, சுகாதார அமைச்சு, கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய, சமூக அபிவிருத்தி அமைச்சு, கால்நடை உற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்களம், மாகாண சபைகள் அத்துடன் உள்ளூராட்சித் திணைக்களம் ஆகியன இணைந்து தேசிய மட்ட ஆலோசனைக் குழுவொன்றினை அமைத்துள்ளன. இந்தக் குழு, கால்நடைப் பண்ணைகளைச் சுற்றாடலுக்கும் ஆரோக்கியத்துக்கும் பங்கம் ஏற்படாத வகையில் பேணுவது பற்றிய கொள்கைகளையும் விதப்புரைகளையும் தயாரித்தளிக்கின்றது.

பன்றி, ஆடு, கோழி மற்றும் மாடு வளர்ப்புத் தொடர்பில் தற்போதுள்ள அறிவுரைப்பு வழிகாட்டிகள் காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யினும் அதனை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் உள்ளதென்பதையும் தீர்மானித்துள்ளது.

அதன்படி 2013ஆம் ஆண்டில் சூழல்நேய கால்நடை வளர்ப்புத் தொடர்பான அறிவுரைப்பு வழிகாட்டி தயாரிக்கப்பட்டு 2014ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது. இதன்போது கோழி வளர்ப்புப் பற்றிய 4,000 கைந்நூல்களும், பன்றி வளர்ப்புப் பற்றிய 2,500 கைந்நூல்களும், ஆடு வளர்ப்புத் தொடர்பான 2,500 கைந்நூல்களும் அச்சிடப்பட்டன. அச்சிடப்பட்ட கைந்நூல்களை வழங்கிவைக்கும் நிகழ்வு 2014.04.03ஆம் திகதி நடைபெற்றது. இதில் சுகாதார அமைச்சுக்கும், கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சுக்கும் தலா 1,000 கைந்நூல்கள் வழங்கிவைக்கப்பட்டன. அத்துடன் களுத்துறை மாவட்டத்தில் காணப்படும் பன்றி வளர்ப்புப் பண்ணை உரிமையாளர்களுக்கான செயலமர்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### 3.1.3.5 சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களுக்குக் குறைந்த செலவில் தொழில்நுட்ப உத்திகளை அறிமுகம் செய்தல்.

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுப் பிரிவு 2014ஆம் ஆண்டில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கு குறைந்த செலவில் தொழில்நுட்ப உத்திகளை அறிமுகம் செய்தது. மத்திய சுற்றாடல் அதிகாரசபை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம், தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகம், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு இணைந்தே இந்தச் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுக்கான குறைந்த செலவிலான தொழில்நுட்ப உத்திகளை அறிமுகம் செய்யும் குழுவை அமைத்துள்ளன.

2014ஆம் ஆண்டில் பொலனறுவை மற்றும் கேகாலை பிரதேசத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வாகனப் பராமரிப்பு நிலையங்களை வைத்திருப்பவர்களுக்கான இரண்டு செயலமர்வுகள்

நடாத்தப்பட்டன. வாகனப் பராமரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் தொடர்பாக நடைபெற்ற இந்தச் செயலமர்வில் பொலனறுவையைச் சேர்ந்த 135 வாகனப் பராமரிப்பு நிலைய உரிமையாளர்களும் கேகாலையைச் சேர்ந்த 147 உரிமையாளர்களும் பங்கேற்றனர்.

## 3.1.4 சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுக்கான விசேட கருத்திட்டங்கள்

### 3.1.4.1 தேசிய பசுமை விருதுகள் நிகழ்ச்சித் திட்டம்

“தேசிய பசுமை விருதுகள்” சூழல் நேய தொழிற்பாடுகளை முன்னெடுக்கும் தொழில்முயற்சியாளர்களுக்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்படும் ஒரேயொரு விருதாகும். தொழில்முயற்சிகளை சூழல் நேயம் கொண்டதாக முன்னெடுத்துவரும் அரசு, தனியார் தொழில்முயற்சியாளர்களைக் கௌரவித்தல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இது பசுமையான இலங்கையை நோக்கிய பயணத்திற்கான உந்துசக்தியாகவும், கைத்தொழில்களில் சமூகத்தை, சுற்றாடலைப் பாதுகாக்கும் அரும்பணியில் பங்காளியாக்கும் நடைமுறைத் திட்டமாகவும் உள்ளது. மேலும், கைத்தொழில்களையும் சேவை வழங்குநர்களையும் கண்காணிப்புச் செயற்பாட்டின் அடிப்படையில் அமைந்த சுற்றாடல் மாசுக்கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் முகாமைத்துவ நுட்பங்களின்பால் ஊக்குவிக்கப்படும். அதனூடாக சுற்றாடல் தர நியமங்களைப் பேணி பேண்தகு நிலை சுற்றாடலை நோக்கி கைத்தொழில் சமூகத்தை நகர்த்திச் செல்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

2013/2014 ஆண்டில் தேசிய பசுமை விருதுகள் நிகழ்ச்சித்திட்டம் 16 பிரிவுகளின்கீழ் விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இதில் கைத்தொழில்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், கருத்திட்டங்கள் மற்றும் பாடசாலைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதன்படி அனுபவம் வாய்ந்த நிபுணர் குழுவைக்கொண்டு கிடைக்கப்பெற்ற 542 விண்ணப்பங்களும் மதிப்பீடு செய்யப்பட்டன. அதன்பின்னர் குழுவினால் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு மாத்திரம் களப் பரிசோதனை நடாத்தப்பட்டது.

2013/2014 ஆண்டுக்கான தேசிய பசுமை விருது வழங்கும் விழா, 2014ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் சுமார் 600 தொழில்முயற்சியாளர்களின் பங்கேற்புடன் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் 12 தங்க விருதுகளும் 13 வெள்ளி விருதுகளும் 17 வெண்கல விருதுகளும் 9 சிறப்பு விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன.



இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் 2013/2014 ஆண்டுக்கான தேசிய பசுமை விருது வழங்கும் விழா.



மத்திய சுற்றாடல் அதிகாரசபைத் தலைவர் உரையாற்றுகிறார்.



இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பாடசாலைகள் மற்றும் கைத்தொழில்களுக்கான தங்க விருதுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு.

### 3.1.4.2 செயலமர்வுகள் / பயிலமர்வுகள், கலந்துரையாடல்களும் முன்னிலைப்படுத்தல்களும்.

ஒவ்வொரு மட்டத்திலுள்ள அலுவலர்களும் தமக்கு ஒப்படைக்கப்படுகின்ற பணிகளையும் பொறுப்புக்களையும் வினைத்திறனாக மேற்கொள்வதற்குப் பயிற்சி இன்றியமையாதது. எனவே, சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பிரிவு கீழ்வரும் பயிலமர்வுகளையும் செயலமர்வுகளையும் கூட்டங்களையும் நடத்தியுள்ளது.

a. மத்திய சுற்றாடல் அதிகாரசபை அலுவலர்களுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அலுவலர்களுக்கும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கும் செயற்பாடு தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வொன்று கொழும்பு மாவட்டத்தில் நடாத்தப்பட்டது.

b. கைத்தொழில் சமூகத்தை இலக்காகக்கொண்டு சுற்றடாடல் மாசுக்கட்டுப்பாட்டு உத்திகள் பற்றிய 12 விரிவுரைகள் நடத்தப்பட்டன.

c. சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவு பங்கேற்ற கூட்டங்களின் எண்ணிக்கை 32. செயலமர்வுகளின் எண்ணிக்கை 11.

## முன்னேற்றச் சுருக்கம்

| தொழிற்பாடு | முன்னேற்றம் | | பிற |
|---|---|---|---|
| | பௌதிக | நிதிசார் | |
| **1.** சுற்றாடல் பாதுகாப்பு உரிமச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துதல். இலங்கை முதலீட்டுச் சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை. | | | இலங்கை முதலீட்டுச் சபையினால் தொழிற்பாட்டுச் செலவு ஏற்பட்டது. |
| • புதிய கைத்தொழில்களுக்கான சுற்றாடல் விதப்புரைகள் பற்றிய இணக்கப்பாடுகள். | 72 | | |
| • சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை புதுப்பிப்பதற்கான இணக்கப்பாடு. | 325 | | |
| • புதிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை புதுப்பித்தல் | 36 | | |
| கண்காணிப்பு | 48 | | |
| முறைப்பாட்டு அலகு | | 2014ஆம் ஆண்டில் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூபா 1,600,000/-.<br><br>ஒதுக்கப்பட்ட தொகையில் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகினால் செலவிடப்பட்ட தொகை ரூபா 1,227,680/- எஞ்சிய தொகை கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கப்பட்டது. | |
| BOI அல்லாத கைத்தொழில்கள் தொடர்பாகக் கிடைத்த முறைப்பாடுகள் | 50 | | |
| • விசாரிக்கப்பட்டவை | 12 | | |
| • பிற நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவை | 38 | | |
| BOI கைத்தொழில்கள் தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகள். | 68 | | |
| • BOI விசாரிக்கப்பட்டவை | 27 | | |
| • பிற நிறுவனங்களுக்கு ஆற்றப்படுத்தப்பட்டவை | 41 | | |
| **3.** தொழில்நுட்ப நிபுணத்துவ நிறுவனங்கள் மற்றும் ஆய்வுகூடங்களின் பட்டியலை இற்றைப்படுத்தல். | | | |
| ஆய்வுகூடங்களைப் பதிவு செய்வதற்கெனக் கிடைத்த விண்ணப்பங்கள். | 31 | | |
| நிபுணத்துவ தொழில்நுட்ப நிறுவனங்களைப் பதிவுசெய்வதற்கெனக் கிடைத்த விண்ணப்பங்கள். | 54 | | |
| பதிவுசெய்யப்பட்ட ஆய்வுகூடங்கள் | 27 | | |
| பதிவுசெய்யப்பட்ட நிபுணத்துவ ஆலோசனை நிறுவனங்கள். | 47 | | |
| **4.** பாரிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கான குழு | | | |
| • நடத்தப்பட்ட கூட்டங்கள் | 14 | | |
| • மதிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் | 34 | | |

| | | | |
|---|---|---|---|
| • அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்கள் | 24 | | |
| • நிராகரிக்கப்பட்ட கருத்திட்டங்கள் | 8 | | |
| சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களுக்கான இலக்கங்கள். | | | |
| • "அ" வகுதியில் விநியோகிக்கப்பட்ட புதிய சுற்றாடல் பாதுகாப்பு உரிம இலக்கங்களின் எண்ணிக்கை. | 3562 | | |
| "ஆ" வகுதியில் புதுப்பிக்கப்பட்ட புதிய சுற்றாடல் பாதுகாப்பு உரிம இலக்கங்களின் எண்ணிக்கை. | 2322 | | |
| 10. செயலமர்வுகள்/பயிலமர்வுகள் முன்னிலைப்படுத்தல்கள். | | | |
| • சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகு நடத்திய விரிவுரைகள். | 12 | | |
| • செயலமர்வுகள்/பயிலமர்வுகள் | 5 | | |
| • சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகு பங்கேற்ற கூட்டங்கள். | 32 | | |
| 11. பங்கேற்ற EIA குழுக்கூட்டங்கள். | 18 | | |
| 12. தேசிய பசுமை விருதுகள் நிகழ்ச்சி<br>தங்க விருதுகள்<br>வெள்ளி விருதுகள்<br>வெண்கல விருதுகள்<br>சிறப்பு விருதுகள் | <br>12<br>13<br>17<br>9 | | |

## 3.2.ஆய்வுகூடம்

### 3.2.1 வளிவள முகாமைத்துவ, கண்காணிப்பு அலகு

**வளிவள முகாமைத்துவம்**

#### 3.2.1.1 வளி வெளியேற்றம் பற்றிய தரவுப் பட்டியலை இற்றைப்படுத்தல்.

வளி வள முகாமைத்துவத்திற்கு வளி வெளியேற்ற தரவுப் பட்டியல் இன்றியமையாத ஓர் ஆவணமாகும். மத்திய சுற்றாடல் அதிகாரசபை 2014ஆம் ஆண்டில் 2011ஆம் ஆண்டுக்கான வளி வெளியேற்றம் தொடர்பான தரவுப் பட்டியலைத் தயாரித்தது. அந்த ஆவணத்தை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு துறையினின்றும் வெளியேற்றப்படும் வளியின் அளவினைக் கட்டுப்படுத்துவதற்கான மூலங்கள் இனங்காணப்பட்டன.

2011ஆம் ஆண்டின் வளிவெளியேற்றத் தரவுப் பட்டியலின்படி இனங்காணப்பட்ட முக்கியமான மூலங்களைக் கட்டுப்படுத்துவதற்கான 2015 செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.




வருடாந்த வெளியேற்றத்தின் அளவு கிலோ வாற்/ஓராண்டில் - 2011

### 3.2.1.2 வலுவிலுள்ள வளி வெளியேற்றம் பற்றிய ஒழுங்கு விதிகளைத் திருத்தியமைத்து புதிய ஒழுங்கு விதிகளைத் தயாரித்தல்.

2013ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட 2011ஆம் ஆண்டுக்கான வளி வெளியேற்ற தரவுப் பட்டியலின்படி கைத்தொழில்துறை, எரிசக்தித் துறை மற்றும் இதர சகல வளி வெளியேற்ற மூலங்களை விடவும் போக்குவரத்து பிரிவிலேயே அதிக வெளியேற்றம் இடம்பெற்றுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை இனங்கண்டுள்ளது.

அதன்படி, வாகனங்களிலிருந்து வெளியேற்றபடுகின்ற வளியின் அளவைக் கட்டுப்படுத்துவதற்கென 2014ஆம் ஆண்டில் வளி வெளியேற்றத் தரநியமங்கள் மீதான திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதன்படி வளித் தரத்தை தேசிய சுற்றாடல் (காப்பீட்டு வளித்தர) ஒழுங்கு விதிகளுக்கமைய பேண முடியும். கைத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படுகின்ற வளி வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய சுற்றாடல் (நிலைய மூல வெளியேற்றம்) பற்றிய கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளை ஆக்கும்பணி 2014 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்டது.

### 3.2.1.3 காப்பீட்டு வளித்தரக் கண்காணிப்பு

2014ஆம் ஆண்டு கொழும்பு நகரின் காப்பீட்டு வளித்தரத்தை அளவிடுவதற்கென கோட்டை புகையிரத நிலையத்தின் அருகில் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு நிலையம் இரசாயனப் பகுப்பாய்வு (**Wet Chemical**) முறையைப் பின்பற்றி சல்பர் டையொக்சைற்று ($SO_2$) மற்றும் நைதரசன் டையொக்சைற்று ($NO_2$) செறிவு அளவிடப்பட்டது. மேலும், வளியில் காணப்படுகின்ற 10 மைக்ரோமீற்றருக்கும் குறைவான விட்டம் கொண்ட நுண் துணிக்கை (**PM 10**) களின் செறிவு கொழும்பு நகரில் அதிகரிக்கும் வாகன எண்ணிக்கைக்கு நிகராக மாற்றமடையும் போக்கினை ஆய்வு செய்வதற்கென குறித்த செறிவுகளும் வாராந்தம் அளவு செய்யப்பட்டன. மேலும், ஏனைய பிரதான நகரங்களில் பொதுமக்கள் வளி மாசுபாடுகளைச் சந்திக்கும் நிலையை அறிந்துகொள்வதற்காக இரத்தினபுரி மற்றும் குருநாகல் நகரில் குறுகிய கால தானியங்கி நடமாடும் வளித்தரக் கண்காணிப்பு ஆய்வுகூடங்கள் பயன்படுத்தப்பட்டு வளியின் தரம் அளவிடப்பட்டது.

### 3.2.1.4 இலங்கையில் காப்பீட்டு வளித்தரம்

கொழும்பு வளித்தரக் கண்காணிப்பு நிலையத்தின் கடந்த 17 ஆண்டுகால தரவுகளின்படி வளியில் காணப்படுகின்ற 10 மைக்ரோ மீற்றருக்கும் குறைவான விட்டமுள்ள நுண்துணிக்கை **(PM 10 )** களின் அளவு குறைந்திருப்பினும், அது சிபாரிசு செய்யப்பட்டுள்ள வருடாந்த சராசரி உச்ச எல்லையைக் கடந்துள்ளது.

**கொழும்பு நகரில் 17 ஆண்டு காலத்தில் $PM_{10}$ வருடாந்த சராசரிப் பெறுமான மாற்றங்கள்.**




### 3.2.1.5 பிரதான நகரங்களில் வளி மாசடைதல்:

கீழ்க் காட்டப்பட்டுள்ள வரைபினால் குருநாகல் நகரத்தில் 2014ஆம் ஆண்டில் வளி மாசடைதல் பற்றிய தரவுகள் தரப்பட்டுள்ளதோடு, பிற நகரங்களில் 2014ஆம் ஆண்டில் சுற்றுப்புற வளித்தரம் இதைவிடவும் சிறந்த நிலையில் காணப்பட்டது.

$PM_{10}$ – நடமாடும் ஆய்வுகூடத்தில் ஒரு மணிநேர சராசரிப் பெறுமானம் பதிவு செய்யப்படுவதோடு, அதன்படி, 7 நாட்களுக்கான 24 மணிநேர சராசரி கணிக்கப்பட்டுள்ளது. $PM_{10}$ ஒரு கன செறிவு 24 மணி நேரத்தின் உச்ச சராசரி எல்லையான ஒரு கன மீற்றருக்கு 100 மைக்ரோ மீற்றர் அளவினைக் கடந்துள்ளது.




PM2.5 (வளியில் அடங்கியுள்ள 2.5 மைக்ரோ மீற்றருக்கும் குறைவான நுண் துணிக்கைகள்) நடமாடும் ஆய்வுகூடத்தில் ஒரு மணி நேர சராசரிப் பெறுமானம் பதிவுசெய்யப்படுவதோடு, அதன்படி 7 நாட்களுக்கான 24 மணிநேர சராசரி கணிக்கப்பட்டுள்ளது. எனவே, PM2.5 செறிவு 24 மணி நேரத்தின் உச்ச சராசரி எல்லையின் ஒரு கன மீற்றருக்கு 50 மைக்ரோ மீற்றர் அளவினைக் கடந்துள்ளது.




$NO_2$-நடமாடும் ஆய்வுகூடத்தில் ஒரு மணி நேர சராசரி பெறுமானம் பதிவு செய்யப்படுவதோடு, அதன்படி 7 நாட்களுக்கான 24 மணி நேர சராசரி கணிக்கப்பட்டுள்ளது. எனவே, $NO_2$ செறிவு 24 மணி நேரத்தின் உச்ச சராசரி எல்லையான பத்து இலட்சத்திற்கு 0.05 அளவு விஞ்சப்பட்டுள்ளது.




$C0$ (காபன் மொனொக்சைற்று) - நடமாடும் ஆய்வுகூடத்தில் ஒரு மணி நேர சராசரி பெறுமானம் பதிவு செய்யப்படுவதோடு, அதன்படி 7 நாட்களுக்கான 24 மணிநேர சராசரி கணிக்கப்பட்டுள்ளது. எனவே, $C0$ 8 மணி நேரத்திற்கான உச்ச சராசரி எல்லையான பத்து இலட்சத்துக்கு 9 பகுதியளவு விஞ்சப்பட்டுள்ளது.




$SO_2$ நடமாடும் ஆய்வுகூடத்தில் ஒரு மணி நேர சராசரிப் பெறுமானம் பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு, அதன்படி 7 நாட்களுக்கான 24 மணி நேர சராசரி கணிக்கப்பட்டுள்ளது. எனவே, 24 மணி நேரத்திற்கான $SO_2$ உச்ச சராசரி எல்லையான பத்து இலட்சத்துக்கு 0.03 பகுதியளவு விஞ்சப்பட்டுள்ளது.




### 3.2.1.6 நாடுகளுக்கிடையில் நிகழும் வளி மாசடைதலின் தரத்தை கண்காணித்தல்.

#### 3.2.1.6.1 மாலே பிரகடன கருத்திட்டம்.

மாலே பிரகடனத்தில் உள்வாங்கும் தெற்காசிய நாடுகளுக்கிடையில் நிகழும் வளி மாசடைவு, அதன் தாக்கம் மற்றும் வளி மாசடையும் தரத்தைக் கட்டுப்படுத்தல் அத்துடன், தடுத்தல் போன்ற நடவடிக்கைகளை மாலே நடவடிக்கைகளுக்கான தேசிய நிறுவனமான மத்திய சுற்றாடல் அதிகாரசபை மேற்கொள்கிறது. வளிவள முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு பிரிவு மேற்படி பிரகடனத்திற்கமைவாக நாடுகளுக்கிடையிலான வளித் தாக்கத்தைக் கண்காணித்து வருகிறது.

இந்த நிகழ்ச்சித்திட்டம சம்பந்தப்பட்ட இதர தெற்காசிய நாடுகளுக்குச் சமாந்தரமாக நாடுகளுக்கிடையிலான வளித்தரக் கண்காணிப்பு ஆய்வுகூடங்களால் மேற்கொள்ளப்படுகிறது.

#### 3.2.1.6.2 அமிலமழை கண்காணிப்பு

பிராந்தியங்களுக்கிடையில் நிகழும் வளி மாசடைவினால் அமில மழை பெய்வதற்கான வாய்ப்புகள் உள்ளனவா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக ஆய்வுகூடங்கள் ஊடாக மழைநீர் மாதிரிகள் சோதனையிடப்படுகின்றன. மாலே கண்காணிப்புக் குழுவின் சிபாரிசுபடி மிகிந்தலைப் பிரதேசத்தின் தொறமண்டலாவ எனுமிடத்தில் மழைநீர் சேகரிப்பு இடம்பெறுவதோடு, இரண்டு வழிகளில் மழைநீர் சேகரிக்கப்படுகின்றது. அதாவது, அனுதினமும் திறந்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு கொள்கலத்திலும் மழை பெய்யும் நேரத்தில் மட்டும் திறக்கப்படும் கொள்கலத்திலும் மழைநீர் சேகரிக்கப்படுகிறது.

சேகரிக்கப்படும் மழை மாதிரிகளின் அளவு, அவற்றிலுள்ள கூறுகளின் பகுப்பாய்வு, மின்கடத்துதிறன் (Ec) மற்றும் அமிலத்தன்மை என்பன (pH) அளவீடு செய்யப்படும்.

#### 3.2.1.6.3 நாடுகளுக்கிடையில் நிகழும் வளி மாசடைவைக் கண்காணித்தல்

தொறமண்டலாவ மாதிரி சேகரிப்பு நிலையத்தில் வளியிலுள்ள 10 மைக்ரோ மீற்றர் விட்டத்திலும் குறைவான நுண் துணிக்கை செறிவினை அளவீடு செய்யும் பணி வாராவாரம் (24 மணி நேரத்தினுள்) நடைபெறும்.

தொறமண்டலாவ கண்காணிப்பு வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள சாதனங்கள்






**தொறமண்டலாவ கண்காணிப்பு வளாகம் $PM_{10}$ செறிவு மாறுபாடு.**

### 3.2.1.7 ஒலி மாசுக் கட்டுப்பாடு

இலங்கைவாழ் மக்களைப் பாதிக்கும் பிரதான சுற்றாடல் பிரச்சினையாக ஒலி மாசடைதல் காணப்படுகிறது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வளிவள முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு அலகு ஒலி மாசடைதலைக் கண்காணித்து வருகிறது.

கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்குதல், புதுப்பித்தல் அத்துடன் கண்காணித்தல் போன்ற நடவடிக்கைகளின்போதும் பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காகவும் ஆய்வுகூடங்கள் ஊடாக ஒலி மட்டங்கள் அளவீடு செய்யப்படுகின்றன. மேலும், கைத்தொழிலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க வர்த்தக ரீதியில் ஒலி மட்டங்கள் அளவிடப்படுகின்றன.



**களத்தில் ஒலியை அளவீடு செய்தல்**

வாகன இசைக்கொம்பு மூலம் ஏற்படுகின்ற ஒலி மாசுபடுத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 2011ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (வாகன இசைக்கொம்பு) ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்காக வளி வள முகாமைத்துவக் கண்காணிப்பு அலகு பங்கீடுபாட்டாளர்களுடன் கூட்டங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை நடத்தியதுடன், பிரதான நகரங்களில் பொலிஸ் போக்குவரத்து சுற்றாடல் பிரிவுடன் இணைந்து இசைக்கொம்பு ஒலி அளவீடும் இடம்பெற்றது.

அதிவேக நெடுஞ்சாலைகளுக்கென குறிப்பாக பேலியகொட தொடக்கம் கிருளப்பன வரையான உத்தேச உயர்த்து வீதி (elevated high ways) தொடர்பான புதிய அறிவுரைப்பு வழிகாட்டி 2014ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது.

### 3.2.2 நீர்த்தரக் கண்காணிப்புப் பிரிவு

#### 3.2.2.1 கைத்தொழில் நடவடிக்கைகளினால் ஏற்படுகின்ற சுற்றாடல் மாசடைவினைக் கண்காணித்தலும் முகாமைத்துவமும்

சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழான ஒரு சட்ட ஏற்பாடாகும். எனவே, சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டிய கைத்தொழில்கள் / விதந்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் அ, ஆ. இ என மூன்று வகுதிகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளுக்குத் தேவையான பகுப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவில் நீர்த்தரக் கண்காணிப்பு ஆய்வுகூடம் செயற்படுகிறது. கைத்தொழில் கழிவுகள் மற்றும் மேற்பரப்பு நீர் பற்றிய பகுப்பாய்வு அறிக்கைகளை வழங்கி நீர்வள முகாமைத்துவத்திற்காகவும் பேணுகைக்காகவும் நாடளாவிய ரீதியில் கைத்தொழில் கண்காணித்தல் இதன் பிரதான நோக்கமாகும்.

அதன்படி, 2014ஆம் ஆண்டு 950 நீர்மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்குதல், வர்த்தக, சட்ட, மேற்பரப்பு மற்றும் நிலக்கீழ் நீர்நிலைகளைக் கண்காணித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்கு இந்த நீர்மாதிரிகள் பயன்பட்டன. விபரங்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை **1.1.1**

| மாதிரிகள் சேகரிக்கப்பட்டதன் நோக்கம் | சேகரித்த மாதிரிகளின் எண்ணிக்கை | செய்யப்பட்ட பகுப்பாய்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| புதிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்குதல்/புதுப்பித்தல் | 158 | 948 |
| சட்ட ரீதியான தேவைகளுக்கென | 60 | 360 |
| முறைப்பாட்டு விசாரணைக்கென | 164 | 984 |
| கண்காணிப்புகளுக்கென | 67 | 402 |
| பிற | 36 | 216 |
| வர்த்தக ரீதியான | 61 | 366 |
| மொத்தம் | 546 | 3276 |

**அட்டவணை 1.1.1 : 2014ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட கைத்தொழில் கழிவு மாதிரிகள்**

சேகரிக்கப்பட்ட ஒரு மாதிரி 6-9 இடைப்பட்ட சாராமாறிகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளது.

**மேற்பரப்பு நீர்த்தரக் கண்காணிப்பு**

இதன்கீழ் கைத்தொழில் கழிவுகளைக் கண்காணிப்புக்கு உட்படுத்தலும், களனி கங்கை, மகா ஓயா, தண்டுகம் ஓயா மற்றும் பெந்தோட்டை ஆறு ஆகிய மேற்பரப்பு நீர்நிலைகளின் நீர் மாதாந்தம் கண்காணிக்கப்பட்டது. மேலும், காலாண்டுக்கு ஒரு முறை பொரலெஸ்கமுவ வாவியின் நீர்த்தரமும் கண்காணிக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டிலும் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருந்த இடங்களிலிருந்து மாதாந்தம் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அவற்றின் பௌதிக, இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் சாராமாறிகள் கண்காணிக்கப்பட்டன.

அந்தத் தரவுகள் அடங்கிய அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| மேற்பரப்பு நீர்நிலையின் பெயர் | சேகரிக்கப்பட்ட நீர்மாதிரிகள் | செய்யப்பட்ட பகுப்பாய்வுகள் |
|---|---|---|
| களனிகங்கை | 148 | 2072 |
| மகா ஓயா | 80 | 1120 |
| தண்டுகம் ஓயா | 72 | 1008 |
| பொரலெஸ்கமுவ வாவி | 16 | 240 |

| | | |
|---|---|---|
| பெந்தோட்டை ஆறு | 70 | 980 |
| பிற | 14 | 196 |
| வர்த்தக ரீதியான | 4 | 56 |
| மொத்தம் | 404 | 5072 |

**அட்டவணை 1.2.1 : 2014ஆம் ஆண்டில் மேற்பரப்பு நீர்நிலைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நீர்மாதிரிகள்**

## 1.2.1 களனி கங்கையின் நீர்த்தரக் கண்காணிப்பு

களனி கங்கையின் நீர் பாவனைக்கு உகந்த நிலையில் உள்ளதென்பதைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதும் நீர் மாசுக் காரணி சாராமாறிகள் பற்றிய அறிவினை மேம்படுதுவதும் இதன் பிரதான நோக்கமாகும். (எளிமையான முறையில் சுத்திகரித்து குடிப்பதற்கும் குளியலுக்கும் மற்றும் சலவை செய்வதற்கும்) நீர் மாதிரிகள் சேகரிக்கப்படும் இடங்களில், பகுப்பாய்வு செய்யப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நீர் எவ்வாறு பாவனைக்கு உகந்த நிலையிலுள்ளது என்பதைத் தெரிவிக்கும் அறிவிப்புப் பலகைகளும் பொருத்தப்பட்டுள்ளன.

2014ஆம் ஆண்டில் களனி கங்கையின் 7 இடங்களும் அதன் கிளை ஆறுகளிலிருந்து 5 இடங்களும் 14 சாராமாறிகளுக்கென மாதாந்தம் கண்காணிக்கப்பட்டன. நீர்மாதிரிகள் சேகரிக்கப்பட்ட இடங்கள் **வரைபடம் 1.2.1.1.** இல் காட்டப்பட்டுள்ளன.




**வரைபடம் 1.2.1.1. – களனி கங்கையில் நீர்மாதிரிகள் சேகரிக்கப்பட்ட இடங்கள்**

சீத்தாவக்க இறக்குதுறை, பூகொட இறக்குதுறை, ஹங்வெல்ல பாலம், கடுவலை பாலம், விக்டோரியா பாலம் இவை நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்ட 07 இடங்களாகவும், வக்ஓயா (கிளை ஆறு), பூகொட கால்வாய், புஸ்வெலி ஓயா, மறா எல அத்துடன் ரக்கஹுவத்த இவை கிளை ஆறுகளாகவும் காணப்படுகின்றன.

இவ்விபரங்களை அட்டவணை 1.2.1.1. இல் காணலாம்.

மேற்படி 12 இடங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகளின் சாராமாறிகளாவன, pH பெறுமானம், மின் கடத்துதிறன், கலங்கற்தன்மை, வெப்பநிலை, இரசாயன ஒட்சிசன் தேவை, உயிர் இரசாயன ஒட்சிசன் தேவை, கரைந்துள்ள ஒட்சிசன், குளோரைற்று, கரைந்துள்ள குரோமியம், கரைந்துள்ள ஈயம், நைத்திரேற்று நைதரசன், பொசுபரசு பொசுபேற்று மற்றும் மொத்த கோழி வடிவ பற்றீரியா.

| அகலாங்கு | நெட்டாங்கு | மாதிரிகள் சேகரிக்கப்பட்ட இடங்கள் | GEMS கண்டறியும் பிரிவு |
|---|---|---|---|
| 6 57 14 | 80 13 12 | தல்தூவ பாலம் | (076005) |
| 6 58 37 | 80 11 39 | சீத்தாவக்க இறங்குதுறை | (076006) |
| 6 55 02 | 80 05 53 | வக்ஓயா (கிளை ஆறு) | (076011) |
| | | பூகொட இறங்குதுறை | (076009) |
| 6 56 38 | 80 08 18 | பூகொட சிற்றாறு (கிளை ஆறு) | (076010) |
| 6 54 36 | 80 05 00 | ஹங்வெல்ல பாலம் | (076007) |
| 6 54 26 | 80 03 57 | புஸ்வெலி ஓயா (கிளை ஆறு) | (076012) |
| 6 56 00 | 79 59 32 | மஹ எல (கிளை ஆறு) | (076013) |
| | | கடுவலை பாலம் | (076008) |
| 6 56 21 | 79 58 09 | ரத்கஹுவத்த கால்வாய் (கிளை ஆறு) | (076001) |
| 6 56 18 | 79 56 50 | வெலிவிட்ட பாலம் | (076003) |
| 6 57 37 | 79 52 40 | விக்டோரியா பாலம் | (076002) |

அட்டவணை 3 : களனி கங்கையில் மாதிரிகளைச் சேகரிக்கும் இடங்கள்

**1.2.1.1 களனி கங்கையின் நீர்த் தரத்தை மதிப்பீடு செய்தல்**

2014ஆம் ஆண்டில் அடிப்படை சாராமாறிகளில் ஏற்பட்ட மாறுபாடுகள் இந்த வரையில் காட்டப்பட்டுள்ளன.




**வரைபு 1.2.1.1.1 : 2014 ஆண்டில் களனி கங்கையின் pH பெறுமான மாறுமாடு**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் முன்மொழியப்பட்டுள்ள தேசிய நீர்த்தர நியமங்களுடன் ஒப்பிடுகையில், வெவ்வேறு இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் pH பெறுமானத்தில் குறிப்பிடத்தக்க மாறுபாட்டை காண்பிக்கவில்லை.




**வரைபு 1.2.1.1.2 : 2014 ஆண்டில் களனி கங்கையின் மின்கடத்துதிறன் பெறுமான மாறுபாடு**

பெப்ரவரி மாதம் விக்டோரியா பாலத்திலிருந்து அதிகூடிய மின்கடத்துதிறன் பெறுமானம் அறிக்கையிடப்பட்டது. வரட்சி நிலவிய காலத்தில் கடல்நீர் உட்புகுந்தமை இதற்கு ஏதுவாக இருக்கலாம். அதேபோன்று, சில மாதங்களாக சீத்தாவக்க இறங்குதுறை அருகில் மின்கடத்துதிறன் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவுசெய்ததோடு, பெப்ரவரி மாதம் அதிகூடிய பெறுமானத்தைப் பதிவு செய்தது. இதில் செல்வாக்குச் செலுத்திய இரண்டு காரணிகளில் ஒன்று சீத்தாவக்க கைத்தொழில் பேட்டையிலிருந்து வெளியேற்றப்பட்ட கைத்தொழில் கழிவுகள். மற்றைய காரணி, மாணிக்கக்கல் அகழ்வு அதிகரித்ததால் ஆற்றுப்படுக்கையில் ஏற்பட்ட அரிப்பு.




**வரைவு 1.2.1.1.3 : 2014ஆம் ஆண்டில் களனி கங்கையின் கலங்கற்தன்மை பெறுமான மாறுபாடு**

2014ஆம் ஆண்டு முழுவதிலும் காலநிலையில் ஏற்பட்ட பாரிய மாற்றங்கள் காரணமாகக் கலங்கற் தன்மைப் பெறுமானங்களில் குறிப்பிடத்தக்க மாறுபாட்டை அவதானிக்க முடிந்தது. மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் முன்மொழியப்பட்டுள்ள தேசிய நீர்த்தர நியமங்களுடன் ஒப்பிடுகையில் ஆண்டு முழுவதும் சேகரித்த மாதிரிகளில் அதிக கலங்கற் தன்மை பதிவுசெய்யப்பட்டது. இந்நிலைக்கு மண்ணரிப்பு, நீரேந்தும் பிரதேசங்களில் தாவரப் போர்வை அழிக்கப்படல், அத்துடன் பல்வேறு அபிவிருத்திகள் மற்றும் அகழ்வுகள் என்பன காரணமாக அமைந்துள்ளன. அதேபோன்று, வரட்சிக் காலத்தின் பின்னர் பெய்த கடும் மழையும் பல்வேறு இடங்களில் கலங்கல் தன்மை ஏற்படக் காரணமாகியது.




வரைவு 1.2.1.1..4 : 2014ஆம் ஆண்டில் களனி கங்கையில் கரைந்துள்ள ஒட்சிசன் பெறுமான மாறுபாடுகள்

இஹல ரக்கஹவத்த எல, மஹ எல மற்றும் சீத்தாவக ஆகிய இடங்களில் கைத்தொழில்களினால் ஏற்படும் மாசுபாடு கரைந்துள்ள ஒட்சிசன் பெறுமானத்தை மிகவும் குறைவாகவே பதிவுசெய்திருந்தது. மேலும், கங்கை நீருடன் கலக்கும் மாசுக்காரணிகள் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் குறைவாகக் காணப்பட்டது.




வரைவு 1.2.1.1.5 : 2014ஆம் ஆண்டில் களனி கங்கையில் இரசாயன ஒட்சிசன் தேவை மாறுபாடு

பல இடங்களில் இரசாயன ஒட்சிசன் தேவைக்கான பெறுமானங்கள் தேசிய நீர்த்தர நியமங்களுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியைப் பதிவு செய்திருந்தபோதும், வரட்சியான காலநிலை நிலவிய ஏப்பிறல் மாதத்தில் கைத்தொழில் மாசு அதிகமாகக் காணப்பட்ட ரக்கஹவத்த கால்வாய் அதியுச்ச பெறுமானம் பதிவுசெய்யப்பட்டது. அநேகமான சந்தர்ப்பங்களில் விக்டோரியா பாலத்திற்கு அருகில் இரசாயன ஒட்சிசன் தேவை உச்சப் பெறுமானத்தைப் பதிவு செய்தது. கைத்தொழில் கழிவுகள் ஆற்று நீரில் கலப்பதும், வரட்சிக் காலத்தில் கடல்நீர் உள்வருவதும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

### 3.2.2.2 நீர்த்தர கண்காணிப்பு அலகு மேற்கொண்ட ஏனைய செயற்பாடுகள்

**விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றல்**

2014ஆம் ஆண்டில் நீர்த்தர ஆய்வுகூட பணியாளர்கள் நீர் மாசடைதல் மற்றும் அதுபற்றிய விடயங்கள் குறித்து பொதுமக்களை விழிப்புணர்வு செய்தனர். மேலும், சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி வலு அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட "பிவித்துரு கங்கா" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களும் அவர்களது பெற்றோரும் விழிப்புணர்வு செய்யப்பட்டனர். இதன்போது, நிரந்தர பகுப்பாய்வினை மேற்கொள்ளும் விதம் பற்றியும் அதுதொடர்பான தகவல்களையும் நீர்த்தரக் கண்காணிப்பு ஆய்வுகூடத்தின் பணியாளர்கள் முன்வைத்தனர். அத்துடன், றாகம மருத்துவ பீடத்திற்கும், களனி பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இரண்டு நாட்களைக் கொண்ட நீர்ப்பகுப்பாய்வு செயலமர்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த செயலமர்வில் புகையிரதத் திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் செயற்படுத்தப்படும் சமூக மட்ட அமைப்புகளுக்கும் விரிவுரைகள் நடாத்தப்பட்டன.

**பிற செயற்பாடுகள்**

2014ஆம் ஆண்டில் நீர்த்தர ஆய்வுகூடப் பணியாளர்கள், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உள்ளகப் பிரிவினால் நடாத்தப்பட்ட 41 சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு பணிகளும், விடயப் பரப்புடன் சம்பந்தப்பட்ட சில கூட்டங்களிலும், சுற்றாடல் ஆய்வுகூட மற்றும் நிபுணத்துவ நிறுவனங்களின் மதிப்பீட்டு நடவடிக்கைகளிலும், நீதிமன்ற நடவடிக்கைகள் சிலவற்றிலும் பங்கேற்றிருந்தனர்.

மேலும், அம்பாறை பிரதேச ஆய்வுகூடத்தை நிறுவும் நடவடிக்கைகளில் அதிகமான பங்களிப்பினைச் செலுத்தியுள்ளனர்.

## 3.3 கழிவுப்பொருள் முகாமைத்துவ அலகு

2014ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தில் இனங்காணப்பட்டவாறு அபாயகரமான கழிவுப்பொருள் மற்றும் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான பின்வரும் பொறுப்புக்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுப் பிரிவின்கீழ் இயங்கிவரும் கழிவுப்பொருள் முகாமைத்துவ அலகுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அ) அபாயகரமான கழிவுப்பொருள் முகாமைத்துவத்துடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல்.

ஆ) சர்வதேச உடன்படிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை செயற்படுத்துதல் மற்றும்

இ) திண்மக் கழிவுப்பொருள், அபாயகரமான கழிவுப்பொருள் முகாமைத்துவம் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

### 3.3.1 இலங்கையில் அபாயகரமான கழிவுப்பொருள் முகாமைத்துவத்துடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல்

அபாயகரமான கழிவுப்பொருள் முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை (1534/18 ஆம் இலக்க மற்றும் 2008.02.01 திகதிய வர்த்தமானப் பத்திரிகை) நடைமுறைப்படுத்துவதன் ஓர் அங்கமாக 2014ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டுள்ள மொத்த உரிமங்களின் எண்ணிக்கை 143.

மேற்படி ஒழுங்குவிதிகள் நடைமுறைப்படுத்தப்படுவதை இலகுபடுத்துவதற்காகவும், உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும் சிகிச்சையின்போது பெறப்படும் கழிவுகளை எரிப்பதற்கான எரி உலை வசதிகளை ஏற்படுத்துவதற்காக சிசிலி ஹனாறோ என்கெயா நிறுவனத்துடன் முத்தரப்பு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்கு சுகாதார அமைச்சும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் நடவடிக்கையெடுத்துள்ளன. இதனூடாக நாளொன்றுக்கு 06 தொன் கழிவுகளை எரிக்க முடிவதுடன், நாட்டின் அரசு மற்றும் தனியார்துறை சுகாதார சேவை வழங்கலின்போது பெறப்படுகின்ற கழிவுகளைச் சூழலுக்குப் பாதிப்பு நேராத வகையில் அகற்ற முடியும்.

மேல், மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு சிகிச்சையின்போது பெறப்படுகின்ற கழிவுகளை முகாமைத்துவம் செய்வது பற்றிய தொழில்நுட்பம் சார்ந்த 03 செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

### 3.3.2 பாசல் உடன்படிக்கையை அமுல்படுத்தல்

#### 3.3.2.1 கைத்தொழில்களுக்காக பாசல் உடன்படிக்கையின் ‘B’ பட்டியலிலுள்ள கழிவுப்பொருட்களை இறக்குமதி செய்தல்.

அபாயகரமான கழிவுப்பொருட்களை ஏற்றிச் செல்லுதல் மற்றும் அகற்றுதல் தொடர்பான பாசல் உடன்படிக்கையில் எமது நாடு 1992.08.28ஆம் திகதி கையெழுத்திட்டுள்ளது. அன்று தொடக்கம் இலங்கையில் இந்த உடன்படிக்கையை அமுலாக்கும் அதிகார பீடமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை விளங்குகிறது. அன்று தொடக்கம் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும் வகையில் சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய ஒன்றிணைப்புக் குழு அபாயகரமான கழிவுப்பொருள் முகாமைத்துவத்துக்குத் தேவையான தொழில்நுட்ப உதவியை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு வழங்கும் பொருட்டு வல்லுநர்களைக் கொண்ட குழுவொன்றை அமைத்தது. இந்தக் குழு பாசல் உடன்படிக்கையில் ‘B’ பட்டியலிலுள்ள கழிவுப்பொருட்களை

இறக்குமதி செய்து அவற்றை மூலப்பொருட்களாக உபயோகிக்க உத்தேசித்துள்ள கைத்தொழில்களுக்கான விதப்புரைகளை வழங்கி வருகிறது. (பாசல் உடன்படிக்கையின் ‘A’ பட்டியலிலுள்ள கழிவுப் பொருட்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதை ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் அபாயகரமான இரசாயனப் பொருட்டகள் மற்றும் அது பற்றிய நிறுவனங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகள் 2013ஆம் ஆண்டு யூன் மாதம் 05ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி 2014ஆம் ஆண்டில் 310 அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.3.2.2 நாடுகளுக்கிடையில் அபாயகரமான கழிவுப்பொருட்களை ஏற்றிச்செல்லல்

இலங்கையில் பாசல் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும் அதிகார நிறுவனமான மத்திய சுற்றாடல் அதிகாரசபை 2014ஆம் ஆண்டில் குறித்த உடன்படிக்கையின் ‘A’ பட்டியலிலுள்ள கழிவுப்பொருட்களை எமது நாட்டெல்லை ஊடாகக் கொண்டு செல்வதற்கான 08 அங்கீகாரங்களையும் அவற்றை எற்றுமதி செய்வதற்கான 05 அங்கீகாரங்களையும் வழங்கியுள்ளது.

## 3.3.3 றொடர்டேம் உடன்படிக்கையை அமுலாக்குதல்

இலங்கையில் ‘எஸ்பெஸ்ரஸ் நார்கள்’ சார்ந்த நோய்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக ‘எஸ்பெஸ்ரஸ்’ பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவது குறித்து கலந்துரையாடுவதற்கு தொழில்நுட்பக் குழுக் கூட்டமொன்று நடத்தப்பட்டது.

### 3.3.3.1 இலத்திரனியல், மின்சார்ந்த கழிவுப்பொருள் முகாமைத்துவம்

நாட்டில் இலத்திரனியல் மற்றும் மின்சார்ந்த சாதனங்களுக்கு அதிகமாக கேள்வியுள்ளது. இதன்விளைவாக கடந்த சில ஆண்டுகளில் இலத்திரனியல் மற்றும் மின்சார்ந்த கழிவுப்பொருட்களின் அளவு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. எனவே, இந்தக் கழிவுப்பொருட்களில் அபாயகரமான பொருட்கள் அடங்கியிருப்பதால் அது பற்றிய உரிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை கடந்த ஐந்தாண்டு காலத்தில் சட்ட நடவடிக்கைகளுக்கும் அப்பால் நாட்டில் இவ்வாறான கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக, அரசு மற்றும் தனியார்துறை இணைந்து நடாத்திய இலத்திரனியல் முகாமைத்துவ தேசிய நிகழ்ச்சித் திட்டம், இலத்திரனியல் மற்றும் மின்சார்ந்த கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் அத்துடன் பல்வேறு துறைகளை இலக்காகக்கொண்டு நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

அதன்படி, மத்திய சுற்றாடல் அதிகாரசபை 2014ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி தொடக்கம் யூன் 02ஆம் திகதி வரையான காலத்தை தேசிய இலத்திரனியல் மற்றும் மின்சார்ந்த கழிவுப்பொருள் முகாமைத்துவ வாரமாக பிரகடனம் செய்தது. இதன் அங்குரார்ப்பண நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் ‘மிஹிலக’ வளாகத்தில் சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் மாண்புமிகு சுசில் பிரேமஜயந்த அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலத்தரனியல் முகாமைத்துவத் தேசியத் திட்டத்தின் 19 பங்கீடுபாட்டாளர்களுடனான புரிந்துணர்வு உடன்படிக்கையில் மீண்டும் கையொப்பம் இடப்பட்டது.



'மிஹிலக' வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வு

இந்த நிகழ்வின்போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் அதன் பங்கீடுபாட்டு நிறுவனங்களும் இணைந்து நாடளாவிய ரீதியில் இலத்திரனியல் மற்றும் மின்சார்ந்த கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்தன. அதன் பெறுபேறாக 35 நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, 320 தொன் கழிவுப்பொருட்களைச் சேகரிக்கவும் முடிந்தது. அத்துடன், அவற்றை உரிமங்களைக்கொண்டு கழிவுப்பொருள் சேகரிப்பாளர்கள் ஊடாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.



பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வு



களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வு

இலத்திரனியல் முகாமைத்துவ தேசிய வாரத்திற்கு அதன் பங்கீடுபாட்டு நிறுவனங்களில் ஒன்றான மொபிரெல் நிறுவனம் பிரதான அனுசரணை வழங்கியது.

### 3.3.4 மெல்லிய பொலித்தீன் பாவனை தொடர்பான ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல்.

இந்த ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துமுகமாக 2014ஆம் ஆண்டில் மெல்லிய பொலித்தீன் உற்பாத்தியாளர்களைச் சுற்றிவளைக்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. சுற்றிவளைப்பு செய்யப்படுவதற்கு முன்னர் 20 மைக்ரோனிலும் குறைந்த பொலித்தீன் உற்பத்தியும் விற்பனையும் தடைசெய்யப்பட்டுள்ளதாகப் பொதுமக்களுக்கு பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்பட்டது. அதன்பின்னர் மேல் மாகாணத்தில் பொலித்தீன் / பிளாஸ்ரிக் உற்பத்திகளை மேற்கொள்ளும் 104 கைத்தொழில்கள் சுற்றிவளைக்கப்பட்டதோடு, சட்டவிரோத உற்பத்திகளை மேற்கொண்டமை தொடர்பில் 8 கைத்தொழில்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# 4.0.சுற்றாடல் முகாமைத்துவ, மதிப்பீட்டுப் பிரிவு

## 4.1 சுற்றாடல் தாக்க மதிப்பீடு (சு.தா.ம) அலகு

### சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டை செயற்படுத்துதல்

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகின் முக்கிய பணி, சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் விதந்துரைக்கப்பட்ட சகல கருத்திட்டங்களுக்குமான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை மேற்கொள்வதாகும். இதன்கீழ் பரப்பெல்லையைத் தீர்மானிக்கும் கூட்டங்கள், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் கூட்டங்கள், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான விடய எல்லையைத் தீர்மானித்தல், மக்கள் பங்கேற்பிற்கான வாய்ப்பினை ஏற்படுத்துதல் மற்றும் கருத்திட்டங்களுக்கான அங்கீகாரம் வழங்கல் அத்துடன், கண்காணிப்பு பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

2014ஆம் ஆண்டில் தேசிய சுற்றாடல் கூடத்தின் IV 'இ' பிரிவின் கீழ் 84 கருத்திட்டங்களுக்கு அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. இவை சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்கு உட்பட்டவையாகும். அதன்படி, 27 கருத்திட்டங்களுக்கு சுற்றாடல் அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் 57 கருத்திட்டங்கள் அங்கீகாரம் கிடைக்குமென்ற எதிர்பார்ப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

2014ஆம் ஆண்டில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுக் கட்டளையின்கீழ் சுற்றாடல் தாக்க அலகினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் வருமாறு.

| தொ.இ. | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம/தொ.சு.ஆ |
|---|---|---|
| 1. | உத்தேச யான்ஓயா நீர்த்தேக்க கருத்திட்டம் | சு.தா.ம |
| 2. | மாத்தறை தொடக்கம் மத்தள விமான நிலையம் வரையான அதிவேக நெடுஞ்சாலை விஸ்தரிப்புக் கருத்திட்டம் | சு.தா.ம |
| 3. | அம்பாந்தோட்டைத் துறைமுகத்திலிருந்து மத்தள விமான நிலையம் வரையிலான அதிவேக நெடுஞ்சாலை கருத்திட்டம் | சு.தா.ம |
| 4. | ஆயுர்வேத, விவசாயக் காணி அபிவிருத்திக் கருத்திட்டம், லோறாவத்த, தொளுவ (அங்கீகாரம் நீடிக்கப்பட்டது) | சு.தா.ம |
| 5. | உத்தேச கண்டி வீடமைப்புத்திட்டம் | சு.தா.ம |
| 6. | உத்தேச ஹபுகஹகும்புர சிறிய நீர்மின் உற்பத்தி நிலையக் கருத்திட்டம் | சு.தா.ம |
| 7. | களுகங்கை நீர்த்தேக்க, விவசாய விஸ்தரிப்புக் கருத்திட்டம் (அங்கீகாரம் நீடிக்கப்பட்டது) | சு.தா.ம |
| 8. | உமா ஓயா பல்தொழிற்பாட்டு அபிவிருத்திக் கருத்திட்டம் (அங்கீகாரம் நீடிக்கப்பட்டது) | சு.தா.ம |

| தொ.இ. | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம/தொ.சு.ஆ |
|---|---|---|
| 9. | உத்தேச மஹகும்புர நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | தொ.சு.ஆ |
| 10. | உத்தேச Finfish கருத்திட்டம், திருகோணமலை | தொ.சு.ஆ |
| 11. | உமா ஓயா பல்தொழிற்பாட்டு அபிவிருத்திக் கருத்திட்டம் - ரன்தனிகல தொடக்கம் பதுளை வரை 132 கி.வாற் மின் அனுப்புகை | தொ.சு.ஆ |
| 12. | உத்தேக 'இமல்ஷன்' வெடிபொருள் கைத்தொழில், ஒயாமடுவ, மஹவிலச்சிய அநுராதபுரம் | தொ.சு.ஆ |
| 13. | மருகந்த சிறிய நீர்மின் நிலையக் கருத்திட்டம் | தொ.சு.ஆ |
| 14. | கொழும்பு – வெல்லவாய வீதியில் கிருலப்பன – கொடகம பகுதியைப் புனரமைத்தல் | தொ.சு.ஆ |
| 15. | கொழும்பு – ஹொரண வீதியில் பாமங்கட தொடக்கம் ஹொரண வரையான பகுதியைப் புனரமைத்தல் | தொ.சு.ஆ |
| 16. | களனிசிறி பாலத்திற்கான புகுமுக வீதி அமைப்பு, களனிமுல்ல - முல்லேரியாவ – கொஸ்வத்த வீதி | தொ.சு.ஆ |
| 17. | உத்தேச கரைக்கப்பால் மணல் அகழ்வு மற்றும் கரையோர அபிவிருத்திக் கருத்திட்டம் | தொ.சு.ஆ |
| 18. | மன்னார் தொடக்கம் வவுனியா ஊடாக அநுராதபுரம் வரை கி.வாற் 220 மின் அனுப்புகை | தொ.சு.ஆ |
| 19. | பேலியகொடை மனிங் சந்தையை இடமாற்றம் செய்யும் கருத்திட்டம் | தொ.சு.ஆ |
| 20. | உத்தேச கைத்தொழில் வலயம் மாகம் ருகுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம், ஹம்பாந்தோட்டை | தொ.சு.ஆ |

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இணக்கம் தெரிவிக்கப்பட்ட, பிற நிறுவனங்கள் அங்கீகாரம் வழங்கும் கருத்திட்டங்கள்

| தொ.இ. | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம/தொ.சு.ஆ |
|---|---|---|
| 1. | சுகாதாரத்துடன் கூடிய நில மூடுகை கருத்திட்டம், கோனாகதிவத்த (கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் நிறுவனம் - நகர அபிவிருத்தி அதிகாரசபை) | சு.தா.ம |
| 2. | உத்தேச களுகல்ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம் (கருத்திட்டத்தை அங்கீகரித்த நிறுவனம் - வனப் பாதுகாப்புத் திணைக்களம்) | சு.தா.ம |
| 3. | அம்பலன்கந்த, தொலொஸ்பாகே மரம்தறி கருத்திட்டம் (அங்கீகாரத்தை நீடித்தல்) கருத்திட்டத்தை அங்கீகரித்த நிறுவனம் - சுற்றாடல் அமைச்சு | தொ.சு.ஆ |
| 4. | உத்தேச ஆந்தாதொல சிறிய நீர்மின் நிலைய கருத்திட்டம் (கருத்திட்டத்தை அங்கீகரித்த நிறுவனம் - வனப்பாதுகாப்புத் திணைக்களம்) | தொ.சு.ஆ |
| 5. | உத்தேச மொறபிட்டிய சிறிய நீர்மின் நிலைய கருத்திட்டம் (கருத்திட்டத்தை அங்கீகரித்த நிறுவனம் - வனப்பாதுகாப்புத் திணைக்களம்) | தொ.சு.ஆ |
| 6. | கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் (கருத்திட்டத்தை அங்கீகரித்த நிறுவனம் - நகர அபிவிருத்தி சபை) | தொ.சு.ஆ |
| 7. | உத்தேச "Pearl City" ஐந்து நட்சத்திர சுற்றுலா ஹோட்டல் கருத்திட்டம், காலி வீதி, கொழும்பு – 03 (கருத்திட்டத்தை அங்கீகரித்த நிறுவனம் - நகர அபிவிருத்தி அதிகார சபை) | தொ.சு.ஆ |

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவினால் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த கருத்திட்டங்கள்**

| தொ.இ. | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம/தொ.சு.ஆ |
|---|---|---|
| 1 | கொழும்பு நகரில் அமைக்கப்படவுள்ள உத்தேச உயர்த்து வீதிக் | சு.தா.ம |

| தொ.இ. | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம/தொ.சு.ஆ |
|---|---|---|
| | கட்டமைப்பு (Elevated Highway) | |
| 1. | கொழும்பு நகரில் அமைக்கப்படவுள்ள உத்தேச உயர்த்து ஒற்றைத் தண்டவாளப் பாதை (Monorail) | சு.தா.ம |
| 2. | சுப்ரகமுவ (இரத்தினபுரி) அதிவேக நெடுஞ்சாலைக் கருத்திட்டம் | சு.தா.ம |
| 3. | பதுளை – கண்டி உத்தேச புதிய வீதி | சு.தா.ம |
| 4. | வடக்கு அதிவேக கருத்திட்டம் - கட்டம் 1-2 (எண்டேரமுல்ல தொடக்கம் குருநாகல் வரை) அத்துடன் அம்பேபுஸ்ஸ இணைப்பு வீதி | சு.தா.ம |
| 5. | வடக்கு அதிவேக நெடுஞ்சாலைக் கருத்திட்டம் - கட்டம் 3 (பொத்துஹெர – கலகெதர) | சு.தா.ம |
| 6. | வடக்கு அதிவேக நெடுஞ்சாலைக் கருத்திட்டம் - கட்டம் 4 (குருநாகல் - பதுளை) | சு.தா.ம |
| 7. | வடக்கு அதிவேக நெடுஞ்சாலை கட்டம் 3 நீடிப்புக் கருத்திட்டம் (குருநாகல் - தம்புள்ள) | சு.தா.ம |
| 8. | நீர்கொழும்பு மாநகர சபை எல்லையில் கழிவு நீரகற்றல் கருத்திட்டம் | சு.தா.ம |
| 9. | கேகாலை மாநகர சபை எல்லையில் கழிவு நீரகற்றல் கருத்திட்டம் | சு.தா.ம |
| 10. | உத்தேச கலப்பு அபிவிருத்தி கருத்திட்டம் கன்னோறுவ வீதி, பேராதனை | சு.தா.ம |
| 11. | களனி கங்கை ஹக்பெல்லாவ வாவி சிறிய நீர்மின் நிலைய கருத்திட்டம் | சு.தா.ம |
| 12. | உத்தேச கிங் கங்கை, நில்வள கங்கை வழிமறிப்புக் கருத்திட்டம் | சு.தா.ம |
| 13. | பாரக் கைத்தொழில்களுக்கான விசேட வலயத்தை அமைத்தல், சம்பூர், திருகோணமலை. | சு.தா.ம |
| 14. | உத்தேச சூரியவெவ ஏற்றுமதி பதனிடல் வலயம் | சு.தா.ம |
| 15. | கம்பஹா மாவட்டத்தில் உத்தேச நகர திண்மக் கழிவுப்பொருள் | சு.தா.ம |

| தொ.இ. | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம/தொ.சு.ஆ |
|---|---|---|
| | எரிசக்தி உற்பத்திக் கருத்திட்டம், கெரவலபிட்டிய. | |
| 16. | உத்தேச ஏற்றுமதி தயாரிப்பு வலயம், பர்த்தோட்டம், ஹொரண | சு.தா.ம |
| 17. | ஹம்பாந்தோட்டை நகரத்துக்கான உத்தேச கழிவுநீர் சேகரிப்பு, பரிகரிப்பு மற்றும் அகற்றல் கருத்திட்டம். | சு.தா.ம |
| 18. | தெஹிவளை – கல்கிசை மாநகர சபை எல்லையினுள் உத்தேச சாக்கடைத் தொகுதி விஸ்தரிப்பு | சு.தா.ம |
| 19. | உத்தேச பிபில சீனி அபிவிருத்திக் கருத்திட்டம் | சு.தா.ம |
| 20. | மிரிஜ்ஜவில ஏற்றுமதித் தயாரிப்புக் கருத்திட்டம் மிரிஜ்ஜவில ஏற்றுமதி வலயம் | சு.தா.ம |
| 21. | மெ.வாற். 2 x 250 நிலக்கரி மின் உற்பத்தி நிலையம், திருகோணமலை | சு.தா.ம |
| 22. | உத்தேச கீழ் மல்வத்து ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம் | சு.தா.ம |
| 23. | உத்தேச கிவுல் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம் | சு.தா.ம |
| 24. | உத்தேச மேல் எலஹெர வாவி அபிவிருத்திக் கருத்திட்டம் | சு.தா.ம |
| 25. | உத்தேச பஸ்னாகொட நீர்த்தேக்க கருத்திட்டம் | சு.தா.ம |
| 26. | வடமேல் மாகாண போவதென்ன நீர்த்தேக்கத்திலிருந்து மகாவலி கங்கையின் நீரை இடைமறிப்பு கருத்திட்டம். | சு.தா.ம |
| 27. | உத்தேச மாதுரு ஓயா தெற்கு கரை அபிவிருத்திக் கருத்திட்டம் | சு.தா.ம |
| 28. | உத்தேச மாத்தறை 4ஆம் கட்ட நீர்விநியோகக் கருத்திட்டம் | சு.தா.ம |
| 29. | உத்தேச "Grand Palace" ஹோட்டல் கருத்திட்டம் (200 அறைகள்) | சு.தா.ம |
| 30. | யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர்வழங்கல், துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டம் | சு.தா.ம |
| 31. | பாரிய கொழும்பு திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவக் கருத்திட்டம் | சு.தா.ம |

| தொ.இ. | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம/தொ.சு.ஆ |
|---|---|---|
| 32. | உத்தேச ஹொரண - கொட்டாவ புகையிரத வீதி | சு.தா.ம |
| 33. | உத்தேச குருநாகல் - தம்புள்ள - ஹபரண புகையிரத வீதி விஸ்தரிப்புக் கருத்திட்டம் | சு.தா.ம |
| 34. | உத்தேச தோல், தோல் சார்ந்த பொருள் உற்பத்திக் கருத்திட்டம் | சு.தா.ம |
| 35. | உத்தேச வீட்டுத்திட்டம், ஹாரகம வீதி களனி | சு.தா.ம |
| 36. | சீத்தாவக ஆற்று நீர்மின் கருத்திட்டம் | சு.தா.ம |
| 37. | மெ.வாற். 1200 நிலக்கரி மின் உற்பத்தி, திருகோணமலை | சு.தா.ம |
| 38. | உத்தேச பெல்லகஸ்வெவ கைத்தொழில் பேட்டை, ஹம்பாந்தோட்டை | தொ.சு.ஆ |
| 39. | பொல்பிட்டிய தொடக்கம் பன்னிப்பிட்டி வரையான கி.வாற் 220 மின் அனுப்புகை | தொ.சு.ஆ |
| 40. | கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திக்கென கரைக்கப்பால் மணல் அகழ்வுக் கருத்திட்டம் | தொ.சு.ஆ |
| 41. | உத்தேச சீனி சுத்திகரிப்புக் கருத்திட்டம், ஹம்பாந்தோட்டை | தொ.சு.ஆ |
| 42. | உத்தேச மாலிம்பொட சிறிய நீர்மின் நிலையக் கருத்திட்டம் | தொ.சு.ஆ |
| 43. | பொல்பிட்டிய தொடக்கம் புதிய ஹபரண வரை கி.வாற் 132 மின்கடத்துகை வழி | தொ.சு.ஆ |
| 44. | உத்தேச மானாகொல சிறிய நீர்மின்நிலையக் கருத்திட்டம் | தொ.சு.ஆ |
| 45. | உத்தேச உயிர் மருத்துவக் கழிவுப்பொருள் பரிகரிப்பு வசதிக் கருத்திட்டம், கட்டுநாயக்க | தொ.சு.ஆ |
| 46. | உத்தேச கழிவுப்பொருள் எரிசக்தி உற்பத்திக் கருத்திட்டம், ஹொரண | தொ.சு.ஆ |
| 47. | உத்தேச தல்பிட்டிகல நீர்த்தேக்கக் கருத்திட்டம் | தொ.சு.ஆ |
| 48. | நாச்சிக்குடா தொடக்கம் மன்னார் வரையான கி.வாற் 132 மின்கடத்துகை வழி. | தொ.சு.ஆ |

| தொ.இ. | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம/தொ.சு.ஆ |
|---|---|---|
| 49. | உத்தேச உயர்த்து வீதிக் கட்டமைப்பு, பத்தரமுல்ல வடக்கு (பேஸ்லயின் - ராஜகிரிய) | தொ.சு.ஆ |
| 50. | உத்தேச உயர்த்து வீதிக் கட்டமைப்பு, பத்தரமுல்ல தெற்கு (மாலபல்ல – கிம்புலாவல) | தொ.சு.ஆ |
| 51. | காலிங்கநுவர, அங்கமெடில்ல உயர்த்து நீர் வழங்கல் திட்டம் | தொ.சு.ஆ |
| 52. | உத்தேச போகஹஹேன சிறு நீர்மின்நிலையக் கருத்திட்டம் | தொ.சு.ஆ |
| 53. | உத்தேச வியாங்கொட – கிரிந்திவெல – பாதுக்க வரையான கி.வாற் 220/400 மின் அனுப்புகை | தொ.சு.ஆ |
| 54. | உத்தேச வியாங்கொட – துல்ஹிரிய வரையான கி.வாற் 132 மின் அனுப்புகை | தொ.சு.ஆ |
| 55. | உத்தேச ரன்வல ஓயா சிறிய நீர்மின்நிலையக் கருத்திட்டம் | தொ.சு.ஆ |
| 56. | உத்தேச கலப்புத் தெங்கு விதை பூங்கா கருத்திட்டம், பூநகரி பிரதேச செயலகம் | தொ.சு.ஆ |

சிக்கலான சுற்றாடல் பிரச்சினைகள் அற்ற விதந்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான தொடக்கநிலை சுற்றாடல் ஆய்வினை மேற்கொள்ளும் பணி மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டங்களுக்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகினால் தேவையான ஒத்துழைப்பு, வழிகாட்டலும் மேற்கொள்ளப்படும்.

மேலும், கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தியுள்ள கருத்திட்டங்களுக்கு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்பும் வழங்கப்படுகின்றது.

### 4.1.1 அங்கீகாரம் பெற்றுள்ள கருத்திட்டங்களைக் கண்காணித்தல்

கருத்திட்டங்களை அங்கீகரிக்கும்போது உரிய நிபந்தனைகளுக்கு அமைவாக அவை நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கென சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகு ஏற்கெனவே அங்கீகாரம் வழங்கியுள்ள கருத்திட்டங்களைக் கண்காணித்துள்ளது. பின்வரும் கருத்திட்டங்கள் இரண்டு மாதங்களுக்கொருமுறை நடாத்தப்படும் கூட்டங்கள் மற்றும் வெளிக்களப் பரிசோதனைகள் ஊடாக தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுகின்றன.

**2014ஆம் ஆண்டில் கண்காணிக்கப்பட்ட கருத்திட்டங்கள்**

| | |
|---|---|
| 1 | கொழும்பு வெளிச்சுற்றுவட்ட பெருந்தெருக் கருத்திட்டம் (கட்டம் I, II, III) |
| 2 | மாத்தறை – கதிர்காமம் புகையிரத வீதி விஸ்தரிப்புக் கருத்திட்டம் - கட்டம் - 1 (மாத்தறை – பெலிஅத்த வரை) |
| 3 | வவுனியா மாவட்டத்தில் பேயாறு நீர்த்தேக்கத்திற்குக் குறுக்கே அணையொன்றை அமைத்து மேற்பரப்பு நீரைப் பெற்றுக்கொள்ளும் கருத்திட்டம் |
| 4 | களுகங்கை நீர்த்தேக்க மற்றும் விவசாய விஸ்தரிப்புக் கருத்திட்டம். |
| 5 | உமா ஓயா பல்தொழிற்பாட்டு அபிவிருத்திக் கருத்திட்டம் |
| 6 | மொறகஹகந்த விவசாய அபிவிருத்திக் கருத்திட்டம் (கருத்திட்ட உப நிறுவனம் - விவசாய அமைச்சு) |
| 7 | புறோட்லண்ட் நீர்மின் நிலையக் கருத்திட்டம் |
| 8 | மாவனான சிறிய நீர்மின் நிலையக் கருத்திட்டம் |
| 9 | சீத்தாவக ஏற்றுமதி தயாரிப்புக் கருத்திட்டம் |
| 10 | கொக்கல ஹோட்டல் கருத்திட்டம் |
| 11 | உத்தேச வீரவில ஹோட்டல் கருத்திட்டம் |
| 12 | ‘ஜெனட் வலி’ சிறிய நீர்மின்நிலையக் கருத்திட்டம், நாவலப்பிட்டி. |
| 13 | நாயாறு சிறிய நீர்மின் நிலையக் கருத்திட்டம், தெரணியகலை. |
| 14 | கொஸ்வத்து கங்கை சிறிய நீர்மின் நிலையக் கருத்திட்டம், கலவான |
| 15 | அமனாவல சிறிய நீர்மின்நிலையக் கருத்திட்டம், எட்டியாந்தோட்டை |

### 4.1.1 சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு / தொடக்கநிலை சுற்றாடல் ஆய்வு நடவடிக்கைகளை மேம்படுத்தல்

- **சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஒழுங்குவிதிகளை மேம்படுத்தல்**

சுற்றாடல் தாக்க மதிப்பீடு சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இறுதியான ஒழுங்குவிதிகள் சட்டவரைஞர் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

- **சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்**

**(அ) யப்பானுக்கும் இலங்கைக்குமிடையில் சுற்றாடல் தாக்க மதிப்பீடு பற்றிய அறிவுப் பரிமாற்ற நட்புறவு நிகழ்ச்சித் திட்டம்**

AECEN நிறுவனம் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகு ஊடாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் இலங்கை மற்றும் யப்பானுக்கு இடையிலான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிவுப் பரிமாற்ற நட்புறவு நிகழ்ச்சித்திட்டமொன்றை நடத்தியது. இதன்மூலம் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளவர்களின் அறிவினை மேம்படுத்தும் விதத்தில் யப்பானிய வளவாளர்களின் பங்கேற்புடன் செயலமர்வொன்று நடாத்தப்பட்டதுடன், சுற்றாடல் தாக்க மதிப்பீடு தொடர்பான பயிற்சிக்கான தேவையும் இனம் காணப்பட்டது. அதன்படி, போக்குவரத்து மற்றும் மின்சாரக் கருத்திட்டங்களின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளை மீளாய்வு செய்யத் தேவையான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு யப்பானிய ஒத்துழைப்புக் கோரப்பட்டது.

அதன் விளைவாக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகின் மூன்று அலுவலர்கள் யப்பானுக்கு ஆய்வு விஜயம் மேற்கொள்வதற்கும், மின்சாரம் மற்றும் போக்குவரத்துத்துறை தொடர்பான கருத்திட்டங்களைக் கண்காணிப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இறுதியாக யப்பானிய வளவாளர்களின் பங்கேற்புடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையில் சுற்றாடல் தாக்க மதப்பீட்டில் ஈடுபடும் அலுவலர்களுக்கான செயலமர்வு நடைபெற்றது. இந்த செயலமர்வில் மின்சாரத்துறை தொடர்பில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளை மீளாய்வு செய்யத் தேவையான அறிவுரைப்பு வழிகாட்டி அறிமுகம் செய்யப்பட்டது.

**(ஆ) சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரிக்கும் ஆலோசகர்களுக்கான முதன்மைச் செயலமர்வு**

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரிக்கும்போது ஏற்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளின் தரத்தை உயர்த்துவதற்குத் தேவையான அறிவைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடனும் இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது. இதல் ஏற்கெனவே பதிவுபெற்று சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஆலோசகர்களும் புதிதாக பதிவுபெற விண்ணப்பித்துள்ள ஆலோசகர்களும் பங்கேற்றனர்.

2014.05.06ஆம் திகதி நடைபெற்ற இச்செயலமர்வில் உசாத்துணை நிறுவனங்களும், 34 நபர்களும் பங்கேற்றிருந்ததுடன், மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் ஆலோசகர்களுக்கு பயனுள்ளதாகவும் அமைந்திருந்தது.

**(இ) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதேச அலுவலர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு**

- **சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டில் பின்பற்றப்பட வேண்டிய முதன்மையான செயல் ஒழுங்கு**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதேச அலுவலகங்கள் கருத்திட்டங்களுக்கான சுற்றாடல் அங்கீகாரத்தை வழங்கும்போது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயற்பாடு நேரடியான பங்களிப்பைச் செலுத்துகிறது. எனவே, இந்தச் செயற்பாட்டை சகல பிரதேச அலுவலகங்களிலும் ஒரேவிதமாக மேற்கொள்ளும் தேவை மற்றும் அதற்குத் தேவையான சட்ட மற்றும் தொழில்நுட்ப அறிவினை குறித்த அலுவலர்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகினால் மனிதவள முகாமைத்துவ அலகின் உதவியுடன் இச்செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

**(ஈ) சுற்றாடல் தாக்க மதிப்பீடு பற்றிய 10 நாள் துரிதப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.**

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகு, சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு, இயற்கை பாதுகாப்பு சர்வதேச ஒன்றியம் அத்துடன், சுற்றுச்சூழல் நீதிக்கான மையம், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சுற்றாடல் ஆய்வு மையம் ஆகியன இணைந்து 18வது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (துரித)ப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்தன. இந்த நிகழ்ச்சித் திட்டம் 2014 ஒக்ரோபர் 15 தொடக்கம் 24ஆம் திகதி வரை கண்டி 'Tree of life' ஹோட்டலில் நடைபெற்றது. நிகழ்ச்சித் திட்டத்தின் முதல் பகுதியில் சுற்றாடல் தாக்க மதிப்பீடு பற்றிய சுருக்கமான பகுத்தாய்வும் எண்ணக்கருத்துச் சட்டகம் பற்றிய விழிப்புணர்வும் செய்யப்பட்டது. இரண்டாவது பகுதியில் சுற்றாடல் தாக்க மதிப்பீடு தொடர்பான செய்முறைப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் அரசுதுறை, அரசு சார்பற்ற நிறுவனங்கள், ஆலோசகர்கள், கல்விசார் பணியணி உட்பட்ட 60பேர் பங்கேற்றனர்.

**(உ) சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டில் ஒலி, அதிர்வு மற்றும் வளித்தரம் பற்றிய தாக்கத்தை ஆய்வு செய்வதற்கான செயலமர்வு**

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகினால் மனிதவள முகாமைத்துவ அலகின் உதவியுடன் இச்செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இரண்டு நாட்களைக்கொண்ட இச்செயலமர்வின் முதல் நாள் விரிவுரைகள் நடாத்தப்பட்டதோடு, இறுதி நாள் நுரைச்சோலை அனல் மின் நிலையத்திற்கான வெளிக்கள ஆய்வு இடம்பெற்றது. இதில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையைச் சேர்ந்த 60 அலுவலர்கள் பங்கேற்றனர்.

- **சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல் / தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான நிறுவனங்களைப் பதிவுசெய்தல்.**

இதன் கீழ் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனங்கள் / சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை மேற்கொள்ளும் நிபுணர்கள் / ஆலோசகர்களின் பட்டியல் இற்றைப்படுத்தப்படும். மேலும், இதுபற்றிய பத்திரிகை விளம்பரத்துக்கமைய பல்வேறு துறைகளிலிருந்தும் கிடைத்துள்ள துறைசிறப்பறிஞர்களைக் கொண்ட நிறுவனங்களைப் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4.1.3 மூலோபாய சுற்றாடல் மதிப்பீடு

### 4.1.3.1 வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படும் மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு ஆய்வு

மத்திய சுற்றாடல் அதிகாரசபை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துடன் இணைந்து வடமாகாணத்தில் மூலோபாய சுற்றாடல் மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டது. இந்த ஆய்வுக்கென சுற்றாடல் பேணுகை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சுமார் 25 நிறுவனங்களின் ஒத்துழைப்பு பெறப்பட்டது.

இந்த ஆய்வானது விரிவான வெளிக்கள ஆய்வு, மாவட்டச் செயலாளர்கள் உட்பட்ட நகர அபிவிருத்தி, வனவளம், வன சீவராசிகள், நீர், கனியவளம், தொல்பொருளியல், கடல்சார், கரையோரம், வீதி மற்றும் நீர்ப்பாசனம் போன்ற துறைகளை உள்ளடக்கியதாகக் காணப்பட்டதுடன், விரிவான கலந்துரையாடல்களும் விசேட ஆய்வுகளும் நடைபெற்றது.

மேலே சொல்லப்பட்ட நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி கூருணர்வுள்ள சுற்றாடல் வலயங்களையும் இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளும் பிரதேசங்களையும் வேறுபடுத்தி இனங்காணும் சட்டகமொன்று தயாரிக்கப்பட்டது. எனவே, அப்பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளை வரையறுத்தல் அல்லது கட்டுப்படுத்தல் அவசியமாகிறது. அதன்படி, கடல்சார்ந்த, கரையோரம்,

வனசீவராசிகள் மற்றும் தொல்பொருளியல் பெறுமதி வாய்ந்ததும் பாரிம்பரியமாக சுற்றாடல் கூருணர்வுள்ளதுமான பிரதேசங்களை இனங்கண்டு படமாக்குவதற்கும், பின்னர் எஞ்சியுள்ள பிரதேசங்களில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான பிரதேசங்களை படமாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான பிரதேசங்களை உள்ளடக்கிய ‘‘வாய்ப்பு வரைபடத்தில்’’ (Oppertunity Map) கைத்தொழில், விவசாயம், வீடமைப்பு, சூழல்நேய அபிவிருத்தி மற்றும் வேறு சேவைகளுக்குப் பொருத்தமான பிரதேசங்கள் / காணிகள் இனம் காணப்பட்டன.

**இந்த ஆய்வின் விதப்புரைகள் வருமாறு**:

- மூன்று தசாப்த கால யுத்தத்தின் பின்னர் வடமாகாணத்தில் எஞ்சியுள்ள, பாதுகாக்க வேண்டியதும் முறையாகப் பராமரிக்க வேண்டியதுமான சுற்றாடல் கூருணர்வுள்ள மற்றும் சுற்றாடல் ரீதியான பெறுமதி வாய்ந்த பிரதேசங்களில் காணப்படும் காடுகள், வனசீவராசிகள் அதிகம் வசிக்கும் பிரதேசங்கள், கண்டல், சதுப்பு நிலங்கள், கரையோர சூழல்தொகுதி, தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் கலாசாரத் தகவினைக் கொண்ட பிரதேசங்களை இனங்காணுதல்.

- புதிய கருத்திட்டங்களுக்கான காணிகளைத் தெரிவு செய்யும்போது ‘‘வாய்ப்பு வரைபடம்’’ (Oppertunity Map) கவனத்தில் கொள்ளப்படுவது அவசியமாகும். மேலும், வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆய்வின்போது ஏற்கெனவே இனங்காணப்பட்டுள்ள சுற்றாடல் கூருணர்வுள்ள பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- அபிவிருத்தி நடவடிக்கைகளின்போது பயன்படுத்தக்கூடிய கனிப்பொருள், நீர்வளம், கடல் மற்றும் கரையோர வளங்கள் அடங்கலாக வடமாகாணத்தில் காணப்படும் வளங்கள் பற்றிய தரவுத் தொகுதியொன்றை அமைத்தல்.

- மன்னார் தொட்டக்காடு தொட்டாவெளி ஆகிய பிரதேசங்களில் காணப்படும் நிலத்தடி நீர் வளத்தையும், வடமாகாணத்திலுள்ள நிலத்தடி நீர் வளத்தையும் பாதுகாத்தல், விதந்துரைக்கப்பட்டுள்ள நிலத்தடி நீர்த்தரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முறையான கண்காணிப்பினை மேற்கொள்ளுதல், மேலும், பீடை நாசினி மற்றும் இரசாயனப் பசளைகளின் அதிபாவனையைக் கட்டுப்படுத்துமுகமாக விவசாயிகளை விழிப்புணர்வு செய்தல்.

- வடமாகாணத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகும் பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டதோடு, இதனால் அப்பிரதேசத்தில் அபிவிருத்திகளைத் திட்டமிடும்போது இயற்கை அனர்த்தங்களைக் கட்டுப்படுத்த / குறைக்கக் கூடியதாக உள்ளது. கரையோரத்திலுள்ள கண்டல் தாவரங்கள் மற்றும் கரையோரத் தாவரங்களுக்கு முன்னுரிமையளித்து அவ்வாறான பிரதேசங்களை உடனடியாகப் பாதுகாக்க வேண்டிய வலயமாக பிரகடனம் செய்வதன்மூலம் கரையோர வலயத்தை சூறாவளி, ஆழிப்பேரலை மற்றும் புயல் பாதுகாப்பு வலயமாகப் பேணுதல்.

  இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை சம்பந்தப்பட்ட சகல அரச நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்படவுள்ளது.

#### 4.1.3.2 **நீர்வள மற்றும் நீர்ப்பாசனத் துறை சார்ந்த மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு ஆய்வு**

மத்திய சுற்றாடல் அதிகாரசபை நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சுடன் இணைந்து நீர்வளம் மற்றும் நீர்ப்பாசனத் துறையுடன் சம்பந்தப்பட்ட மூலோபாய சுற்றாடல் ஆய்வொன்றை மேற்கொள்ளத் தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த ஆய்வின் நோக்கம் நீர்ப்பாசனக் கருத்திட்டங்களின் நிலையான தொடர்ச்சியில் தாக்கம் செலுத்தும் சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகளுக்கு மூலோபாயத் தீர்வுகளைத் தேடுவதும், அவ்வாறு தீர்வு தேடும்போது தனித்தனிக் கருத்திட்டங்கள் என்ற நிலைக்கு அப்பாற்பட்ட மாற்று முறைவழி தொடர்பில் கவனம் செலுத்துவதாகும். இந்த ஆய்வுக்கான விசாரணை நியதிகளைத் தயாரிக்கும் செயலமர்வொன்று 2014 நவம்பர் மாதம் 29ஆம் திகதி பங்கீடுபாட்டாளர்கள் அனைவரது பங்கேற்புடன் நடாத்தப்பட்டது. செயலமர்வின் இறுதியில் தயாரிக்கப்பட்ட விசாரணை நியதிகள் (ToR) அடுத்த கட்ட நடவடிக்கைக்காக நீர்ப்பாசன அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

#### **4.1.3.3 சுற்றாடல் மாற்றத்தைத் தீர்மானிக்கும் ஆய்வு**

இலங்கையில் சிறிய நீர் மின் நிலையங்கள் அடங்கலாக நீர்வளம் சார்ந்த கருத்திட்டங்கள் அதிகரிக்கும் போக்குக் காணப்படுகின்றது. எனவே, ஆறுகளின் நீரோட்டப் பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் அபிவிருத்தி அல்லது முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அதையொட்டி சுற்றாடல் தொகுதிக்கும் நீர்ப்பாவனையாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அதனை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் அண்மைக்காலமாக உணரப்பட்டு வந்துள்ளது.

அதன்படி, மத்திய சுற்றாடல் அதிகாரசபை “சுற்றாடல் நீரோட்டங்களை” நிர்ணயிக்கும் ஆய்வொன்றை ஆரம்பித்துள்ளது. இலங்கையில் சுற்றாடல் மாற்றத்தைத் தீர்மானிக்கும் நியதிகளை இனங்காணல் இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

ஆய்வுப்பணி பேராசிரியர் திரு. தேவக வீரகோன் உள்ளிட்ட நிபுணர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. குறித்த குழு ஆய்வறிக்கையின் இறுதி வரைவை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆய்வின் வெளிப்படுத்தல்களும் முன்மொழிவுகளும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆற்றுப்படுத்தி உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

#### **44.1.3.4 ஏனைய செயற்பாடுகள்**

2014ஆம் ஆண்டில் மேலே கூறப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு மேலதிகமாக கீழ்க் காட்டப்பட்டுள்ள கூட்டங்கள் மற்றும் வெளிக்கள ஆய்வுகளில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகின் பங்கேற்பு இருந்தது.

1. வடக்கு புகையிரத வீதிப் புனரமைப்புக் கருத்திட்டத்தின் தொழிற்பாட்டுக் குழுக்கூட்டம்.
2. வெளிச்சுற்று பெருந்தெருக் கருத்திட்டத்தின் (கட்டம் I, II, III) ஒன்றிணைப்பு குழுக்கூட்டம்
3. வடமாகாண வீதி இணைப்புக் கருத்திட்டத்தின் தொழிற்பாட்டுக் குழுக்கூட்டம்
4. உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் மேற்கொள்ளப்படும் மாகாண வீதிக் கருத்திட்டத்தின் தொழிற்பாட்டுக் குழுக்கூட்டம்

5. மேல் எலஹெர கால்வாய் அபிவிருத்தி கருத்திட்டம், வடமேல் மாகாண நீர் மறிப்பு கருத்திட்டம் மற்றும் மினிபே அணையின் உயரத்தை அதிகரிப்பது பற்றிய தொழிற்பாட்டுக் குழுக்கூட்டம் (ஆசிய அபிவிருத்தி வங்கி)
6. கொழும்பு நகரில் அமைக்கப்படவுள்ள உத்தேச உயர்த்து புகையிரத வீதி கருத்திட்டத்தின் தொழிற்பாட்டுக் குழுக்கூட்டம்.

## 4.2. இயற்கைவள முகாமைத்துவ, கண்காணிப்பு அலகு

மத்திய சுற்றாடல் அதிகாரசபை மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களுடனும், சம்பந்தப்பட்ட பிற நிறுவனங்களுடனும் ஒன்றிணைப்பை ஏற்படுத்தி உள்நாட்டு இயற்கை வளங்களை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பினைக் கொண்டுள்ளது. அதன்படி இயற்கைவள முகாமைத்துவ, கண்காணிப்பு அலகினூடாக இயற்கை வள முகாமைத்துவம் தொடர்பான சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் ஆக்குதல், அறிவுரைப்பு வழிகாட்டிகளைத் தயாரித்தல், சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் நடைமுறைப்படுத்தக்கூடிய கருத்திட்ட முன்மொழிவுகளுக்கான அங்கீகாரம் வழங்கும் செயற்பாட்டை ஒழுங்குபடுத்தல், தேசிய ஈரநிலக் கொள்கைகளுக்கு அமையத் தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தின்படி ஈரநிலங்களை முகாமைத்துவம் செய்தல், இயற்கை வள முகாமைத்துவம் தொடர்பான தகவலடங்கிய வெளியீடுகள் / பிரசுரங்களைத் தயாரித்தல், சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களைப் பிரகடனம் செய்தல், ஈரநிலம் சார்ந்து மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல், இயற்கை வள முகாமைத்துவம் தொடர்பான பிற நிறவனங்களின் செயற்பாடுகளில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பங்கேற்பையும் பிரதிநிதித்துவத்தையும் உறுதிசெய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**2014ஆம் ஆண்டில் இயற்கை வள முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்**

**இயற்கைவள முகாமைத்துவம்**

### 4.2.1 இயற்கைவள முகாமைத்துவம் தொடர்பில் நிறுவனங்களுக்கிடையிலான ஒன்றிணைப்புக் குழு

2014ஆம் ஆண்டில் இயற்கை வள முகாமைத்துவத்துடன் சம்பந்தப்பட்ட பிற நிறுவனங்களின் பங்கேற்புடன் மூன்று குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இதன்போது நிலத்தடி நீரையும், நீரேந்தும் பிரதேசங்களையும் பாதுகாப்பது பற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டன. இதன்போது நிலத்தடி நீரையும் நீரேந்தும் பிரதேசங்களையும் பாதுகாப்பது பற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அதன்படி, காலத்தின் தேவை கருதிய ஏற்பாடாக வர்த்தக ரீதியில் நிலத்தடி நீரை அதிகளவில் உபயோகிக்கும் கைத்தொழில்களுக்கென நீர்வளச் சபையின் கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட்டது. மேலும், அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுமுகமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் நீர்வளச் சபையும் இணைந்து தயாரிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் சுற்றாடல் அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

நீரேந்தும் பிரதேசங்களைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்யும் நோக்கத்துடன் ஊவா மாகாண சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பதுளை மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்களை அண்டிய நீரேந்தும் பிரதேசங்களை தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

### 4.2.2 இயற்கைவள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தகவலடங்கிய கைந்நூல்

இலங்கையில் காணப்படும் இயற்கை வளங்கள் பற்றி பொதுமக்களையும், பாடசாலை மாணவர்களையும் அத்துடன் பிற நிறுவனங்களையும் அறிவூட்டுமுகமாக சம்பந்தப்பட்ட இதர நிறுவனங்களின் உதவியுடன் இந்தக் கைந்நூல் வெளியிடப்பட்டது.

### 4.2.3 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் செயலமர்வுகளும்

இயற்கைவள முகாமைத்துவம், கண்காணிப்பு அலகினால் தயாரிக்கப்பட்ட "பேண்தகுநிலை மணல் பாவனை" கைந்நூலை ஆதாரமாகக்கொண்டு மணல் அகழ்வோரையும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களையும் விழிப்புணர்வு செய்யும் நிகழ்ச்சித்திட்டம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண மற்றும் மாவட்ட அலுவலர்களின் பங்கேற்புடன் 10 மாவட்டங்களில் நடாத்தப்பட்டது.

லங்கா ஜலனி நிறுவனத்துடன் இணைந்து சிலாபம் சமூக நீர்வழங்கல் கருத்திட்ட பங்கீடுபாட்டாளர்களுக்கு நீரேந்தும் பிரதேசங்களை முகாமைத்துவம் செய்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.

மேலும், இயற்கை வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சட்டங்கள், ஒழுங்குவிதிகள் அத்துடன் அறிவுரைப்பு வழிகாட்டிகள் தொடர்பாக மாகாண மற்றும் மாவட்ட அலுவலர்களை விழிப்புணர்வு செய்யும் இரண்டு செயலமர்வுகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.





### 4.2.4 இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் சுற்றாடல் ரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ள தாவரங்களையும் பேணிக்காத்தல்.

2011ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டம் 2014ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் சுற்றாடல் ரீதியான முக்கியத்துவம் பெற்று விளங்கும் தாவரங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அறிவிப்புப் பலகைகள் பொருத்தப்பட்டன.

**2014ஆம் ஆண்டில் அறிவிப்புப் பலகைகள் பொருத்தப்பட்ட இடங்கள்.**

| | மாகாணம் | மாவட்டம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | மத்திய மாகாணம் | கண்டி | கடவத்த பலாமரம் - (Artocarpusheterophyllus) யட்டிநுவர பிரதேச செயலகத்தின் அமுனுபுர கிராம அலுவலர் பிரிவில் ''பலன'' முறிப்புக்கு அருகில் அமைந்துள்ள இந்த மரத்தின் வயது 400 ஆண்டுகளைக் கடந்துள்ளது. |
| 2. | மத்திய மாகாணம் | நுவரெலியா | தொன்மையான செண்பக மரம் (Michelianilagirica) ''தளதா செண்பகம்'' என்ற பெயரிலும் பிரசித்தம் பெற்றுள்ள இந்த மரம் நுவரெலியா பிரதேச செயலகத்தில் ஹெடுனாவெவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளது. |
| 3. | வடமத்திய மாகாணம் | அநுராதபுரம் | கெபத்திகொல்லாவ பிரதேச செயலகத்தின் கோனமாரியாவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள இயற்கை நன்னீர் ஊற்று. |
| 4. | தென்மாகாண ம் | காலி | அக்மீமன பிரதேச செயலகத்தின் பின்னதூவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள பின்னதூவ இயற்கைப் பீலி. |
| 5. | வடமத்திய மாகாணம் | பொலனறுவை | வெலிகந்த பிரதேச செயலகத்தின் நெளும்வெவ (259) கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள பொரவெவ வெந்நீர் உற்று. |

| | | | |
|---|---|---|---|
| 6. | கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | பிள்ளையார் கோவில் தேவைகளுக்கான தண்ணீரைப் பெற்றுக்கொள்ளும் நீர்நிலை. இது மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மமன்காம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளது. |
| 7. | வடக்கு மாகாணம் | மன்னார் | திருக்கேதீஸ்வரம் இந்துக் கோவிலின் தேவைகளுக்கு மாத்திரம் தண்ணீரைப் பெற்றுக்கொள்ளும் நீர்நிலை. இது மன்னார் பிரதேச செயலகத்தின் திருக்கேதீஸ்வர கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளது. |
| 8. | வடமேல் மாகாணம் | புத்தளம் | தொன்மையான "சம்புநாவல் மரம்" (Syzygiumcumini) மஹாவெவ பிரதேச செயலகத்தின் பஹல மஹாவெவ (528) கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளது. |
| 9. | வடமேல் மாகாணம் | குருநாகல் | தொன்மையான "புளியமரம்" (Tarmarindusindica) பிங்கிரிய பிரதேச செயலகத்தின் கெட்டுலாவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளது. |






### 4.2.5 நீர்நிலைகளின் போர்வைகளையும் நீரேந்தும் பிரதேசங்களையும் பேணிக்காத்தல்

#### 4.2.5.1 நீரேந்தும் பிரதேசங்கள் / நீர்நிலைகளின் போர்வையைப் பேணிக் காப்பதற்கான கொள்கை.

நிகழ்கால சவால்களையும் அடுத்த தலைமுறைக்காக இவ்வாறான பிரதேசங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவைப்பாட்டையும் நோக்கமாகக் கொண்டு காணி அமைச்சு தொடர்பான பாராளுமன்ற ஆலோசனைக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் நீர்நிலைகள் மற்றும் நீரேந்தும் பிரதேசங்களைப் பேணிக் காப்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்குமான தேசியக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டது. இப்பணிக்கென அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவில் இடம்பெற்று மத்திய சுற்றாடல் அதிகாரசபை தனது பங்களிப்பை வழங்கியிருந்தது.

#### 4.2.5.2 களனி ஆற்று வடிநில முகாமைத்துவக் கருத்திட்டம்

களனி ஆற்றுவடிநிலத்தை பாதுகாத்தல் காலத்தின் தேவையென்பதைக் கண்டறித்த மத்திய சுற்றாடல் அதிகார சபை புதுப்பிக்கத்தக்க மத்திய சுற்றாடல் அதிகார சபை, புதுப்பிக்கத்தக்க சக்தி வலு அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து களனி ஆற்றுப் படுக்கை முகாமைத்துவக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இக்கருத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி, வலு அமைச்சரின் பங்கேற்புடன் 2014ஆம் ஆண்டு யூன் மாதம் 17ஆம் திகதி களனி விகாரை வளாகத்தில் இடம்பெற்றது. இதையொட்டி களனி விகாரை வளாகத்தை அண்டிய ஆற்றங்கரையில் 10 மருத மரக் கன்றுகள் நடப்பட்டன.



பொறுப்பு வாய்ந்த அரச நிறுவனங்கள், களனி ஆற்று வடிநிலத்தை முகாமைத்துவம் செய்வதற்கென நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்குமுகமாக 2014.07.02ஆம் திகதி களதாரி ஹோட்டலில் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

மேற்படி கருத்திட்டத்திற்கான நிதி உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு எண்ணக்கருப் பத்திரமொன்றையும் முன்மொழிவொன்றையும் சமர்ப்பித்தது. நிறுவன பங்கீடுபாட்டாளர்களின் பங்கேற்புடன் நீண்ட காலத் திட்டமொன்றை வகுத்து நடைமுறைப்படுத்தும் வரை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இயற்கை வள முகாமைத்துவ அலகினால் உள்ளகத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் விழிப்புணர்வு செயலமர்வுகள், நீரேந்தும்

பிரதேசங்களில் வனப் போர்வையை அதிகரித்தல் மற்றும் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பொறிமுறையை ஒழுங்கமைத்தல் போன்ற செயற்பாடுகள் அடங்குகின்றன.



அதன்படி, பிரதேச செயலகங்களுடன் இணைந்து கிராம அலுவலர்கள் மற்றும் கள அலுவலர்களுக்கு ஆற்று வடிநிலத்தை அண்டியதாக அமைக்கப்பட்டுள்ள கைத்தொழில்களினால் ஏற்படுகின்ற சுற்றாடல் மாசடைவு உட்பட ஏனைய சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள் பற்றி விழிப்புணர்வு செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

### 4.2.5.3 ஹொரண, இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணப்படுகின்ற நீர்நிலைகளைப் பாதுகாத்தல்.

**ஹொரண, இங்கிரிய பிரதேச செயலகப் பிரிவுகள்**

இவ்விரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் காணப்படுகின்ற நீர்நிலைகள் / ஊற்றுக்கள் சார்ந்த 60 இடங்கள் இனங்காணப்பட்டு அவற்றின் அமைவு குறித்த படமாக்கல் இரண்டு பிரிவுகளுக்கும் தனித்தனியே செய்யப்பட்டுள்ளது.

**நம்பமான கால்வாய் - பரைதொட்ட**

குளிப்பதற்குப் பிரசித்தம் பெற்றுள்ள இப்பிரதேசம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாகவும் காணப்படுகின்றது. இன்றளவில் இப்பிரதேசம் பலத்த அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. இப்பிரதேசத்தை நிலைத்திருக்கத்தக்கதாக முகாமைத்துவம் செய்யும் நோக்கத்துடன் ஹொரண பிரதேச சபையினால் செயற்பாட்டுத் திட்டமொன்று (கருத்திட முன்மொழிவு) தயாரிக்கப்பட்டுள்ளதோடு, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆலோசனைகளின்படி அதனை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 4.2.5.4 பதுளை மாவட்டத்திலுள்ள நீரேந்தும் பிரதேசங்களைப் பாதுகாத்தல்.

ஊவா பிரதேச சபையினால் நடாத்தப்பட்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட பதுளை மாவட்டத்தில் தேயிலைத் தோட்டக் கம்பனிகள் வசமுள்ள காணிகளில் (1148 ஹெக்ரயர், 1675 காணித்துண்டங்கள்) காணப்படுகின்ற நீரேந்தும் பிரதேசங்களைப் பாதுகாக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டு நிறுவனங்களைக்கொண்டு அமைக்கப்பட்ட குழுவில் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, மத்திய சுற்றாடல் அதிகாரசபை குறித்த நீரேந்தும் பிரதேசங்களை இனம்கண்டு படமாக்கிய பின்னர் அவற்றை சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களாக பிரகடனம் செய்யத்திட்டமிட்டுள்ளது.

### 4.2.6 அறிவுரைப்பு வழிகாட்டி / அறிவுறுத்தல்கள்

பாலங்களை நிர்மாணிக்கும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய அறிவுறுத்தல்கள் அடங்கிய அறிவுரைப்பு வழிகாட்டியொன்றும் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களினதும் துறைசார்ந்த வல்லுநர்களினதும் ஆலோசனை பெற்று சூழல் நேய படகு சேவைக்கான வழிகாட்டிக் கோவையொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், அனுமதியின்றி அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு கைவிடப்பட்டுள்ள இடங்களையும் பிரதேசங்களையும் மீளக்கட்டியெழுப்புவதற்கான வழிகாட்டியைத் தயாரிக்கும் பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 4.2.7 அரச, அரசு சார்பற்ற அமைப்புகளுக்கென இயற்கை வள முகாமைத்துவம் பற்றிய தொழில்நுட்ப அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரித்தல்.

2014ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகாரசபை, காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனம், நிலச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, தேசிய விஞ்ஞான மன்றத்தின் மனிதனும் உயிர் மண்டலமும் மற்றும் பாராளுமன்ற ஆலோசனைக்குழு ஆகியவற்றின் ஆலோசனைக் குழுக்கள் / தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களினூடாக மேற்படி நிறுவனங்களிலுள்ள அலுவலர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது. மேலும், பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களினால் சுற்றாடலுடன் தொடர்புடையதாக அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவைப் பத்திரங்கள், அறிக்கைகள் மற்றும் முகாமைத்துவ திட்டமிடல்களுக்கான அவதானிப்புகளும் விதப்புரைகளும் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 4.2.8 சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களை பிரகடனம் செய்து முகாமைத்துவம் செய்தல்.

#### 4.2.8.1 பிரகடனம் செய்யப்பட்டுள்ள சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களின் முகாமைத்துவமும் கண்காணிப்பும்

| | சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசம் | 2014 ஆண்டிறுதியில் முன்னேற்றம் |
|---|---|---|
| 1. | வலவ்வேவத்த – வத்துரான (1598/21 ஆம் இலக்க, 2009.04.24ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகை) | முகாமைத்துவத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதோடு பங்காளர் நிறுவனங்களுடன் கலந்துரையாட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்திற்கான துண்டுப் பிரசுரம் பதிப்புச் செய்யப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது. |
| 2. | பொல்கொட (1598/21ஆம் இலக்க, 2009.12.30ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகை) | மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் விரிவான முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்திலுள்ள பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதற்காக 02 முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| | | பொல்கொட வாவியின் எல்லைகளைக் குறிப்பீடு செய்வதற்கான நில அளவைப் பணிகள் இன்றளவில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.<br><br>வர்த்தமானப் பத்திரிகை தொடர்பில் அரசாங்க அலுவலர்களையும் சனசமூகக் குழுக்களையும் விழிப்புணர்வு செய்யும் 02 செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.<br><br>வர்த்தமானப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அமைவாகத் தொடங்கப்படவுள்ள 08 கருத்திட்டங்கள் அங்கீகாரத்தின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஒரு கருத்திட்டம் நிராகரிக்கப்பட்டது. |
| 3. | முத்துராஜவெல (1466/26ஆம் இலக்க, 2006.10.13ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகை) | சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. துண்டுப்பிரசுரம் ஒன்று அச்சிடப்பட்டது. |
| 4. | தலங்கம (1487/10ஆம் இலக்க 2007.03.05ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகை) | சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. துண்டுப்பிரசுரம் ஒன்று அச்சிடப்பட்டது. முகாமைத்துவத் திட்டத்தைத் திருத்தம் செய்யும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| 5. | கிறகெறி வாவி (1487/10ஆம் இலக்க, 2007.03.05ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகை) | இந்தப் பிரதேசத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் படகு ஓட்டுநர்களுக்கும் வாவியைப் பயன்படுத்துபவர்களுக்குமான விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.<br><br>நுவரெலியா நகர சபையின் ஒத்துழைப்புடன் வசந்த கால நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இப்பிரதேசத்தில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் நடைபெற்றது.<br><br>களியாட்ட காலத்தில் கண்காணிப்பு தொடர்பிலான 05 |

| | | |
|---|---|---|
| | | சோதனையிடல் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது, உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே சுமார் 6,000 துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. |
| 6. | ஹன்தான (1641/28ஆம் இலக்க, 2010.02.07ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகை) | உயிர் பல்வகைமை பற்றிய விரிவான ஆய்வொன்று நடத்தப்பட்டது. மண்சரிவு அபாயத்தை எதிர்கொள்ளும் வலயங்களைப் படமாக்கும் பணி நிறைவுசெய்யப்பட்டுள்ளது. இந்தத் தரவுகளை ஆதாரமாகக் கொண்டு மதிப்பீட்டு ஆய்வொன்று செய்யப்பட்டுள்ளதோடு முகாமைத்துவத் திட்டமொன்றைத் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br><br>இப்பிரதேசத்தின் எல்லைகளை மீள குறிப்பீடு செய்வதற்குச் சட்ட வரைஞர் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.<br><br>02 முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இப்பிரதேசத்தில் உரிய பிரமாணங்களின்படி நடைமுறைப்படுத்தவுள்ள 79 கருத்திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு 13 கருத்திட்டங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. |
| 7. | மறகல மலைத்தொடர் (மொனராகலை) (1487/10ஆம் இலக்க, 2008.08.01ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகை) | இப்பிரதேசத்தை நிலைத்திருக்கத்தக்கதாக முகாமைத்துவம் செய்வதற்கு இயற்கைப் பாதுகாப்புப் பற்றிய சர்வதேச ஒன்றியத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் முகாமைத்துவத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>04 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதோடு, துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டு சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டு நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.<br><br>நில அளவைத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் மொனராகலை நகர எல்லைகளைத் தவிர்த்து இப்பிரதேசத்திற்குரிய எல்லைகள் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன. எல்லைகள் மீளக் குறிப்பீடு |

| | | |
|---|---|---|
| | | செய்யப்பட்டிருப்பதை இனங்காணும் வகையில் எல்லைத் தூண்கள் இடப்பட்டுள்ளன. |

### 4.2.9 பிரகடனம் செய்ய உத்தேசித்துள்ள சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்கள்.

#### 1. பன்சல்தென்ன – உக்குவெல (மாத்தளை)

வரைபடத்தின்படி உத்தேச பிரதேசம் 223 ஏக்கர் என இனம் காணப்பட்டுள்ளது. விரிவான ஆய்வின் பின்னர் இப்பிரதேசத்தினைப் பாதுகாத்தல் பற்றிய வர்த்தமானப் பத்திரிகை வரையப்பட்டுள்ளது.

#### 2. வராதென்ன - ஹக்கிந்த (கண்டி)

உத்தேச பிரதேசம் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தயாரிக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வர்த்தமானப் பத்திரிகையை வெளியிடுவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

#### 3. நகர ஈரநிலங்கள் (நுவரெலியா)

நுவரெலியா மாநகர சபை எல்லையில் சுமார் ஓர் ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட பிரதேசத்தில் பரந்து கிடக்கும் இப்பிரதேசம் பேணிப் பாதுகாக்க வேண்டிய முக்கியமான ஈரநிலத் தொகுதியாக இனம் காணப்பட்டுள்ளது.

### 4.2.10 ஈரநில முகாமைத்துவம்

#### 4.2.10.1 தேசிய ஈரநில முகாமைத்துவக் கண்காணிப்புக் குழு.

2014ஆம் ஆண்டில் சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி வலு அமைச்சின் செயலாளரது தலைமையில் குழுக் கூட்டமொன்று நடைபெற்றது. தேசிய ஈரநிலக் கொள்கைக்கமைவாக ஈரநிலப் பாதுகாப்பு சம்பந்தமான முக்கிய சில முடிவுகள் எடுக்கப்பட்டன.

#### 4.2.10.2 ‘‘ஈரநிலத்தின் மகிமை’’ கைந்நூல்

பாடசாலை மாணவர்கள் உதவிக் கையேடாகப் பயன்படுத்தக்கூடிய ‘‘ஈரநிலத்தின் மகிமை’’ எனப்படும் கைந்நூலில் அறிஞர்களின் கருத்துக்கள் மற்றும் புதிய விடயங்களை உள்ளடக்கி பதிப்புச் செய்து மீள வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

#### 4.2.10.3 உலக ஈரநிலத் தினம்

1971ஆம் அண்டு ரம்சா உடன்படிக்கையின் மூலம் பிரகடனம் செய்யப்பட்ட உலக ஈரநிலத் தினம் இந்த ஆண்டிலும் ‘‘ஈரநிலமும் விவசாயமும்’’ என்ற தொனிப்பொருளில் பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. இத்தினத்தை ஒவ்வோராண்டும் அனுஷ்டிக்கும் முகமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையும் வனப் பாதுகாப்பு திணைக்களமும் இணைந்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றன. அதன்படி, இம்முறை ‘‘விஜய’’ பத்திரிகைக் கம்பனியின் அனுசரணையில் தமிழ், சிங்கள மாணவர்களுக்கான குறுக்கெழுத்துப் போட்டியொன்று நடாத்தப்பட்டது. இதில் வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் பணப் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டதோடு, வெற்றியாளர்கள் தம் பெற்றோருடன்

தேசிய வனப் பூங்காவில் விடுமுறை நாளொன்றைக் கழிப்பதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வையொட்டி "நகரத்து ஈரநிலங்கள்" எனும் தலைப்பில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திரு.பீ.கே.எஸ். மஹானாம அவர்களினால் சுருக்கமான விரிவுரை நடத்தப்பட்டு ஈரநிலங்களைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவம் விளக்கப்பட்டது. மேலும், சகல மாகாணங்களும் மாவட்டங்களும் உள்ளடங்கும் விதத்தில் 19 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.














**4.2.11 கிராமிய ஈரநில முகாமைத்துவக் குழு.**

ஈரநில முகாமைத்துவத்தின் பொருட்டு மக்களின் பங்கேற்பினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் பொல்கொட சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசத்திற்கென தும்போவில, வேவெல, பொல்கஸ்ஓவிற்ற எனப்படும் 03 கிராமிய ஈரநில முகாமைத்துவக் குழுக்களும் மாத்தறை திஹகொட பிரதேசத்தில் இரண்டு கிராமிய ஈரநில முகாமைத்துவக் குழுக்களும் அமைக்கப்பட்டன.





## 4.3. ஆராய்ச்சி, அபிவிருத்தி அலகு

இந்த அலகின் முக்கிய நோக்கம் தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி சுற்றாடலைப் பாதுகாத்து முகாமைத்துவம் செய்து மேம்படுத்துவதற்கென புவிசார் தகவல் தொழில்நுட்பம் மற்றும் செய்மதி படத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சரியான தீர்மானங்களை எடுப்பதற்கான வசதியளித்தல், தகவல்களைச் சேகரித்தல் அவற்றை விநியோகித்தல் அத்துடன் நாட்டிலுள்ள இயற்கை வளத்தை நிலைத்திருக்கத்தக்க விதத்தில் முகாமைத்துவம் செய்யத் தேவையான ஆராய்ச்சிகள் / ஆய்வுகள் / பரிசோதனைகளை மேற்கொண்டு சுற்றாடல் தேய்வைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைக் கண்டறிவதாகும்.




*Spatial distribution of Industries in Sri Lanka*

### 4.3.1 இலங்கையிலுள்ள கைத்தொழில்கள் பற்றிய தரவுத் தொகுதி

இலங்கையில் காணப்படுகின்ற கைத்தொழில்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்டுள்ள தரவுத் தொகுதியை இற்றைப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதோடு, சுற்றாடல் பாதுகாப்பு உரிமச் செயற்பாட்டுக்கு அமைந்தொழுகும் கைத்தொழில்கள் மற்றும் சுற்றாடல் மாசடைவதற்குக் காரணமாகும் கைத்தொழில்கள் பற்றிய தரவுகள், தகவல்கள் பகுத்தாயும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, இலங்கையில் வடமேல் மாகாணம் தவிர்ந்த சுற்றாடலை மாசுபடுத்துவதில் அதிக தாக்கத்தை

ஏற்படுத்தும் 9510 கைத்தொழில்களும், சுற்றாடலை மாசுபடுத்துவதில் நடுத்தர அளவில் தாக்கம் செலுத்தும் 13939 கைத்தொழில்களும் இனம் காணப்பட்டுள்ளன. இத்தரவுத் தொகுதி சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையை ஒழுங்குபடுத்துவதற்கும் புதிய கைத்தொழில்களை நிறுவித் தேவையான வழிகாட்டலுக்கும் மிக அவசியமான ஒன்றாகும். அதன்படி, இதில் காணப்பட்ட குறைபாடுகள் சீர்செய்யப்பட்டதோடு, 25 மாவட்டங்களுக்குமென இற்றைப்படுத்தப்பட்ட அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்தரவுத் தொகுதியில் பிரதேச செயலக மட்டத்தில் காணப்படுகின்ற கைத்தொழில்கள் பற்றிய தரவுகளும் அவற்றின் தற்போதைய நிலைமை தொடர்பான பல்வேறு தரவுகளும் தரப்பட்டுள்ளதால் இது கைத்தொழில் துறையில் முகாமைத்துவம் சார்ந்த தீர்மானங்களை மேற்கொள்ளும்போது பெரிதும் பயன்படுகிறது.






### 4.3.2 மாவட்ட சுற்றாடல் விபரம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகினால் நிருவகிக்கப்படுகின்ற மையத் தரவுத் தொகுதியிலுள்ள இயற்கை வளங்கள், நிருவாக எல்லைகள், சமூக, விஞ்ஞான, தொல்பொருளியல் மற்றும் ஏனைய முக்கியமான தரவுகளை ஆதாரமாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்குரிய சுற்றாடல் வளமூல விபரம் தயாரிக்கப்படுகிறது. பிரதேச செயலக மட்டத்தில் தரவுகளையும் தகவல்களையும் இலகுவாக ஆராயக்கூடியவாறு வளமூல விபரங்கள் இறுவட்டு வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

களுத்துறை, கேகாலை மாவட்டத்திற்கான சுற்றாடல் வளமூல விபரம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கண்டி மாவட்டத்திற்கும் நுவரெலியா மாவட்டத்திற்குமான வளமூல விபரம் இன்றளவில் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதேபோன்று இதர மாவட்டங்களுக்கான வளமூல விபரம் ஒன்றைத் தயாரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.




**2014ஆம் ஆண்டில் ஈட்டல்**

### 4.3.3 வர்த்தக ரீதியான புவிசார் இடமறியும்

**தகவல் தொழில்நுட்ப சேவை**

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு வழங்கும் சேவைகள்:-

- உத்தேச கருத்திட்டப் பிரதேசங்களுக்கான சுற்றாடல் கூருணர்வு வலயம் மற்றும் நில பயன்பாடு உள்ளிட்ட படமாக்கல்.
- தெரிவுசெய்யப்பட்ட இடங்களுக்கான சுற்றாடல் கூருணர்வு வலய படமாக்கல்.
- நிலப் பயன்பாட்டு வரைபடத் தயாரிப்பு.
- செய்மதி பகுத்தாய்வு செய்தல்.

- தரவு சேகரிப்பு / வழங்கல்.
- வரைபடங்களுக்கு இலக்கமிடலும் வகைப்படுத்தலும்.
- படமாக்கலும் அச்சிடலும்
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இதர பிரிவுகளுக்கான புவிசார் இடமறியும் தகவல் தொழில்நுட்ப சேவைகளை வழங்குதல்.

### 4.3.4 இலங்கையில் நுளம்புக் கட்டுப்பாட்டுக்கான புதிய மாற்று முறைவழிகளை இனம்காணுதல்

நுளம்புகளின் பெருக்கம் ஏனைய சீவராசிகளுடன் ஒப்பிடும்போது மனிதனின ஆரோக்கியத்திற்கும் இருப்பிற்கும் பலத்த அச்சுறுத்தலாக விளங்கும் ஓர் ஆபத்தாக மாறியுள்ளது. அயன மண்டல நோய்க் காவியாக மலேரியா, மஞ்சள் காய்ச்சல், யானைக்கால் நோய்களையும் டெங்கு நோய், மஞ்சள் காய்ச்சல் மற்றும் மூளைக் காய்க்சல் போன்ற வைரசு நோய்களையும் ஏற்படுத்துகின்றது. இதனால் உலக வாழ் மக்களின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பெரும் எண்ணிக்கையில் மரணங்களும் சம்பவிக்கின்றன.

இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தின் அறிக்கைபடி, எமது நாட்டில் 17 குடும்பங்களுக்கு 140 இனங்களும் இருப்பதாக இனம் காணப்பட்டுள்ளது. டெங்கு, டெங்கு இரத்தப்போக்கு, சிக்கன்குன்னியா, மலேரியா, யானைக்கால் நோய், மஞ்சள் காய்ச்சல் போன்ற நோய்க் காவி நுளம்புகளினால் கடந்த தசாப்பத்தில் அதிக மரணங்கள் சம்பவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மனிதனின் நடத்தைக்குச் சமாந்தரமாக நுளம்புகள் கடிப்பதனால் தோலின் மேற்பரப்பில் ஏற்படும் ஒவ்வாமைகள், பற்றீரியா தொற்று மற்றும் சரும நோய்கள் ஏற்படுவதற்கும் காரணமாகிறது. இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு நோயெதிர்ப்பொருள் மருந்துகளை அதிகளவில் பயன்படுத்தும் நிலை உருவாகியுள்ளது. இதனால் பொருளாதார நெருக்கடிகள் உருவாகியுள்ளதோடு ஆரோக்கியமான வாழ்வுக்கு கடும் சவாலாகவும் உள்ளது.




***Reported Dengue Cases in the SJKMC Area***

மனிதனின் நேரடியான செயற்பாடுகளும் மறைமுக செயற்பாடுகளும் நுளம்புகளுக்கான உறைவிடங்களை ஏற்படுத்தி விடுகின்றன. அதாவது, நீரை மாசுபடுத்தல், முறையற்ற கழிவகற்றல், உரிய திட்டவமைப்பின்றி

கட்டடங்களை அமைத்தலும் முறையற்ற பராமரிப்பும் மற்றும் நீர்ப்பாசன, வடிகால் முறைமைகளை உரிய விதத்தில் பராமரிக்காமை என்பன. அதேபோல், எதிர்மறையான மனப்பாங்குகள், சுயநலம், சுற்றுச்சூழலைச் சுத்தமாகப் பேணாமை, வறுமை, நகரமயமாக்கல், கைத்தொழில்மயம், முறையற்ற காணிப் பயன்பாடு அத்துடன் சனத்தொகை அதிகரிப்பு மற்றும் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நிலையான பொறிமுறையொன்று இல்லாமையும் அதற்கான பிரதான ஏதுக்கள் எனலாம். எனவே, இவ்வாறான நிலைமைகளைத் தடுப்பதற்கு உரிய வேலைத்திட்டங்கள் இல்லாத காரணத்தினால் நுளம்புத் தொல்லை தீவிரமடைந்துள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக துறைசார்ந்த வல்லுநர்களை இணைத்துக்கொண்டு வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தது. இதன் முதல் கட்டமாக துறைசார்ந்த வல்லுநர்களை இனம்கண்டு அவர்களின் பங்கேற்புடன் நுளம்புத் தொல்லை பற்றிய விரிவாக கலந்துரையாடப்பட்டு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்திற்கென மாதிரி இணைந்த திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதை நடைமுறைப்படுத்துவதற்கான கருத்திட்ட முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட முன்மொழிவு தேவையான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு நிதியுதவியைப் பெற்றுக்கொள்வதற்குமென தேசிய பௌதிகத் திட்டத் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

நுளம்புத்தொல்லை மனிதனின் சுகாதாரத்திற்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் அச்சுறுத்தலாக மாறியுள்ள காரணத்தால் புதிய கட்டுப்பாட்டுக் காரணிகள் / உத்திகள் அடங்கிய சூழல் நேய மற்றும் பயனுறுதியான காவிக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளை வகுத்தமைத்து குறிப்பாக, டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிலைமைகளை கவனத்தில் கொண்டு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை துறைசார்ந்த வல்லுநர்கள் / விஞ்ஞானிகள் மற்றும் முன்னோடிகள் உள்ளிட்ட பங்கீடுபாட்டாளர்களுக்கு, இலங்கையில் விஞ்ஞானிகளிடையே சமீப காலமாக பேசப்பட்ட உயிர் விஞ்ஞானக் கட்டுப்பாட்டு முறையெனக் கருதப்படும் ஆண் நுளம்புகளிடையே வோல்பெசியா (wolbachia) பற்றீரியாவைப் பரப்புச் செய்யும் ஆராய்ச்சி பற்றிக் கலந்தாலோசிப்பதற்கான வாய்ப்பினை வழங்கத் திட்டமிட்டுள்ளது.

### 4.3.5 சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் பற்றிய முதலாவது சர்வதேச மாநாடு

மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளின் கீழ் சுற்றாடல் முகாமைத்துவம், திட்டமிடலில் மிக முக்கியமானதாய் விளங்கும் உலகத்தின் புதிய செல்நெறிகளைக் கண்டுகொள்வதற்கான ‘‘சுற்றாடல் முகாமைத்துவமும் திட்டமிடலும்’’ மாநாட்டை 2015ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 23, 24ஆம் திகதிகளில் பத்தரமுல்ல ‘‘வோர்ரஸ் எஜ்’’ வளாகத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் பற்றிய கல்வியியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆராய்ச்சித் துறையில் இணைய விரும்பும் புதிய ஆராய்ச்சியாளர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரைகளைத் திரட்டி ஒவ்வொருவரினதும் அறிவையும் அனுபவத்தையும் பரிமாறிக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாக உள்ளது.

மேலும், ஆராய்ச்சியாளர்கள், தொழில் வல்லுநர்கள், கல்வியியலாளர்களுக்கு சுற்றாடல் துறை சார்ந்த அண்மைக்கால புத்தாக்கங்கள், சுற்றாடல் போக்குகள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் தீர்வுகள் பற்றி கலந்தாலோசிப்பதற்கு துறைசார் நிபுணர் குழு ஒன்றினூடாக வாய்ப்பும் வழங்கப்படவுள்ளது. அதன்படி, ஆய்வுக் கட்டுரைகளைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமான சுவரொட்டிகளும், துண்டுப்

பிரசுரங்களும் உள்நாட்டு, மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள், உள்நாட்டு ஆராய்ச்சி நிறுவனங்கள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு காட்சிப்படுத்தும் பொருட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கீழ்க் காட்டப்பட்டுள்ள ஆறு தலைப்புகளின் கீழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன.

01) சுற்றாடல் புத்தாக்கங்கள்

02) இயற்கை வள முகாமைத்துவம்

03) சுற்றாடல் மாசுக்கட்டுப்பாடும், முகாமைத்துவமும்

04) சுற்றாடல் முகாமைத்துவத்துக்கான புவிசார் இடமறியும் தகவல் தொழில்நுட்பம்

05) சுற்றாடலும் பேண்தகு நிலை அபிவிருத்தியும்

06) சுற்றாடல் கல்வியும் விழிப்புணர்வும்




மேலே சொல்லப்பட்டுள்ள தலைப்புகளின்படி 138 ஆய்வுக் கட்டுரைகள் கிடைக்கப்பெற்றன. 38 விஞ்ஞானிகளைக் கொண்ட நிபுணர் குழுவில் பரிசீலிக்கப்பட்ட பின்னர 43 ஆய்வுக்கட்டுரைகள் வாய்மொழிமூல முன்னிலைப்படுத்தலுக்காகவும், 11 ஆய்வுக் கட்டுரைகள் சுவரொட்டி முன்னிலைப்படுத்தலுக்காகவும் (Poster Presentation) தெரிவுசெய்யப்பட்டன.

2015ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 23ஆம் திகதி அங்குரார்ப்பண நிகழ்வை நடத்துவதற்கும் 24ஆம் திகதி தொழில்நுட்ப அமர்வினை நடாத்துவதற்கும் “வோட்டஸ் எஜ்” வளாகத்தில் ஏற்பாடுகள் (முன்பதிவுகள்) செய்யப்பட்டுள்ளன. வெளிநாட்டு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உள்நாட்டு நிறுவனங்களைச் சேர்ந்த துறைசார்ந்த வல்லுநர்கள் கருத்துரை வழங்க

அழைக்கப்பட்டுள்ளனர். மாநாட்டின்போது பார்வைக்கு வைக்கப்படவிருக்கும் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் அச்சிடத் தயார் நிலையில் உள்ளன. ஐந்து சுற்றுக் கலந்துரையாடல்களின் பின்னர் மாநாட்டின் ஏற்பாடு பற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டதுடன் அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கேற்கும் அதிதிகளின் பட்டியலும் தயாரிக்கப்பட்டுள்ளது. மாநாட்டில் முன்னிலைப்படுத்தல்களைச் செய்பவர்களு (presenters)க்கு முன்னிலைப்படுத்தல்களின் தரம் பற்றிய செயலமர்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாநாட்டில் பங்கேற்கும் பேராளர்களுக்கு வழங்கப்படவிருக்கும் பொருட்களுக்கு கீழ்க் காட்டப்பட்டுள்ள நிறுவனங்கள் அனுசரணை வழங்கியுள்ளன.

| | |
|---|---|
| Pen Drivers | - சர்வதேச நீர்முகாமைத்துவ நிறுவகம் (IWMI) |
| பைகள் | - மலிபன் பால் உற்பத்தி தனியார் கம்பனி |
| குறிப்பேடுகள் | - கொக்கோகோலா குளிர்பான தனியார் கம்பனி |
| பேனாக்கள் | - Retail IT தனியார் கம்பனி |

### 4.3.6 இலங்கையில் கைத்தொழில் வலயங்களை நிறுவுவதற்குப் பொருத்தமான இடங்களைத் தெரிவுசெய்வதற்கான புவிசார் இடமறியும் தகவல் தொழில்நுட்பம்

கைத்தொழில்கள் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான வினைத்திறன் மிக்க பங்களிப்பைச் செலுத்தி வரும் அதேசமயம் வறுமையை ஒழிக்கவும் உதவுகிறது. இந்நிலையில் கைத்தொழில் செயற்பாட்டுடன் இணைந்ததாக சுற்றாடல் பற்றிக் கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும். அப்படி அமையாத சந்தர்ப்பங்களில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பு உருவாகிறது. “பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்யும் ஏதேனும் பொருளாதார செயற்பாடு” என அறியப்படுகின்றது. அதாவது மூலப் பொருள் முடிவுப் பொருளாகவும், உற்பத்தி சேவைகளாகவும், சேவைகள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என விரியும் சங்கிலித் தொடரின் ஓர் அங்கமாகவும் கைத்தொழிலை இனம்காணலாம்.

அபிவிருத்தி அடைந்துள்ள பல நாடுகள் இச்செயற்பாட்டின் மூலம் தமது நாட்டு மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டினையும் சுற்றாடல் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்திக்கொண்டு சமூக பொருளாதார அபிவிருத்தியை எட்டித் தொட்டுள்ளன. எவ்வாறாயினும், இன்றளவில் இதனுடன் சம்பந்தப்பட்ட சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் உரிய பொறிமுறையின்றி அமுல்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இலங்கை போன்ற நாடுகளில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுற்றாடல் மாசுபடுவதைக் கட்டுப்படுத்தும் விதத்தில் திட்டமிடப்பட்ட கைத்தொழில் வலயங்களில் உயர் மாசுக் காரணிகளைக் கொண்ட கைத்தொழில்கள் நிறுவப்படுவதில்லை. எனவே, சுற்றாடல் பாதுகாப்பு விடயத்தில் முக்கிய பொறுப்பைக் கொண்டுள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபை இவ்வாறான கைத்தொழில் வலயங்களுக்கென குறைந்த மட்ட சுற்றாடல் மற்றும் சமூக ரீதியான தாக்கத்தினைக் கொண்ட பிரதேசங்களைக் கண்டறிவதற்கான புதிய முறைவழியொன்றை தயாரித்தது. இந்த முறைவழிக்கமைய ஆராய்ச்சி, அபிவிருத்தி அலகினால் கைத்தொழில் வலயங்களுக்கு மிகவும் பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்யும் புவிசார் இடமறியும் தகவல் தொழில்நுட்ப மாதிரியொன்று தயாரிக்கப்பட்டது. மேலும், கைத்தொழில் துறையில் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களைச் சேரந்த வல்லுநர்களின் பங்கேற்புடன் இதற்குப் பொருத்தமான பிரமாணங்கள் பற்றிக் கலந்துரையாடப்படுகிறது.

இது கைத்தொழில் துறையில் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டுக்கும் சுற்றாடல் அங்கீகாரம் வழங்கும் செயற்பாட்டுக்கும் அத்துடன் நாட்டின் நிலைத்தகு அபிவிருத்திக்கும் மிகமிக

முக்கியமானதாகும். அத்துடன், நிலைத்தகு அபிவிருத்தி திட்டமிடல்கள், வலயத் திட்டமிடல்கள் மற்றும் சுற்றாடல் சார்ந்த திட்டமிடலுக்குத் தேவையான தரவுகளும் தகவல்களும் வழங்கப்படுகின்றன.

களுத்துறை மாவட்டத்திற்கெனத் தயாரிக்கப்பட்ட இந்தக் கருத்திட்ட முன்மொழிவினை ஏனைய பிரதேசங்களுக்கென பயன்படுத்துவதற்கு முன்னர் ஆராயப்பட வேண்டிய நியதிகள் பற்றி துறைசார்ந்த வல்லுநர்களின் பங்கேற்புடன் கலந்துரையாடப்பட்டு வருகிறது. எனவே, இதன் பின்னர் புவிசார் இடமறியும் தகவல் தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி ஏனைய மாவட்டங்களுக்கான கைத்தொழில் வலயங்களை நிறுவுவதற்குப் பொருத்தமான இடங்களை தெரிவுசெய்ய முடியும். அதன்படி, குறைந்தளவு தாக்கத்தை உடைய இடங்களை முதலீட்டாளர்கள் தெரிவு செய்வதற்கு முன்னர் பொருத்தமான இடங்களை முதலீட்டாளர்களுக்கு முன்மொழியும் வாய்ப்பு ஏற்படுவதோடு இது நாட்டின் நிலையான அபிவிருத்திக்கு மிகவும் பலம் வாய்ந்த ஒரு செயற்பாடாகவும் விளங்கும்.


81°F / 27°C
A8
A2
Site 07
Site 01
Site 06
Site 02
Site 03
Site 05
Site 04
12.43 mi
Image © 2015 DigitalGlobe
© 2015 Google
Data SIO, NOAA, U.S. Navy, NGA, GEBCO
Image © 2015 CNES / Astrium
Imagery Date: 1/18/2015
Suitable sites selected
District Boundary

# 5.0.சட்ட அலகு

**எமது அரும்பணிக் கூற்று**

*"சட்டப் பொறிமுறையைப் பலப்படுத்துவதன் மூலமும் சுற்றாடல் அபிவிருத்தி, அறிவை ஈட்டிக்கொள்வதன் மூலம் எம் ஒவ்வொருவரினதும் இருப்புக்காக சுற்றாடலின் ஆரோக்கியமான இருப்பினை உறுதிசெய்தல்"* ஆண்டிறிக்கை 2014

## 5.1 தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள் -

1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தால் பலனுறும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமைய மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமை அதிபதியினுடைய நேரடிக் கண்காணிப்பின் கீழ் சட்டப் பிரிவு 2014ஆம் ஆண்டில் மேற்கொண்ட சட்ட நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் கீழே கீழே தரப்பட்டுள்ளன.

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையும் முடிவுறுத்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையும் மிகமிக அதிகமாகும். அதாவது, 2014ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் அதிகாரசபைக்கு எதிரான வழக்குகளின் எண்ணிக்கை 262 ஆகும். 2014ஆம் ஆண்டில் புதிதாக 93 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

2014ஆம் ஆண்டில் வழக்குகளினூடான அபராதத் தொகையாக ரூபா 478,850.00 தொகை ஈட்டப்பட்டுள்ளது.

**மேல்மாகாணத்தில் சட்ட நடவடிக்கைகள் சார்ந்த முன்னேற்றங்கள் -**

2014ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தில் தாக்கல் செய்யப்பட்டு பேணப்படும் வழக்குகளின் எண்ணிக்கை 115 ஆகும்.

கொழும்பு மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டு பேணப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கை 59 ஆகும். அதாவது, கல்கிசை நீதவான் நீதிமன்றில் 06 வழக்குகளும், அவிசாவளை நீதவான் நீதிமன்றில் 08 வழக்குகளும், கெஸ்பேவ நீதவான் நீதிமன்றில் 08 வழக்குகளும், கங்கொடவில நீதவான் நீதிமன்றில் 05 வழக்குகளும், மொறட்டுவ நீதிவான் நீதிமன்றில் 06 வழக்குகளும், கடுவலை நீதிவான் நீதிமன்றில் 08 வழக்குகளும், ஹோமாகம நீதவான் நீதிமன்றில் 02 வழக்குகளும், கொழும்பு நீதவான் நீதிமன்றில் 16 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டு பேணப்பட்டு வந்துள்ளன. 2014ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 18 ஆகும்.

கம்பஹா மாவட்டத்தில் பேணப்பட்டு வந்த வழக்குகளின் எண்ணிக்கை 39 ஆகும். அதாவது, கம்பஹா நீதவான் நீதிமன்றில் 13 வழக்குகளும், நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் 04 வழக்குகளும், வத்தளை நீதவான் நீதிமன்றில் 05 வழக்குகளும், அத்தனகல நீதவான் நீதிமன்றில் 05 வழக்குகளும், மஹர நீதவான் நீதிமன்றில் 05 வழக்குகளும், கணுவன நீதவான் நீதிமன்றில் 04 வழக்குகளும் பூகொட நீதவான் நீதிமன்றில் 02 வழக்குகளும் மினுவன்கொட நீதவான் நீதிமன்றில் 01 வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு பேணப்பட்டு வந்துள்ளன. இவற்றிலிருந்து 2014ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 04 ஆகும்.

களுத்துறை மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டு பேணப்பட்டு வந்த வழக்குகளின் எண்ணிக்கை 17 ஆகும். அதாவது, களுத்துறை நீதவான் நீதிமன்றில் 02 வழக்குகளும், மத்துகம நீதவான் நீதிமன்றில் 04 வழக்குகளும், பாணந்துறை நீதவான் நீதிமன்றில் 04 வழக்குகளும், ஹொரண நீதிவான் நீதிமன்றில் 07 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டு பேணப்பட்டு வந்துள்ளன.

**மத்திய மாகாணத்தில் சட்ட நடவடிக்கை சார்ந்த முன்னேற்றங்கள் -**

மத்திய மாகாணத்தில் கடந்த ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டு பேணப்பட்டு வந்த வழக்குகளின் எண்ணிக்கை 54 ஆகும். இந்த வழக்குகள் கண்டி, மாத்தளை, தம்புள்ள, கம்பளை, கலகெதர, நாவலப்பிட்டி, தெல்தெனிய, நுவரெலியா, லக்கல, ஹட்டன், வளப்பனை, ஹெல்பொட, பன்வில, மிணிப்பே மற்றும் மஹியங்கனை ஆகிய நீதவான் நீதிமன்றங்களில் பேணப்பட்டு வந்துள்ளன. இவற்றில் புதிதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 23 ஆகும். 2014ஆம் ஆண்டில் 18 வழக்குகள் மீதான விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

**ஊவா மாகாணத்தில் சட்ட நடவடிக்கை சார்ந்த முன்னேற்றங்கள் -**

ஊவா மாகாணத்தில் தாக்கல் செய்யப்பட்டு பேணப்பட்டு வந்த வழக்குகளின் எண்ணிக்கை 18 ஆகும். இதில் 11 வழக்குகள் 2014ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டன. மேலும் வெலிமட நீதவான் நீதிமன்றில் 02 வழக்குகளும், மஹியங்கனை நீதிவான் நீதிமன்றில் 07 வழக்குகளும், மொனராகலை மற்றும் பசறை, வெல்லவாய நீதவான் நீதிமன்றில் தலா ஒரு வழக்கும், பண்டாரவளை நீதிவான் நீதிமன்றில் 06 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டு பேணப்பட்டு வந்துள்ளன. இவற்றில் 06 வழக்குகள் மீதான நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

**தென்மாகாணத்தில் சட்ட நடடிவக்கைகள் சார்ந்த முன்னேற்றங்கள் -**

தென்மாகாணத்தில் பலபிட்டிய, காலி, எல்பிட்டிய, தங்காலை, வலஸ்முல்ல, மாத்தறை ஆகிய நீதவான் நீதிமன்றங்களில் 09 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு பேணப்பட்டு வந்துள்ளன. 2014ஆம் ஆண்டில் புதிதாக 05 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதுடன், 03 வழக்குகள் மீதான நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துள்ளன.

**கிழக்கு மாகாணத்தில் சட்ட நடவடிக்கை சார்ந்த முன்னேற்றங்கள் -**

மத்திய சுற்றாடல் அதிகாரசபை 2014ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் அக்கரைப்பற்று மற்றும் திருகோணமலை நீதிமன்றங்களில் 02 வழக்குகளைத் தாக்கல் செய்து பேணி வந்துள்ளது.

**சப்ரகமுவ மாகாணத்தில் சட்ட நடவடிக்கைகள் சார்ந்த முன்னேற்றங்கள் -**

சப்ரகமுவ மாகாணத்தில் 12 வழக்குகள் பேணப்பட்டு வந்துள்ளதோடு 04 வழக்குகள் 2014ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. முறையே மாவனெல்ல, பெல்மடுல்ல, இரத்தினபுரி, ருவன்வெல்ல மற்றும் வரக்காபொல நீதிவான் நீதிமன்றத்தில் தலா ஒரு வழக்கும், கேகாலை நீதிவான் நீதிமன்றில் 05 வழக்குகளும், அவிசாவளை நீதிவான நீதிமன்றில் 02 வழக்குகளும் பேணப்பட்டு வந்துள்ளன. 2014ஆம் ஆண்டில் 04 வழக்குகள் மீதான நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

**வடமத்திய மாகாணத்தில் சட்ட நடவடிக்கை சார்ந்த முன்னேற்றங்கள் -**

வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம், மரவாச்சி மற்றும் தம்புத்தேகம நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு பேணப்பட்டு வந்த 11 வழக்குகளில் 02 வழக்குகள் மீதான நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

**வடமேல் மாகாணத்தில் சட்ட நடவடிக்கை சார்ந்த முன்னேற்றங்கள் -**

நிக்கவெரட்டிய நீதிவான் நீதிமன்றில் 01 வழக்கு பேணப்பட்டு வந்துள்ளது.

**மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் -**

2014ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் சபைக்கு எதிராக கொழும்பு, கல்கிசை, கம்பஹா, யாழ்ப்பாணம், கடுவலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்ட நீதிமன்றங்களிலும் மேல் நீதிமன்றங்களிலும் பேணப்பட்டு வந்துள்ள வழக்குகளின் எண்ணிக்கை 40 ஆகும். இதுதவிர, உயர் நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் உள்ளன.

மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு எதிராக உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் நீதிவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பில் சட்ட அலகின் அலுவலர்கள் செயலாற்றி வருகின்றனர்.

மேலும், நீதிமன்றங்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைத் தயார் செய்தல், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான மதியுரைச் சேவைகளில் பங்கேற்றலிலும் ஈடுபட்டுள்ளனர்.

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட முன்னேற்றங்கள்**

-சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து சில கைத்தொழிற்சாலைகளில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு அமைவாக கழிவுநீர் பரிகரிப்புத் தொகுதிகள் அமைக்கப்பட்டன. மேலும் சில தொழிற்சாலைகளில் ஒலி கட்டுப்பாட்டை மேற்கொண்டன. இவ்வாறான சட்ட ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இரத்துச் செய்யப்படல் / இடைநிறுத்தப்படல் / நிராகரிக்கப்படல்.**

கைத்தொழிற்சாலைகளினால் ஏற்படுகின்ற சுற்றாடல் மாசுபாட்டை ஆராய்ந்த பின்னர் 33 கைத்தொழிற்சாலைகளுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை இரத்துச் செய்வதற்கான கடிதங்களும், 98 தொழிற்சாலைகளுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை நிராகரிப்பதற்கான கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், கைத்தொழிற்சாலைகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் பொருட்டு ஒலிமட்ட அறிக்கைகள், கழிவுநீர் பகுப்பாய்வு அறிக்கைகள், மற்றும் களப் பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கான பல கோப்புகள் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுப் பிரிவு, மாகாண அலுவலகங்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆய்வுகூடம் என்பவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**இரத்துச் செய்யாதிருப்பதற்கான ஏதுக்கள் / அதிகார இரத்து தொடர்பான அறிவிப்புகள்-**

தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமமொன்றின் அதிகாரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட கடிதம் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் 24(ஆ) பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளைகள்-**

2014ஆம் ஆண்டில் சட்ட அலகு தேசிய சுற்றாடல் சட்டத்தின் 24(ஆ) பிரிவின் கீழான 20 கட்டளைகளைப் பிறப்பித்துள்ளது.

## 5.2 ஆம் பிரிவின் கீழான கட்டளைகள் -

சட்ட அலகு தேசிய சுற்றாடல் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழான 03 கட்டளைகளைப் பிறப்பித்துள்ளது.

## 5.3 சுற்றாடல் பாதுகாப்பு உரிம நிபந்தனைகள் -

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சட்ட அலகு அலுவலர்களும், மாகாண அலுவலகங்களில் இணைக்கப்பட்டுள்ள உதவி சட்ட அலுவலர்களும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்கும்போது அதற்கான நிபந்தனைகளை பரிசீலிப்பார்கள்.

கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான உரிமங்களை வழங்கும்போது அதற்கான நிபந்தனைகள் தலைமை அலுவலகத்தின் சட்ட உத்தியோகத்தர்களால் பரிசீலிக்கப்படும்.

## 5.4 தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு உட்பட்டதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் (சுற்றாடல், இயற்கை வள அமைச்சு) -

சட்ட அலகின் அலுவலர்கள் சுற்றாடல் அமைச்சின் செயலாளரினால் நெறிப்படுத்தப்பட்ட 07 மேன்முறையீட்டு விசாரணைகளில் பங்கேற்றனர்.

## 5.5 நொத்தாரிசு நடவடிக்கைகள் -

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட கருத்திட்ட அமுலாக்கல், கட்டடங்களைக் குத்தகைக்கு வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும்போது வெளித்தரப்புடன் ஏற்படுத்திக்கொள்ளப்படும் உடன்படிக்கைகள் மற்றும் இணக்கப்பாடுகள் தொடர்பான 58 உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு அவற்றுக்கான அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

## 5.6 கூட்டங்கள் -

சட்ட அலகின் அலுவலர்கள் பங்கேற்ற சுற்றாடல் நடவடிக்கைகள் சார்ந்த கூட்டங்களின் எண்ணிக்கை 111ஐக் கடந்துள்ளது.

## 5.7 முறைப்பாடுகள் -

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு மற்றும் பொதுமக்களுக்குத் தொல்லை தருவதாக அமைந்த விடயங்கள் தொடர்பாக பொதுமக்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் இதர நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் மீதான நடவடிக்கை எடுக்கப்பட்டுத்

தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவையின் 98ஆம் பிரிவு மற்றும் பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு சில முறைப்பாடுகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பொலிஸ் பிரிவு ஊடாக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டன.

## 5.8 கலந்துரையாடல்கள்

மத்திய சுற்றாடல் அதிகார சபையினாலும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு எதிராகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் சம்பந்தப்பட்ட ஆட்சேபனைகள், எழுத்திலான சமர்ப்பணங்களை முன்வைத்தல் பற்றிய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சட்ட அலகின் அலுவலர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் 57 கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர்.

## 5.9 ஒழுங்குவிதிகள்

வாயு வெளியேற்றம், எரிபொருள் மற்றும் வாகன இறக்குமதி தொடர்பான ஒழுங்குவிதிகள் 1887/20ஆம் இலக்க மற்றும் 2014.11.05ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், சட்ட அலகினால் வரையப்பட்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள கீழ்வரும் எட்டு ஒழுங்குவிதிகள் பற்றிய ஒன்றிணைப்புப் பணிகள் அதிகாரசபையின் சட்ட அலகினால் மேற்கொள்ளப்படும். கழிவுநீர் பற்றிய ஒழுங்கு விதிகள், சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் பற்றிய ஒழுங்கு விதிகள், சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நிபந்தனைகள் பற்றிய ஒழுங்குவிதிகள், சுற்றாடல் மதிப்பீடு பற்றிய ஒழுங்கு விதிகள், ஹந்தான சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசம் பற்றிய ஒழுங்குவிதிகள், தெடிகமுவ மலைப் பிரதேச பாதுகாப்பு பற்றிய ஒழுங்குவிதிகள், அத்துடன் வனப்பான இடங்களைப் பாதுகாத்தல் பற்றிய ஒழுங்குவிதிகள்.

## 5.10 ஆலோசனைச் சேவை -

உள்ளூராட்சி மன்றங்களின் பல்வேறு பிரிவுகளுக்கு சுற்றாடல் நடவடிக்கைகள் சார்ந்த 19 கோப்புகள் தொடர்பில் சட்ட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## 5.11 சட்ட அறிவித்தல் -

சுற்றாடல் மாசுக் காரணிகளைக் கொண்ட 225 கைத்தொழில்களுக்கு எதிராக சட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 5.12 களப்பரிசோதனை அறிக்கைகள் -

நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைவாக, நீதிமன்றத்திற்கும் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திவலு அமைச்சின் செயலாளரின் முன்னிலையில் நடாத்தப்படும் மேன்முறையீட்டு விசாரணைகளில் சமர்ப்பிப்பதற்காகவும் தயாரிக்கப்பட்டுள்ள களப் பரிசோதனை அறிக்கைகளுக்கு சட்ட அலகின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

## 5.12 விழிப்புணர்வு -

சட்ட அலகின் அலுவலர்களால் தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான 32 விரிவுரைகள் நடாத்தப்பட்டுள்ளன. பிற நிறுவனங்களுக்கென நடாத்தப்பட்ட

இச்செயலமர்வுகளில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அலுவலர்கள் வளவாளர்களாகப் பங்கேற்றனர்.

மேலும், சட்டக்கல்லூரி மாணவர்களினதும் ஏனைய பல்கலைக்கழக மாணவர்களினதும் வேண்டுகோளுக்கமைய சுற்றாடல் சட்டம் பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு நடாத்தப்பட்டது.

## 5.14 மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஆராயப்பட்ட விடயங்கள் -

மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொள்ளும் சுற்றாடலுடன் தொடர்புடைய 05 விடயங்களுக்கும் பணியாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்ட விடயங்களிலும் சட்ட அலகின் அலுவலர்கள் பங்கேற்றனர். உரிய அங்கீகாரத்துடன் அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 5.15 தேசிய சுற்றாடல் சட்டத்திருத்தம் -

"Polluter Pays" போன்ற கோட்பாடுகள், ஈரநிலங்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுப்பொருள்கள் பற்றிய ஏற்பாடுகளை சுற்றாடல் சட்டத்தில் கொண்டுவரும் நோக்கத்துடனும் வலுவிலுள்ள சட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளைத் தவிர்க்கும் நோக்கத்துடனும் சுற்றாடல் சட்டத்தின் மீதான திருத்தங்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, தற்போதுள்ள அபராதத் தொகையை அதிகரிப்பதற்காக அதற்குரிய பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ள உத்தேச இறுதித் திருத்தம் சட்டவரைஞர் திணைக்களத்தினால் அதிகாரசபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டதுடன் அதிகார சபையில் கலந்துரையாடப்பட்டு இறுதி முடிவும் எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 2014ஆம் ஆண்டில் புதிய தேசிய சுற்றாடல் சட்டமொன்றை அறிமுகம் செய்யவேண்டிய தேவையும் காணப்பட்டது. எனவே, சட்ட அலகு 2014ஆம் ஆண்டில் உத்தேச திருத்தங்களையும் புதிய முன்மொழிவுகளையும் சேர்த்து புதிய தேசிய சுற்றாடல் சட்டமொன்றை வரைய நடவடிக்கை எடுத்தது. இன்றளவில் இச்சட்டம் அதிகார சபையின் உயர் முகாமைத்துவத்தினால் ஆராயப்பட்டு வருகிறது.

# 6.0.சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வு பிரிவு

1984ஆம் ஆண்டு தொடக்கம் சுற்றாடலின் ஆரோக்கியமான இருப்புக் கருதி இலங்கையில் கீழ் மட்டத்திலுள்ள இலக்குக் குழுக்களுக்காக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களும் செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சுற்றாடலைப் பாதுகாக்கும் பொறுப்பினை நிறைவேற்றி வருகிறது.

2014ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின்படி, சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவு அமைச்சினதும் திறைசேரியினதும் நிதியைப் பயன்படுத்தி சமூகத்திலுள்ள பல்வேறு குழுக்களுக்கென கீழ்க் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

## 6.1 அமைச்சின் நிதி ஒதுக்கீட்டைக்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- 4.1 ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்
- 4.2 தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிநெறி
- 4.3 ஒன்றிணைப்பு உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல்
- 4.4 சுற்றாடல் முன்னோடி ஆணையாளர்களுடனான கலந்துரையாடல்
- 4.5 பதக்கம் பெறுநர்களையும் அங்கத்தவர்களையும் அதிகரித்தல்
- 4.6 பாடசாலை மட்ட சுற்றாடல் சிறுவர் கழகங்கள் (மாவட்டத்தில் ஒரு பாடசாலை)
- 4.7 சுற்றாடல் முன்னோடி கழிவுப்பொருள் உற்பத்தி
- 4.8 மாவட்ட சுற்றாடல் முன்னோடி சஞ்சிகை அச்சிடல் (மாவட்டத்திற்கு ஒரு சஞ்சிகை)
- 4.9 மாவட்ட சுற்றாடல் முகாம்கள்
- 4.10 சனாதிபதி பதக்கம் வழங்கல்
- 4.11 தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டம்
- 4.12 கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செயலமர்வுகள்
- 4.13 முன்பள்ளி ஆசிரியர் கைந்நூல் அச்சிடல்
- 4.14 சனாதிபதி பதக்கம் வென்றவர்களை இணைத்துக்கொண்டு சுற்றாடல் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- 4.15 சிறுவர் நட்புறவு மற்றும் ஊட்டப் பாடசாலை நிகழ்ச்சித் திட்டம்.

## 6.2 திறைசேரியின் நிதியைக்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் (மீண்டெழும், நிதி)

1. கல்வி பிரசுரங்கள் தயாரித்தல் (சுவரொட்டிகள், பிரசுரங்கள்)
2. அரச, அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள்.

3. இல்லத்தரசிகளுக்கான நிகழ்ச்சித்திட்டம்.
4. இலத்திரன், அச்சு ஊடகத்தின் முறையான பயன்பாடு.
    4.1. சுற்றாடல் செய்திகள்
    4.2. சுற்றாடல் செய்திச் சேகரிப்பு
    4.3. இலத்திரனியல் ஊடகம்
    4.4. ‘சொபாகெத்த’ வானொலி நிகழ்ச்சித் திட்டம்
    4.5. தொலைக்காட்சி நேர்காணல்கள்
    4.6. வானொலி நேர்காணல்கள்
    4.7. புனைபாடல் இறுவட்டு வெளியீடு
    4.8. நில்வனபெத்த இறுவட்டு வெளியீடு – சுற்றாடல் பாடல் வெளியீட்டு நிகழ்ச்சித்திட்டம்.
    4.9. தினப்பத்திரிகைகளில் சுற்றாடல் பிரச்சினைகளை அலசல்.
    4.10. செய்திகள், சஞ்சிகை வெளியீடு.
5. சுற்றாடல் நூல் வெளியீடு – சுற்றாடல் செய்யுள் நூல்கள், சுற்றாடல் சிறுகதைகள் மற்றும் சுற்றாடல் சுவரொட்டிகள் அடங்கிய நூல்கள்.
6. கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல்.
7. செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் - சொபா கள நிலையங்கள்
8. இற்றைப்படுத்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் - மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கேட்போர் கூடம்.
9. தற்போதுள்ள பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள். உதாரணம்: டெங்கு.
10. தேசிய சுற்றாடல் கல்வி நிலைய நிகழ்ச்சித்திட்டங்கள் - சுற்றாடல் கல்விக்கென நிறுவப்பட்ட சர்வதேச நிலையம்.
11. கலாசார நிகழ்வுகளின்போது சுற்றாடல் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
12. மாவட்ட மட்டத்தில் சுற்றுச்சூழல் காப்பாளர்களைக் கௌரவித்தல் (சுவசர தக்சலாவ)
13. உலக சுற்றாடல் தினம்
14. வீட்டுத்தோட்ட செய்கைப் போட்டி.
15. சுற்றாடல் சிறுவர் கழகங்களை அமைத்தல் - துருலத்தா சான்றிதழ்கள், விஹங்க சான்றிதழ்கள், சொபா, சுற்றாடல் ஆசிரியர் கைந்நூல் தயாரிப்பு, பிரசுரங்கள் அச்சிடல்.

## 6.1 பிற நிகழ்ச்சித்திட்டங்கள்

1. சிவனொளிபாதமலை யாத்திரை.

2. தொழிற்சாலைகளுக்கான கல்வி, விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்.

3. சுற்றாடல் நிகழ்ச்சித்திட்ட பாடசலைப் போட்டிகளை ஒன்றிணைத்தல்.

01. திறைசேரி நிதியொதக்கீட்டின் கீழான நிகழ்ச்சித்திட்டங்கள் (மூலதன மற்றும் மீண்டெழாத)

1. கல்வி சார்ந்த உள்ளீடுகள் (சுவரொட்டிகளும் பிரசுரங்களும்) காலத்திற்குப் பொருத்தமான தலைப்புகளில் செய்திகளை அச்சிட்டு வெளியிடுதல்.

சுற்றாடலுடன் தொடர்புடைய நிகழ்நிலை பிரச்சினைகள் பற்றிய செய்திகளை வழங்குமுகமாக சுவரொட்டிகளையும் பிரசுரங்களையும் உள்ளீடுகளாகப் பயன்படுத்துதல்.

இவ்விடயத்தையொட்டி ‘‘பரிசர நென பென’’ நூல்கள் அச்சிடப்பட்டன. 2250 (சிங்களம்), 500 (தமிழ்), 250(ஆங்கிலம்). அதற்கான கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளன. மேலும், ‘‘சமனல’’ என்ற பெயரில் 1000 நூல்கள் அச்சிடப்பட்டன.

## 6.2.அரச, அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் மற்றும் விழிப்புணர்வுப் பிரிவினால் சுற்றாடல் முன்னோடிப் பதக்கங்களைப் பெறுவதற்கு பிள்ளைகளின் பங்கேற்பைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தினால் இந்த நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்படுகின்றது. 2014ஆம் ஆண்டு 01 நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

### 6.2.1 இல்லத்தரசிகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

சுற்றாடலைப் பாதுகாப்பதிலும் பேணுவதிலும் இல்லத்தரசிகளுக்குப் பெரும் பங்குண்டு. சுற்றாடல் கல்வி, மற்றும் விழிப்புணர்வுப் பிரிவு ஆசிரியர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள், சூழல்நேய வீட்டுத்தோட்டங்களை உருவாக்குதல், சூழல் நேய குடும்பங்களின் வருமான அதிகரிப்பு நிகழ்ச்சித்திட்டம் போன்றவற்றை மேற்கொண்டு வருகிறது. இதனூடாக சூழல்நேய விவசாய முறையும் குடும்பங்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்கவும் முடியும். சுய வருமான உற்பத்தி விவசாயத்தின்மூலம் குடும்பத்தின் வருமானத்தையும் அதிகரித்துக்கொள்ளலாம்.

2014ஆம் ஆண்டில் பிரதேச செயலக மட்டத்தில் இல்லத்தரசிகளுக்கான சூழல் நேய பழக்கங்களை வளர்த்தலுடன் சம்பந்தப்பட்ட 08 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றோர் பெற்றுக்கொண்ட அனுகூலங்கள்.

1. விவசாயத் திணைக்களத்தில் அனுபவம் வாய்ந்த வளவாளர்களைக்கொண்டு விதைநடுகை, கூட்டெரு தயாரிப்பு, மற்றும் சூழல் நேய முறைவழிகள் பற்றிய முன்னிலைப்படுத்தல்கள் செய்யப்பட்டன.

2. சிறு கையேடு வழங்கல் (உதாரணம்:- கூட்டெரு தயாரித்தல்)

3. சுற்றாடல், கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான 03 பிரசுரங்கள்.

பல்வேறு பிரதேசங்களிலிருந்து வருகை தந்த 713 ஆசிரியர்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்றனர்.

| தொ இல. | திகதி | இடம் | பங்கேற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 2014.05.19 | ஹோமாகம பிரதேச செயலகம். | 76 |
| 2. | 2014.06.23 | வடமாகாண அலுவலகத்தில் 01 நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. – யாழ்ப்பாணம் சங்கானை பிரதேச செயலகம். | 100 |
| 3. | 2014.06.23 | கிழக்கு மாகாணத்தில் 01 நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது. | 100 |
| 4. | 2014.07.23 | மஹரகம பிரதேச செயலகம் | 65 |
| 5. | 2014.07.31 | சீத்தாவக்க ஹங்வெல்ல பிரதேச செயலகம் | 88 |
| 6. | 2014.08.08 | பிலியந்தலை பிரதேச செயலகம் | 86 |
| 7. | 2014.09.18 | கெஸ்பேவ பிரதேச செயலகம் | 100 |
| 8. | 2014.09.19 | தெஹிவளை, கல்கிசை பிரதேச செயலகம் | 98 |

### 6.2.2 இலத்திரனியல், அச்சு ஊடகப் பயன்பாடு

சுற்றாடல் சார்ந்த செய்திகளைச் சேகரிப்பதில் ஊடகங்கள் பலம் வாய்ந்த சாதனங்களாகத் திகழ்கின்றன. எனவே, சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவின் கீழ் தனியான ஊடக அலகொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஊடக அலகு இலத்திரனியல் வெளியீடுகளையும் அச்சு வெளியீடுகளையும் மேற்கொள்கிறது. 2014 ஆண்டில் அதன் முன்னேற்றங்கள் வருமாறு.

**சுற்றாடல் சஞ்சிகை**

தேசிய மட்டத்தில் ஒவ்வொரு காலாண்டிலும் அச்சிடப்படும் சுற்றாடல் சஞ்சிகைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தபாலில் அனுப்பிவைக்கப்படுகின்றன.

2014ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மலர்களின் எண்ணிக்கை 04. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் செய்திகளைத் தாங்கிய இந்தச் சஞ்சிகை மக்களிடம் அவற்றைக் கொண்டு சேர்க்கின்றன. இதில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் செயற்பாடுகள் செய்திகளாக உள்வாங்கப்படுவதோடு சுற்றாடல் சம்பந்தமான சில அறிக்கைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.



පරිසර
පුවත්

2014 ජූලි - සැප්. - ඔක්. - දෙසැම්බර් වෙළුම 33 අංක 3,4 මධ්‍යම පරිසර අධිකාරිය

පරිසර කොමසාරිස් වැඩමුළුවට ඉහළ ප්‍රතිචාරයක්

පරිසර හිතකාමී සංවර්ධනයකට මග කියන
පාරිසරික බලපෑම් ඇගයීම් පිළිබඳ 18 වන වැඩමුළුව...

## 6.2.3 அச்சு ஊடகம்

அச்சு ஊடகமும் வெகுஜன ஊடகமும் விசேட தகவல்களைப் பிரசுரிப்பதற்குப் பயன்படுகின்றன.

2014ஆம் ஆண்டில் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவில் மேற்கொண்ட செயற்பாடுகள் பின்வருமாறு.

## 6.2.4 சொபாகெத்த வானொலி நிகழ்ச்சித்திட்டம்

சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள் பற்றி பொது மக்களில் விழிப்புணர்வை எற்படுத்தும் சொபாகெத்த வானொலி நிகழ்ச்சி இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்தின் FM 94.3 / FM 94.8 அலைவரிசையினூடாக ஒலிபரப்பப்படுகின்றது. பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7.30 மணிக்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியின் முன்னேற்றம் பற்றிய மீளாய்வு நேயர்களுடன் நடாத்தப்படும் வினாவிடை போட்டடையைக் கொண்டு மதிப்பிடப்படுகின்றது. ஒவ்வொரு வாரமும் மூன்று வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். இந்த நிகழ்ச்சி மக்களின் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளது. 2014ஆம் ஆண்டில் 37 சொபாகெத்த நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

### 6.2.4.1 மீண்டும் சொபாகெத்த தொலைக்காட்சி நிகழ்ச்சி

எமது ஊடகப் பிரிவினால் சில ஆண்டுகளின் பின்னர் ஒளி/ஒலி பரப்பத் தீர்மானிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும்.

இந்த நிகழ்ச்சி இலங்கை தேசிய தொலைக்காட்சியில் (ஐ.ரி.என்.) 2009 - 2013 வரை ஒளி/ஒலி பரப்பப்பட்டது.

பொதுமக்கள் மத்தியிலும் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் மிகுந்த வரவேற்பைப் பெற்ற இந்த நிகழ்ச்சித் தொடரிலிருந்து தெரிவுசெய்ய 30 நிகழ்ச்சிகள் அது பற்றிய ஆர்வலர்களின் வேண்டுகோளுக்கமைய மீண்டும் தயாரிக்கப்பட்டது.




### 6.2.4.2 தொலைக்காட்சிக் கலந்துரையாடல்கள்

ஊடகப் பிரிவின் ஒன்றிணைப்பின் கீழ் 05 தொலைக்காட்சிக் கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் ஒளி/ஒலி பரப்பட்டன. இந்த நிகழ்ச்சிகள் அதிகார சபையினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற பிரதான நிகழ்வுகளையொட்டி நடைபெற்றவையாகும். அதாவது, தேசிய பசுமை விருதுகள், சிவனொளிபாதமலை மற்றும் தேசிய ஈர நிலத் தின அனுஷ்டிப்பு நிகழ்ச்சி போன்றவை.

### 6.2.4.3 வானொலி கலந்துரையாடல்கள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முக்கியமான நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு 08 கலந்துரையாடல்கள் ஒலிபரப்பப்பட்டன.

### 6.2.4.4 பாட இறுவட்டுத் தயாரிப்பு

2012ஆம் ஆண்டில் சுற்றாடலுடன் தொடர்புடைய பாட்டுப் போட்டி நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டது. இப்போட்டியானது அறிமுறை, பாடல் என இரண்டு பகுதிகளைக் கொண்டது. 2014ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட பாடசாலை மட்ட திறந்த போட்டிக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. போட்டியில் வெற்றிபெற்றவர்களின் ஆக்கங்கள் அடங்கிய இறுவட்டு ஒன்றும் தயாரிக்கப்பட்டது.



**6.2.4.5** 2012ஆம் ஆண்டில் சுற்றாடலுடன் தொடர்புடைய பாடல், சிறுகதை மற்றும் சுவரொட்டிப் போட்டியொன்று நடாத்தப்பட்டது. 2014ஆம் ஆண்டில் போட்டியாளர்களின் படைப்புகள் அடங்கிய சஞ்சிகையும், கவிதை, சிறுகதைத் தொகுப்பும் அத்துடன் சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டது.

பாடல் மற்றும் சிறுகதைப் போட்டியின் வெற்றியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.









**6.2.4.6** 'நில்வனபெத்த' சுற்றாடல் பாடல் தொகுப்பு அடங்கிய ஓர் இறுவட்டு ஆகும். இதில் இலங்கையிலுள்ள பிரபல பாடகர்களால் பாடப்பட்ட 15 பாடல்கள் அடங்குகின்றன. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முயற்சியால் தயாரிக்கப்பட்ட இந்தப் பாடல் தொகுப்பு சுற்றாடலை பேணிக்காப்பதன் முக்கியத்துவம் பற்றிய செய்தியை சமூகத்திற்குக் கொண்டு செல்கிறது.



### 6.2.4.7 நாளாந்தப் பத்திரிகைகளில் வெளிவரும் சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள்.

சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவில் இயங்கி வரும் ஊடகப் பிரிவானது நாளாந்த பத்திரிகைகளில் வெளிவரும் சுற்றாடலுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தொகுத்து உரிய நடவடிக்கை எடுக்கும்பொருட்டு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கும் நிறுவனங்களுக்கும் அவற்றை ஆற்றுப்படுத்துகிறது.

### 6.2.4.8 செய்தி மற்றும் ஊடக அறிவிப்புகள்

ஊடகத்தின் வாயிலாக சமூகத்தின் பரந்த எல்லைக்கு செய்திகளைக் கொண்டு செல்ல முடியும். எனவே, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் செய்திகள் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை மற்றும் இணையத்தளம் ஊடாக வெளியிடப்படுகின்றன.

| செய்தி அறிவிப்புகள் | ஊடகவியலாளர் சந்திப்புகள் | பெயர் பட்டியல் |
|---|---|---|
| 81 | 17 | 67 |

### 6.2.4.9 செய்திச் சேகரிப்புகள்

கருத்திட்டங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான செய்திச் சேகரிப்பில் ஈடுபட்டு வரும் செவிப்புல, கட்புல அலகு அதிகார சபையின் நோக்கங்களை எய்துவதற்குக் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகிறது. 2014ஆம் ஆண்டில் இந்த அலகு 158 தடவைகள் செய்திச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளது.

### 6.2.4.10 சுற்றாடல் விடயம் சார்ந்த நூல் வெளியீடு

2014ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் சுற்றாடல் கவிதைத் தொகுப்பு, சிறுகதைத் தொகுப்பு மற்றும் சுவரொட்டிகள் அடங்கிய நூல்களை அச்சிடும் பணி நிறைவடைந்தது.

### 6.2.4.11 மேம்பாட்டுக் கண்காட்சிகள்

சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு சுற்றாடல் சார்ந்த அறிவினை மேம்படுத்தும் வகையில் மொடியுள்கள், சுவரொட்டிகள் மற்றும் பிரசுரங்கள் போன்றவற்றைத் தயாரித்துள்ளது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட சுவரொட்டிகள், பிரசுரங்கள் மற்றும் வெளியீடுகள் பாடசாலைகளுக்கும் அலுவலகங்களுக்கும் அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டன.

2014ஆம் ஆண்டில் பல்வேறு இடங்களில் நடாத்தப்பட்ட கண்காட்சிகளில் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு தனது உயிரோட்டமான பங்களிப்பை வழங்கியிருந்தது.

| | **மாதம்** | **கண்காட்சி விபரம்** |
|---|---|---|
| 1. | சனவரி | சுஜாதா கல்லூரி ‘விபவி’ கண்காட்சி – 2014 மாத்தறை மாவட்ட அலுவலகம் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டது. |
| 2. | மார்ச்சு | ரத்னாவலி மகளிர் கல்லூரி –அபிஹீத் ராவலி கல்விக் கண்காட்சி |
| 3. | ஏப்பிரல் | - SMIDEX 2014 கண்காட்சி - இலங்கை கைத்தொழில் சபையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. – “வித்யா அபிமன்” (வித்யாகர இசுறு மகா வித்தியாலயம்) கண்காட்சி – தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சபையால் ஏற்பாடு செய்யப்பட்டது. 2014.05.06ஆம் திகதி தொடக்கம் 2014.05.09. |
| 4. | மே | - தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சபை கண்காட்சி - மாகாண அலுவலகங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.<br>- கல்வி அமைச்சு, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கண்காட்சி – 2014.05.02 தொடக்கம் 2014.05.10 வரை |
| 5. | யூன் | உலக சுகாதார தினம் அனுஷ்டிப்பு கொழும்பு அரசினர் கல்லூரி. |
| 6. | யூலை | - விதுனெத்த கல்விக் கண்காட்சி, தெலிஜ்ஜவில மத்திய கல்லூரி கண்காட்சி தென்மாகாண அலுவலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.<br>- லீடிஸ் சர்வதேச பாடசாலை கண்காட்சி 2014.07.02 தொடக்கம் 2014.07.03. |
| 7. | செப்ரெம்பர் | - மே/பிலி. புனித மரியாள் மகாவித்தியாலய சுற்றாடல் முகாமிற்கென ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி.<br>- சத்விரிது கல்விக் கண்காட்சி – 2014 பொல்கொல்ல பிரிவெனா வடமேல் மாகாணம். 2014.09.29ஆம் திகதி நடைபெற்ற இக்கண்காட்சிக்குத் தேவையான காட்சிப் படங்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. |

| | | |
|---|---|---|
| 8. | ஒக்ரோபர் | - சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு 04 கண்காட்சிகளை ஏற்பாடு செய்தது.<br>1.மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி ஒக்ரோபர் 31.<br>2.ஆனந்தா கல்லூரி – ஒக்ரோபர் 03-07.<br>3.ஸ்ரீ ராஹுல தேசிய பாடசாலை – ஒக்ரோபர் 03-07.<br>4.சீதுவ தேவமரியாள் ஆலயம் - ஒக்ரோபர் 10-12.<br>5.ஸ்ரீ ராஹுல தேசிய பாடசாலை, அலவ – ஒக்ரோபர் 03-07 |
| 9. | திசெம்பர் | - ‘‘உலக மண் தின’’க் கண்காட்சி கொழும்பு பொதுநூலகம் - திசெம்பர்.<br>- பலகல ஆலயத்தில் கல்விக் கண்காட்சி கம்பஹா மாவட்ட அலுவலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. டிசம்பர் 6-7.<br>- ‘‘தேசிய நலக்காப்பு’’ தனிக் கண்காட்சி ஹம்பாந்தோட்டை கேட்போர்கூடம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. டிசம்பர் 26.<br>- பத்தரமுல்ல ஸ்ரீ தர்மாராமய பாடசாலை கல்விக் கண்காட்சி டிசம்பர் 25-28. |

**6.2.4.12** பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் - சொபா கள நிலையங்கள்.

சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு இயற்கைச் சூழல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நெறிப்படுத்துகிறது. அதாவது, காலாண்டு வாரியாக சுற்றாடல் சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுத்தல், சொபா கள நிலையங்களில் நூலகங்கள் ஊடான விழிப்புணர்வு மற்றும் பல்வேறு இலக்குக் குழுக்களின் சுற்றாடல் கூருணர்வினை அதிகரித்தல் என்பன.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கீழ் 04 சொபா கள நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவை அந்தந்த மாகாண அலுவலகங்களின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளன.

| | **சொபா கள நிலையங்கள்** | **மாகாண அலுவலகம்** |
|---|---|---|
| 1. | ரூமஸ்ஸல | தென் மாகாண அலுவலகம் |
| 2. | குண்டசாலை | மத்திய மாகாண அலுவலகம் |
| 3. | கேகாலை | சபரகமுவ மாகாண அலுவலகம் |
| 4. | அத்திடிய | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வு பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. |

சொபா கள நிலையங்களினால் சுற்றாடல் சார்ந்த பல்வேறு தலைப்புகளினூடாக விழிப்புணர்வு கருத்தரங்குகள், மரநடுகை நிகழ்சித்திட்டங்கள், கள விஜயங்கள், தலைமைத்துவப் பயிற்சி நிகழ்சித் திட்டங்கள், பதக்கம் வழங்குவதற்கான மதிப்பீடுகள் மற்றும் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டங்கள் சார்ந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், ஆராய்ச்சி வேலைகளுக்கான மேலதிக வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

2012 ஆண்டில் அத்திடிய செபாகெத்த கள நிலையத்தின் செயற்பாடுகள் வருமாறு.

| தொ.இல | புாடசாலை | பங்கேற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பிரிட்டிஷ் கவுன்சில், பம்பலப்பிட்டி | 14 |
| 2. | அத்திடிய கனிஷ்ட மாதிரி பாடசாலை | 48 |
| 3. | அத்திடிய கனிஷ்ட மாதிரி பாடசாலை | 45 |
| 4. | கல்கிசை மகளிர் உயர் பாடசாலை | 21 |
| 5. | மே/பிலி/ஸ்ரீ புன்னியாகாமி வித்தியாலயம் | 15 |
| 6. | மே/பிலி/சயன்ஸ் கல்லூரி | 22 |
| 7. | மே/பிலி/பௌத்த மகளிர் வித்தியாலயம் | 23 |
| 8. | மே/பிலி/லலித் அத்துலத்முதலி வித்தியாலயம் | 44 |
| 9. | கொத்தலாவளபுர மத்திய கல்லூரி, இரத்மலானை | 45 |
| 10. | மே/விஹாரமாதேவி மகளிர் வித்தியாலயம், கிரிபத்கொட | 41 |
| 11. | லும்பிணி வித்தியாலயம், கொழும்பு | 09 |
| 12. | கோத்தமி மகளிர் வித்தியாலயம் | 10 |
| 13. | இசிபத்தன வித்தியாலயம் | 10 |
| 14. | மஹாநாம கல்லூரி | 10 |
| 15. | வனசீவராசிகள் திணைக்களம், வனசீவராசிகள் அமைச்சு | 60 |
| 16. | சுற்றுச்சூழல் சங்கம், அத்திடிய மகளிர் சங்கம் | 35 |

| | | |
|---|---|---|
| 17. | பிலியந்தல மத்திய கல்லூரி | 35 |
| 18. | உயர் மகளிர் கல்லூரி, கல்கிசை | 25 |
| 19. | இளைய விலங்கியலாளர்களின் சங்கம் | 20 |
| 20. | மே/ஸ்ரீ சங்கராஜ மத்திய கல்லூரி | 30 |
| 21. | பிலியந்தல மத்திய கல்லூரி | 40 |

**6.2.4.11** நடப்பு பிரச்சினைகள் பற்றிய கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் - மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கேட்போர் கூடம்.

சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவு நடப்பிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் பாடசாலை மாணவர்களையும் பங்கீடுபாட்டாளர்களையும் விழிப்புணர்வு செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் நடத்தி வருகிறது. பெரும்பாலும் பாடசாலை மாணவர்கள் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சித் திட்டம் 04 விரிவுரைகளையும், ஆவணத் திரைப்படமொன்றையும் அத்துடன் களச் செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாகும். விரிவுரைகளின் தலைப்புகள் சுற்றாடலுடன் சம்பந்தப்பட்டதாகக் காணப்படுவதோடு, பாடசாலை கலைத்திட்டத்திற்கும் பாடங்களுக்கும் பொருத்தமுடையதாகவே காணப்படுகின்றன.

விரிவுரைகள் கீழ்க் காட்டப்பட்டுள்ள தலைப்புகளில் நடைபெறும். அதாவது, இயற்கைவள முகாமைத்துவம், திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம், மரநடுகை, உயிர் பல்வகைமை, ஈரநிலங்கள், சுற்றாடல் நேய விவசாயம், சுற்றாடலின் தோற்றம், கைத்தொழில் கழிவு முகாமைத்துவம், சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டங்கள், கூட்டெரு தயாரித்தல், ஓசோன் படை, வண்ணத்துப்பூச்சிகள், கண்டல், சுற்றாடல் நலன்காப்பு, நீர்நலன் காப்பு, விலங்குகள், பருவநிலை மாற்றம், பறவைகள், சுற்றாடலையும் சுகாதாரத்தையும் பேணல், புவி வெப்பமாதல், விலங்குகளின் உலவுச் சங்கிலி, உணவுச் சங்கலி, உலகளாவிய சுற்றாடல் பிரச்சினைகள், பறவைகளின் அலகு மற்றும் பாதங்களின் ஒத்திசை இயல்புகள், தலங்கம வாவி, ஈரநில முகாமைத்துவம், இலங்கையின் பண்டைய நீர்ப்பாசன முறைவழிகள், திடீர் விபத்துக்கள் மற்றும் சுற்றாடல் சமநிலை.

நடத்தப்படும் விரிவுரையுடன் தொடர்புடைய தகவல் பொதியொன்று வழங்கப்படும்.

2014ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 14 விரிவுரைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **திகதி** | **பாடசாலை** | **பங்கேற்றோர் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. | 2014.02.26 | ஸ்ரீ சங்கமித்தா மகளிர் கல்லூரி ஹெய்யந்துடுவ<br>குருகுல மகாவித்தியாலயம், களனி | 104 |
| 2. | 2014.03.13 | சனாதிபதி கல்லூரி | 101 |

| | திகதி | பாடசாலை | பங்கேற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | | ஸ்ரீ ஜயவர்தனபுர மகா வித்தியாலயம், மாலபே | |
| 3. | 2014.03.20 | ஸ்ரீ ராஹுல மகளிர் வித்தியாலயம், மாலபே | 81 |
| 4. | 2014.03.27 | பியகம மகா வித்தியாலயம் | 104 |
| 5. | 2014.05.22 | புனித யோசப் மகளிர் வித்தியாலயம்<br>அ/வலிசிங்ஹ ஹரிஸ்சந்திர மகாவித்தியாலயம் | 175 |
| 6. | 2014.05.29 | பிலியந்தல மகா வித்தியாலயம்<br>கோத்தமி மகளிர் கல்லூரி | 150 |
| 7. | 2014.06.30 | சமுத்ராதேவி மகளிர் மகா வித்தியாலயம், அம்பத்தலை<br>ஸ்ரீ ராஹுல மகா வித்தியாலயம், மாதிவெல | 52 |
| 8. | 2014.08.06 | மே/கள/குருகுல கல்லூரி, களனி | 28 |
| 9. | 2014.09.18 | கோத்தமி மகளிர் கல்லூரி | 33 |
| 10. | 2014.09.23 | ஆரக்ஷன வித்தியாலயம்<br>புனித ஜோன் பொஸ்கோ மகா வித்தியாலயம் | 109 |
| 11. | 2014.10.03 | சனாதிபதி கல்லூரி, ஸ்ரீ ஜயவர்தனபுர | 46 |
| 12. | 2014.10.16 | கோத்தமி மகளிர் கல்லூரி<br>ஒருவல வித்தியாலயம் | 54 |
| 13. | 2014.10.28 | விஷாக கல்லூரி, கொழும்பு | 61 |
| 14. | 2014.11.26 | ஆனந்தா கல்லரி, கொழும்பு | 139 |

பல்வேறு தலைப்புகளில் நடாத்தப்பட்ட 14 நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றோர் விபரங்கள்

1. பாடசாலைகளின் எண்ணிக்கை - 21
2. பங்கேற்ற மாணவர்களின் எண்ணிக்கை - 1237
3. பங்கேற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை - சுமார் 50

1. நடப்பு பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் - டெங்கு

டெங்கு, சுற்றாடலுடன் தொடர்புடைய சுகாதாரம் சார்ந்த ஒரு பிரச்சினையாகும். சுற்றாடலை முகாமைத்துவம் செய்வதன்மூலம் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தலாம். எனவே, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு பங்கீடுபாட்டாளர்களின் பங்கேற்புடன் பல மாவட்டங்களில் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

அதன்படி, சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு 2014ஆம் ஆண்டில் நடாத்திய டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய விபரங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

| **தொ.இல** | **திகதி** | **நிகழ்ச்சித்திட்டம்** | **பங்கேற்றோர் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. | 2014.08.06 | டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மத்திய சுற்றாடல் அதிகாரசபை | 152 |
| 2. | 2014.09.30 | டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் - தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை | 62 |
| 3. | 2014.10.28 | டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 64 |
| 4. | 2014.11.28 | டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் - பதிவாளர் தலைமையதிபதி திணைக்களம் | |

**கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

பாடசாலை மாணவர்கள், பிற பங்கீடுபாட்டாளர்களுக்கான நடப்பிலுள்ள பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அதிகார சபைக்கு வெளியில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வுப் பிரிவு 2014ஆம் ஆண்டில் கீழ்க்காணும் நிகழ்ச்சித் திட்டங்களை அதிகாரசபைக்கு வெளியே பாடசாலை மாணவர்களையும் பிற பங்கீடுபாட்டு நிறுவனங்களையும் இலக்காக வைத்து நடத்தியது.

1. சிறுவர் கழகங்கள், சிறுவர் நட்புறவு பாடசாலைகள் தொடர்பில் கொழும்பு கல்வி வலய அதிபர்களுக்கான நிகழ்ச்சி கொழும்பு றோயல் கல்லூரியில் நடாத்தப்பட்டது.
2. ராஜகிரிய, லர்னியம் சர்வதேச பாடசாலையில் சுற்றாடல் முன்னோடி விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.
3. “கண்டல் உயிர்ப் பல்வகைமை” பற்றிய உரையாடலொன்று “விதுஷா எவ் எம்”அலைவரிசை ஊடாக ஒலிபரப்பப்பட்டது. – மஹரகம சனாதிபதி வித்தியாலம்.
4. கொழும்பு 08, நோர்த் வெஸ்ட் கல்லூரி மாணவர்களுக்கு உலக புவித் தின தினத்தையொட்டி விரிவுரையொன்று நடாத்தப்பட்டது.

5. மாகொல, ஸ்ரீ சுபூத்தி இடைநிலைப் பாடசலை மாணவர்களுக்கான விரிவுரை.
6. ஹொரண தக்ஷிலா வித்தியாலயத்தில் சர்வோதயம் நிறுவனத்தால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டமும் விரிவுரைகளும்.
7. உலக ஈரநிலத் தினத்தை முன்னிட்டு தலவத்துகொட விதுர வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சி.
8. உலக சிறுவர் தினைத்தையொட்டி கொழும்பு நோர்த் வெஸ்ட் கல்லூரியில் தரம் 8 மாணவர்களுக்கு விரிவுரையொன்று நடாத்தப்பட்டது.
9. தலவத்துகொட, விதுற வித்தியாலய மாணவர்கள் ரூமஸ்ஸல சொபா கள நிலையத்திற்கு மேற்கொண்ட கல்விச் சுற்றுலாவின்போது கண்டல் உயிர் பல்வகைமை தொடர்பில் விரிவுரை நடாத்தப்பட்டது.
10. நுவரெலியா, நானுஓயா, சமர்செட் தோட்ட பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டு மூன்று பாடசாலைகளில் 11 சுற்றாடல் முன்னோடிக் குழுக்கள் அமைக்கப்பட்டன.
11. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பாவனைக்கு பிற்பட்ட பிளாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவ தேசிய கருத்திட்ட உத்தியோகத்தர்களினால் நுவரெலியா, நானுஓயா, சமர்செட் தோட்டத்தில் மர நடுகை மற்றும் கழிவுப்பொருள் முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்று நடத்தப்பட்டது.
12. பெலவத்த “எமது ஊர்” (அபே கம) வளாகத்தில் சுற்றாடல் நேய இல்லத்து செயற்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.

1. சர்வதேச சுற்றாடல் கற்கை நிலையம் - தேசிய கல்வி நிறுவகம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வு பிரிவினால் பல்வேறு இலக்குக் குழுக்களுக்கு வேறுபட்ட தலைப்புகளின்கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது. மேலும் இப்பிரிவின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச சுற்றாடல் கற்கை நிலையம் ஊடாக வேறுபட்ட தலைப்புகளின் கீழ் பல செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

சுற்றாடலின் முக்கியத்துவத்தையும் நிலையான அபிவிருத்திக்கென சுற்றாடலைப் பேணிப் பாதுகாப்பதற்கும் பொது மக்களின் அறிவும், உளப்பாங்கும் செல்வாக்குச் செலுத்துமென்பதை உணர்த்துதல் இதன் நோக்கமாகும். இச்செயலமர்வுகள் வாரத்தில் ஒருநாள் வீதம் 10 நாட்கள் நடாத்தப்பட்டன.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வளவாளர்கள், பிற நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் வளவாளர்களைக் கொண்டு 30 தலைப்புகளின் கீழ் விரிவுரைகள் நடாத்தப்பட்டன. செயலமர்வின் நிறைவில் சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இச்செயலமர்வு 03 கள விஜயங்களை உள்ளடக்கியதாகும். அறிமுறை ஒப்படைகள் ஊடாக அதற்கான தெரிவு இடம்பெறும். கள விஜயத்தின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். 2014ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட செயலமர்வுகள் 02 பற்றிய விபரங்கள் வருமாறு.

| தொ.இல | ஆரம்பத் திகதி | தலைப்பு | பங்கேற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | முதலாவது செயலமர்வு 2014.05.10 | சுற்றாடல் மாசுக்கட்டுப்பாடும் முகாமைத்துவமும் | 29 |
| 2. | இரண்டாவது செயலமர்வு 2014.11.09 | சுற்றாடல் மாசுக்கட்டுப்பாடு | 12 |

2. கலாசார நிகழ்ச்சிகளுக்கு இணைவாக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்.

கலாசார நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் மக்களுக்கு சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் சூழல் நேய கழிவுப்பொருளகற்றல் முறையின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறுவது பற்றி விழிப்புணர்வுகள் செய்யப்பட்டன.

2014 ஆண்டில் தலவில புனித அன்னம்மாள் தேவாலயம், கண்டி எசல பெரகரா மற்றும் கதிர்காம தீர்த்தோற்சவம் ஆகியவற்றுக்கு சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வுப் பிரிவு தன் நிதிப் பங்களிப்பைச் செய்திருந்தது.

3. மாவட்ட மட்டத்தில் சூழலியலாளர்களைக் கௌரவித்தல் (சுவசர தக்சலாவ)

இதன் கீழ் பாடசாலைச் சூழலை ஆரோக்கியமானதாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, பாடசாலை மட்டக் கணிப்பீடுகளின் பின்னர் தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களுக்கு உலக சுற்றாடல் தின அனுஷ்டிப்பு விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

4. உலக சிறுவர் தினம்

உலக சற்றாடல் தினம் என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள்

சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஒத்துழைப்புடன் 2014ஆம் ஆண்டு யூன் மாதம் 05ஆம் திகதி கொழும்பு றோயல் கல்லூரியில் ‘‘சிறு தீவுகளும் பருவநிலை மாற்றமும்’’ எனும் தொனிப்பொருளில் நிகழ்ச்சித் திட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

அதில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1. பழ உற்பத்திக்கான கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.
2. பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டன.
3. பங்கேற்றோருக்கு சூழல்நேய கோப்புகள் வழங்கப்பட்டன.
4. கல்வி அமைச்சினூடாக சுற்றாடல் முன்னோடிகள் ஒன்றிணைக்கப்பட்டனர்.
5. சுற்றாடல் சார்ந்த கண்காட்சிகள் இடம்பெற்றன.

5. வீட்டுத் தோட்டப் போட்டி

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி உலக சுகாதார தின நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டது.

6. சுற்றாடல் சிறுவர் கழகங்கள்

துருலதா சான்றிதழ் விஹங்க சான்றிதழ், சொபா பதக்கம், சிறுவர் கழகங்களுக்கான ஆசிரியர் கைந்நூல் மற்றும் பிரசுரங்கள் அச்சிடப்பட்டன.

தூய்மை, பசுமையான சுற்றாடல் போன்றவற்றை இலக்காகக் கொண்டு தரம் 1-5 வரையான மாணவர்களில் உளப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும் நற்பழக்கங்களை ஊக்குவிப்பதற்குமான பங்களிப்பை சிறுவர் கழகங்கள் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும். இதனூடாக சிறு பராயத்திலேயே சுற்றாடல் நேயம் வளர்க்கப்படுவதோடு, தரம் 06இல் சுற்றாடல் முன்னோடியாக தெரிவாவதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கிறது.

இத்திட்டத்தினூடாக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- சிறுவர் சுற்றாடல் கழகங்களைப் பதிவு செய்தல்.
- பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
- நிகழ்ச்சித் திட்ட மதிப்பீடு.
- ஆசிரியர்கள், பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.
- ஆசிரியர் கைந்நூல் விநியோகம்.

துருலதா சான்றிதழ், விஹங்க சான்றிதழ், சொபா பதக்கம் மற்றும் பிரசுரங்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் பணிகள் நிருவாகப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

2014ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட முன்னேற்றம்

சுற்றாடல் சிறுவர் கழக மூலப்பொருள் உற்பத்தி - 2014

| தொ.இ | மூலப்பொருள் | உற்பத்தி |
|---|---|---|
| 1. | துருலதா சான்றிதழ் | 15000 சிங்களம் |
| 2. | விஹங்க சான்றிதழ் | 14350 சிங்களம் |
| 3. | சொபா சான்றிதழ் | 22000 சிங்களம்<br>200 தமிழ் |
| 4. | சொபா பதக்கம் | 4243 சிங்களம் |

சுற்றாடல் சிறுவர் கழக மூலப்பொருள் விநியோகம் - 2014

| தொ.இ | உருப்படி | தமிழ் | சிங்களம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | துருலதா சான்றிதழ் | 2515 | 2793 | 5308 |
| 2. | விஹங்க சான்றிதழ் | 885 | 1657 | 2542 |
| 3. | சொபா பதக்கம் | 505 | 745 | 1250 |
| 4. | சொபா சான்றிதழ் | 1000 | 433 | 1483 |
| 5. | சுற்றாடல் சிறுவர் கழக ஆசிரியர் கைந்நூல் | 969 | 865 | 1834 |

## 6.3 ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்

சிவனொளிபாத சுற்றாடல் யாத்திரை

கௌரவ சுசில் பிரேம ஜயந்த அவர்களின் வழிகாட்டலின் கீழ் சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்திவலு அமைச்சு மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் இணைந்து 2014 ஏப்பிரல் மாதம் 05 – 06 ஆம் திகதிகளில் 1500 பேரின் பங்கேற்புடன் சிவனொளிபாத சுற்றாடல் யாத்திரையை ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதில் சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வு முக்கிய பங்காற்றியது. 1500 யாத்திரிகர் பங்கேற்று சிறப்பித்தனர்.

1. பிக்குமார்கள், சமயக்குருமார்கள்
2. மத்திய சுற்றாடல் அதிகார சபை உத்தியோகத்தர்கள்
3. சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள்.
4. பல்கலைக்கழக மாணவர்கள்
5. சட்டக்கல்லூரி மாணவர்கள்
6. இலங்கை இராணுவம்
7. இலங்கை பொலிசு
8. செஞ்சிலுவை சங்கம் - இலங்கை
9. புனித ஜோன் அம்புலன்ஸ் படையணி
10. இலங்கை சௌக்கியதான இயக்கம்”
11. சுற்றாடல் முன்னோடிகள், வெளிநாட்டவர்கள்.

இத்திட்டத்தின் மேற்கொள்ளப்பட்ட சில செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

1.மர நடுகை

மரநடுகை பின்வரும் இடங்களில் மேற்கொள்ளப்பட்டது.

- மத்திய சுற்றாடல் அதிகாரசபை வளாகம் - பத்தரமுல்லை
- கோட்டை புகையிரத நிலையம்
- கண்டி புகையிரத நிலையம்
- ஹட்டன் புகையிரத நிலையம்
- டல்ஹவுஸ் ஓய்வு விடுதி - நல்லதண்ணி
- ஶ்ரீபாத மத்திய கல்லூரி – பல்லேபெத்த

2.துப்புரவு செய்தலும் விழிப்புணர்வும்

வீதிகளின் இருமருங்கிலும் வீசப்படுகின்ற பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் கழிவுப்பொருட்களைத் துப்புரவு செய்யுமுகமாக 1000 உறைகள் விநியோகிக்கப்பட்டன.

3.அறிவித்தல் பலகைகள்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அறிவுறுத்தல்களைத் தாங்கிய சிறிய மற்றும் பெரிய அளவிலான 8 அறிவித்தல் பலகைகள் பொருத்தப்பட்டன.

2014ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தில் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

2. கைத்தொழிற்சாலைகளுக்கான கல்வி, விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வு பிரிவினால் தொழிற்சாலை தொழில் கொள்வோர் மற்றும் தொழிலாளர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு பிரபலமான வளவாளர்களின் பங்கேற்புடன் அதிகாரசபைக்கு வெளியில் நடாத்தப்பட்டது. இவ்வாறு 2014ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இரண்டு செயலமர்வுகள் பற்றிய விபரங்கள் வருமாறு.

1. பெற்றோலியக் கூட்டுத்தாபன அலுவலர்களுக்கான செயலமர்வு.
2. பின்லே கூட்டு.
3. சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பாடசாலைகளை ஒன்றிணைத்தல்

மரநடுகை

(அ) கொழும்பு தெற்கு அதிவேக பாதையின் வெளிச்சுற்று மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சுற்றாடல் முன்னோடி மாணவர்களின் பங்கேற்புடன் இயற்கை வள முகாமைத்துவப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 08ஆம் திகதி நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜயவர்தனபுர கல்வி வலயத்தைச் சேர்ந்த 350 மாணவர்கள் 10 பாடசாலைகளைச் சேர்ந்த 10 ஆசிரியர்களும் பங்கேற்றனர்.

(ஆ) சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வு பிரிவின் அனுசரணையுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீட மாணவர்கள் மரநடுகை நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தினர்.

(இ) சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வு பிரிவு அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சுற்றாடல் முன்னோடி மாணவர்களை ஒன்றிணைத்து அதிகார சபையினால் ஏனைய பிரிவுகளுக்கென ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தது.

- தேசிய பசுமை கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டம் - சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவு.
- ''இலத்திரனியல் கழிவுப்பொருள் வாரம்'' – கழிவுப்பொருள் முகாமைத்துவ அலகு.
- உலக ஈரநிலத் தினம் - இயற்கை வள முகாமைத்துவப் பிரிவு.

தேசிய சுற்றாடல் தகவல் நிலையத்தின் ஆண்டறிக்கை – 2014

இலங்கையில் சுற்றாடல் சார்ந்த தகவல் மையமாக தேசிய சுற்றாடல் தகவல் நிலையம் செயற்படுகிறது. அதன் குறிக்கோள்கள் வருமாறு.

- சுற்றாடல் தகவல் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல்.
- சுற்றாடல் தகவல் சேகரிப்பும் பகுத்தாய்வும்
- நூலகங்களுடனான ஒன்றிணைப்பும் தகவல் சேகரிப்பும்

2014ஆம் ஆண்டில் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தின் அடைவுகள்

தரவு சேகரிப்பும் மேம்பாடும்

1. சுற்றாடல் சார்ந்த 317 நூல்களும் 17 சஞ்சிகைகளும் கொள்வனவு செய்யப்பட்டன. கொள்வனவு செய்யப்பட்ட 5540 வகைப்படுத்தப்பட்டன.
2. ஆவணமாக்கல் செயற்பாடு

   2.1. தேசிய சுற்றாடல் தகவல் நிலையம் தரவுத் தளங்களை வைத்திருக்கின்றது. சேகரிக்கப்பட்ட தரவுகளின் எண்ணிக்கை 8138 ஆகும்.

   - மத்திய சுற்றாடல் அதிகார சபையில் தரவுத் தளம், சூசிகை மற்றும் சஞ்சிகை சேகரிப்பிற்கான தளம் ஒன்றை அமைத்தல்.
   - சுற்றாடல் சார்ந்த முதலீடுகளை தரப்படுத்தல் / சுற்றாடல் முதலீட்டு பகுப்பாய்வுக்கான தரவுத் தளமொன்றை அமைத்தல்.
   - வாசிகசாலை நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகை சேகரிப்பு.

   2.2. வாசிகசாலை நூல்களுக்கான குறியீட்டு வாசிப்பு முறை அறிமுகம்

   - குறியீட்டு வாசிப்பு முறை அறிமுகம் செய்யப்பட்டதுடன் 96 பேருக்கான புதிய அங்கத்துவ அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டன.
3. வெளியீடுகள்

   - புதிய ஆக்கங்கள் அடங்கிய 05 மலர்களும் 03 சுற்றாடல் செய்திமடல்களும் வெளியிடப்பட்டன. இவற்றுக்கான தகவல்கள் 2014ஆம் ஆண்டில் மின்னஞ்சல் மூலம் திரட்டப்பட்டன.
4. சுற்றாடல் தகவல் பரிமாற்றம்

- உள்நாட்டு, வெளிநாட்டு வாசிகசாலைகள் மற்றும் நிறுவனங்களுடன் 941 சுற்றாடல் தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.
- சுற்றாடல் தகவல் நிலையத்தின் ஊடாக 2,373 பேர் வாசிகசாலை வசதிகளைப் பெற்றுக்கொண்டனர்.
- பின்வரும் 'சொபா' கள நிலையங்கள் ஊடாக வாசிகசாலை வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

  அத்திடிய – 283

  ரூமஸ்ஸல – 1786

- இரவல் கொடுக்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை 4125. நினைவூட்டல்கள்.

5. வாசிகசாலை வலையமைப்பின் செயற்பாடுகள்
   - HELLIS/ SLLA/ SLSTIC/ AGRINET ஆகிய வலையமைப்புகளினின்று கிடைத்த கட்டளைகள் நிறைவேற்றப்பட்டன.
   - செயலமர்வுகள், விரிவுரைகள் 13.
6. ஏனைய செயற்பாடுகள்
   - 2014/2015 ஆண்டுக்கான 'பிரிட்டிஷ் கவுன்சில' நிறுவனத்தின் அங்கத்துவம் புதுப்பிக்கப்பட்டது. அத்துடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணியணியினருக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.
   - 2014ஆம் ஆண்டின் உலக சுற்றாடல் தின நடவடிக்கைகள்

- மண்டப ஒழுங்கு, விருந்தினர்களை அழைத்துச் செல்லுதல்.
  - சிவனொளிபாத யாத்திரை நிகழ்ச்சிக்கான பிரசுர தயாரிப்பு (சுமார் 10,000)
- சிவனொளிபாத யாத்திரை நிகழ்ச்சித் திட்டத்தை ஒன்றிணைத்து செயற்படுத்துதல்.
  - இலத்திரனியல் கழிவுப் பொருள் நிகழ்ச்சித் திட்ட மண்ட ஒழுங்கு, அலங்கரிப்பு
- மண்டப அலங்காரம்.
  - பிரித் பாராயணத்திற்கான அழைப்பிதழ்.
  - மாதாந்த அறிக்கை, ஆண்டறிக்கைத் தயாரிப்பு.
  - 180 புனைகதைகள் புத்தக றாக்கையில் ஒழுங்குபடுத்தி வைத்தல்.
  - வாசிகசாலை தொகுப்புக்கான 2,072 பிரசுரங்கள் சேகரிக்கப்பட்டன.
  - I.C.E. மாணவர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு.
  - அத்திடிய சொபா வள நிலைய பொருட் சுற்றாய்வு
  - சமுர்த்தி உத்தியோகத்தர்களை விழிப்புணர்வு செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான 650 கோப்புகள் தயாரிக்கப்பட்டன.

- சட்டப் பிரிவுக்கு 89 நூல்கள் கையளிக்கப்பட்டன.
- சுற்றாடல் அமைச்சுக்காக 30 நூல்களும் 14 பிரசுரங்களும் தயாரிக்கப்பட்டன.
- தேசிய நூலக, ஆவணவாக்கல் சபைக்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வெளியீடுகள் வழங்கி வைக்கப்பட்டன.
- வாசிக சாலை நூல்கள் பற்றி ஒப்பந்தம்
- பயன்படுத்தப்பட்ட 1,727 வெளியீடுகள் அதிகாரசபை பணியாளர்களிடையே பகிரப்பட்டது.
- 903 வெளியீடுகள் தொடங்கி வைக்கப்பட்டன.

7. வருமானம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வெளியீடுகள் விற்பனை ரூ. 47,500.00

- 1122 (நூல்கள், சுவரொட்டிகள், பிரசுரங்கள், இறுவட்டுகள்)

ஒளிப்படப் பிரதியெடுத்தல் கட்டணம் ரூ. 49305.00

- 8961 பக்கங்கள்

## 7.0. திட்டமிடல், கண்காணிப்பு பிரிவு

தேசிய சுற்றாடல் சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தத் தேவையான பின்புலத்தை உருவாக்குவதற்காக அந்தந்தப் பிரிவுகள், அலகுகள் மற்றும் பிரதேச அலுவலகங்களின் தேவைப்பாட்டுக்கு அமையத் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தும் பொறுப்பினை திட்டமிடல், கண்காணிப்புப் பிரிவு கொண்டுள்ளது.

சுற்றாடல் கொள்கைகளுக்கமைய முன்னுரிமைகளை இனங்காணல், திறைசேரியினால் அளிக்கப்படுகின்ற நிதியை இனங்கண்டு முன்னுரிமைகளுக்குப் பயன்படுத்துதல், சுற்றாடல் துறையில் தனியாருக்கான முன்னுரிமைகளை இனங்காணல் மற்றும் வெளிநாட்டு உதவிகளை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல் என்பன திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவின் பணிகளாகும்.

இவ்வாறு முன்னுரிமைப்படுத்தப்படுகின்ற விடயப் பரப்புகளுக்கெனத் தயாரிக்கப்படும் செயற்பாட்டுத் திட்டங்கள் மத்திய அரசாங்கத்தின் சார்பில் தலைமை அலுவலகம் ஊடாகவும் பிரதேச ரீதியில் பிரதேச அலுவலகங்கள் ஊடாகவும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

2014-2018 காலப்பகுதிக்கான அதிகாரசபையின் கூட்டிணைத் திட்டத்தின்படி செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்து அவற்றினை ஒன்றிணைக்கத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும். மேலும், அந்தந்த நிறுவனங்களின் முன்னேற்ற அறிக்கைகளை உரிய காலத்தில் தயாரித்தளிக்கும் பணியையும் இப்பிரிவு மேற்கொள்கிறது.

அதிகாரசபையின் செயற்பாடுகளை முறையாக ஒன்றிணைத்தல், மேற்பார்வை செய்தல், விடயம் சார்ந்தும் பிரதேச வாரியாகவும் காணப்படுகின்ற பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பிரதேச அலுவலகங்களுடன் மாதாந்தக் கூட்டங்களை நடாத்துதல் அத்துடன் செயற்பாட்டு சட்டகத்தைத் தயாரித்தல் போன்றவற்றையும் மேற்கொள்கிறது.

## 7.1. மாகாண அலுவலகங்களுடனான ஒன்றிணைப்பு

அதிகார சபையின் பணிகளைப் பன்முகப்படுத்தப்பட்டதாக மேற்கொள்வதற்கென மாகாண அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவானது மாவட்ட அலுவலகங்களுக்குத் தேவையான நிருவாக ஒன்றிணைப்பு, செயற்பாட்டுத் திட்டங்கள், சுற்றாடலுடன் தொடர்புடைய கருத்திட்டங்களை வகுத்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்கிறது.

2014ஆம் ஆண்டில் மாவட்ட ரீதியாக தொழில் முயற்சியாளர்களுக்கான சேவைகளை மேம்படுத்தும் வகையில் 15 பிரதேச அலுவலகங்கள் கீழ்க்காணும் மாவட்டங்களில் அமைக்கப்பட்டன. அவையாவன: கம்பஹா, மாத்தறை, அம்பாந்தோட்டை, நுவரெலியா, மாத்தளை, மொனராகலை (புத்தல), இரத்தினபுரி, பொலனறுவை, மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு, மன்னார்.

## 7.2. பாராளுமன்ற ஆலோசனைக் குழு

பாராளுமன்ற உறுப்பினர்களால் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுற்றாடலுடன் தொடர்புடையதாக கொண்டு வருகின்ற முறைப்பாடுகளை ஆராயும் பணியையும் திட்டமிடல், கண்காணிப்பு பிரிவு நிறைவேற்றி வருகிறது. இதன்போது தயாரிக்கப்படுகின்ற அறிக்கைகள் சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்திவலு அமைச்சினூடாக பாராளுமன்ற ஆலோசனைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி வலு அமைச்சரின் தலைமையில் நடைபெறும் ஆலோசனைக் குழுவில்

பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அதிலுள்ள விடயங்கள் ஆராயப்படும். 2013ஆம் ஆண்டில் இவ்வாறு இடம்பெற்ற குழுக் கலந்துரையாடல்களின் எண்ணிக்கை 05 ஆகும்.

## 7.3. "ஆ" வகுதியில் அடங்கும் கைத்தொழில்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை விநியோகிக்கும் தரவுப் பட்டியலை இற்றைப்படுத்தி பேணுதல்.

தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு அமைவாக வெளியிடப்பட்ட 1533/16 ஆம் இலக்க மற்றும் 25/01/2008ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின்படி தொழிற்சாலை உரிமையாளர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெறவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதன்படி அதிகூடிய மாசுக் காரணிகளை வெளியிடும் தொழிற்சாலைகள் வகுதி 'அ' எனவும், நடுத்தரளவு மாசுக் காரணிகளை வெளியிடும் தொழிற்சாலைகள் வகுதி 'ஆ' எனவும் சிறியளவு மாசுக் காரணிகளை வெளியிடும் தொழிற்சாலைகள் வகுதி 'இ' எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு 'அ' வகுதி கைத்தொழிற்சாலைகளுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்குதல் பற்றிய தரவுத் தொகுதியைப் பேணி வருகிறது. 'ஆ' வகுதிக்கும் இவ்வாறான தரவுத் தொகுதியொன்றைப் பேண வேண்டிய அவசியம் உள்ளதால், அதிகாரசபையின் பிரதேச அலுவலகங்களினால் 'ஆ' வகுதியின் கீழ்வரும் தொழிற்சாலைகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் விநியோகிக்கப்படுகின்றன. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு இத்தரவுத் தொகுதியை மாதாந்தம் இற்றைப்படுத்தி பேணி வருகிறது. மேலும், புள்ளிவிபர அறிக்கைகள், அரையாண்டு மற்றும் ஆண்டறிக்கைகளைத் தயாரிக்கும் பணியையும் இப்பிரிவு மேற்கொள்கிறது. இவ்வாறு தரவுகளைத் திரட்டி பேணிவருதல் எதிர்காலத்தில் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கம் செயற்பாட்டுக்கு மிகமிக முக்கியமானது. 2014ஆம் ஆண்டளவில் 'ஆ' வகுதிக்கான 7,331 சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி 2014ஆம் ஆண்டில வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை 684 ஆகும்.

## 7.4. தீர்மானம் மேற்கொள்ளும் குழு

சுற்றாடல் சட்டத்தின்படி மத்திய சுற்றாடல் அதிகாரசபை கைத்தொழிலாளர்களுக்கான சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA) மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. இவைதவிர, சுற்றாடல் தாக்க மதிப்பீடு, சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற வேண்டிய கட்டாயம் இல்லாத கைத்தொழில்களை நிறுவுதல் மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பான கருத்திட்டங்களின் அமைவிடத்தைத் தீர்மானித்தல் செயற்பாடும் முன்னெடுக்கப்படுகிறது.

சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (EPL) மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA) அவசியான 'அ' வகுதி கைத்தொழில்கள் தவிர்ந்த ஏனைய மேலே சொல்லப்பட்ட பணிகளை மாவட்ட அலுவலகங்கள் நிறைவேற்றி வருகின்றன.

சுற்றாடல் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின்படி இச்செயற்பாட்டின்போது தலைமை அலுவலகமும் மாவட்ட பிரதேச அலுவலகங்களும் ஒரே படிவத்தைப் பயன்படுத்துவதும், அவற்றை ஆராய்வதற்கு ஒரேயளவான நேரத்தை ஒதுக்குவதும், அதற்குரிய கட்டணங்கள் ஒரே அளவாக இருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

இதுபோன்ற நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக அமைக்கப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளும் குழுவானது அதிகாரசபையின் தவிசாளர், பணிப்பாளர் தலைமையதிபதி, சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பிரிவு (EPL), சுற்றாடல் முகாமைத்துவ மதிப்பீட்டு அலகின் பிரதி தலைமையதிபதிகள், சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பிரிவு (EPC). சட்டப் பிரிவு மற்றும் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவப்

பிரிவின் பணிப்பாளர்கள் மற்றும் ஊவா, வட மத்திய மற்றும் வட மாகாண நிலையப் பொறுப்பதிகாரிகளைக் கொண்டுள்ளது.

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள், தொடக்கநிலை சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை, ''அ'' வகுதியின் கீழ் வருகின்ற கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள், 'அ' வகுதி வியாபாரங்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள், BOI தொழிற்சாலைகளுக்கான புதிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள், புதிய கைத்தொழில்களை நிறுவுதல் பற்றிய உடன்பாடுகள் என்பன இறுதி அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு முன்னர் இரு வாரங்களுக்கொரு முறை கூடும் இக்குழுவில் ஆய்வு செய்யப்படும்.

கடந்த ஆண்டில் இவ்வாறான 11 குழுக்கூட்டங்களை வெற்றிகரமாக நடத்தத் தேவையான ஒன்றிணைப் பணிகளை திட்டமிடல், கண்காணிப்புப் பிரிவு வெற்றிகரமாக பூர்த்தி செய்தது.

## 7.5. கூட்டங்கள்

திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக் குழு பல்வேறு கூட்டங்களை ஒன்றிணைக்கும் பணிகளைச் செய்து வருகிறது.

## 7.6. தேசத்திற்க மகுடம்

2014ஆம் ஆண்டு குருநாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டியில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சி ஒன்றிணைப்புப் பணிகளில் திட்டமிடல், கண்காணிப்புப் பிரிவின் பங்களிப்புக் கணிசமானதாக இருந்தது.

## 7.7.கருத்திட்ட ஒன்றிணைப்பு, கண்காணிப்பு, மதிப்பீடு

திறைசேரியின் நிதியேற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு உதவிகளை உரிய முறையில் பயன்படுத்தல் மற்றும் அதன் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக இப்பிரிவு கீழ்வரும் கருத்திட்டங்களை / நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிட்டு ஒன்றிணைக்கின்றது.

### 7.7.1. திறைசேரி நிதியைக்கொண்டு நடைமுறைப்படுத்தும் கருத்திட்டங்கள்

- பிலிசறு கருத்திட்டம் (ரூ. 459 மில்லியன்)
- பாவனைக்குப் பிற்பட்ட பிளாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவத் திட்டம் (ரூ. 45 மில்லியன்)
- அதிகாரசபையின் ஆய்வுகூட நவீனமயப்படுத்தல் கருத்திட்டம் (ரூ. 50 மில்லியன்)
- சுற்றாடல் முன்னோடிக் கருத்திட்டம் (ரூ. 8 மில்லியன்)
- சுற்றாடல் பாதுகாப்புப் பேணுகை கருத்திட்டம் (ரூ. 5 மில்லியன்)

### 7.7.2. வெளிநாட்டு நிதியுதவிக் கருத்திட்டங்கள்

- KOICA (கொரிய சர்வதேச ஒன்றிணைப்பு நிறுவனம்)
- இலங்கையில் திண்மக் கழிவுப் பொருளகற்றல் வசதிகளை ஏற்படுத்தும் கருத்திட்டம் (கொரிய பொருளாதார ஒத்துழைப்பு நிதியம்)

கொரிய சர்வதேச ஒன்றிணைப்பு நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் KOICA கருத்திட்டம் 100 மில்லியன் ரூபா (ரூ. 60 மில்லியன் வெளிநாட்டு உதவி, ரூ. 20 மில்லியன் உள்நாட்டு நிதி) நிதியிலும், பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் EDCF கருத்திட்டம் 143.5 மில்லியன் ரூபா (வெளிநாட்டு உதவி 125 மில்லியன் ரூபா, உள்நாட்டு நிதி 18.5 மில்லியன் ரூபா) நிதியினைக் கொண்டும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

# 8.0.முறைப்பாட்டு அலகு

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் கருமம், தவறவிடப்பட்ட ஏதேனும் கருமம் அல்லது நிறைவேற்றப்பட்டதில் ஏற்பட்ட குறைபாடு தொடர்பில் ஒரு நபர் அல்லது பலரினால் சுட்டிக்காட்டப்படுவதே முறைப்பாடு எனலாம்.

முறைப்பாடுகளைச் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் அதற்கான காத்திரத்தை வெளிப்படுத்துதல் அதிகார சபையின் அசைக்க முடியாத பிம்பமாகத் திகழ்கின்றது. மேலும், இவ்வாறு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளை வழங்குவதும் இந்த அலகின் எதிர்பார்ப்பாகும்.

2007ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட முறைப்பாட்டு அலகிற்கு பல்வேறு தரப்பிலிருந்தும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன. முறைப்பாடுகளுக்கு சரியான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காக இந்த அலகு மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களுடன் சிறந்த ஒன்றிணைப்பை பேணுகிறது. முறைப்பாடுகள் கிடைக்கும் மூலங்கள் வருமாறு.

- ❖ சனாதிபதி செயலகம்.
- ❖ விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்.
- ❖ துரித அழைப்பு மூலமாகக் கிடைக்கும் முறைப்பாடுகள்.
- ❖ தவிசாளர் / பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து நேரடியாகக் கிடைக்கும் முறைப்பாடுகள்.
- ❖ மின்னஞ்சல் முறைப்பாடுகள்.
- ❖ மக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள்.
- ❖ ஏனைய அரச நிறுவனங்கள்.
- ❖ மாகாண / மாவட்ட அலுவலகங்கள்.

சுற்றாடல் அதிகாரசைபயின் விடயப் பரப்பில் அடங்காத முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படும். (உதா: புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம், தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுதுதல் ஆணைக்குழு)

2014ஆம் ஆண்டில் கிடைத்த சகல முறைப்பாடுகளும் தரவேற்றம் செய்யப்பட்டு உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன. இவ்வாறு தரவேற்றம் செய்யப்பட்ட மென்பொருள்களை காலத்திருத்தம் செய்ய வேண்டிய பொறுப்பு அந்தந்த அலுவலகங்களைச் சாரும். முறைப்பாட்டு அலகினால் காலத்திருத்தம் செய்யப்பட்ட விடயங்கள் மீளாய்வு செய்யப்படும்.

2014ஆம் ஆண்டில் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,463 ஆகும். இவ்வாறு கிடைத்த முறைப்பாடுகள் உரிய நடவடிக்கைக்கென சம்பந்தப்பட்ட மாகாண / மாவட்ட அலுவலகங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களை கீழுள்ள அட்டவணைகளில் காண்க.

| | அலகு / அலுவலகம் | | கிடைத்த முறைப்பாடுகள் | | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் | |
|---|---|---|---|---|---|---|
| | | | No. | % | No. | % |
| 1. | மேல் மாகாணம் | கொழும்பு மாவட்டம் | 415 | 16.0 | 56 | 13.49 |
| | | கம்பஹா மாவட்டம் | 288 | 11.8 | 89 | 30.90 |
| | | களுத்துறை மாவட்டம் | 334 | 13.7 | 43 | 12.84 |
| 2. | தென்மாகாணம் | காலி மாவட்டம் | 219 | 9.0 | 24 | 10.96 |
| | | மாத்தறை மாவட்டம் | 84 | 3.4 | 16 | 19.05 |
| | | அம்பாந்தோட்டை மாவட்டம் | 68 | 2.8 | 16 | 23.53 |
| 3. | ஊவா மாகாணம் | | 141 | 5.2 | 68 | 48.23 |
| 4. | வடமேல் மாகாணம் | | 138 | 5.6 | 42 | 30.43 |
| 5. | சப்பிரகமுவ மாகாணம் | | 112 | 4.6 | 03 | 2.68 |
| 6. | வடமத்திய மாகாணம் | | 111 | 4.7 | 75 | 67.57 |
| 7. | மத்திய மாகாணம் | | 103 | 4.8 | 41 | 39.80 |
| 8. | கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு மாவட்டம் | 07 | 0.3 | 03 | 42.86 |
| | | அம்பாறை மாவட்டம் | 19 | 0.8 | 14 | 73.68 |
| | | திருகோணமலை மாவட்டம் | 15 | 0.6 | 11 | 73.33 |
| 9. | வடமாகாணம் | | 36 | 1.5 | 04 | 11.11 |
| 10. | சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு | | 65 | 2.7 | 27 | 41.54 |
| 11. | பொலிஸ் அலகு | | 19 | 0.8 | 19 | 100.00 |
| 12. | சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகு | | 17 | 0.7 | 08 | 47.06 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | கழிவுப்பொருள் முகாமைத்துவ அலகு | 12 | 0.5 | 02 | 16.66 |
| 14. | இயற்கைவள முகாமைத்துவ அலகு | 12 | 0.5 | 02 | 16.66 |
| 15. | பிற நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகள் | 248 | 10.2 | *அ.நொ. | *அ.நொ. |
| | மொத்தம் | 2,463 | 100.0 | 563 | **25.42 |

***:** ஏற்புடையதல்ல ****:** வீதத்தைக் கணிக்கும்போது பிற நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்குக் கிடைத்த முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விதம் : 2014




***கவனத்திற்கு*** - **1.**முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை**: 2463**

**2.** வீதப் பெறுமதி கிட்டிய கூட்டுத்தொகைக்குக் கணிக்கப்பட்டுள்ளது.

**3.** மேற்படி வரைபானது 2015.01.03ஆம் திகதியில் உள்ளவாறு மென்பொருள் இற்றைப்படுததப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

*சூசிகை:*

| | | | |
|---|---|---|---|
| WP | : மேல் மாகாணம் | EPC | : சுற்றாடல் மாசக் கட்டுப்பாட்டு அலகு |
| SUP | : தென் மாகாணம் | WM | : கழிவுப்பொருள் முகாமைத்துவ அலகு |
| NCP | : வடமத்திய மாகாணம் | NRM | :இயற்கை வள முகாமைத்துவ அலகு |
| NW | : வடமேல் மாகாணம் | EIA | : சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகு |
| SAP | : சப்பிரகமுவ மாகாணம் | PU | : பொலிஸ் அலகு |
| EP | : கிழக்கு மாகாணம் | other | : வேறு நிறுவனங்கள் |
| NP | : வட மாகாணம் | CP | : மத்திய மாகாணம் |

மத்திய சுற்றாடல் அதிகார சபை முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றியுள்ள முன்னேற்றம் கிடைத்த முறைப்பாடுகள், தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் முறைப்பாடுகள்.




Received
In progress
Resolved
1200
1000
800
600
400
200
0
1037
849
188
No of complaints -Western Province


Received
In progress
Resolved
400
300
200
100
0
371
315
56
No of complaints -Southern Province


Received
In progress
Resolved
160
140
120
100
80
60
40
20
0
141
73
68
No of complaints -Uva Province


Received
In progress
Resolved
160
140
120
100
80
60
40
20
0
138
96
42
No of complaints -North Western Province


Received
In progress
Resolved
120
100
80
60
40
20
0
112
109
3
No of complaints -Sabaragamuwa Province


Received
In progress
Resolved
120
100
80
60
40
20
0
111
36
75
No of complaints -North Central Province


Received
In progress
Resolved
120
100
80
60
40
20
0
103
62
41
No of complaints - Central Province


Received
In progress
Resolved
50
40
30
20
10
0
41
13
28
No of complaints -Eastern Province


Received
In progress
Resolved
40
35
30
25
20
15
10
5
0
36
32
4
No of complaints -Nothern Province


Received
In progress
Resolved
70
60
50
40
30
20
10
0
65
38
27
No of complaints -Environmental Pollution Control unit


Received
In progress
Resolved
20
15
10
5
0
19
0
19
No of complaints -Police Unit


Received
In progress
Resolved
20
15
10
5
0
17
9
8
No of complaints -Environmental Impact Assessment unit


Received
In progress
Resolved
14
12
10
8
6
4
2
0
12
8
2
No of complaints -Waste Management unit


Received
In progress
Resolved
14
12
10
8
6
4
2
0
12
8
2
No of complaints -Natural Resources Mgt. unit

# 9.0. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பன்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம்

## 9.1 மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரங்களை மாகாண அலுவலகங்களுக்குப் பன்முகப்படுத்தல்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமை அலுவலகம் தேசிய மட்டத்தில் தரநியமங்களை வெளியிடுதல், பிரமாணங்களை வெளியிடுதல் மற்றும் தேவையான வழிகாட்டல்களை தயாரித்து வருவதுடன், பிரதேச ரீதியாக அதிகார சபையின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துமுகமாக 2002ஆம் ஆண்டில் மத்திய மற்றும் தென் மாகாணத்தில் இரண்டு பிரதேச அலுவலகங்கள் நிறுவப்பட்டன.

2002ஆம் ஆண்டில் பிரதேச அலுவலகங்களை நிறுவி பெற்ற அனுபவத்தின் பயனாக 2007ஆம் ஆண்டளவில் அனைத்து மாகாணங்ளையும் உள்ளடக்கியதாக மாகாண அலுவலகங்கள் நிறுவப்பட்டன. இதனூடாக சுற்றாடல் முகாமைத்துவ, பாதுகாப்பு தொடர்பான வேலைத் திட்டங்கள் பிரதேச மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்றன.

அதன்படி, தேசிய சுற்றாடல் சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களில் ஒரு பகுதியை அதிகார சபை சார்பாக நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பிரதேச அலுவலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான அதிகாரப் பன்முகப்படுத்தல்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரங்களை பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை தேசிய சுற்றாடல் சட்டம் கொண்டுள்ளது.

அதன்படி, அச்சட்டத்தின் 26ஆம் பிரிவுக்கமைய மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரங்கள், கருமம் அல்லது பணியினை அரசாங்கத்தின் திணைக்களம், கூட்டுத்தாபனம், நியதிச் சட்ட நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் அல்லது அரச அலுவலர் ஒருவருக்கு வழங்க முடியும். 2000ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க மற்றும் 1988ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க திருத்தச் சட்டங்களின்படி 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் அதிகாரங்களை பன்முகப்படுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

1993ஆம் ஆண்டில் அதிகாரசபையின் தத்துவங்களில் சில உள்ளூராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. 1994.01.01ஆம் திகதியிலிருந்து வலுவுக்கு வரும்விதத்தில் சிறியளவிலான கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை விநியோகிக்கும் அதிகாரம் உட்பட மேலும் 12 விடயங்களுக்கான அதிகாரங்கள் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

1993ஆம் ஆண்டில் சிறியளவிலான கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்டிருந்த அதிகாரங்கள் மீள் பெறப்பட்டு 2000 ஆண்டின் 53ஆம் இலககத் திருத்தச் சட்டத்திற்கமைவாக வெளியிடப்பட்ட 1159/22ஆம் இலக்க, வர்த்தமானப் பத்திரிகையின்படி குறித்த வர்த்தமானப் பத்திரிகையின் “ஆ” வகுதியில் காட்டப்பட்டுள்ள 45 கைத்தொழில்கள் / கருமங்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கும் அதிகாரம் உள்ளூராட்சி பாதுகாப்பு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

2008 சனவரி 25ஆம் திகதிய மற்றும் 1533/16 இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் உரிமங்கள் பெற்றுக்கொள்ள அவசியமான தர நியமங்கள் ‘அ’, ‘ஆ’, ‘இ’ என மூன்று வகுதிகளாகப்

பிரிக்கப்பட்டு மீண்டும் வெளியிடப்பட்டன. அதன் விளைவாக 2008 பெப்ரவரி 14ஆம் திகதி உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை அதிகார சபை மீளப் பெற்றுக்கொண்டதோடு, 2008.03.01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வர்த்தமானப் பத்திரிகையின் ''ஆ'' வகுதிக்குரிய நடவடிக்கைகளுக்கான உரிமங்களை விநியோகிக்கும் அதிகாரம் மீண்டும் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## 9.3. மாவட்ட சுற்றாடல் சட்டங்களை வலுப்படுத்தும் குழு (ஞுநுடுநுஊ)

1995ஆம் ஆண்டில் மாவட்ட சுற்றாடல் சட்டங்களை வலுப்படுத்தும் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டது. மாவட்டத்தின் செயலாளர் இக்குழுவின் தலைவராக விளங்குவார்.

குழுவின் பிற அங்கத்தவர்களது விபரங்கள் வருமாறு:

- மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்
- சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்
- மாவட்ட வன உத்தியோகத்தர்
- உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
- வனசீவராசிகள் திணைக்களத்தின் மாவட்ட பிரதானிகள்
- பிரதேச செயலாளர்கள்
- மாவட்டத்தின் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள்
- மாவட்டத்தின் அரசு சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள்

பிரதேச சுற்றாடல் அலுவலர் இக்குழுவின் செயலாளராக பணியாற்றுவார். தேவை கருதி குழுவுக்கான பிற அங்கத்தவர்களை நியமித்துக்கொள்ள முடியும்.

சுற்றாடல் சார்ந்ததாக பொது மக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு பொலிசார், சுகாதார சேவைகள் திணைக்களம், வனசீவராசிகள் திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாக தீர்வுகளை வழங்குதல் இக்குழுவின் செயற்பணியாகும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட செயலாளரின் தலைமைமையில் ஒவ்வொரு மாதமும் கூட்டங்கள் நடைபெறும்.

# 10.0. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதேசமயமாக்கல் வேலத்திட்டம்.

## 10.1. அறிமுகம்

சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை விநியோகிக்கும் செயற்பாடு சுற்றாடல் பாதுகாப்பின் பொருட்டு, மாகாண அலுவலர்களுக்கு வளங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் மிகமுக்கியமான சட்டச் செயற்பாடாக உள்ளது. இதனை நடைமுறைப்படுத்தும்போது தேசிய அளவில் விதிக்கப்பட்டுள்ள கழிவுப் பொருள் வெளியேற்றம் தொடர்பான தரநியமங்கள், வாயு வெளியேற்றம் மற்றும் ஒலி மட்டங்களுக்கு ஏற்ப செற்படுவதால் சுற்றாடலின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படுகின்றது.

நாட்டின் தற்போதைய நிலையைக் கவனத்தில்கொள்ளும் போது சுற்றாடல் பாதுகாப்பு உரிமச் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படுவற்கு முன் அதாவது இற்றைக்கு இரண்டு அல்லது மூன்று தசாப்பங்களுக்கு முன்னர் நிறுவப்பட்ட கைத்தொழிற்சாலைகளினால் பாரியளவில் சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

அதாவது கைத்தொழில் கழிவுகள் (சுத்திகரிக்கப்பட்ட அல்லது சுத்திகரிக்கப்படாத) அருகில் காணப்படுகின்ற நீர்நிலைகளான ஆறுகள், குளங்கள் மற்றும் கடல் ஆகியவற்றுக்கு விடுவிக்கப்படுவது சாதாரண நிகழ்வாக உள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொதுமக்களுக்கு வழங்கும் நீரை ஆறுகளிலிருந்தே பெற்றுக்கொள்கிறது. எனவே, கழிவுப்பொருள்கள், நீர்நிலைகளுக்கு விடுவிக்கப்படுவது பாரிய பிரச்சினையாக உள்ளது. இவ்வாறு நீர் நிலைகள் பாதிக்கப்படுவதால் மேற்பரப்பிலுள்ள நீரும் நிலத்தடி நீரும் மாசடைகிறது. கழிவுப்பொருட்களை வெளியேற்றுதல் தொடர்பாக தற்போது காணப்படுகின்ற நியமங்களினால் நிலத்தடி நீர்ப் பாதுகாப்புக் குறித்த பரப்பு உள்வாங்கப்படவில்லை.

சட்ட ரீதியான கடப்பாடுடையதும் வெளியிடப்பட்டுள்ளதுமான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் அடங்கியுள்ளன. எனவே, இதிலுள்ள நிபந்தனைகளை மீறுதல் தேசிய சுற்றாடல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளில் அதிகமானவை மேல் மாகாணத்திலேயே அமைந்துள்ளன. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தரவுகளின்படி பாரிய மற்றும் நடுத்தர அளவான மாசுக் காரணிகளைக் கொண்ட தொழிற்சாலைகளில் 39% மேல் மாகாணத்திலேயே அமைந்துள்ளன. மத்திய மாகாணத்தில் இப்பெறுமானம் 10% ஆகவும், தென் மாகாணத்தில் 13% ஆகவும் காணப்படுகின்றது. எஞ்சிய 38% கைத்தொழில்கள் சப்ரகமுவா, கிழக்கு, வடமத்திய, வட மற்றும் வடமேல் மாகாணங்களில் அமைந்துள்ளன. இந்தக் கணிப்பாய்வு அந்தந்த மாகாணத்தின் சுற்றாடல் அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆராய்ச்சி மற்றும் விசேட கருத்திட்ட பிரிவு அதற்கான வழிகாட்டலை வழங்கியுள்ளது.

குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களைப் புதுப்பித்தல் வேண்டும். மேலும், எவரேனுமொரு கைத்தொழிலாளர் உரிமத்தின் நிபந்தனைகளுக்கு மாறாக செயற்பட்டுள்ளதாக நிரூபிக்கப்படின் அதிகார சபைக்கு குறித்த உரிமத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் உண்டு. அதன் பின்னர் அதற்கான மேன்முறையீடு ஒன்றைச் செய்வதாயின் அதனை சுற்றாடல் அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். செயலாளரின் முடிவு இறுதி முடிவாகும்.

## 10.2சுற்றாடல் பாதுகாப்பு உரிமச் செயற்பாடு

சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சுற்றாடல் பாதுகாப்பு உரிமச் செயற்பாட்டின் முன்னேற்றம் வருமாறு:-

2014ஆம் ஆண்டில் 'அ' வகுதியின் கீழ் 3,175 சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களும் 'ஆ' வகுதியின் கீழ் 2,615 சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களும் புதிதாக விநியோகிக்கப்பட்டுள்ளன. 'அ' வகுதியின் கீழ் 3,061 உரிமங்களும் 'ஆ' வகுதியின் கீழ் 04 உரிமங்களும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2012 | | 2013 | | 2014 | | 2012 | | 2013 | | 2014 | |
| | | "A ” | "B" | "A” | "B" | "A” | "B" | "A” | "B" | "A” | "B " | "A” | "B" |
| மேல் | கொழும்பு | 113 | 110 | 123 | 91 | 525 | 341 | 519 | 114 | 530 | 11 6 | 811 | 228 |
| | கம்பஹா | 118 | 122 | 88 | 82 | 305 | 315 | 189 | 59 | 208 | 94 | 554 | 186 |
| | களுத்துறை | 59 | 48 | 42 | 43 | 168 | 112 | 200 | 49 | 230 | 57 | 280 | 99 |
| மத்திய | கண்டி | 72 | 54 | 86 | 60 | 195 | 146 | 70 | 17 | 132 | 38 | 260 | 63 |
| | மாத்தளை | 29 | 31 | 25 | 41 | 118 | 29 | 50 | 4 | 102 | 29 | 127 | 37 |
| | நுவரெலியா | 8 | 8 | 12 | 0 | 25 | 38 | 13 | 2 | 12 | 2 | 54 | 2 |
| தென் | காலி | 41 | 81 | 42 | 55 | 125 | 135 | 100 | 63 | 114 | 73 | 202 | 117 |
| | மாத்தறை | 33 | 81 | 49 | 40 | 131 | 77 | 63 | 55 | 110 | 49 | 173 | 82 |
| | அம்பாந்தோட்டை | 29 | 31 | 36 | 30 | 95 | 68 | 42 | 32 | 79 | 16 | 141 | 25 |
| சப்ரகமுவ | கேகாலை | 36 | 86 | 65 | 46 | 108 | 202 | 77 | 54 | 124 | 51 | 185 | 87 |
| | இரத்தினபுரி | 30 | 72 | 88 | 46 | 141 | 199 | 88 | 15 | 120 | 32 | 124 | 71 |
| வடமத்திய | அநுராதபுரம் | 109 | 73 | 90 | 59 | 169 | 51 | 88 | 18 | 129 | 62 | 100 | 24 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பொலனறுவை | 14 | 18 | 9 | 32 | 119 | 105 | 29 | 2 | 36 | 11 | 41 | 11 |
| கிழக்கு | திருகோணமலை | 22 | 25 | 49 | 34 | 104 | 45 | 28 | 14 | 71 | 41 | 47 | 26 |
| | அம்பாறை | 12 | 34 | 66 | 88 | 170 | 140 | 3 | 2 | 67 | 61 | 51 | 74 |
| | மட்டக்களப்பு | 6 | 39 | 26 | 102 | 116 | 117 | 16 | 9 | 42 | 41 | 29 | 37 |
| | வவுனியா | 29 | 8 | 16 | 10 | 57 | 15 | 16 | 0 | 15 | 0 | 23 | 1 |
| | மன்னார் | - | 8 | 1 | 1 | 67 | 106 | 0 | 0 | 1 | 0 | 4 | 0 |
| ஊவா | பதுளை | 46 | 39 | 31 | 23 | 145 | 50 | 23 | 12 | 29 | 8 | 40 | 13 |
| | மொனராகலை | 21 | 50 | 22 | 26 | 90 | 74 | 17 | 3 | 10 | 7 | 27 | 13 |
| வட | யாழ்ப்பாணம் | 23 | 16 | 30 | 18 | 138 | 76 | 24 | 3 | 22 | 5 | 63 | 21 |
| | கிளிநொச்சி | - | 2 | 1 | 7 | 27 | 125 | 0 | 2 | 0 | 0 | 1 | 0 |
| | முல்லைத்தீவு | 4 | 2 | 9 | 4 | 31 | 40 | 2 | 0 | 5 | 0 | 10 | 0 |
| வடமேல் | குருநாகல் | | | | | 5 | 7 | | | | | 0 | 0 |
| | புத்தளம் | | | | | 1 | 2 | | | | | 0 | 0 |
| | மொத்தம் | 854 | 1038 | 1006 | 938 | 3175 | 2615 | 1657 | 529 | 2188 | 793 | 3347 | 1217 |

## 10.3.புதிய கைத்தொழில்களுக்கென சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை விநியோகித்தல்

புதியதோர் இடத்தில் கைத்தொழிலொன்றை நிறுவுமுன்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் விதப்புரையைப் பெற வேண்டியது அவசியமாகும். இவ்வாறு விதப்புரையைப் பெறுவதால் பொருத்தமற்ற இடங்களில் கைத்தொழில்கள் நிறுவப்படுவதைத் தவிர்த்துக்கொள்ள முடியும். கைத்தொழிலாளர்கள் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாடு தொடர்பான

விவரக் குறிப்புகளுடன் இணைந்தொழுகி பொருத்தமான இடத்தில் கைத்தொழில்களை நிறுவி உள்ளதால் அனுகூலங்கள் கிடைத்துள்ளன. பொருத்தமான இடங்களில் பொருத்தமான கைத்தொழில்கள் அமைவதால் சுற்றாடல் மாசடைதல் மற்றும் பொது மக்களுக்கு தொல்லை ஏற்படாதவாறு அவற்றை நடைமுறைப்படுத்த முடியும். 2000ஆம் ஆண்டில் சுமார் 80 கைத்தொழில்களுக்கான சுற்றாடல் விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. 2014ஆம் ஆண்டளவில் வழங்கப்பட்டுள்ள மொத்த விதப்புரைகளின் எண்ணிக்கை 1,128 ஆக உயர்ந்துள்ளது. (அனுமானித்தல் 1080 நிராகரிக்கப்பட்டவை 48) பிரதேச அலுவலகங்கள் அமைக்கப்பட்டதன் பின்னர் சுற்றாடல் விதப்புரைகளை வழங்கும் செயற்பாடு அவற்றினூடாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

புதிய கைத்தொழில்களை நிறுவுவதற்கான விதப்புரைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2012 | 2013 | 2014 | 2012 | 2013 | 2014 | 2012 | 2013 | 2014 |
| மேல் | கொழும்பு | 140 | 144 | 141 | 106 | 125 | 94 | | 0 | 0 |
| | கம்பஹா | 171 | 149 | 199 | 124 | 12 | 11 | 15 | 1 | 0 |
| | களுத்துறை | 116 | 97 | 97 | 93 | 69 | 72 | 17 | 4 | 4 |
| மத்திய | கண்டி | 125 | 126 | 76 | 96 | 57 | 49 | 15 | 11 | 6 |
| | மாத்தளை | 85 | 69 | 51 | 79 | 74 | 54 | 5 | 3 | 3 |
| | நுவரெலியா | 24 | 19 | 12 | 10 | 7 | 9 | 2 | 1 | 0 |
| தென் | காலி | 87 | 68 | 98 | 81 | 56 | 75 | 11 | 3 | 6 |
| | மாத்தறை | 78 | 70 | 65 | 45 | 55 | 64 | 18 | 3 | 8 |
| | அம்பாந்தோட்டை | 57 | 34 | 35 | 41 | 19 | 20 | | 0 | 0 |
| சப்ரகமுவ | கேகாலை | 98 | 78 | 73 | 66 | 57 | 60 | 4 | 0 | 1 |
| | இரத்தினபுரி | 111 | 67 | 40 | 79 | 45 | 53 | 1 | 1 | 0 |
| வடமத்திய | அநுராதபுரம் | 199 | 105 | 78 | 135 | 78 | 25 | 5 | 0 | 4 |
| | பொலனறுவை | 38 | 28 | 34 | 6 | 6 | 9 | | 0 | 0 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிழக்கு | திருகோணலை | 51 | 74 | 18 | 45 | 62 | 17 | | 0 | 3 |
| | அம்பாறை | 116 | 67 | 18 | 111 | 51 | 23 | | 4 | 5 |
| | மட்டக்களப்பு | 32 | 118 | 69 | 69 | 109 | 82 | | 0 | 0 |
| | வவுனியா | 45 | 12 | 17 | 40 | 6 | 16 | | 0 | 0 |
| | மன்னார் | 18 | 28 | 40 | 16 | 8 | 27 | | 0 | 1 |
| ஊவா | பதுளை | 197 | 92 | 63 | 105 | 58 | 32 | 5 | 19 | 7 |
| | மோனராகலை | 60 | 52 | 32 | 55 | 37 | 28 | 2 | 0 | 0 |
| வட | யாழ்ப்பாணம் | 122 | 81 | 72 | 107 | 72 | 47 | 3 | 2 | 0 |
| | கிளிநொச்சி | 195 | 97 | 66 | 123 | 87 | 60 | | 1 | 0 |
| | முல்லைத்தீவு | 42 | 100 | 145 | 28 | 68 | 136 | 1 | 0 | 0 |
| வடமேல் | குருநாகல் | 10 | 14 | 23 | 8 | 4 | 10 | | 3 | 0 |
| | புத்தளம் | | 12 | 22 | 0 | 2 | 7 | | 0 | 0 |
| | மொத்தம் | 2022 | 2217 | 1584 | | 1395 | 1080 | | 128 | 48 |

2014ஆம் ஆண்டில் 1584 கைத்தொழில் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. அவற்றில் 1080 விண்ணப்பங்களுக்கு விதப்புரை வழங்கப்பட்டதோடு 48 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. விதப்புரையைப் பெற்றுக்கொள்ளத் தேவையான தகுதி நிலையைப் பூர்த்தி செய்யத் தவறியதாலேயே இவை நிராகரிக்கப்பட்டன.

## 10.4. சுற்றாடல் மாசுபடுதல், அதனாலான விளைவுகள், இயற்கை வளங்களின் மிகைப் பயன்பாடு தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகளைத் தீர்த்தல்.

2014ஆம் ஆண்டில் கைத்தொழிற்சாலைகளினால் ஏற்படுகின்ற சூழல் மாசடைவு சம்பந்தமான 875 முறைப்பாடுகளும் இயற்கை வளங்கள் துர்ப்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் 225 முறைப்பாடுகளுமாக மொத்தமாக 1,100 முறைப்பாடுகள் கிடைத்தன.

அந்த மாகாணங்களில் பொதுமக்களிடமிருந்து சுற்றாடல் சார்ந்ததாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் அதாவது கைத்தொழிற்சாலை ஒன்றை தொழிற்படுத்துவதால் அல்லது வேறு ஏதேனும் செயற்பாடு ஒன்றினால் ஏற்படுகின்ற சூழல் மாசுபாடு அல்லது இயற்கை வளங்களின் தவறான பயன்பாடு தொடர்பில் பொதுமக்களிடருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் பற்றிய நடவடிக்கைகள் குறித்த மாகாண அலுவலகத்தினால் ஆராயப்படும்.

இவ்வாறு கிடைக்கும் முறைப்பாடுகள் அந்தந்த மாகாண அலுவலகங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படுவதோடு, அதிகாரசபை அதுபற்றி ஆராய வேண்டுமெனக் கருதும் பட்சத்தில் நிலையம் சார்ந்த பரிசோதனையொன்றை நடத்திய பின்னர் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**2014 ஆம் ஆண்டில் கையாளப்பட்ட முறைப்பாடுகள்**

| மாவட்டம் | கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | பிற நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட முறைப்பாடுகள் |
|---|---|---|---|---|---|
| | EPC | NRM | EPC | NRM | |
| கொழும்பு | 168 | 8 | 19 | 0 | 2 |
| கம்பஹா | 50 | 4 | 2 | 0 | 5 |
| களுத்துறை | 233 | 35 | 4 | 3 | 33 |
| கண்டி | 24 | 14 | 8 | 1 | 14 |
| மாத்தளை | 9 | 1 | 0 | 0 | 1 |
| நுவரெலியா | 1 | 0 | 0 | 0 | 0 |
| குாலி | 47 | 46 | 0 | 2 | 10 |
| மாத்தறை | 44 | 7 | 0 | 0 | 23 |
| அம்பாந்தோட்டை | 22 | 3 | 6 | 0 | 11 |
| கேகாலை | 14 | 4 | 7 | 1 | 0 |
| இரத்தினபுரி | 26 | 11 | 12 | 15 | 1 |
| அநுராதபுரம் | 21 | 0 | 1 | 0 | 2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொலனறுவை | 1 | 2 | 0 | 0 | 9 |
| திருகோணமலை | 7 | 4 | 7 | 4 | 0 |
| அம்பாறை | 1 | 0 | 0 | 0 | 0 |
| மட்டக்களப்பு | 9 | 2 | 9 | 2 | 0 |
| வவுனியா | 2 | 2 | 0 | 0 | 0 |
| மன்னார் | 2 | 1 | 0 | 0 | 0 |
| பதுளை | 29 | 32 | 6 | 2 | 1 |
| மோனராகலை | 9 | 5 | 3 | 1 | 1 |
| யாழ்ப்பாணம் | 16 | 0 | 12 | 0 | 4 |
| கிளிநொச்சி | 3 | 3 | 0 | 1 | 0 |
| முல்லைத்தீவு | 1 | 13 | 1 | 10 | 0 |
| குருநாகல் | 84 | 17 | 55 | 6 | 0 |
| புத்தளம் | 52 | 11 | 34 | 4 | 0 |
| மொத்தம் | 875 | 225 | 186 | 52 | 117 |

## 10.5.ஐளுழு 14000 தரச் சான்றிதழ் தொடர்பில் மேல்மாகாண அலுவலகத்தின் பங்களிப்பு

இலங்கை கட்டளைகள் பணியகத்தினால் வழங்கப்படும் ISO 14000 தரச் சான்றிதழை தொழிற்சாலைகளுக்கு வழங்குவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மேல்மாகாண அலுவலகம் தொழில்நுட்ப மற்றும் சட்டம் சார்ந்த விடயங்களில் நிபுணத்துவ அறிவை வழங்குகிறது. இவ்வாறு நிபுணத்துவ அறிவு வழங்கப்பட்ட நிறுவனங்கள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1<br>2<br>3<br>4<br>5 | முதலாவது கட்டம்<br>இரண்டாவது கட்டம்<br>அத்தாட்சிப்படுத்தல்<br>மீளாய்வு<br>மீள அத்தாட்சிப்படுத்தல் | 03<br>04<br>01<br>04<br>01 |
| | மொத்தம் | **23** |

## 10.6.சுற்றாடல் முகாமைத்துவம்

### 10.6.1.தொடக்கநிலை சுற்றாடல் மதிப்பீடு (IEE)

1993ஆம் ஆண்டு தொடக்கம் சகல பிரதான கருத்திட்டங்களும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் தொடக்க நிலை சுற்றாடல் மதிப்பீட்டைச் செய்தல் வேண்டும். உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்கள், கைத்தொழில்கள் மற்றும் பூங்காக்களை மேம்படுத்தல் போன்ற பாரிய கருத்திட்டங்களுக்கு இந்த மதிப்பீடு அவசியமானதாகும்.

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின்போது பாரிய கருத்திட்டங்கள் எதிர்கொள்ளும் சுற்றாடல் ரீதியான தாக்கங்கள் இனங்காணப்பட்டு தொடக்க நிலையிலேயே அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான விதப்புரைகள் வழங்கப்படும். இதனால் கருத்திட்ட முன்மொழிவாளருக்கு தொடக்கக் கட்டத்திலேயே தாக்கத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடிகிறது.

சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் தொடக்கநிலை சுற்றாடல் மதிப்பீடு ஆகியவற்றுக்கு உட்படும் கருத்திட்டங்கள் தொடர்பிலான விதப்புரைகள் மாகாண அலுவலகங்களினால் வழங்கப்படும்.

பின்வரும் கருத்திட்டங்கள் தொடக்கநிலை சுற்றாடல் மதிப்பீட்டுக்கு உட்பட வேண்டுமென முன்மொழியப்பட்ட கருத்திட்டங்களாகும்.

தொடக்க நிலை சுற்றாடல் மதிப்பீடு (IEE), சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA) ஆகியவற்றுக்கு உட்படுத்தப்பட்டு 2014ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் வருமாறு.

| மாகாணம் | மாவட்டம் | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | | அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | | நிராகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 |
| மேல் | கொழும்பு | 8 | 0 | 1 | 6 | 0 | 0 | | 0 | |

| மாகாணம் | மாவட்டம் | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | | அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | | நிராகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 |
| | கம்பஹா | 2 | 1 | 0 | 1 | 0 | 0 | | 0 | |
| | களுத்துறை | 9 | 6 | 3 | 5 | 2 | 2 | | 0 | |
| | கண்டி | 4 | 6 | 10 | 3 | 0 | 2 | 1 | 0 | 1 |
| | மாத்தளை | | 0 | 0 | | 0 | 4 | | 0 | |
| மத்திய | நுவரெலியா | 26 | 8 | 1 | | 0 | 2 | | 0 | |
| | காலி | 304 | 89 | 81 | 181 | 73 | 70 | 13 | 2 | 5 |
| | மாத்தறை | 102 | 3 | 7 | 48 | 7 | 15 | 1 | 0 | |
| தென் | அம்பாந்தோட்டை | 66 | 51 | 78 | 59 | 153 | 89 | | 4 | |
| | கேகாலை | 4 | 6 | 7 | | 4 | 4 | | 0 | |
| சபரகமுவ | இரத்தினபுரி | 14 | 3 | 4 | 4 | 3 | 3 | | 0 | |
| | அநுராதபுரம் | 1 | 18 | 99 | | 37 | 69 | | 0 | |
| வடமேல் | பொலன்னறுவை | | 5 | 6 | | 1 | 5 | | 0 | |
| | திருகோணலை | | 51 | 8 | | 13 | 9 | | 0 | |
| | அம்பாறை | | 10 | 0 | | 2 | 0 | | 0 | |
| | மட்டக்களப்பு | | 8 | 0 | | 1 | 0 | | 0 | |
| | வவுனியா | | 1 | 0 | | 0 | 0 | | 0 | |
| கிழக்கு | மன்னார் | 4 | 3 | 0 | | 0 | 0 | | 0 | |

| மாகாணம் | மாவட்டம் | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | | அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | | நிராகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 |
| ஊவா | பதுளை | 3 | 5 | 2 | 1 | 0 | 0 | | 0 | |
| | மொனராகலை | | 2 | 2 | 1 | 0 | 0 | | 0 | |
| வட | யாழ்ப்பாணம் | | 1 | 0 | | 0 | 0 | | 0 | |
| | கிளிநொச்சி | | 0 | 0 | | 0 | 0 | | 0 | |
| | முல்லைத்தீவு | | 3 | 0 | | 0 | 0 | | 0 | |
| | மொத்தம் | 338 | 280 | 309 | 233 | 296 | 272 | 8 | 6 | 6 |

### 10.6.2 பட்டியலிடப்படாத செயற்பாடுகளுக்கு சுற்றாடல் விதப்புரைகளைப் பெற்றுக்கொள்ளுதல்.

கருத்திட்ட முன்மொழிவாளர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களின்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதற்கான நிபந்தனைகளுடன் சுற்றாடல் விதப்புரைகள் வழங்கப்படும். அதன்படி, கடந்த ஆண்டில் ஹோட்டல், மரங்களைத் தறித்தல், தொலைத்தொடர்பு கோபுரங்களை அமைத்தல் மற்றும் காணித் துண்டங்கள் பிரிப்பு என 4,344 (கடந்த ஆண்டின் விண்ணப்பங்களும் அடங்கலாக) கருத்திட்டங்களுக்கான சுற்றாடல் விதப்புரைகளை மாகாண அலுவலகங்கள் வழங்கியுள்ளன.

அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கும்போது தொடக்க நிலையில் சுற்றாடல் மீதான தாக்கத்தை இனங்கண்டு பாதிப்புகளைக் குறைத்துக்கொள்வதற்கு மேற்படி செயற்பாடு வசதியளிப்பதாக உள்ளது.

2014ஆம் ஆண்டில் பட்டியலிடப்படாத செயற்பாடுகளுக்காக சுற்றாடல் விதப்புரை வழங்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்கள் வருமாறு.

| පලාත | දිස්ත්‍රික්කය | ලැබුනඅයදුම්පත්ගණන | අනුමතකරනලද ප්‍රමාණය | ප්‍රතික්ෂේපකළප්‍රමාණය | පැමිණිලිපසුවිපරම්කිරීම් |
|---|---|---|---|---|---|
| மேல் | கொழும்பு | 145 | 104 | 0 | 0 |
| | கம்பஹா | 292 | 115 | 0 | 3 |
| | களுத்துறை | 112 | 545 | 1 | 0 |
| மத்திய | கண்டி | 90 | 104 | 3 | 0 |
| | மாத்தளை | 56 | 55 | 0 | 0 |
| | நுவரெலியா | 40 | 44 | 1 | 0 |
| தென் | காலி | 156 | 484 | 2 | 17 |
| | மாத்தறை | 33 | 311 | 2 | 0 |
| | அம்பாந்தோட்டை | 14 | 203 | 1 | 0 |
| சப்ரகமுவ | கேகாலை | 8 | 150 | 0 | 0 |
| | இரத்தினபுரி | 7 | 249 | 0 | 8 |
| ஊவா | அநுராதபுரம் | 307 | 361 | 0 | 1 |
| | பொலன்னறுவை | 399 | 313 | 0 | 0 |
| கிழக்கு | திருகோணலை | 256 | 252 | 0 | 0 |
| | அம்பாறை | 80 | 74 | 0 | 0 |
| | மட்டக்களப்பு | 141 | 101 | 0 | 22 |
| | வவுனியா | 39 | 71 | 1 | 0 |
| | மன்னார் | 23 | 35 | 0 | 0 |
| வடமத்தி | பதுளை | 213 | 53 | 0 | 0 |

| පළාත | දිස්ත්‍රික්කය | ලැබුනඅයදුම්පත්ගණන | අනුමතකරනලද ප්‍රමාණය | ප්‍රතික්ෂේපකළප්‍රමාණය | පැමිණිලිපසුවිපරම්කිරීම් |
|---|---|---|---|---|---|
| | மொனராகலை | 103 | 87 | 0 | 0 |
| வட | யாழ்ப்பாணம் | 25 | 8 | 0 | 0 |
| | கிளிநொச்சி | 32 | 21 | 4 | 0 |
| | முல்லைத்தீவு | 144 | 135 | 0 | 1 |
| வடமேல் | குருநாகல் | 471 | 335 | 1 | 0 |
| | புத்தளம் | 131 | 134 | 0 | 0 |
| | மொத்தம் | 3317 | 4344 | 16 | 52 |

# 11.0 மத்திய சுற்றாடல் அதிகார சபையின் விசேட கருத்திட்டங்கள்

## 11.1 பாவனைக்குப் பிற்பட்ட பிளாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்

### கருத்திட்டப் பின்னணி

2004ஆம் ஆண்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்ற இக்கருத்திட்டம் சுற்றாடல் அமைச்சின் நெறிப்படுத்தலில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் 2007ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இறக்குமதி செய்யப்படும் பொலித்தீன், பிளாஸ்ரிக் என்பவற்றைப் பாவனையின் பின்னர் உரிய முறையில் அகற்றுவதன் மூலம் அவற்றை மீள்சுழற்சிக்கு உட்படுத்தி அதனூடாக இறக்குமதியை மட்டுப்படுத்தி அதற்கான அந்நியச் செலாவணியைச் சேமித்தல் இக்கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். பிரதேச மட்டத்தில் பிளாஸ்ரிக்/பொலித்தீன் கழிவுப்பொருள் சேகரிப்பு வழிமுறையொன்றை அறிமுகஞ் செய்தல், அதனை மேம்படுத்தல், பிளாஸ்ரிக்/பொலித்தீன் மீள்சுழற்சியாக்க வலையமைப்பைத் தாபித்தல் மற்றும் அவற்றை அகற்றுவதற்கான முறையான வேலைத்திட்டம் பற்றி மக்களை விழிப்புணர்வு செய்தல் இதன் பிரதான செயற்பாடுகளாகும்.

ஆரம்பத்திலிருந்து இதுவரை வெளியேற்றப்படும் பிளாஸ்ரிக்/பொலித்தீன் போன்றவற்றைச் சேகரிப்பவர்கள் மற்றும் மீள்சுழற்சியாக்கக் கைத்தொழிலாளர்களை விழிப்புணர்வு செய்து இவர்களைக் கருத்திட்டத்தின்பால் ஈர்த்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, பாவனைக்குப் பிற்பட்ட பொலித்தீன்/பிளாஸ்ரிக் போன்றவற்றை வெளியேற்றுதல் பற்றிய சிறந்த முறை பற்றியும் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**கருத்திட்டத்தின் பௌதிக மற்றும் நிதி முன்னேற்றங்கள் - 2014**

2014ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியிலிருந்து 45 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்நிதியைக் கொண்டு பிளாஸ்ரிக்/பொலித்தீன் கழிவுப்பொருள் முகாமைத்துவம் பற்றிய பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**பிளாஸ்ரிக்/பொலித்தீன் கழிவுப்பொருள் மீள்சுழற்சியாக்க மாதிரி நிலையங்களை அமைத்தல்.**



மீள்சுழற்சி நிலையம் - கண்டி மாநகரசபை

நாட்டில் பிறப்பிக்கப்படுகின்ற பிளாஸ்ரிக்/பொலித்தீன என்பவற்றை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதற்கான பிரதான ஏற்பாடாக மாவட்ட மட்டத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களை மையமாகக்

கொண்டு 25 மீள்சுழற்சியாக்க நிலையங்களை அமைக்கும் வேலைத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

2014ஆம் ஆண்டில் கண்டி மாநகர சபையின் மீள்சுழற்றியாக்க நிலையத்தை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கென 5.3 மில்லியன் ரூபா நதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு (மொத்த ஒதுக்கீடு) 95% வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.



கொழும்பு மாநாகர சபையின் மீள்சுழற்சியாக்க மாதிரி நிலையத்திற்கான உடன்படிக்கை கைச்சாத்திடல்

இக்கருத்திட்டத்தின் ஊடாக கண்டி மீள்சுழற்சியாக்க நிலையத்திற்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட பிளாஸ்ரிக் துண்டாக்கல் இயந்திரமும், பொலித்தீன் துண்டாக்கல் இயந்திரமும் கண்டி மாநகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன. பலாங்கொடை நகரசபை, குருணாகல் மாநகர சபை, அநுராதபுரம் மாநகர சபை, மாத்தறை மாநகர சபை மற்றும் கடுவலை மாநகர சபை ஆகிய உள்ளூராட்சி நிறுவனங்களில் மாதிரி மீள்சுழற்சியாக்க நிலையங்கள் ஏற்கெனவே வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. மேலும், 2015ஆம் ஆண்டில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நுவரெலியா மற்றும் கொழும்பு மாநகர சபைக்கான மாதிரி மீள்சுழற்சியாக்க நிலையங்களுக்கான உடன்படிக்கைகள் அந்தந்த நிறுனங்களுடன் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

நுவரெலியா மாநகர சபையின்மாதிரி மீள்சுழற்சியாக்க நிலைய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டபோது.



மாத்தறை மாநகர சபையின மாதிரி மீள்சுழற்சியாக்க நிலையத்தை மேலும் விருத்தி செய்தல்



பிளாஸ்ரிக் துணிக்கை இயந்திரம்

மாத்தறை மாநகர சபையின் மாதிரி மீள்சுழற்சியாக்க நிலையத்தை மேலும் விருத்திசெய்யுமுகமாக பிளாஸ்ரிக் துணிக்கை இயந்திரம் (Plastic Pelletizer) ஒன்றும் பொலித்தீன் நாடா இயந்திரம் (Film Extruder) ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பிளாஸ்ரிக் / பொலித்தீன் மீள்சுழற்சியாக்க செயற்பாட்டை இறுதி முடிவுப்பொருளாக்கிக்கொள்வதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது.

## பிளாஸ்ரிக்/பொலித்தீன் உட்பட்ட மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருளுக்கான பண்டகசாலைகளை அமைத்தல்.

பிளாஸ்ரிக்/பொலித்தீன் உட்பட மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருள்களை முறையாகச் சேகரித்து தனித்தனியாக களஞ்சியப்படுத்தி மீள்சுழற்சியாக்கத்திற்குத் தயார்ப்படுத்தும் செயற்பாட்டை ஒழுங்குபடுத்துவதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களில் பிளாஸ்ரிக்/பொலித்தீன் உட்பட மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருள்களைக் களஞ்சியப்படுத்துவதற்கான பண்டகசால வசதிகளை ஏற்படுத்துவது இக்கருத்திட்டத்தின் இன்னுமொரு பிரதான செயற்பாடாகும். இன்றளவில் வாரியபொல பிரதேச சபை, கல்கமுவ பிரதேச சபை மற்றும் நல்லதண்ணி ஆகிய இடங்களில் இவ்வாறான பண்டகசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமன்கடுவ பிரதேச சபையின் பிளாஸ்ரிக்/பொலித்தீன் உட்பட மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருள் களஞ்சியசாலை வசதிகள்.



தமன்கடுவ பிரதேச சபையின் பிளாஸ்ரிக்/பொலித்தீன் உட்பட மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருள் களஞ்சியசாலையை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படடுள்ளன.

2014ஆம் ஆண்டில் பிளாஸ்ரிக்/பொலித்தீன் உட்பட மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருள்களை முறையாக சேகரித்து தனித்தனியாகக் களஞ்சியப்படுத்தி மீள்சுழற்சியாக்கத்திற்கு ஈடுபடுத்துவதற்காக தமன்கடுவ பிரதேச கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தில் அதற்கான களஞ்சியசாலையை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**பிளாஸ்ரிக் /பொலித்தீன் சேகரிப்பவர்களையும் மீள்சுழற்சியாக்க கைத்தொழிலாளர்களையும் வலுவாக்கம் செய்தல்.**



நாடளாவிய ரீதியிலுள்ள பிளாஸ்ரிக்/பொலித்தீன் சேகரிப்பாளர்கள் மற்றும் மீள்சுழற்சியாக்க கைத்தொழிலாளர்களுக்கான செயலமர்வொன்றை நடாத்தி மீள்சுழற்சியாக்க செயற்பாட்டை விருத்தி செய்யத் தேவையான கருத்துக்கள் பெறப்பட்டதுடன், பங்கேற்றவர்களுக்கான அடையாள அட்டைகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இது அவர்களுக்கு ஓர் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதுடன் கழிவுப்பொருள் சேகரிப்பிற்கம் இலகுவாக அமையும்.



பிளாஸ்ரிக்/பொலித்தீன் கழிவுப்பொருள் சேகரிப்பாளர்கள் மற்றும் மீள்சுழற்சியாக்க கைத்தொழிலாளர்களுக்கான அடையாள அட்டை, சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

| ஆண்டு | பிளாஸ்ரிக்/ பொலித்தீன் கழிவுப்பொருள் சேகரிப்பாளர்கள் மற்றும் மீள்சுழற்சி கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2007 | 38 |
| 2008 | 62 |
| 2009 | 78 |
| 2010 | 103 |
| 2011 | 152 |
| 2012 | 167 |
| 2013 | 194 |
| 2014 | 207 |

**பயிற்சி அபிவிருத்தி, விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்**






முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு

கருத்திட்டத்தின் பயிற்சி அபிவிருத்தி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவு அரசாங்க அலுவலர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணியணியினர், தன்னார்வக் குழுக்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், குடியிருப்பாளர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினர் போன்ற பல்வேறு தரப்பினரை விழிப்புணர்வு செய்வதற்காக 19 நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்கெனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தாலும் ஆண்டிறுதியில் 42 நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. உள்ளூராட்சி நிறுவனங்களின் பணியணியினருக்கு மீள்சுழற்சியாக்க இயந்திரம் தொடர்பான செய்முறைப் பயிற்சியளிக்கப்பட்டது. மேலும், இலக்குக் குழுக்களை விழிப்புணர்வு செய்யுமுகமாக துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், பல்வேறு சமர்ப்பணங்கள் மற்றும் பொழிப்புகள் என்பன பயன்படுத்தப்பட்டன.



உள்ளூராட்சி பணியினருக்கு செய்முறைப்பயிற்சி வழங்கல்

பிளாஸ்ரிக்/பொலித்தீன் கழிவுப்பொருள் முகாமைத்துவம் பற்றிய தகவலடங்கிய 30,000 துண்டுப்பிரசுரங்களும் 5,000 கோப்புகளும் அச்சிடப்பட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின்போது விநியோகிக்கப்பட்டன.

**2014ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சி மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்**

| நிகழ்ச்சித்திட்டம் | எண்ணிக்கை |
|---|---|
| பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 07 |
| முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 03 |
| பிளாஸ்ரிக் சேகரிப்பாளர்கள், மீள்சுழற்சி செய்பவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 01 |
| அரச அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 19 |
| உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பணியணியினருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 01 |
| அரசு சார்பற்ற அமைப்புகள், சமூக மட்ட அமைப்புகள் வீட்டு உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 09 |
| உள்ளூராட்சி நிறுவனங்களின் பணியணியினருக்கான செய்முறைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 01 |
| பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 01 |
| குப்பைத்தொட்டிகள் விநியோகம் | 2030 |
| கழிவுப்பொருள் கொள்கலன்கள் | 1598 |
| பிளாஸ்ரிக் / பொலித்தீன் கழிவுப்பொருள் முகாமைத்துவ மேல்நாட்டு நிகழ்ச்சித்திட்டம் - தேசிய மட்டம் | 07 |
| பிளாஸ்ரிக் / பொலித்தீன் கழிவுப்பொருள் முகாமைத்துவ மேல்நாட்டு நிகழ்ச்சித்திட்டம் - பிரதேச மட்டம் | 02 |

**மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் வழிபாட்டிடங்களுக்கு கழிவகற்றும் கொள்கலன்களை விநியோகிக்கும் தேசிய வலைத்திட்டம்**

கருத்திட்ட முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி மாவட்ட மட்டத்தில் அமைந்துள்ள வழிபாட்டிடங்களுக்கு உக்கக்கூடியதும் உக்காததுமான கழிவுப்பொருள்களை

இடுவதற்கான பிளாஸ்டிக் கொள்கலன்கள் வழங்கப்பட்டுள்ள. இதுவரை 513 தொகுதிகள் (1026 கொள்கலன்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.



வழிபாட்டிடங்களுக்கு கழிவுப்பொருள் இடுவதற்கான பிளாஸ்ரிக் கொள்கலன் வழங்குதல்

### அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு கொள்கலன் வழங்கல்

நிறுவனங்களின் தேவை கருதி அரச நிறுவனங்களுக்கும் பாடசாலைகளுக்குமான 286 கொள்கலன் தொகுதிகள் (592 கொள்கலன்கள்) ஏற்கெனவே விநியோகிக்கப்பட்டுள்ளன. கழிவுகளை வகைப்படுத்திச் சேகரிப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் 2030 பொலித்தீன் உறைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனூடாக பிளாஸ்ரிக்/பொலித்தீன் கழிவுப்பொருட்களை முறையாக முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### விசேட மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்

பிளாஸ்ரிக்/பொலித்தீன் கழிவுப்பொருள் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டும் வகையில் மக்கள் பெருமளவில் ஒன்றுகூடும் வழிபாட்டிடங்களான சிவனொளிபாதமலை, கண்டி தலதா மாளிகை, கதிர்காமம் மற்றும் தளவில தேவாலயம் போன்ற இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.



“தேசத்திற்கு மகுடம் - 2014” தேசியக் கண்காட்சியில் பங்குபெறல்

“தேசத்திற்கு மகுடம்” போன்ற தேசிய மட்டக் கண்காட்சிகள் மற்றும் பிரதேச மட்டத்தில் நடாத்தப்படும் கண்காட்சிகளில் காட்சியறைகளை நிறுவி பிளாஸ்ரிக்/பொலித்தீன் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பில் விரிவான பிரசாரத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பல்வேறு வைபவங்களில் பதாகைகளைக் காட்சிப்படுத்துதல், நினைவு வெளியீடுகளில் கருத்திட்டத்தின் விளம்பரங்களைப் பிரசுரித்தல் மூலமும் பொதுமக்களை விழிப்புணர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




**இலத்திரனியல் ஊடகப் பிரசாரம்**

“EDEX EXPO” கண்காட்சி

“EDEX EXPO” கண்காட்சியையொட்டித் தயாரிக்கப்பட்ட ஆவணத் திரைப்படம் தேசியத் தொலைக்காட்சியின் கல்விப் பிரிவினூடாக 2014ஆம் ஆண்டில் மாத்திரம் 5 தடவைகள் ஒளிபரப்பட்டது.

பிளாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கான தேசிய அளவிலான தேவையை இனங்கண்ட பாவனைக்குப் பிற்பட்ட பிளாஸ்ரிக்/பொலித்தீன் முகாமைத்துவத் தேசியக் கருத்திட்டம் 2014ஆம் ஆண்டில் பிளாஸ்ரிக்/பொலித்தீன் கழிவுப்பொருள் சேகரிப்பு மற்றும் களஞ்சிய வசதிகளை ஏற்படுத்தி மாவட்ட மட்டத்தில் சாத்தியமான உள்ளூராட்சி நிறுவனங்களில் மீள்சுழற்சியாக்க செயற்பாட்டை விருத்தி செய்வதில் பெரும் பங்காற்றியுள்ளது. இவ்வாறு அரசம மற்றும் தனியார் துறையின் ஆற்றலை விருத்தி செய்வதில் முன்னோடியாகச் செயலாற்றி வருகிறது. இன்றளவில் 50% காணப்படுகின்ற பிளாஸ்ரிக்/பொலித்தீன் மீள்சுழற்சியாக்கச் செயற்பாட்டை 2018ஆம் ஆண்டளவில் 80% அதிகரிப்பதற்கான உத்திகளைக் கையாண்டு வருகிறது. இச்செயற்பாடுகளைப் பசுமைப் பொருளாதாரம் மற்றும் பசுமைச் சுற்றாடல் உருவாக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 11.2 சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவினால் தூய்மையானதும் பசுமையானதுமான சுற்றாடலைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் மாணவர்களின் விழுமியங்கள் மற்றும் உளப்பாங்கு விருத்திக்கான சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டமொன்றை அறிமுகம் செய்துள்ளது. சுற்றாடல் முன்னோடிகள் தமது அறிவு விருத்திக்கென சுற்றாடலைப் பேணுதல், பாதுகாப்பில் செயற்பாட்டுப் பங்களிப்புச் செலுத்துவதுடன் சுற்றாடல் நேய செயற்பாடுகளுக்காகவும் பயிற்சி பெறுவர்.

அதிகார சபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தைப் பலப்படுத்தும் வகையில் 2014ஆம் ஆண்டில் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

### 11.2.1 ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தை மேம்படுத்தி பலப்படுத்தும் நோக்கத்துடன் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டு வலய மட்டத்தில் வருடாந்த ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

2014ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்குப் பதிலாக ஆணையாளர்களுக்கான பயிலமர்வொன்று நடாத்தப்பட்டது. மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தில் ஒக்ரோபர் மாதம் 16, 17 மற்றும் 18ஆம் திகதிகளில் இடம்பெற்ற இந்தப் பயிலமர்வில் 175 ஆணையாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

### 11.2.2 சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வுப் பிரிவினால் நடாத்தப்பட்டன. எதிர்காலத் தீர்மானங்களை எடுக்கும்போதும் திட்டங்களை வகுக்கும்போதும் சுற்றாடலின் நிலையான இருப்பின் பொருட்டு சூழல் நேய தலைவர்களை உருவாக்குதல் இதன் நோக்கமாகும்.

சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வு பிரிவு 2014ஆம் ஆண்டில் 04 தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியுள்ளது.

| | திகதி | மாவட்டம் | இடம் | பங்கேற்றோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | 2014.07.01 | இரத்தினபுரி | பிரதேச செயலகம் | 99 பேர் பங்கேற்றிருந்தனர் (பாடசாலை மாணவர் 66 பேர்) |
| 2. | 2014.07.10 | கேகாலை | கேகாலை மகா வித்தியாலயம் | 91 பேர் பங்கேற்றிருந்தனர் (பாடசாலை மாணவர் 80 பேர்) |
| 3. | 2014.07.11 | புத்தளம் | பாத்திமா மகளிர் கல்லூரி | 80 பேர் பங்கேற்றிருந்தனர் (பாடசாலை மாணவர் 56 பேர்) |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | 2014.09.23 | யாழ்ப்பாணம் | இளைஞர் கிறிஸ்தவ சங்க மண்டபம் | 93 பேர் பங்கேற்றிருந்தனர் (பாடசாலை மாணவர் 63 பேர்) |

### 11.2.3 ஒன்றிணைப்பு உத்தியோகத்தர்களுடனான கலந்தாலோசிப்புகள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவு சுற்றாடல் முன்னோடி ஒன்றிணைப்பாளர்களுடன் மேற்கொள்ளும் கலந்தாலோசிப்புகள் ஊடாக பாடசாலைக் கட்டமைப்பில் அவர்களின் செயலூக்கமான பங்களிப்பை எதிர்பார்க்கின்றது. சுற்றாடல் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதில் ஒன்றிணைப்பாளர்களின் அறிவும் அனுபவமும் மிகவும் பயனள்ளதாக அமையும்.

2014ஆம் ஆண்டில் ஒன்றிணைப்பாளர்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதி ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது.

### 11.2.4 சுற்றாடல் முன்னோடி ஆணையாளர்களுடனான கலந்தாலோசிப்புகள்

சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் சுற்றாடல் முன்னோடி ஆணையாளர்கள் செயற்பாட்டுப் பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வுப் பிரிவு சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டங்களைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் வலய மற்றும் பிரிவு மட்டத்தில் சுற்றாடல் முன்னோடி ஆணையாளர்களை நியமித்துள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையில் 2014.11.26ஆம் திகதி நடைபெற்ற கலந்தாலோசிப்பில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியர் பணியல் உள்ளவர்களே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டனர்.

2014ஆம் ஆண்டில் சுற்றாடல் முன்னோடி ஆணையாளர்களுடன் 09 கலந்தாலோசிப்புகளை நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்ததோடு மத்திய, ஊவா, கிழக்கு, சப்ரகமுவ, தென், வட, வடமத்திய, மேல், வடமேல் மற்றும் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் அவை நடாத்தப்பட்டன.

### 11.2.5 புதக்கம் பெற்றவர்கள் மற்றும் அங்கத்தவர்களை அதிகரித்தல்.

சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வு பிரிவு சுற்றாடல் முன்னோடி பதக்கம் பெறுநர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகப் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

I. சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டங்கள்.

II. சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தால் மூலப்பொருட்களை விநியோகித்தல்.

III. புதிய சுற்றாடல் முன்னோடிக் குழுக்களைப் பதிவு செய்தல்.

IV. சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

V. ஆசிரியர்கள் மற்றும் பிரதேச சுற்றாடல் அலுவலகர்களுக்கான பயிற்சி.

VI. முன்னோடி ஆசிரியர் கைந்நூல் விநியோகமும் விசாரணைகளும்.

2014ஆம் ஆண்டுக்கான சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தில் பதிவு பெறுவதற்கான விண்ணப்பங்கள் மட்டக்களப்பு, கிளிநொச்சி அலுவலகம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண

அலுவலகத்திலிருந்து கிடைத்துள்ளன. சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகம் செய்யும் 11 புதிய சுற்றாடல் முன்னோடிக் குழுக்கள் நானு ஓயாவிலுள்ள மூன்று பாடசாலைகளில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

### 11.2.6 பாடசாலை மட்டத்தில் சிறுவர் கழகங்கள் (மாவட்டத்தில் தலா ஒரு பாடசாலை)

2014ஆம் ஆண்டில் இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி சுற்றாடல் முன்னோடி ஆணையாளர்களுடனான கலந்தாலோசிப்புகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது.

### 11.2.7 சுற்றாடல் முன்னோடி மூலப்பொருள் உற்பத்தியின் முன்னேற்றம்

| | மூலப்பொருள் | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் |
|---|---|---|---|
| 1. | சுற்றாடல் முன்னோடி நூல்கள் | 1500 | 1000 |
| 2. | சுற்றாடல் முன்னோடி முகமூடிகள் | 1500 | 1000 |
| 3. | தொப்பிகள் | 2500 | 500 |
| 4. | சுற்றாடல் முன்னோடி பதக்கங்கள் | 1500 | 1000 |
| 5. | பசுமைச் சான்றிதழ்கள் | 9000 | 10000 |
| 6. | பசுமைப் பதக்கங்கள் | 6000 | 500 |
| 7. | சான்றிதழ்கள் | 2500 | 250 |
| 8. | வெள்ளிப் பதக்கங்கள் | 2500 | 250 |
| 9. | சான்றிதழ்கள் | 200 | 100 |
| 10. | தங்கப் பதக்கங்கள் | 175 | 75 |

பதக்கங்களை வழங்குவதற்கான புள்ளிகள் அடங்கிய பட்டியல் மாகாண/மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெறப்பட்டன. மாகாண அலுவலகங்களினால் சுற்றாடல் முன்னோடி மூலப்பொருள் விநியோகப் பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன.

**சுற்றாடல் முன்னோடி மூலப்பொருள் விநியோகம்**

2014ஆம் ஆண்டில் சுற்றாடல் முன்னோடி மூலப்பொருள் தமிழ், சிற்கள பாடசாலைகளிடையே விநியோகிக்கப்பட்டதன் முன்னேற்றம்

| | விபரம் | அளவு | | |
|---|---|---|---|---|
| | | தமிழ் | சிங்களம் | மொத்தம் |
| 1. | சுற்றாடல் முன்னோடி ஆசிரியர் கைந்நூல் | 1910 | 52 | 1941 |
| 2. | சுற்றாடல் முன்னோடிப் பதக்கங்கள் | 4600 | 14254 | 18854 |
| 3. | தொப்பிகள் | 1458 | 16000 | 17450 |
| 4. | குறிப்பேடுகள் | 3700 | 16100 | 18800 |
| 5. | பசுமைப் பதக்கங்கள் | 1269 | 5505 | 6774 |
| 6. | சான்றிதழ்கள் - பசுமைப் பதக்கம் | 1169 | 9005 | 10174 |
| 7. | வெள்ளிப்பதக்கம் | 445 | 2474 | 2919 |
| 8. | சான்றிதழ்கள் - வெள்ளிப் பதக்கம் | 475 | 2500 | 2975 |
| 9. | தங்கப் பதக்கம் | 32 | 438 | 470 |
| 10. | சான்றிதழ்கள் - தங்கப்பதக்கம் | 59 | 470 | 529 |

### 11.2.8 மாவட்ட சுற்றாடல் முன்னோடி சஞ்சிகை

சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வுப் பிரிவு வாசகர்களை அறிவூட்டும் வகையில் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

அதன் ஒரு கட்டமாக வெளியிடப்படும் சுற்றாடல் முன்னோடி சஞ்சிகை சுற்றாடல் விடயத்தில் ஆர்வமுள்ளவர்களிடையே அறிவை விருத்தி செய்வதுடன் தகவல் திரட்டலையும் செய்து வருகிறது.

2014ஆம் ஆண்டில் சுற்றாடல் முன்னோடி சஞ்சிகை 16 மாவட்டங்களில் விநியோகிக்கப்பட்டன. (மாவட்டம் ஒன்றில் தலா 2000 சஞ்சிகைகள்) சஞ்சிகைகள் விநியோகிக்கப்பட்ட மாவட்டங்களாவன: காலி, அம்பாந்தோட்டை, களுத்துறை, கம்பஹா, நுவரெலியா, மொனராகலை, மாத்தளை, கொழும்பு, கண்டி, அநுராதபுரம், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு.

### 11.2.9 மாவட்ட சுற்றாடல் முன்னோடி முகாம்கள்.

சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வுப் பிரிவு ஆண்டுதோறும் தேசிய முன்னோடி முகாம்களை ஏற்பாடு செய்து நடாத்தி வருகிறது. இது சுற்றாடல் முன்னோடிகளின் அறிவு மற்றும் அனுபவ பகிர்விற்குக் களமாக அமைந்துள்ளது. ஆகவே, ஓராண்டில் நடாத்தப்படும் தேசிய சுற்றாடல் முன்னோடி

முகாமுக்குப் பதிலாக 13 மாவட்ட சுற்றாடல் முன்னோடி முகாம்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டில் மாத்தறை, மாத்தளை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை, குருநாகல், மொனராகலை, புத்தளம், கண்டி, களுத்துறை, அம்பாறை, கொழும்பு மற்றும் இரத்தினபுரி ஆகிய 12 மாவட்டங்களில் முகாம்கள் நடாத்தப்பட்டுள்ளன. சனவரி மாதம் யாழ். மாவட்ட முகாம் நடாத்தப்படவுள்ளது.

### 11.2.10 சனாதிபதி பதக்கம் வழங்கல்

சுற்றாடல் முன்னோடி நிகழ்சித் திட்டத்தில் வழங்கப்படும் உயர் பதக்கம் சனாதிபதி பதக்கமாகும். தெரிவு செய்யப்பட்ட நடுவர் குழாமொன்றினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் பின்னர் தங்கப் பதக்கத்திற்குரியவர்களின் தெரிவு இடம்பெறும்.

2014ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சுற்றாடல் முன்னோடிகளுக்கான நேர்முகப் பரீட்சையில் 10 பாடசாலைகளைச் சேர்ந்த 25 மாணவர்கள் தங்கப் பதக்கம் பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் விபரங்கள் வருமாறு.

1. குரு/மாஸ்பொத்த மகா வித்தியாலயம் (4 மாணவர்கள்)
2. காலி/பட்டேமுல்ல தேசிய பாடசாலை (2 மாணவர்கள்)
3. மா/புனித தோமஸ் மகளிர் கல்லூரி (ஒரு மாணவர்)
4. காலி/சவுத்லண்ட் வித்தியாலயம் (ஒரு மாணவர்)
5. மா/தம்முல்கொட கனிஷ்ட வித்தியாலயம், கிரிந்த, புஹுல்வெல்ல (ஒரு மாணவர்)
6. களு/ஸ்ரீபாலி வித்தியாலயம், ஹொரண ( 9 மாணவர்கள்)
7. களு/கொஸ்வத்த கனிஷ்ட வித்தியாலயம், தொடங்கொட, களுத்துறை (9 மாணவர்கள்)
8. அம் /தம்மபால மகளிர் கல்லூரி, தங்காலை (03 மாணவவர்கள்)
9. அம் /தங்காலை மகளிர் வித்தியாலயம், தங்காலை (ஒரு மாணவர்)
10. இர/ஸ்ரீ சுமண மகளிர் மகாவித்தியாலயம், முவகம (03 மாணவர்கள்)

### 11.2.11 தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டம்

தூய்மையானதும் பசுமையானதுமான சுற்றாடலை உருவாக்கும் நோக்கத்துடன் சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வு பிரிவினால் தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. 2014ஆம் ஆண்டில் 25 மாவட்டங்களிலும் நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்த தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டம் அந்தந்த மாவட்டங்களில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

### 11.2.12 கல்வி மேம்பாட்டுக்கான செயலமர்வு

முன்பள்ளி மாணவர்களின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்கென பல்வேறு கோணங்களில் முன்பள்ளி சுற்றாடல் கல்வி நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்கென முன்பள்ளி ஆசிரியர் கைந்நூல் பயன்படுத்தப்படுகிறது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்மூலம் முன்பள்ளி சுற்றாடல் கல்வி தொடர்பாக சுற்றாடல் அலுவலர்களுக்கும் பயிலுநர்களுக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதோடு மாகாண மட்டத்தில் பயிற்சி பெற்ற வளவாளர்கள் மற்றும் பிரதேச சுற்றாடல் அலுவலர்களைக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் விழிப்புணர்வு செய்யப்பட்டனர்.

2014ஆம் ஆண்டில் சுற்றாடல் மேம்பாடு தொடர்பாக நடாத்தப்பட்ட செயலமர்வுகள் தொடர்பான விபரங்கள் வருமாறு.

| | திகதி | இடம் | பங்கேற்றோர் | விநியோகிக்கப்பட்ட நூல்கள் |
|---|---|---|---|---|
| 1. | 2014.05.09 | மத்திய சுற்றாடல் அதிகாரசபை கேட்போர் கூடம் (கொழும்பு மாவட்டத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்கள்) | 100 | 112 |
| 2. | 2014.11.28 | எமது கிராமம், கிராமிய கலைகளுக்கான நிலையம் (கோட்டை, கடுவலை முன்பள்ளி ஆசிரியர்கள்) | 210 | 10 |
| 3. | 2014.12.12 | எமது கிராமம், கிராமிய கலைகளுக்கான நிலையம் (ஹோமாகம, பாதுக்க, ஹங்வெல்ல, கொலொன்னாவை மற்றும் நுகேகொடை முன்பள்ளி ஆசிரியர்கள்) | 250 | - |

2014ஆம் ஆண்டில் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள சிங்கள மொழிமூல முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 513 கைந்நூல்கள் விநியோகிக்கப்பட்டன.

11.2.13 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கைந்நூல் அச்சிடல்

2014 ஆண்டில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான 4000 நூல்கள் அச்சிடப்பட்டன. (அதற்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன) பின்னர் அச்சிடப்பட்ட 1092 நூல்களுக்கான கொடுப்பனவு செலுத்தப்படவில்லை. அந்த வகையில் 2014ஆம் ஆண்டில் 5092 நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன.

### 11.2.14 சுனாதிபதி பதக்கம் வென்றவர்களின் பங்கேற்புடன் சுற்றாடல் கருத்திட்டங்கள்.

2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் திகதி அநுராதபுரத்திலுள்ள பொரஸ்ட் றொக் கார்டின் ஹோட்டலில் ஒரு நாள் செயலமர்வு நடாத்தப்பட்டது. இதில் சனாதிபதி பக்கம் வென்ற 45 பேர் பங்கேற்றிருந்தனர்.

### 11.2.15 சிறுவர் நட்புறவு மற்றும் ஊட்டப் பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி, விழிப்புணர்வுப் பிரிவினால் இச்செயற்பாடு இரண்டாம் கட்டப் பணியாக முன்னெடுக்கப்படுகிறது. மேல், மத்திய, கிழக்கு, தெற்கு, வடமேல், சம்பிரகமுவ, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள பிரதேச சுற்றாடல் அலுவலர்கள் மற்றும் சுற்றாடல் அலுவலர்களை விழிப்புணர்வு செய்யும் 8 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு.

| | திகதி | மாகாணம் | பங்கேற்ற அலுவலர்கள் |
|---|---|---|---|
| 7. | 2014.08.22 | மேல் மாகாணம் | 40 |
| 8. | 2014.09.29 | மத்திய மாகாணம் | 57 |
| 9. | 2014.11.03 | தென் மாகாணம் | 88 |
| 10. | 2014.11.27 | சப்ரகமுவ மாகாணம் | 26 |
| 11. | 2014.12.05 | ஊவா மாகாணம் | 22 |
| 12. | 2014.10.03 | வடமத்திய மாகாணம் | 24 |
| 13. | 2014.11.07 | வடமேல் மாகாணம் | 11 |
| 14. | 2014.10.27 | கிழக்கு மாகாணம் | 49 |

## 11.3. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆய்வுகூடங்களைப் பயன்படுத்தி அதனூடாக நாடெங்கிலும் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

## 11.4.தொம்பே மாளிகாவத்தை பிரதேசத்தில் அமைக்கப்படும் ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம்

11.4.1 **கருத்திட்ட விபரம்**

| | |
|---|---|
| கருத்திட்டத்தின் பெயர் | ஒருங்கிணைந்த திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ வசதிகள் - தொம்பே |
| முகவராண்மை | மத்திய சுற்றாடல் அதிகார சபை |
| மையம் | சுற்றாடல் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு (முன்னைநாள் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சு) |
| கருத்திட்டக் காலம் | 2008 – 2010 பின்னர் 2014 வரை நீடிக்கப்பட்டது. |
| கருத்திட்டப் பெறுமதி | 600 அமெரிக்க டொலர் (அன்பளிப்பு 45 அ.டொ. ஐரோப்பிய ஒன்றியம் 150 அ.டொ) |
| கருத்திட்டப் பிரதேசம் | மேல்மாகாணம் கம்பஹா மாவட்டம் தொம்பே பிரதேச செயலாளர் பிரிவின் கிரிந்திவெல வட்டாரம் மாளிகாவத்த. |
| கருத்திட்ட நிலப்பரப்பபு | உத்தேச காணயின் அளவு - 05 ஹெக்ரயர்<br>மீட்கப்பட்ட காணியின்அளவு - 02 ஹெக்ரயர்<br>உயரம் - 15 MH (உயரம் 5m X நீளம் 3m)<br>காலஎல்லை - அதிக பட்சமாக 90 தொன் வரை 06 ஆண்டுகள் (எவ்வாறாயினும் தினசரி அகற்றப்படும் தொன்களைக் கொண்டு தீர்மானிக்கப்படும்.<br>அமிலக் கழுவுகை பரிகரிப்பு - 40 m³ |
| கருத்திட்ட ஆக்கக்கூறுகள் | KOICA கொரிய வேலைத்தளம்<br><br>I. 02 ஹெக்ரயர் பரப்பில் சுகாதாரத்துடன் கூடிய நிலமூடுகையை அமைத்தல். |

| | |
|---|---|
| | II. அமிலக் கழுவுகை பரிகரிப்புத் தொகுதி.<br>III. நிருவாக மற்றும் பராமரிப்பு கட்ட திட்டமிடலும் அமைத்தலும்.<br>IV. வாகன (ரயர்) கழுவுமிடம்.<br>V. நிறுவை இயந்திரம்<br>VI. உபகரணங்களுக்கான நிதியிடல்.<br>VII. மழைநீர் வடிகாலமைப்புத் தொகுதி.<br>VIII. நிலத்தடி நீர்த்தரத்தை பரிசோதித்தல்<br>IX. நிர்மாண மேற்பார்வை<br>X. இலங்கை அதிகாரிகளுக்கு மூன்று கட்டங்களைக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.<br>XI. கொரிய நிபுணர்களை ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப சேவைகளுக்கென அனுப்புதல்.<br><br>சுற்றாடல் அதிகார சபையின் விடயப்பரப்பு<br>I. நில, மண் வேலை<br>II. கூட்டுப் பசளைத் தளம்<br>III. கருத்திட்ட வளாகத்திற்கான நுழைவு வீதிகள்<br>IV. 5 ஹெக்ரயர் பரப்பைச் சுற்றி வேலியமைத்தல்<br>V. மின்சாரம் வழங்கல்<br>VI. தொடர்பாடல் வசதிகள் |

#### 11.4.1.1 **அறிமுகம்**

மத்திய சுற்றாடல் அதிகார சபை இலங்கையில் சுகாதாரத்துடன் கூடிய நிலமூடுகை வசதிகளுக்கான நீதி மற்றும் தொழில்நுட்ப உதவிகோரி 2007 மே 16ஆம் திகதி கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையிடம் (KOICA) கருத்திட்ட முன்மொழிவொன்றைச் சமர்ப்பித்தது.

அதன்படி, 2007 செப்ரெம்பர் 17ஆம் திகதி KOICA நிறுவனத்தின் அலுவலர்கள் இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொண்டதுடன், சுகாதாரத்துடன் கூடிய மாதிரி நில மூடுகை ஒன்றை அமைப்பதற்கு நிதியொதுக்கீடு செய்வதாகவும் இணங்கினர். இதற்கென 4 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு (மஹரகம நகர சபை, சீத்தாவகபுர நகர சபை, ஹோமாகம நகர சபை, சீத்தாவகபுர பிரதேச சபை) வசதிகளை வழங்குவதற்கான காணிகளும் தெரிவு செய்யப்பட்டன. சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் செயலாளர் மற்றும் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு

முகவராண்மையின் (KOICA) வதிவிடப் பிரதிநிதிக்குமிடையில் 2008 ஏப்ரல் 24ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட தீர்மான அறிக்கைப்படியான உடன்படிக்கையில் இலங்கை அரசும் கொரிய அரசும் கையொப்பமிட்டன. அதன்படி, சுகாதாரத்துடன் கூடிய நிலமூடுகை அபிவிருத்திக்கென 450 மில்லியன் ரூபா தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்குவதற்கு கொரிய அரசு இணங்கியதுடன், வக, பெல்பொல பிரதேசத்தில் சுகாதாரத்துடனான நிலமூடுகை நிர்மாணத்திற்காக இலங்கை அரசு 150 மில்லியன் ரூபாவை வழங்க இணங்கியது.

வக பிரதேசத்தில் உத்தேச நிலமூடுகைத் திட்டத்திற்கு எதிராக எழுந்துள்ள எதிர்ப்பை கவனத்தில் கொண்டுள்ள அரசாங்கம் அந்தக் கருத்திட்டத்தை இரத்துச் செய்ததுடன் நகர அபிவிருத்தி அதிகார சபை அங்கீகாரம் வழங்குவதையும் நிராகரித்தது. எவ்வாறாயினும், கொரிய அரசு இலங்கைக்கு வழங்கவிருந்த நிதியை பயனுள்ளதாகப் பயன்படுத்தும் வகையில் கருத்திட்டப் பிரதேசத்தை வக பிரதேசத்தின் பெல்பொல தொடக்கம் தொம்பெ வரை மாற்றுவது பற்றிய சுற்றாடல் கலந்தாலோசிப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முயற்சி காரணமாக கருத்திட்டப் பிரதேசத்தை தொம்பே என மாற்றுவதற்கு KOICA நிறுவனம் இணங்கியது.

இந்த நிலமூடுகைத் திட்டத்தால் தொம்பே, பிரதேச சபை இறுதி வெளியேற்றல் களமாகத் தொழிற்படுவதுடன், நாளொன்றில் 10 தொன் கழிவுப்பொருள்களைப் பெறுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. சுகாதாரத்துடனான நிலமூடுகைக்கு மேலதிகமாக அந்த வளாகத்தில் கூட்டுப்பசளைத் தளமொன்றைப் பிலிசறு கருத்திட்டத்தின் நிதி உதவியின் கீழ் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இக்காணி ஆரம்பத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமானதாக அமைந்திருந்ததுடன், வனசீவராசிகள் திணைக்களத்திற்கு வணிக ரீதியான மர வளர்ப்பிற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. நிலமூடுகை நிர்மாணத்திற்காக 6 ஹெக்ரயர் விஸ்தீரணம் கொண்ட பிரதேசத்தை வழங்க (நீண்ட கால குத்தகை அடிப்படையில்) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாளுக்கு நாள் அதிகரிக்கும் திண்மக் கழிவுப்பொருட்கள், குறிப்பாக மேல்மாகாணத்தில் கழிவுப்பொருள் தொடர்பான பிரச்சினைக்கு சுற்றாடலுக்குத் தீங்கு நேராத வகையில் நிலையான தீர்வொன்றை வழங்குதல் இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

கருத்திட்டத்தின் நோக்கங்கள்,

1. கழிவுப்பொருள் முகாமைத்துவத்துக்குப் பொறுப்பாக செயலாற்றும் கொள்கை வகுப்பாளர்களினதும் அரசாங்கப் பணியாளர்களினதும் ஆற்றல்களை விருத்தி செய்தல்.

2. தொகுதியை பயனுள்ள விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக ஒத்திசைவுக் கொள்கைகள், பிரமாணங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் அடங்கிய கழிவுப்பொருள் முகாமைத்துவ வழிமுறையொன்றைத் தாபித்தல்.

3. மூலங்கள், பிறப்பாக்க வலு, குடிமனை கழிவுப் பொருட்களைச் சேகரித்தல் அத்துடன் / அல்லது பரிகரிப்பு தொடர்பான ஆய்வுகள்.

4. மேற்படி வலயத்தில் பிறப்பிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்களை சேகரிக்கும் தொகுதியைத் திட்டமிடுதல்.

5. சுகாதாரத்துடனான நிலமூடுகையுடன் சம்பந்தப்பட்ட ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள்.




***உருவப்படம் 01 – கருத்திட்டப் பிரதேசம்***

## 11.1.2 கருத்திட்டத்தின் வெற்றிகள்

11.4.2.1 கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் ஆற்றல் விருத்தி.

1. சுற்றாடல், இயற்கை வள அமைச்சு
2. மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
3. காணி சீர்திருத்த ஆணைக்குழு
4. திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம்
5. கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை மேல்மாகாணம்.
6. மஹரகம பிரதேச சபை
7. சீத்தாவகபுர பிரதேச சபை
8. சீத்தாவகபுர நகர சபை
9. ஹோமாகம பிரதேச சபை
10. தொம்பெ பிரதேச சபை
11. மொறட்டுவ பல்கலைக்கழகம்

12. மத்திய சுற்றாடல் அதிகாரசபை

ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 70 அலுவலர்களுக்கு கீழுள்ள தலைப்புகளின் கீழ் பயிற்சியளிக்கப்பட்டது.

- கழிவுப் பொருள் கொள்கை
- கழிவுப்பொருள் முகாமைத்துவம்
- கழிவுப்பொருள் வசதி முகாமைத்துவம்
- கூட்டுப்பசளை வசதி
- நிலமூடுகை தொழிற்பாடு, முகாமைத்துவம்

| **பயிற்சி** | **கால எல்லை** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| கழிவுப்பொருள் முகாமைத்துவக் கொள்கை | 2008.11.30 – 2008.06.12 | 11 |
| கழிவுப்பொருள் நிருவாகம் | 2009.11.01 – 2009.11.08 | 20 |
| கூட்டுப்பசளை வசதி முகாமைத்துவம் | 2011.04.10 – 2011.04.23 | 15 |
| கழிவுப்பொருள் வசதி முகாமைத்துவம் | 2011.06.06 – 2011.06.18 | 14 |
| நிலமூடுகை தொழிற்பாடு, முகாமைத்துவம் | 2013.11.04 – 2013.11.30 | 04 |
| நிலமூடுகை தொழிற்பாடு, முகாமைத்துவம் | 2013.11.24 – 2013.11.30 | 06 |
| மொத்தம் | | 70 |

11.4.2.2 **சாத்தியவள ஆய்வு**

இக்கருத்திட்டத்தின் ஆலோசகர்களாக 2009 சனவரி மாதம் KOICA நிறுவனத்தால் தெரிவுசெய்யப்பட்ட கொரியாவின் KUNHWA engineering & consulting தனியார் கம்பனி சாத்தியவள ஆய்வை மேற்கொண்டது.

தொப்பே உத்தேச கருத்திட்ட வளாகம் கொழும்பிலிருந்து 40Km தொலைவில் வனசீவராசிகள் திணைக்களத்திற்குச் சொந்தமான நிலப்பிரப்பில் அமைந்துள்ளது. 6 ஹெக்ரயருக்கும் அதிகமான விஸ்தீரணமுடைய இக்காணிக்கு போதிய அகலம் கொண்ட நுழைவு வீதி காணப்படுகிறது. இது பிரதான வீதியிலிருந்து 100 மீற்றர் தொலைவில் உள்ளது. கருத்திட்டப் பிரதேசத்தைச் சுற்றிய 250 மீற்றர் பரப்பில் குடியிருப்புகள் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

தொம்பே மாலிகாவத்த பிரதேசத்தில் அமைத்து தொழிற்படுத்தவுள்ள உத்தேச கூட்டுப்பசளைத் தளமும் நிலமூடுகையும் தொம்பே பிரதேச சபை எதிர்நோக்கியுள்ள நகரத் திண்மக்

கழிவுப்பொருளகற்றல் பிரச்சினையைத் தீர்ப்பதில் முக்கிய பங்காற்றுவதாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

11.4.2.3 **தொடக்க நிலை சுற்றாடல் மதிப்பீடு (IEE)**

மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் 2009 ஆகஸ்ட் மாதம் தொடக்க நிலை சுற்றாடல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

கருத்திட்ட அனுமதி முகவராண்மையினால் சாத்தியவள அறிக்கை வரவேற்பைப் பெற்றதுடன், வனப் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் அங்கீகாரமும் கிடைத்தது.

11.4.2.4 **விரிவான திட்டமிடல்**

KUNHWA engineering & consulting தனியார் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வு 2010 செப்ரெம்பர் மாதம் நிறைவடைந்தது.

11.4.2.5 **நில வேலை**

தீர்மான அறிக்கைப்படி நிலமூடுகையை அமைப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் (நுழைவு வீதி, மின்சாரம், நீர்வழங்கல், கழிவு துப்புரவு செய்தல் மற்றும் அகழ்வு, வேலி, நிலை மட்டப்படுத்தல் போன்ற வேலைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும்.

தொம்பே நிலமூடுகையின் பிற்பட்ட வேலைக்கான கேள்விப்பத்திரம் அரசாங்கத்தின் கேள்விப் பத்திர நடைமுறைக்கமைய 2010 திசெம்பர் 09 திகதி MS Orient Construction தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டது.

KOICA சமர்ப்பித்துள்ள திட்டத்தின்படியும் தீர்மான அறிக்கையில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளின்படியும் தொம்பே நிலமூடுகை அமைக்கப்பட்டதன் பின்னர் பிற்பட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு கட்டமைப்பை அமைப்பதற்காக 2012 யூன் 07 திகதி கொரிய குடியரசின் தூதுவர் மற்றும் சுற்றாடல் அமைச்சர் மாண்புமிகு அனுர பிரயதர்ஷன யாப்பா ஆகியோரின் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டது.



நிலமூடுகை கட்டமைப்பின் நிர்மாணப் பணிகளுக்காக 2012 ஆகஸ்ட் மாதம் 01 திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் KOICA நிறுவனம் கீழ் ஒப்பந்தக்காரரான சாம் ஹீ (SAM - HEE) நிர்மாணக் கம்பனியை முனைப்பான சேவைக்கு அழைத்தது. மேலும், அதிகார சபையுடன் இணைந்து

சோதனை ஆய்வுகளை ஒழுங்கு செய்வதற்கும் ஓட்டுமொத்தக் கருத்திட்டத்தை மேற்பார்வை செய்வதற்கும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வதிவிடப் பிரதிநிதியான கொரிய சுதொக்வான் நிலமூடுகை முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் (SLC) பொறியியலாளரான திரு. ஹீ முன் லீ (Hee Mun Lee) என்பவரை 2012 ஆகஸ்ட் 01 தொடக்கம் பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தது.

ஆரம்பத்தில் இயந்திர உபகரணங்கள் வழங்குதல், கனரக வாகனங்கள், கழிவுளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் உட்பட சகல நிர்மாணப் பணிகளையும் 2013 ஆகஸ்ட் மாதமளவில் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. தவிர்க்கமுடியாத காரணத்தால் (சீரற்ற காலநிலை) வேலை முடிவுத் திகதி பல தடவைகள் பிற்போடப்பட்டது. இறுதியாக 2014 மார்ச்சு வரை பிற்போடப்பட்டது.

நிலமூடுகை வாகனங்கள் தவிர்ந்த நிலமூடுகையுடன் சம்பந்தப்பட்ட சகல நிர்மாண நடவடிக்கைகள், பரிகரிப்புத் தொகுதி, பரீட்சார்த்த ஓட்டம் உட்பட பராமரிப்பு கட்டடம் போன்றவற்றின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு கொரிய குடியரசின் தூதுவர் திரு. ஏ.ஈ. சோய் ஜோன்க்மூன் மற்றும் சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் மாண்புமிகு சுசில் பிரேம ஜயந்த ஆகியோரின் முன்னிலையில் 2014 மார்ச்சு 25 திகதி மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டது.




11.4.2.6 **ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள்**

11.4.2.6.1 **கூட்டுப்பசளைத் தளம்**

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிலிசறு கருத்திட்டத்தால் கூட்டுப்பசளைத்தளம் நிர்மாணிக்கப்பட்டது.

11.4.2.3 **நிலமூடுகை வாகனங்கள்**

தீர்மான அறிக்கைபடி (ROD) நிலமூடுகை வேலைகளுக்கான வாகனங்கள் மற்றும் உபகரணங்களை வழங்கும் பொறுப்பினைக் கொரிய குடியரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆரம்பத்தில் சீத்தாவகபுர பிரதேச சபை, சீத்தாவகபுர நகரசபை, மஹரகம நகரசபை மற்றும் ஹோமாகம பிரதேச சபை ஆகிய 04 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் சேவை வழங்குமுகமாக வக, பெல்பொல பிரதேசத்தில் நில மூடுகையை அமைக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மக்களின்

எதிர்ப்பு மற்றும் சமூக அரசியல் காரணங்களினால் அதிகாரசபை அதை இரத்துச் செய்தது. பின்னர், தொம்பே மாலிகாவத்த பிரதேசத்திற்கு மாற்றப்பட்டது. இதனால் உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றுக்கு சேவை வழங்குமளவுக்கு கருத்திட்டத்தின் வீச்சுக் குறைவடைந்தது. எனவே, வக நிலமூடுகைக்காக ஒதுக்கப்பட்ட வாகனங்களின் அளவும் கொள்ளளவும் தற்போதைய பரப்பெல்லையுடன் பொருத்தமானதாக இல்லை.

2013 பெப்ரவரி 14 திகதி KOICA நிறுவனத்துடன் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின்போது இவ்விடயமும் நிலமூடுகை முகாமைத்துவத் திட்டமும் கலந்துரையாடலுக்கு எடுக்கப்பட்டதுடன், உத்தேச நிலமூடுகை முகாமைத்துவ திட்டத்துடன் கருத்திட்டத்திற்குத் தேவையான வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் உண்மையான தேவையை மீண்டும் முன்வைக்குமாறு KOICA நிறுவனம் அதிகார சபையிடம் வேண்டுகோளொன்றை முன்வைத்தது.

காலத்திற்குப் பொருத்தமான அபிவிருத்தி மாறுபாடுகளுக்குப் பொருத்தமான வகையில் கொரியாவில் நிலமூடுகை பற்றிய நீண்டகால அனுபவத்தைக் கொண்டுள்ள KOICA நிறுவனம் நியமித்துள்ள வதிவிடப் பிரதிநிதி ஹீ முன் லீ (Hee Mun Lee) என்பவருடன் கலந்தாலோசித்து கருத்திட்ட சாதனங்களின் உண்மையான தேவை பற்றி இறுதி முடிவு எடுக்கப்பட்டது.




**3.6.3 வாகனப் பட்டியல்**

01. Hiundai Santafe ஜீப் வண்டி - WP KH 8628
02. Hiundai H1 வான் வண்டி - WP NA 7310
03. Nissan Navara டபிள் கப் வண்டி - WP PF 7159
04. Nissan Navara டபிள் கப் வண்டி - WP PF 7161
05. Isuzu க்கூருகப் வண்டி - WP PF 7258
06. குப்பையேற்றிச்செல்லும் ரக் வண்டி -WP LL 5319
07. Ashok Laylend குப்பை கேசரிப்பு கம்பெக்ரர் -WP LL 5614

08. Ashok Laylend කසළ එකතු කිරීමේ කම්පැක්ටර් -WP LL 5618

09. Ashok Laylend කසළ එකතු කිරීමේ කම්පැක්ටර් -WP LL 5295

10. Ashok Laylend කසළ එකතු කිරීමේ කම්පැක්ටර් -WP LL 5301

11. வீல் லோடர் இயந்திரம் -

12. டோசர் -

வீல் லோடர் இயந்திரமும் டோசரும் 2014 திசெம்பர் 31ஆம் திகதியளவிலும் நிறுவனத்தால் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 2015 சனவரி இறுதியில் வீல் லோடர் இயந்திரத்தை வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. ஏனைய சகல வாகனங்களும் பயன்பாட்டின்பொருட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டன.

### 11.4.3 பராமரிப்புக் கட்டடம்

பராமரிப்புக் கட்டடத்தில் கூட்ட மண்டபம், அலுவலக வசதிகள், கேட்போர்கூடம் என்பன காணப்படுகின்றன.




### 11.4.3.1 அமிலப் பரிகரிப்புத் தொகுதி

அமிலக் கழிவு நீர் (கூட்டுப் பசளைத் தளத்தினதும் வாகன கழுவுமிடங்களினதும்) அதற்கான வடிகாலமைப்புத் தொகுதி ஊடாக சேகரிப்பு நீர்நிலை அல்லது மக்கல் தொட்டிக்கு அனுப்பப்படும். ஈர நிலத்தைக் கடந்து செல்லுமுன் படிமுறை வகையீட்டு பரிகரிப்பு (SBR) தொகுதியில் பரிகரிப்பு செய்யப்பட்டு இறுதியாக நீர்நிலைகளுக்கு வெளியேற்றப்படும்.



### 11.4.3.2 **நிறுவை பாலம்**

நிலமூடுகைக்காக குப்பைகளைக் கொண்டுவரும் வாகனங்களின் நிறையை அளவிடுவதன் மூலம் குப்பை தகன கொள்ளளவைத் தீர்மானிப்பதற்கு 30 தொன் கொள்ளளவுடைய நிறுவைப் பாலமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வினைத்திறனுடன் கூடிய நிலமூடுகை மற்றும் இலாபகரமான செயற்பாட்டுக்கு உதவக்கூடிய எதிர்பாக்கும் கொள்ளளவும் உண்மையான கொள்ளளவும் பகுப்பாய்வு செய்யப்படும்.



### 11.4.3.3 **தானியங்கி ரயர் கழுவும் தொகுதி**

பிரதான பாதை அசுத்தமடையாதவாறு நிலமூடுகைக்காக குப்பைகளை ஏற்றிவரும் வாகனங்களின் அடிப்பகுதியையும் சில்லுகளையும் இந்த தானியங்கி ரயர் கழுவும் தொகுதி சுத்தம் செய்கிறது. கருத்திட்ட பிரதேசத்தினுள் வரும் சகல வாகனங்களும் கட்டாயமாக இந்த முறையைப் பின்பற்ற வேண்டும். இந்தத் தொகுதியில் தூய்மையான நீரை வைத்திருக்க வேண்டுமென்பதற்காக அசுத்த நீர் அவ்வப்போது மாற்றப்படும். கழிவுநீர் சுத்திகரிப்பதற்காக பரிகரிப்புத் தொகுதிக்கு அனுப்பப்படும்.



### 11.4.3.4 **CCTVகட்டமைப்பு**

நிலமூடுகையை நோக்கி வந்து செல்லும் வாகனங்களைக் கண்காணிப்பதற்கும் அமிலக் கழுவுகை பரிகரிப்புத் தொகுதியைக் கண்காணிப்பதற்கும் மூன்று CCTV கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.




11.4.3.5 **நிலத்தடி நீர் ஆய்வு குழாய் கிணறு**

நிலத்தடி நீர்த்தரத்தை ஆராயுமுகமாக மூன்று குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.




11.4.3.6 **நிலமூடுகை முகாமைத்துவம்**

சுகாதாரத்துடனான நிலமூடுகையின் தொழிற்பாட்டு கட்டடத்தில் எதிர்காலத்தில் பயன்படுத்தக்கூடிய மேலதிகமாக 40,000 கியூபிக் மீற்றர் அளந்தெடுக்கப்பட்ட மண் வைக்கப்பட்டுள்ளது.

நிர்மாணங்கள் பற்றிய குறைபாடுகளை ஏற்கும் கால எல்லை 2014 மார்ச்சு 25ஆம் திகதியுடன் ஆரம்பித்து அடுத்துவரும் 02 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும்.

முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2013.10.08 திகதி பதவியணிக்காக அங்கீகாரம் பெறப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் தொம்பே பிரதேச சபை அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

11.4.3.7 **உத்தேச நிறுவனக் குறிப்பு**




11.4.4.**கற்ற பாடங்கள்**

11.4.4.1 கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2008இல் ஆரம்பித்து 2010 ஆம் ஆண்டில் நிறைவடைய இருந்தபோதும் ஆரம்பத்தில் வக பிரதேசத்தில் அமைக்கப்படவிருந்த நிலமூடுகைக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் தொம்பே பிரதேசத்திற்கு மாற்றப்பட்டது. தொம்பே பிரதேசத்திலும் மக்கள் எதிர்ப்பு காரணமாக காலத்திட்டக் கால எல்லை நீடிக்கப்பட்டு 2012இல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2014இல் நிறைவடைந்தது.

11.4.4.2 4 ஆண்டு கால தாமதம் காரணமாக ரூபாய் மதிப்பிறக்கம், மூலப்பொருள் மற்றும் ஊயத்திற்கான செலவினம் அதிகரித்ததால் கருத்திட்ட ஆகுசெலவில் தாக்கம் ஏற்பட்டது.

11.4.4.3 நிலமூடுகை நிர்மாணப் பணிகளை கொரிய கம்பனி நிறைவு செய்தபோதும், கீழ் ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வதில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை எவ்விதத்திலும் தொடர்புபடாததால் தரமான சேவையைப் பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டன.

11.4.4.4 இது இலங்கையில் நிர்மாணிக்கப்படும் சுகாதாரத்துடனான முதலாவது நிலமூடுகையாக இருப்பதோடு உள்நாட்டுத் தேவைக்கு வெளிநாட்டுத் தொழில்நுட்பத்தைப் புகுத்தும்போது அவதானமாகச் செயலாற்ற வேண்டும். நிர்மாணம் முடிந்த பின்னரும்கூட நிபுணர்களின் ஆலோசனை அவசியமாகும்.

11.4.4.5. திட்டமிடல் மற்றும் மேற்பார்வைப் பணிகளை இரண்டு கம்பனிகள் மேற்கொண்டதன் காரணமாக இனங்காணப்பட்ட மாறுபாடுகளைச் சரிசெய்வதில் சிரமம் ஏற்பட்டது.

11.4.4.6 தீர்மான அறிக்கையிலுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி பொருட்கள், சேவைகள் பெறுகையின்போது வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களை சகல விதமான உள்நாட்டு வரிகளிலிருந்தும் விடுவித்தல் வேண்டும். இல்லாவிடின் மீள்நிரப்பும் தொகைக்கு வரையறை இருத்தல் கூடாது போன்ற தளர்வான நிபந்தனை உள்ளடக்கப்பட்டுள்ளதால் மீள்நிரப்பும் தொகை பற்றி முகவராண்மைக்கு (மத்திய சுற்றாடல் அதிகார சபை) எவ்வித கட்டுப்பாடும் இருக்காது. எனவே, ஒப்பந்தம், கீழ் ஒப்பந்தம் பற்றிய தீர்மானங்களை எடுக்கும்போது வரி தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு தொகையை தீர்மானிக்க வேண்டும். அங்கீகாரம் வழங்கக்கூடியதும் முடியாததுமான உரித்துத் தொடர்பான ஒப்பந்த வாசகங்கள் மற்றும் நியதிகள் தெளிவாக இருத்தல் வேண்டும்.

11.4.4.7 மீள்நிரப்பலுக்கென ஒப்பந்தகாரர் உத்தரவாதமளித்துள்ள பணத்திற்கான தீர்ப்பனவு அட்டைகளை வழங்க வேண்டும். இவ்வாறான கோரிக்கைகளுக்கான கால வரையறையுடன் மாதாந்தம் சமர்ப்பித்தல் வேண்டும்.

11.4.4.8 கருத்திட்டத்தை திட்டமிட்டபோது பிரதேச அரசியல்வாதிகள் வழிநடத்திய எதிர்ப்பினால் பிரதான பங்காளரான தொம்பே பிரதேச சபையின் முழுமையான ஒத்துழைப்பைப் பெற முடியாதுபோனதோடு கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது அந்த நிறுனத்தின் முழுமையான ஒத்துழைப்பைப் பெற முடிந்தது.

**11.4.5 கருத்திட்ட கிரயம்**

| | |
|---|---|
| KOICA நிறுவனம் | : 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் |
| உட்கட்டமைப்பு வசதிகள் | :3.04 மில்லியன் அமெரிக்க டொலர்கள் |
| நிபுணர்கள் | : 0.49 மில்லியன் அமெரிக்க டொலர்கள் |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | : 0.27 மில்லியன் அமெரிக்க டொலர்கள் |
| உபகரணங்கள் | : 0.67 மில்லியன் அமெரிக்க டொலர்கள் |
| ஏனையவை (போக்குவரத்து, நிதிமதிப்பீடு) | : 0.03 மில்லியன் அமெரிக்க டொலர்கள் |
| | |
| GOSL நிதியம் | : 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் |
| தீர்வை வரி, வீத வரி | |
| உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி | |
| கருத்திட்ட ஒருங்கிணைப்பும் முகாமைத்துவமும் | |
| மேம்பாட்டு நடவடிக்கைகள் | |

### 11.4.5.1 உண்மையான கிரயம்

ஒதுக்கீட்டு செலவுத் தலைப்பு - 160-2-3-31-2502 (17)

சகல பெறுமானங்களும் மில்லியன் ரூபாவில்

| ஆண்டு | ஒதுக்கீடு | மேலதிக | ஆகுசெலவு | மொத்த ஒதுக்கீடு | திரட்டிய ஆகுசெலவு |
|---|---|---|---|---|---|
| 2008 | 15.00 | | | 15.00 | |
| 2009 | 140.00 | | 25.62 | 140.00 | 25.62 |
| 2010 | 82.00 | | 0.22 | 82.00 | 25.85 |
| 2011 | 18.00 | 3.10 | 21.1 | 21.10 | 46.98 |
| 2012 | 80.00 | | 69.91 | 80.00 | 116.86 |
| 2013 | 40.00 | 12.50 | 46.03 | 40.00 | 162.88 |
| 2014 | 30.00 | (10.00) | 15.86 | 20.00 | 178.74 |
| மொத்தம் | 405.00 | 15.60 | 178.74 | 420.60 | |

### 11.4.5.2 நிதிக் கிரயம்

2014.12.31 திகதியுடன் முடிவுற்ற அறிக்கையிடலின்படி நிதிக் கடப்பாடுகளும் பொறுப்புகளும் பின்வருமாறு அமைந்தன.

| வகுதி எண் | விவரம் | செலுத்த வேண்டியது | செலுத்த வேண்டிய தொகை (ரூ.மி) |
|---|---|---|---|
| 01 | நுழைவு வீதி – தொம்பே | பிரதேச வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 29.98 |
| 02 | காணொளி ஆவண நிகழ்ச்சித் திட்டம் | Selacine நிறுவனம் | 0.24 |
| 03 | சுங்கவரி – நில மூடுகை வாகனங்கள் 02 | இலங்கை சுங்கம் | 2.3 |
| மொத்தம் | | | 32.52 |

**11.4.5.3 வைப்புகள்**

தொம்பே நிலமூடுகை தொழிற்பாட்டுக் காலத்தின் பாதுகாப்பு கவசங்களுக்கான பீ.பீ. உறைகள் (P.P Bags') மற்றும் உலோகத் தேவைகளை கொள்வனவு செய்வதற்கென KOICA நிறுவனம் ரூபா 6, 390,307.41 தொகையைப் பொதுத் திறைசேரியில் வைப்புச் செய்திருந்தது. (கோப்பு இல. 07/SDF/Fin/2014)

11.4.5.4 **சொத்துக்கள்**

1. நிலமூடுகை (02 ஹெக்ரயர்)
2. டயர் கழுவுமிடம்
3. நிறுவை பாலம்
4. CCTV கமரா கட்டமைப்பு
5. ஜெனரேட்டர்
6. கழிவுநீர் பரிகரிப்புத் தொகுதி
7. ஆய்வுக் கிணறுகள்
8. பராமரிப்புக் கட்டடம்
9. உள்ளக வீதிகள்
10. மேலதிக பொருட்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

| **வாகனம்** | **தயாரித்த ஆண்டு** | **அளவு** | **ஏனைய** |
|---|---|---|---|
| டோசர் | JCB | 01 | மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| டபள் கப் | Nissan | 02 | மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| க்று கப் | Isuzu | 01 | மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| Excavator | Caterpillar | 01 | மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| கம்பெக்ரர் (05 தொன்) | Ashok Leyland | 02 | மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| கம்பெக்ரர் (02 தொன்) | Ashok Layland | 02 | மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

| வாகனம் | தயாரித்த ஆண்டு | அளவு | ஏனைய |
|---|---|---|---|
| குப்பை ஏற்றிச் செல்லும் ரக் வண்டி | Ashok Leyland | 01 | மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| ஜீப் வண்டி | Hyundai | 01 | மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| வான் (VAN) | Hyundai | 01 | மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

குறிப்பு: KOICA நிறுவனம் வாகனங்களின் பதிவு தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்க உள்ளது.

| உபகரணம் | தயாரித்த ஆண்டு | அளவு |
|---|---|---|
| தொலைநகல் இயந்திரம் | Canon | 01 |
| ஸ்கானர் இயந்திரம் | HP | 01 |
| குணினி | LG | 01 |
| ஒளிப்படப்பிரதி இயந்திரம் | Canon | 01 |

## 11.5 இலங்கையில் திண்மக் கழிவுப் பொருள் அகற்றல் கருத்திட்டம் (கொரிய பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம்)

**அறிமுகம்**

### 11.5.1 நோக்கம்

சுற்றாடல், சுகாதாரம் சார்ந்த பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தும் வகையில் பொறுப்பின்றி நிகழ்காலத்தில் வெளியேற்றுகின்ற நகரத்து திண்மக் கழிவுப்பொருள்களை இறுதியாக அகற்றுவதற்காக சுகாதாரத்துடன் கூடியதும் அறிவியல் முறைப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான நிலமூடுகை வழிமுறையின் ஊடாக கழிவுப்பொருள் முகாமைத்துவ தீர்வுகள் பலவற்றை ஏற்படுத்த மத்திய சுற்றாடல் அதிகார சபை திட்டமிட்டுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபை இலங்கை அரசினால் திட்டவட்டமாக அறிவித்துள்ள வேலைத்திட்டத்துடன் இணங்கியொழுகி இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட சில நகரங்களில் சுகாதாரத்துடனான நிலமூடுகையை அமைப்பதற்காக கொரிய ஏற்றுமதி அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் (EDCF) கடன் திட்டத்தின் கீழ் கொரிய குடியரசின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியிலிருந்து நிதி உதவி பெறுமாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபை பொதுத் திறைசேரியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்த நிலமூடுகைகள் அநுராதபுரம் கீரிக்குளம், ஹிக்கடுவ மொன்றோவியாவத்த, பாணந்துறை மாலமுல்ல, உடுநுவர கோனதிகவத்த போன்ற பிரதேசங்களில் அமைக்கப்பட இருப்பதோடு, இவை அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களால் பிறப்பிக்கப்படும் கழிவுப்பொருட்களை இறுதியாக அகற்றும் இடங்களாக தொழிற்படவுள்ளன.

இக்கருத்திட்டத்தின் மொத்த ஆகுசெலவு 41.886 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் 33.536 மில்லியன் அமெரிக்க டொலர் தொகையை ஏற்றுமதி அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ள இருப்பதோடு, 8.350 மில்லியன் ரூபாவினை இலங்கை அரசு வழங்கவுள்ளது. ஏற்றுமதி அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் வழங்கும் கடன் தொகை சம்பந்தப்பட்ட நியமங்களும் நிபந்தனைகளும் நிதிபெறும் நாடுகளின் போக்குகளுக்கு அமையத் தீர்மானிக்கப்படும்.

### 11.5.2 கருத்திட்டத்தின் பரப்பெல்லை.

- நிலமூடுகை கீழ்வரும் இடங்களில் அமைக்கப்படும்
  - ✓ பாணந்துறை (பேருவளைக்கு மாற்றப்பட்டது)
  - ✓ கிழக்கு நுவரகம்பலாத, அனுராதபுரம்
  - ✓ உடுநுவர
  - ✓ ஹிக்கடுவ
- பரிகரிப்பு முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல்.
- நிலமூடுகை வாயு முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல்.
- கழிவுப்பொருள் தொடர்பான மதிப்பீடு.
- கழிவுப்பொருள் வெளியேற்றும் வழிமுறை மற்றும் சாத்தியவள ஆய்வு.

### 11.5.3 எதிர்பார்க்கும் அனுகூலங்கள்

மேற்படி பிரதேசங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்ளத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் பெரும்பங்காற்றுவதாய் அமையும். கருத்திட்டத்தின் முடிவில் வேலைவாய்ப்புகளும் பொருளாதார அபிவிருத்தியும் ஏற்படுவதால் தேசிய பிம்பமும் கட்டியெழுப்பப்படும். இக்கருத்திட்டத்தால் நகர சபைகளினால் கொண்டுவரப்படுகின்ற கழிவுப்பொருட்கள் முறையாக வெளியேற்றப்படுவதால் மிகச் சிறந்த சுகாதாரமும் துப்புரவேற்பாடும் உறுதி செய்யப்படும். இதனால் நோய்களினால் பீடிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவதோடு வருமான மார்க்கங்களும் உருவாகும்.

கருத்திட்டத்தின் நிறைவில்,

- கருத்திட்ட வளாகத்தை அண்டிய சுற்றாடலின் தரம் உயரும்.
- பிரதேசவாசிகளின் ஆரோக்கியமும் துப்புரவேற்பாடும் மேம்படும்.
- கழிவு நீர் பரிகரிப்புத் தொகுதியினால் துப்பரவேற்பாடு மேம்படும்.
- மண், நீர் மற்றும் வளி மாசுபடுதல் உட்பட்ட சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் குறையும்.
- ஒருங்கிணைந்த திண்மக் கழிவுப்பொருள் பொறுப்பை பிரச்சினைக்குத் தீர்வு காணும் தொழில்நுட்ப வல்லுநர்களிடம் ஒப்படைத்தல்.

என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

கருத்திட்ட அமுலாக்கத்தால் எதிர்பார்க்கப்படும் சுற்றாடல், தொழில்நுட்ப, சமூக மற்றும் பொருளாதாரம் சார்ந்த அடைவுகள் வருமாறு.

- சுற்றாடல் சார்ந்த அனுகூலங்கள்
  - ✓ மீள்சுழற்சியாக்க வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தல்.
  - ✓ துப்புரவேற்பாட்டுத் தொகுதிமூலம் குடியிருப்பாளர்களுக்கு கவர்ச்சிகரமான சூழலை உருவாக்குதல்.
  - ✓ குடியிருப்பாளர்களின் ஆரோக்கிய நிலைமை மேம்படும்.
  - ✓ இரண்டாம் நிலை சுகாதார சிக்கல்கள் குறைதல், முறையான அறிவியல் வழிமுறைகள் பின்பற்றப்படுவதால் நிலக்காட்சி மேம்படும்.
  - ✓ முறையற்ற விதமாகக் கழிவுப்பொருட்களை அகற்றுவதால் ஏற்படுகின்ற சுற்றாடல் மாசுபடுதலிலிருந்து சுற்றாடலைப் பாதுகாத்தல்.
  - ✓ பொதுமக்களின் முறைப்பாடுகளைத் தீர்த்தல், சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் மக்களின் மேம்பட்ட சுகாதார நிலைமையை உறுதிப்படுத்தல்.
  - ✓ தேசிய நிலப் பயன்பாட்டுத் திட்டத்தின்படி ஓய்வுக்கும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்குமான இடவசதிகளை உறுதிசெய்தல்.
- தொழில்நுட்பம் சார்ந்த அனுகூலங்கள்

- ✓ விரிவான முகாமைத்துவத்தால் நம்பகத் தன்மை மற்றும் சிக்கன கழிவுப்பொருள் முகாமைத்துவத் தொகுதியை உருவாக்குதல்.
- ✓ நீண்டகால அடிப்படையில் சுகாதாரம் கெடாத வகையில் கழிவுப்பொருள்களை அகற்றுதல்.
- ✓ நிலமூடுகை பராமரிப்பு மற்றும் தொழிற்பாடு பற்றிய தொழில்நுட்ப அறிவைப் பெறல்.
- ✓ பரிகரிப்பு மற்றும் முகாமைத்துவ தொழில்நுட்பத்தை பெற்றுக்கொள்ளுதல்.

➢ பொருளாதார அனுகூலங்கள்

- ✓ சீரான நிலப் பயன்பாடு.
- ✓ குடியிருப்பாளர்கள் கழிவுப்பொருள்களை அகற்றுவதில் ஏற்க வேண்டிய செலவு மீதம்.
- ✓ நிலமூடுகை நடவடிக்கையால் சுற்றாடல் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வு மேம்படல்.
- ✓ அயல் சூழலுக்கு ஏற்றவகையில் உள்ளக செயற்பாடுகள் அமைவதால் பொருளாதார நலன்கள் ஏற்படல்.
- ✓ குடிமனைசார் கழிவகற்றல் மற்றும் முகாமைத்துவத்திற்கான செலவு மீதம்.
- ✓ வளங்கள் மீள்சுழற்சி செய்யப்படுபவதால் செலவு குறைதல்.

➢ சமூக ரீதியான அனுகூலங்கள்

- ✓ நம்பகத் தன்மை, சுகாதாரத்துடன் கூடிய கழிவுப்பொருளகற்றல் வசதி.
- ✓ சூழலுக்கு ஏற்ற வகையில் நில மூடுகை அமைவதால் உளப்பாங்கில் மாற்றம் ஏற்படல்.
- ✓ சூழல்நேய எண்ணக்கருக்கள் கையாளப்படுவதால் சுற்றாடல், நிலமூடுகை தொடர்பில் மக்களின் புரிந்துணர்வு அதிகரித்தல்.
- ✓ கழிவுப்பொருள் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படுவதால் நிலமூடுகை வசதிகளுக்கான காணிகளைப் பெறுவதிலுள்ள சிக்கல்களுக்குத் தீர்வு கிடைத்தல்.
- ✓ நீண்டகால அடிப்படையில் துப்புரவேற்பாட்டு நிலமூடுகை அமைக்கப்படல்.
- ✓ பிரதேச அபிவிருத்தியில் பங்கெடுத்தல்.

### 11.5.3.1 கருத்திட்டப் பிரதேசங்கள்



### 11.5.3.2 பேருவளை பயாகல கருத்திட்ட வளாகம்

பாணந்துறை மாலமுல்ல பிரதேசத்தில் மீட்கப்பட்ட காணியின் தேவை 2.07 ஹெக்ரயர் (5.1 ஏக்கர்) ஆக இருந்ததோடு, சட்டவிரோத சுவீகரிப்புகளின் பின்னர் இது 1.6 ஹெக்ரயராக மட்டுப்படுத்தப்பட்டது. ஆலோசகர்களால் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை ஆய்வில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின்படி உண்மையான கழிவுப்பொருள்களின் அளவு சாத்தியவள ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ள அளவைவிட இருமடங்கு அதிகமாகும்.

04 உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய கழிவுகள் (பாணந்துறை நகர சபை, களுத்துறை நகர சபை, பாணந்துறை பிரதேச சபை, களுத்துறை பிரதேச சபை) இந்த சுகாதாரத்துடன் கூடிய நிலமூடுகைக்கு கொண்டு வரப்படவுள்ளன.

பாணந்துறை பிரதேச செயலாளர் இக்கருத்திட்டத்திற்கென 1.6498 ஹெக்ரயர் விஸ்தீரணம் கொண்ட காணித் துண்டமொன்றை ஒதுக்குவதற்கு இணக்கம் தெரிவித்தார். கருத்திட்ட வளாகம் அனுமதியற்ற குடியிருப்பாளர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள காணி சுவீகரிப்புப் பணிகளை இலகுபடுத்துவதற்கு வளாகத்தைச் சுற்றி வேலியொன்றை அமைக்க வேண்டியுள்ளது.

வேலி அமைப்பதற்கென கேள்விப் பத்திரம் அளிக்கப்பட்டபோதும் (339/3008/14) வளாகத்தை ஊடறுத்துச் செல்லும் பாதை தொடர்பில் பாணந்துறை பிரதேச சபையினால் எதிர்பாராத விதமாகப் பிரச்சினைகளை எழுப்பியதால் இது தற்காலிகமாக இரத்துச்செய்யப்பட்டது.

2014 யூலை 01ஆம் திகதி பாணந்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் மற்றும் அதன் பின்னர் நடாத்தப்பட்ட கருத்திட்ட வளாக சோதனையின்படி குறித்த பாதையை கருத்திட்ட வளாகத்தின் எல்லையோடு அமையும் வண்ணம் மாற்றியமைப்பதற்கு சகல தரப்பாலும் உடன்பாடு காணப்பட்டது. எனவே, இதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் முன்மொழிவைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது.

பாணந்துறை பிரதேச சபை அங்கத்தவர் ஒருவர் இக்கருத்திட்டம் பற்றி பிரதேச சபை உறுப்பினர்களைத் தெளிவுபடுத்துமாறு கோரினார். அதன்படி கருத்திட்டம் பற்றிய முன்னிலைப்படுத்தல் ஒன்றும் அது பற்றிய கலந்துரையாடலும் 2014 யூலை 21ஆம் திகதி பாணந்துறை பிரதேச சபையில் அதன் தலைவர், உபதலைவர் மற்றும் செயலாளர் உட்பட மூன்று உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் உடன்பாடு எட்டப்பட்டதையடுத்து 25ஆம் திகதி பாணந்துறை பிரதேசத்தில் கழிவுப்பொருள்கள் பற்றிய ஆய்வொன்றை நடாத்த வேண்டுமென பாணந்துறை பிரதேச சபையிடம் தெரிவிக்கப்பட்டது. ஆலோசகர்களால் தீர்மானிக்கப்படும் ஒரு திகதியில் கற்குழியின் அடிமட்டத்தை ஆய்வு செய்ய வேண்டுமாயின் அதிலுள்ள நீர் அகற்றப்படல் வேண்டும்.

மேலும், கருத்திட்ட வளாகத்தின் எல்லையை ஒட்டியதாக பாதையை மாற்றியமைப்பதன் பொருத்தப்பாடு பற்றியும் ஆராய வேண்டியுள்ளது.

மேற்படி கற்குழியிலுள்ள நீரை அகற்றுவதற்கு பாணந்துறை பிரதேச சபையின் எழுத்திலான அனுமதி பெறப்பட்டதோடு, 2014 யூலை 26 (சனிக்கிழமை) அப்பணி மேற்கொள்ளப்பட்டது. எனினும், 2014 யூலை 21ஆம் திகதி பாணந்துறை பிரதேச சபை அங்கத்தவர்கள் இருவரின் பக்கபலத்தால் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தால் அப்பணிகளைத் தொடர முடியவில்லை.



மாலமுல்ல கருத்திட்ட வளாகத்தில் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

எனவே, இந்த வேலைத்திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டதோடு சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் மாண்புமிகு சுசில் பிரேம ஜயந்த அவர்களின் தலைமையிலான கூட்டத்தில் அதுபற்றி விரிவாக ஆராயப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் ஆலோசர்கள் பின்வரும் காரணங்களை முன்வைத்து குறித்த கருத்திட்டத்தை முன்னெடுப்பதிலுள்ள சிக்கல்களை எடுத்துக் கூறினார்கள்.

- தொழில்நுட்ப மற்றும் சுற்றாடல் ரீதியாக பெற்றுக்கொள்ளக்கூடிய காணியின் அளவு குறைந்தமை (பிரதானமாக 2.07 ஹெக்ரயர் (5.1 ஏக்கர்) பாணந்துறை நிலமூடுகைக்குத் தேவையெனினும் சட்டவிரோத சுவீகரிப்புகள் காரணமாக அது 1.6 ஹெக்ரயராகக் குறைந்தது.)
- பிரதேச அரசியல்வாதிகளின் பக்கபலத்துடன் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்.
- பொருளாதார ரீதியில் நிலமூடுகையின் ஆயுட்காலம் குறைவடைந்தமை. (சாத்தியவள ஆய்வின்படி கிடைக்கப்பெற்ற தரவுகளை உறுதிப்படுத்துமுகமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சாத்தியவள ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளதைவிட இருமடங்கு கழிவுப்பொருள்கள் சேர்கின்றமை)

அதன்படி 05 ஏக்கர் விஸ்தீரணமான காணியொன்றைப் பெற்றுக்கொள்வது உசிதமானதென ஆலோசகர்களால் யோசனை முன்வைக்கப்பட்டது.

இவ்விடயத்தை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தவிசாளரது கவனத்திற்குக் கொண்டு வந்த பின்னர் பேருவளை பிரதேச சபையின் பயாகல பிரதேசத்தில் பொருத்தமான காணியைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான இக்காணி விடுவிக்கப்பட்டதும் கருத்திட்டத்திற்குரிய காணியாகவே இருக்கும். இதனிடையே காணியைத் துப்புரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டாலும், அப்பணிகள் இன்னமும் நிறைவுபெறவில்லை.

அதன்படி இக்கருத்திட்டத்தினால் பேருவளை நகரசபை, களுத்துறை நகர சபை, பேருவளை பிரதேச சபை, களுத்துறை பிரதேச சபை ஆகிய நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கழிவுப்பொருள்கள் பற்றிய ஆய்வு ஆலோசகர்களால் முன்னெடுக்கப்படுவதோடு, கருத்திட்ட வளாகத்தின் ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



பேருவளை உத்தேச கருத்திட்ட பிரதேசம்



கருத்திட்டப் பிரதேசம் பார்வையிடப்படுகிறது.

### 11.5.3.3 உடுநுவர கோனதிகவத்த கருத்திட்டப் பிரதேசம்

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள 04 கருத்திட்டங்களில் ஒன்று உடுநுவர பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கோனதிகவத்த பிரதேசத்தில் அமையவுள்ளது. மத்திய மாகாணத்திலுள்ள 11 உள்ளூராட்சி நிறுவனங்கள் சூழல் நேய விதத்தில் கழிவுகளை அகற்றும் நோக்கத்துடன் இக்கருத்திட்டம் அமையவுள்ளது.



கருத்திட்ட வலயம் பார்வையிடப்படுகிறது




கோனதிகவத்த உத்தேச கருத்திட்ட பிரதேசம்

### 11.5.3.4 கோனதிகவத்த கருத்திட்டத்தின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை

உத்தேச நில மூடுகைக்கு மேலதிகமாக மத்திய மாகாணத்தின் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் சிலவற்றிலிருந்து கொண்டு வரப்படும் சேதனப் பொருட்களைப் பயன்படுத்தி கூட்டுப்பசளை தயாரிக்கும் தளமொன்றை அமைக்கவும் திட்டமிடப்படுகிறது.

இக்கருத்திட்டப் பிரதேசம் இலங்கையின் மண்ணரிப்பு எற்படும் வலயத்தில் அமைந்துள்ளதால் 2008 மே 22ஆம் திகதிய மற்றும் 1330/9ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் ஏற்பாடுகளின்படி அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். எனவே, கருத்திட்ட முன்மொழிவாளர் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை (EIA) மேற்கொள்ள வேண்டும்.

நகர அபிவிருத்தி அதிகாரசபை கருத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கும் நிறுவனமாகும். சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சுற்றாடல் கற்கை நிலையத்தைத் தெரிவு செய்துள்ளது. அதன்படி CES மேற்கொண்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை வரைவு தயாரிக்கப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட தரப்பினரின் பங்கேற்புடன் தொழில்நுட்ப குழுக் கூட்டங்கள் நடாத்தி EIA அறிக்கையை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபை 2014.04.24ஆம் திகதி சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை அங்கீகரித்தது. விரிவான திட்டமிடலின்போது விரிவான புவிச்சரிதவியல் ஆய்வு செய்யப்பட வேண்டுமென்ற விடயம் சுற்றாடல் அங்கீகாரத்தில் ஒரு நிபந்தனையாக சேர்க்கப்பட்டிருந்தது. அதன்படி, சுற்றாடல் அங்கீகாரத்திலுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றுமாறு திண்மக் கழிவுப்பொருளகற்றும் கருத்திட்டத்தின் கொரிய ஆலோசகர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

### 11.5.3.5 அநுராதபுரம் கீரிக்குளம் கருத்திட்ட பிரதேசம்

பிலிசறு கருத்திட்டத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் அநுராதபுரம், கிழக்கு நுவரகம்பலாத்த கீரிக்குளம் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுப் பசளைத் தளத்துடன் இணைந்ததாக இந்த நில மூடுகையை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அனுராதபுரம் நகரசபை, கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபை மற்றும் சிலசமயம் மத்திய நுவரகம்பலாத்த பிரதேச சபைக்கு சேவை வழங்கும் நோக்கத்துடன் திட்டமிட்டுள்ள சுகாதாரத்துடன் கூடியதாக நிலமூடுகையாக இது அமையவுள்ளது. கூட்டுப்பசளைத் தயாரிப்புக்கென பயன்படுத்தப்பட்ட பின்னர் எஞ்சும் கழிவுப்பொருள்களை இறுதி அகற்றலின் பொருட்டு இங்கு கொண்டு வரப்படும்.

10 ஹெக்ரயர் விஸ்தீரணம் கொண்ட கீரிகுளம் கருத்திட்ட வளாகத்தில் பிலிசறு கருத்திட்டத்தால் அமைக்கப்பட்ட கூட்டுப்பசளைத் தளமொன்று ஏற்கெனவே தொழிற்படுகிறது. இன்னுமொரு பகுதியில் அநுராதபுரம் மாநகர சபையினால் சேகரிக்கப்படும் கழிவுகளும் வகைப்படுத்தப்படாத கழிவுகளும் கொட்டப்படுகின்றன. எனவே, எஞ்சியுள்ள 8 ஏக்கர் காணியில் அதாவது, அடர்த்தியற்ற மண் அகழப்பட்டு கைவிடப்பட்ட நிலையிலுள்ள காணியை கருத்திட்டத்திற்காக வழங்குமாறு கோரப்பட்டது.

எனினும், குறித்த காணியை விடுவிப்பது தொடர்பில் நுவரகம்பலாத்த பிரதேச சபையினால் இக்கருத்திட்டம் பற்றி கீரிக்குளம் மக்களை விழிப்புணர்வு செய்யுமாறு கோரப்பட்டது. அதன்படி, 2014 யூன் 03ஆம் திகதி பிரதேசத்திலுள்ள மக்கள் தலைவர்களின் பங்கேற்புடன் கீரிகுளம் விகாரையில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது.

இதன்போது அங்கு அமைக்கப்பட்டுள்ள கூட்டுப்பசளைத்தளம் தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாக அறிய முடிந்தது. நகர முதல்வரின் தெளிவுபடுத்தல் மற்றும் வாக்குறுதிகளையடுத்து அநுராதபுரம் மாநகர சபையின் சகல பிரிவுகளும் சுகாதாரத்துடனான நில மூடுகையை அமைப்பது தொடர்பில் இணங்கின.




அநுராதபுரம் கீரிக்குளம் விகாரையில் நடைபெற்ற கூட்டம்



கீரிக்குளம் உத்தேச கருத்திட்ட பிரதேசம்

### 11.5.3.6 ஹிக்கடுவ ரத்கம பிரதேசத்தின் மொன்றோவியாவத்த கருத்திட்டப் பிரதேசம்

காலி மாவட்டத்திலுள்ள 18 உள்ளூராட்சி நிறுவனங்களில் 7 நிறுவனங்களுக்குரிய (காலி நகர சபை, அம்பலாங்கொடை நகர சபை, ஹிக்கடுவ நகர சபை, அம்பலாங்கொடை பிரதேச சபை, போப்பே – போத்தல பிரதேச சபை, பலப்பிட்டிய பிரதேச சபை, ஹிக்கடுவ பிரதேச சபை) கழிவுகள் இறுதி அகற்றல் பொருட்டு மொன்றோவியாவத்த பிரதேசத்திற்குக் கொண்டு வரப்படும்.




**Proposed site at Beruwala**

## 11.5.4 விரிவான திட்டமிடலுக்கென ஆலோசனை சேவை மற்றும் கடன் இணக்கப் பத்திரத்தில் ஒப்பமிடல்

### 11.5.4.1 04 நிலமுடுகைகளுக்குமான விரிவான திட்டமிடலின் ஆலோசனை சேவைகள்

சுகாதாரத்துடனான நில மூடுகை பற்றிய விரிவான திட்டமிடல் ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக யோசனைகளைக் கோரும் நடவடிக்கை 2012ஆம் ஆண்டில் முடிவுற்றது. இதற்கென முன்மொழிவுகளைச் சமர்ப்பித்திருந்த 07 கொரிய கம்பனிகளில் மூன்று (03) கம்பனிகள் தெரிவு செய்யப்பட்டதோடு Exim வங்கி அவற்றுக்கான அங்கீகாரத்தையும் வழங்கியிருந்தது. பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தின் ஆலோசனைப்படி அமைச்சரவையினால் அமைக்கப்பட்ட ஆலோசனை பெறுகைக் குழுவினால் பெறுகைகளுக்கான முன்மொழிவுகளைக் கோரும் நடவடிக்கை முடிவுக்கு வந்துள்ளது. ஆலோசனைக் கம்பனிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப/நிதி முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் அதற்கான பிரமாணங்களை CPCC இற்கு அனுப்புமுகமாக அதன் தலைவரது விதப்புரையின்படி பொதுத் திறைசேரியின் அரசிறைத் திணைக்களம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமித்தது.

தெரிவு செய்யப்பட்ட 03 கம்பனிகளிலிருந்து இறுதி முன்மொழிவுகளைக் கோருதல் கொரியாவின் Exim வங்கியின் இணக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது. 2013 செம்ரெம்பர் 18ஆம் திகதி வரை விலைகளைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

திண்மக் கழிவுப் பொருளகற்றல் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென 33,536,000 அமெரிக்க டொலருக்கு மேற்படாத தொகையொன்றை கொரிய வொன்களில் கடனாகப் பெற்றுக்கொள்ளும் பத்திரத்தில் EDCFஇன் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.சொன்க் - ஹ்யோங் யிம் அவர்களும் மற்றும் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர அவர்களும் 2013 யூலை 23ஆம் திகதி கையொப்பமிட்டனர்.

திண்மக் கழிவுப்பொருளகற்றல் கருத்திட்டத்திற்கான ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் கேள்வியை வழங்கும்பொருட்டு KUNHWA Engineering & Consulting Co. Ltd கம்பனியுடன் 2,844,156/- அமெரிக்க டொலர் ஒப்பந்தமொன்றுக்குச் செல்ல 2014 ஏப்ரல் 23ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதுடன், 2014 ஏப்ரல் 24 திகதி Exim வங்கியின் இணக்கத்துடன் கேள்வி அளிக்கப்பட்டது.

2014 ஏப்ரல் 30ஆம் திகதி KUNHWA கம்பனியும் சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சுக்கும் இடையிலான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன், 2014 மே 23ஆம் திகதி Exim வங்கி அதை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தை வழங்கியது. ஆலோசகர்களுடனான முதலாவது உத்தியோகபூர்வ சந்திப்பு 2014 யூன் 02ஆம் திகதி இடம்பெற்றதோடு ஆலோசனை சேவை வழங்கும் பொறுப்பினை ஏற்குமாறு 2014 யூன் 30ஆம் திகதி அழைப்பு விடுக்கப்பட்டது. 04 கருத்திட்ட பிரதேசங்களுக்குமான விஜயத்தை மேற்கொண்ட ஆலோசகர்கள், கீழ்வரும் பணிகளை ஆரம்பிக்க வேண்டுமெனத் தெரிவித்தனர்.

- சாத்தியவள ஆய்வில் பெறப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்துமுகமாக கழிவுப்பொருள் ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுதல்.
- புவிசார் தொழில்நுட்ப சோதனையிடலுக்கான தகவல்களை பெற்றுக்கொள்ளுமுகமாக கருத்திட்ட வளாகத்தை ஆய்வு செய்தல்.

கருத்திட்ட அலகு மேற்படி நடவடிக்கைகளுக்கான ஒத்துழைப்பை வழங்கியது. கீழ்வரும் படங்களில் அவற்றைக் காணலாம்.




***கருத்திட்ட வளாக ஆய்வும் தொழில்நுட்ப சோதனையிடலும் கோனாதிகவத்த***






### 11.5.4. 2 கருத்திட்ட நெறிப்படுத்தல் குழு (PSC)

2014.09.12ஆம் திகதி கீழ்க்காணும் அங்கத்தவர்களின் பங்கேற்புடன் முதலாவது நெறிப்படுத்தல் குழுக் கூட்டம் நடைபெற்றது.

1. திரு.பி.எம்.யூ.டி. பஸ்நாயக்க - செயலாளர், சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு
2. திரு.டி.டபிள்யூ. பிரதாபசிங்ஹ - தலைவர், ம.சு.அ.
3. வைத்தியர் திரு.சாரங்க அழஹப்பெரும - பணிப்பாளர் தலைமையதிபதி, ம.சு.அ.
4. திரு.கே.எச். முத்துகுட ஆரச்சி - பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி, சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவு – ம.சு.அ.

5. கலாநிதி கெமுனு ஹேரத் - சிரேஷ்ட விரிவுரையாளர், பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

6. திரு.என்.கே.ஜீ.கே. நெம்மவத்த - மேலதிக செயலாளர், சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு.

7. திரு.டீ. அபேசூரிய - பிரதான கணக்காளர், சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு.

8. திரு. ஜகத் கீர்த்தி குமார - பொறியியலாளர், அகழ்வாராய்ச்சி புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப்பணியகம்.

9. திருமதி.தேவிகா பாலசூரிய - பிரதிப் பணிப்பாளர், பொறியியல் பிரிவு, கொழும்பு மாநகர சபை.

10. திரு.சமந்த குமாரசேன - பிரதிப் பணிப்பாளர், தேசிய புத்தாக்குநர் நிலையம்

11. செல்வி ஹசன்தி திஸாநாயக்க - சுற்றாடல் பொறியியலாளர், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம்

12. திரு.எம்.ஜே.ஜே.பெர்னாந்து -கருத்திட்டப் பணிப்பாளர், SDF கருத்திட்டம்

(திரு.எம்.ஜே.ஜே. பெர்னாந்து என்பவருக்குப் பதிலாக செல்வி ருவினி தர்மசிறி நியமிக்கப்பட்டதுடன், 2014 திசெம்பர் மாதம் தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் திண்மக் கழிவகற்றல் கருத்திட்டத்தின் (SDF) பணிப்பாளராகப் பொறுப்பேற்றார்.

சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சுக்கும் KUNHWA கம்பனிக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின்படி தொழில்சார் பணியணியின் அங்கத்தவர்களின் ஒன்றுகூடல் நடைபெறவில்லையென்ற விடயம் நெறிப்படுத்தல் குழுவின் முதலாவது கூட்டத்தில் அவதானிக்கப்பட்டது. எனவே, அது பற்றிய கலந்துரையாடலின் போது KUNHWA கம்பனியின் கருத்திட்ட முகாமையாளர் திரு. யுன் கருத்திட்டத்தை பயனுள்ளதாக மாற்றும் பொறுப்பை ஏற்பதாகவும் பயனுறுதியை பேணுவதாகவும் தெரிவித்தார். அத்துடன் தொழில்சார் பணியணியின் திருத்தப்பட்ட பணியணி விபரங்களை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தார்.

பாணந்துறை மாலமுல்ல பிரதேசத்தில் அமைக்கப்படவிருந்த உத்தேச நிலமூடுகையை வேறு இடமொன்றுக்கு மாற்றுவதற்கு ஏற்ற பொருத்தமான ஓர் இடத்தைத் தெரிவுசெய்வதற்கும் நெறிப்படுத்தல் குழுவின் அங்கீகாரம் கிடைத்தது.

நெறிப்படுத்தல் குழுவின் உப குழுவாக அதே குழுவின் அங்கத்தவர்களைக் கொண்ட தொழில்நுட்ப வல்லுநர் குழுவொன்றை அமைப்பதற்கு யோசனை தெரிவிக்கப்பட்டது. மாதாந்தம் கூடுகின்ற நெறிப்படுத்தல் குழுவின் இணக்கத்துடன் கீழ்க்காணும் நிபுணர்கள் தொழில்நுட்பக் குழுவில் உள்வாங்கப்பட்டனர்.

01. கலாநிதி எம். பத்மலால் - சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

02. திருமதி ரிக்கரி பிபிலே - பட்டய கட்டடக்கலைஞர்

03. கலாநிதி திரு.மஹேஷ் ஜயவீர - சிரேஷ்ட விரிவுரையாளர், பொறியியல் பீடம், மொறட்டுடவ, பல்கலைக்கழகம்.

2014 திசெம்பர் மாதம் நடைபெற்ற நெறிப்படுத்தல் குழுக் கூட்டத்தில் கருத்திட்டத்தின் நிருவாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறிப்பாக, தொழில்சார் பணியணியினர் இன்று கூடுவதில்லையென்ற விடயம் விரிவாக ஆராயப்பட்டதுடன், அதுபற்றி நியாயமான ஒரு யோசனையை முன்வைக்குமாறு ஆலோசகர்களால் தெரிவிக்கப்பட்டது. மேலும், கருத்திட்டத்தின் அடைவுகள் எதிர்பார்த்த தரத்தை நோக்கி நகரவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. எனவே, முடிவுகளை எடுப்பதற்கு குறிப்பாக தொழில்நுட்ப சிக்கல்கள் பற்றி ஆராய்ந்து தனது விதப்புரைகளை வழங்குமாறு தொழில்நுட்பக் குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டது.

### 11.5.4.3 பயிற்சியும் சாத்திய வளமும்

இலங்கையில் திண்மக்கழிவகற்றல் வசதிகளுக்கான ஆலோசனை சேவை வழங்கல் தொடர்பாக அமைச்சுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை பிரகாரம் முதலாவது பயிற்சி நிகழ்ச்சியை "கழிவுப்பொருள் முகாமைத்துவக் கொள்கைகளும் வழிப்படுத்தும் செயற்பாடுகளும்" என்ற தலைப்பில் 2014 ஒக்ரோபர் 26 தொடக்கம் நவம்பர் 04 வரை கொரியாவில் நடாத்துவதற்கு KUNHWA கம்பனி நடவடிக்கை எடுத்தது.

அதில் பங்கேற்றோரின் விபரங்கள் வருமாறு:

01. திரு. நந்தன சுசீந்திர ஹந்துன்கே - நகர முதல்வர், மாத்தறை மாநகரசபை
02. திரு. எஸ்.எம். குஸ்மன் டி சில்வா -தலைவர், பேருவளை பிரதேச சபை
03. திரு.ஆர்.எம். பந்துல செனவிரத்ன - தலைவர், உடுநுவர பிரதேச சபை
04. திரு.டபிள்யூ.பீ. மிலான் ஜயதிலக - தலைவர், தொம்பே பிரதேச சபை
05. திரு.டீ.பீ. பந்துலசேன - தலைவர், கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபை
06. திரு. நிமல் தொம்மதுர - உபதலைவர், ரத்கம பிரதேச சபை
07. திரு. சேனக பல்லியகுருகே - நகர ஆணையாளர், மாத்தறை மாநகரசபை
08. திரு.ரி.என். கிரிஎல்ல - பணிப்பாளர், மத்திய மாகாண அலுவலகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை
09. திருமதி எச்.பீ.எஸ். ஜயசேகர் - கருத்திட்டப் பிரதிப் பணிப்பாளர் , SDF கருத்திட்டம்
10. திருமதி ஜனனி பல்லியகுரு - மேலதிக பணிப்பாளர், சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு
11. திருமதி டீ.என். பெரேரா - சுற்றாடல் அலுவலர், களுத்துறை மாவட்டம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை



**பயிற்சி உள்ளடக்கம்**

கழிவுப்பொருள் பரிகரிப்புக் கொள்கைகளும் நியமங்களும், புதுப்பிக்கத்தக்க சக்தியும் புதிய சக்தி வலு கிராமங்கள் மற்றும் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம், நெறிப்படுத்தல் போன்ற துறைகளில் சர்வதேச பல்கலைக்கழகங்கள், ஏனைய அபிவிருத்தி நிறுவனங்கள், பொறியியல் கற்கை வல்லுநர்களால் விரிவுரைகள் நடாத்தப்பட்டன.

கீழ்க்காணும் இடங்களுக்கு களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது.

- கழிவுப்பொருள் மீள்சுழற்சியாக்கத் தளம்.
- கூட்டுப்பசளைத் தளம்.
- கால்நடை வள கழிவுநீர் பரிகரிப்பு வசதிகள் மற்றும் பிற துப்புரவேற்பாட்டு நிலமூடுகை.
- நேரடி கழிவுப்பொருள் அழிப்பு.
- புதுப்பிக்கத்தக்க சக்திவலு நிலையம்.
- கழிவுப்பொருள் வேறாக்க வழிமுறை பொது இடங்கள் / குடிமனை சார்.

## 11.5.5.நிதிமுன்னேற்றம் - 2014

சுருக்கம்

| | ஒதுக்கீடு (ரூபா) | பெறுகைகள் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| வெளிநாட்டுக்கூறு | **125,000,0000.00** | **78,057,687.42** | **78,057,687.42** |
| உள்நாட்டுக்கூறு | **18,515,900.00** | **15,640,000.00** | **15,640,000.00** |
| மொத்தம் | **143,515,900.00** | **93,697,687.42** | **93,697,687.42** |

குறிப்பு : வெளிநாட்டுக் கூறினால் KUNHWA ஆலோசர்களுக்குச் செலுத்திய 568,831 அமெரிக்க டொலர் முற்பணத்தில் நிதி மற்றும் சேவைக் கட்டணமாக 568.83 அ.டொ. அடங்கியுள்ளது.

செலவு விபரங்கள்

| | **செலவு வகை** | **உண்மையான செலவு (ரூபா)** | **திருத்தப்பட்ட ஒதுக்கீடு (ரூபா)** |
|---|---|---|---|
| 2.2 | நிலத்தை துப்புரவு செய்தலும் உட்கட்டமைப்பு வசதிகளும் | 1,119,474.81 | 1,300,000.00 |
| 3.1 | போக்குவரத்து | 1,303,363.73 | 1,500,000.00 |
| 3.2 | அலுவலக உபகரணங்கள் | 57,330.00 | 200,000.00 |
| 3.3 | அலுவலக வழங்கல் | 270,019.21 | 500,000.00 |
| 3.4 | கருத்திட்டப் பணியணி | 9,364,213.67 | 10,500,000.00 |
| 3.5 | தொடர்பாடல் / தபால் கட்டணம் | 175,038.19 | 185,000.00 |
| 3.6 | பயிற்சியும் ஆற்றல் விருத்தியும் | 48,308.00 | 300,000.00 |
| 3.7 | வாடகை / குத்தகை | 2,611,384.38 | 3,500,000.00 |
| 3.8 | கருத்திட்ட ஒருங்கிணைவும் முகாமைத்துவமும் | 387,747.08 | 400,000.00 |
| 3.9 | நிகழ்தகு சந்தர்ப்பம் | 303,120.93 | 130,000.00 |
| | **மொத்தம்** | 15,640,000.00 | 18,5151,000.00 |

## 11.5 சுற்றாடல் பாதுகாப்பு, பேணல் கருத்திட்டம்

### 11.6.1 சுற்றாடல் பாதுகாப்பு, முகாமைத்துவக் கருத்திட்டம்

சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களான முகாமைத்துவ திட்டங்களைத் தயாரித்தல், எல்லைகளைக் குறிப்பீடு செய்தல், அறிவித்தல் பலகைகளை காட்சிக்கு வைத்தல் மற்றும் பொதுமக்களையும் ஏனையோரையும் விழிப்புணர்வு செய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு விசேட கருத்திட்டமாகும்.

### 11.6.2 முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல்

மேல்மாகாணத்தின் பொல்கொட வாவி, கண்டி மாவட்டத்தின் ஹந்தான மலைத்தொடர் மற்றும் மொனறாகலை மாவட்டத்தின் மறகல மலை போன்ற சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களுக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 11.6.3 சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களில் எல்லைகளை குறிப்பீடு செய்தல்.

மொனறாகலை மாவட்டச் செயலாளரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள முகாமைத்துவக் குழுவினால் மறகல மலைப் பாதுகாப்புப் பிரதேசத்தில் காணப்படும் எல்லைகளை மீண்டும் திருத்தியமைப்பதற்கான ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது இனங்காணப்பட்ட எல்லைகளுக்கான வரைபடங்களைத் தயாரிக்கும் பணி மொனறாகலை நில அளவைத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டது.

### 11.6.4 ஈரநிலப் பயிற்சிக் கைந்நூல்

உள்ளூராட்சி நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படும் கருத்திட்டங்களைப் பகுப்பாய்வு செய்தல் அத்துடன் அதனைக் கீழ் மட்டத்திலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கான உதவி வழங்கப்படுகிறது. கருத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்க இந்தப் பகுப்பாய்வு வழிமுறை கையாளப்படுவதுடன் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியும் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

(iii) கழிவுப்பொருட்களை வேறாக்கம் செய்தல் மற்றும் சூழல் நேய விதத்தில் அகற்றுதல் பற்றிய துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சி வழியாக உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல்.

(iv) தொழில்நுட்ப உதவி நிறுவனத்தில் பலம் மற்றும் இயலளவு விருத்தி.

(v) உலோகங்கள், பிளாஸ்ரிக், கண்ணாடித்துண்டுகள், கடதாசி போன்றவற்றைச் சேகரிக்கும் வலையமைப்பு ஒன்றை உருவாக்கி மீள்சுழற்சிச் செயற்பாட்டை வலுப்படுத்தல். இவ்வாறான பொருட்களை இலகுவில் மீள்சுழற்சியாக்கம் செய்ய முடியும். தனியார் துறையின் பல்வேறு நிறுவனங்கள், பிளாஸ்ரிக் மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய குப்பைகளைச் சேகரிப்பதில் ஆர்வம்காட்டி வருகின்றன. குறிப்பாக, பாடசாலைகள், மகளிர் அமைப்புகள், உள்ளூராட்சி நிறுவனங்களை விழிப்புணர்வு செய்வதன்மூலம் மீள்சுழற்சியாக்க செயற்பாட்டுக்கு ஊக்கமளிக்கப்பட்டுள்ளது.

(vi) உள்ளூராட்சி மட்டத்தில் கூட்டுப் பசளைத் தளங்களை அமைத்தல்.

பொது இடங்களிலும், நீர்நிலைகளிலும் கழிவுகள் கொட்டப்படுவதால் எழுந்துள்ள பிரச்சினைக்கு அறிவியல் ரீதியானதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான தீர்வினை வழங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பிலிசறு கருத்திட்டம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான கூட்டுப்பசளைத் தளங்களை அமைத்து சூழல் நேய முறையில் கழிவுகளை அகற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவிருக்கின்றது.

இதில் பொருத்தமான தொழில்நுட்பம் கையாளப்படுவதுடன், திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் பற்றிய கட்டமைப்பு ஒன்றை நிறுவி துறைசார்ந்த வல்லுநர்களின் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்க எதிர்பார்த்தது.

(vii) குறைந்த செலவில் மீதிக் கழிவுகளை அகற்றுவதற்கான சுகாதாரத்துடன்கூடிய நிலமூடுகை.

மீதிக் கழிவுகளை சூழல் நேய முறையில் அகற்றுவதற்காகப் பாதுகாப்புடன் கூடிய நிலமூடுகை அமைக்கப்படுகிறது. அதாவது, கழிவு நீர் மற்றும் வளி கட்டுப்பாடு, குப்பைகளுக்கு மேலாக நாளாந்தம் பண்படை இடல், மேற்பரப்பு நீர் வழிந்தோடுவதைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் மாசுபடுவதைக் கட்டுப்படுத்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. பிலிசறு கருத்திட்டத்தால் இவ்வாறான பாதுகாப்புடன் கூடிய நிலமூடுகைகளை அமைக்கத்

திட்டமிடப்பட்டுள்ளதுடன், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கொத்தணி முறை அடிப்படையில் கழிவுகளை அகற்ற வாய்ப்புக் கிடைக்கின்றது.

(viii) குடிமனைசார் கூட்டுப்பசளைத் தயாரிப்பைப் பிரசித்தம் செய்தல்.

சமயலறை மற்றும் வீட்டுத்தோட்டத்திலிருந்து அகற்றப்படும் சிறியளவிலான சேதனப் பொருட்கள் இதற்கெனப் பயன்படுத்தப்படுகிறது. கூட்டுப்பசளைச் சாடி அல்லது குழியொன்றைப் பயன்படுத்தி வெளியேறும் வெப்பத்தையும் ஈரப்பதனையும் தக்கவைத்துக்கொள்ள உதவுவதால் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களுக்கு மிகவும் பொருத்தமானது. எனவே, பிலிசறு கருத்திட்டம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு நிவாரண விலையில் கூட்டுப்பசளைச் சாடிகளை வழங்குவதன் மூலம் குடிமனைசார் கூட்டுப்பசளைத் தயாரிப்பைப் பிரசித்தம் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ix)கண்காணித்தலும் திண்மக் கழிவுப் பொருட்களை உரிய முறையில் அகற்றாத உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தலும்.

பிலிசறு கருத்திட்டத்தின் மூலம் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்தைச் சரியான முறையில் மேற்கொள்ளத் தவறும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு எதிராக இறுதியில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கென பிரதேச சுற்றாடல் அலுவலர்கள் மற்றும் பிலிசறு கருத்திட்ட அலுவலர்கள் உள்ளூராட்சி நிறுவனங்களில் உரிய முறையில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் இடம்பெறுகிறதா என்பது பற்றித் தொடர்ச்சியான கண்காணிப்பில் ஈடுபடுவார்கள்.

### 14.6 பிலிசறு செயற்பாட்டுத் திட்டம்

பிலிசறு கருத்திட்டத்தின் 2008 – 2010 மற்றும் 2011 – 2013 ஆண்டுகளுக்குரிய செயற்பாட்டுத் திட்டங்களுக்கு மேலதிகமாக அந்தந்த ஆண்டுக்குரிய செயற்பாட்டுத் திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2014ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் அந்த ஆண்டுக்கென ஒதுக்க வேண்டிய தொகையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் காலத்திற்குக் காலம் நிகழும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன. வருட ஆரம்பத்தில் சில நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கப்பட்டபோது செயற்பாட்டு நிலையில் எழுந்த தேவைகள் கருதி அவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டன. எனவே, நடைமுறையில் எழுந்த சிக்கல்கள் காரணமாக செயற்பாட்டுத் திட்டத்தில் மாற்றம் கொண்டுவரும் நிலையும் உருவானது. இவ்வாறான மாற்றங்களின்போது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### 14.7 பிலிசறு திட்டத்தின் அடைவுகள்

2014ஆம் ஆண்டின் செயற்பாட்டு திட்டத்திற்கு அமைவாக பிலிசறு கருத்திட்டத்தின் அடைவுகள் காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக, சில செயற்பாடுகளின் அடைவு மட்டம் மிகச் சிறிய அளவில் இருப்பதோடு சிலவற்றில் அடைவு மட்டம் எட்டப்படாத நிலையும் காணப்படுகிறது. பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை அதற்குக் காரணமாக அமைந்ததுடன், பொறியியல் பிரிவின் வெற்றிடங்கள் 2014 யூன் மாதத்தின் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டன. இதுபோன்று பிலிசறு கருத்திட்டத்தின் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத என்றும் தேசிய மட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த மனித உழைப்பும் நிதி சார்ந்த ஒத்துழைப்பும் வழங்கப்பட்டுள்ளது.

**14.7.1 முறையான கழிவுப்பொருள் முகாமைத்துவ வசதிகளை ஏற்படுத்தல் - உள்ளூராட்சி ஆளுகைப் பிரதேசங்களில் கூட்டுப்பசளைத் தளங்களை அமைத்தல்.**

கழிவுப்பொருள் முகாமைத்துவ வசதிகளுக்கென தொழில்நுட்ப மற்றும் நிதியுதவி கோரும் உள்ளூராட்சி நிறுவனங்களும் ஏனைய அரச நிறுவனங்களும் முன்வைத்த வேண்டுகோள்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பரிசீலிக்கப்படும். கழிவுப்பொருள் பரிகரிப்பு மற்றும் முறைப்படுத்தலுக்கான வழிமுறையாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கூட்டுப்பசளை நிர்மாணித்து நடைமுறைப்படுத்துதல் பிலிசரு கருத்திட்டத்தின் முக்கிய தொழிற்பாடாகும்.

**கூட்டுப்பசளைத் தளத்தின் முக்கிய கூறுகள்**

- குப்பைகளைக் கொட்டுதல் மற்றும் வேறாக்குதல் நிலையம்.

கருத்திட்ட வளாகத்திற்குக் கொண்டு வரப்படும் குப்பைகள் கொட்டப்பட்டு கூட்டுப்பசளைத் தயாரிப்புக்கு உரியவையும், மீள்சுழற்சியாக்கத்திற்கு உரியவையும் வேறாக்கப்படும். மேலும் எவ்வித பயனும் இல்லாத கழிவுகள் அருகிலுள்ள நிலமூடுகைப் பிரதேசத்திற்கு அனுப்பப்படும். இலகுவில் செல்லக்கூடிய விதத்தில் இந்த நிலையம் அமைக்கப்பட்டிருக்கும். மேலும், மூடியுடனான கொள்கலன் தயாரிக்கப்படும் இடத்திற்கு அருகில் இந்த நிலையம் அமைந்திருக்க வேண்டியதுடன், அதனூடாக உக்கும் பொருட்கள் கூட்டுப்பசளைத் தயாரிப்புக்காக அனுப்பப்படும்.

- மூடியற்ற கொள்கலன் தயாரிக்கும் நிலையம்.

குப்பைகள் கொட்டி வேறாக்கப்பட்ட பின்னர் கூட்டுப் பசளைத் தயாரிப்புக்கான கொள்கலன்கள் மூடியில்லாத கொங்கிறீட் அடுக்குக் கொண்டு தயாரிக்கப்படும். மூடி இன்றில் கொள்கலனில் சூரிய ஒளி நேரடியாக உட்செல்வதால் நுண்ணங்கிகளின் தாக்கம் தீவிரமடைகிறது. மழைநீர் கிடைப்பதால் கொள்கலனில் ஈரப்பதன் பேணப்படுகிறது. மேலும், விஞ்ஞான முறைப்படி ஈக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இதன்பொருட்டு குருவிகள் பங்களிப்புச் செய்கின்றன. மூடியுடன் கூடிய கொள்கலன்கள் தயாரிக்கப்படுதல் மற்றும் மூடியற்ற கொள்கலன் தயாரிப்புக்கும் இடையிலான விகிதம் 60:40 ஆகும்.

- மூடியுடன் கூடிய கொள்கலன் தயாரிக்கும் நிலையம்.

கூட்டுப்பசளைத் தயாரிப்புச் செயற்பாட்டின்போது குப்பைகள் மூடியுடன் கூடிய கொள்கலன்கள் தயாரிக்கப்படும் இடத்திற்குக் கொண்டுசெல்லப்படும். குப்பைகளைக் கொண்டு அதிகளவான கூட்டுப்பசளைகள் தயாரிக்கப்பட்டுள்ளபோதும் இச்செயற்பாடு மூடியுடன் கூடிய கொள்கலன்களில் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. இந்த நிலையத்தின் தரைத்தளம் மையத்தில் 1.80 சாய்வுடையதாக அமைக்கப்படும். அதனால் கழிவுநீர் வடிகாலமைப்புத் தொகுதியூடாக வெளியேற்றப்படுகிறது.

- பொதியிடல் மற்றும் களஞ்சியப்படுத்தும் நிலையம்.

தயாரிக்கப்பட்ட கூட்டுப்பசளைகளை வேறு இடத்திற்குக் கொண்டு செல்லும்வரை பொதி செய்து களஞ்சியப்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் இந்த நிலையத்தினால் வழங்கப்படுகிறது.

- ஏனைய துணைக் கட்டடங்கள்.

தொழிலாளர்களுக்கு வசதியளிக்கும் முகமாக அமைக்கப்படும் இந்தக் கட்டடத்தில் ஆண்கள், பெண்களுக்கான தனித்தனி ஓய்வறைகள் உள்ளன. கூட்டுப்பசளைத் தள ஊழியர் நாள் முழுவதும்

குப்பை மற்றும் துர்நாற்றம் கலந்த ஒரு சூழலில் இருப்பதால் இதுபோன்ற வசதிகள் இன்றியமையாததவையாக இருப்பதுடன் ஊழியர்களை ஊக்குவிப்பதாகவும் அமையும்.

- தலைமை அலுவலகம்.

பிற நிறுவனங்களுடனும் நபர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கும் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இதனால் வசதியேற்படுகிறது. இந்தக் கட்டடம் ஒட்டுமொத்த கருத்திட்ட வளாகத்தை கண்காணிக்கக்கூடியதாக அமைக்கப்படும்.

- பாதுகாப்புக் கருமபீடம்

கருத்திட்ட வளாகத்திற்குப் பிரவேசிக்கும் இடத்தில் பாதுகாப்புக் கருமபீடம் அமைக்கப்படும். இதனால் கருத்திட்ட வளாகத்திலுள்ள சாதனங்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்டுள்ள கூட்டுப் பசளையின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும். கருத்திட்ட வளாகத்தைக் கண்காணிக்கக்கூடியதாக இந்தக் கருமபீடம் அமைக்கப்படும்.

- கழிவுநீர் பரிகரிப்புத் தொகுதி

கூட்டுப்பசளை சாடிகளிலிருந்து உற்பத்தியாகும் கழிவுநீரைச் சேகரிப்பதற்கும் மீண்டும் அதனைக் கூட்டுப்பசளைத் தயாரிப்புச் செயற்பாட்டிற்கெனப் பயன்படுத்துவதற்கான தாங்கிக்குக் கொண்டு செல்லக்கூடிய வடிகாலமைப்பு முறைமை உரிய முறையில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- உள்ளக வீதிக் கட்டமைப்பு

விசாலமான கூட்டுப்பசளைத் தளங்கள் அமைக்கப்படும் இடங்களுக்குக் கனரக வாகனங்களின் மூலம் தொடர்ச்சியாக குப்பைகள் கொண்டுவரப்படும். குறிப்பாக குப்பைகள் சேகரிக்கும்போது வாகன நெரிசல் தவிர்க்கப்பட்டு வாகனங்கள் பயணிப்பதற்குப் போதிய இடவசதி ஏற்படுத்தப்படும்.

- கருத்திட்ட வளாகத்தின் பாதுகாப்பு

கட்டாக்காலி விலங்குகள் கருத்திட்ட வளாகத்தினுள் புகுந்து குப்பைகளைக் கிளறிப் பரப்புவதைத் தடுப்பதற்கு வளாகத்தைச் சுற்றிப் பாதுகாப்புச் சுற்றுமதில் அமைக்கப்படுதல் வேண்டும். இதனால் வளாகத்தில் காணப்படும் இயந்திர உபகரங்கள் மற்றும் வாகனங்கள் பாதுகாக்கப்படும்.

- பாதுகாப்பு வலயம்

திறந்த வெளியில் குப்பைகள் கொட்டப்படும்போது அதனால் துர்நாற்றம் வீசுமென்பது பொது மக்களின் மனப்பாங்காக உள்ளது. உண்மையிலேயே அப்படியில்லாமலும் இருக்கலாம். இது ஓர் உளவியல் சார்ந்த விடயமாக இருப்பதுடன் இதனால் குப்பை முகாமைத்துவக் கருத்திட்டங்களுக்கு மக்கள் தம் எதிர்ப்பைத் வெளிப்படுத்தும் நிலை காணப்படுகிறது.

ஆகவே, கூட்டுப்பசளைத் தளம் தெரியாவண்ணம் கருத்திட்ட வளாகத்தைச் சுற்றி மரங்கள் வளர்க்கப்படுவதால் பாதுகாப்பு வலயமொன்று உருவாகிறது. அதனால் துகள்கள் பரவுவது கட்டுப்படுத்தப்படுகிறது. ஏனைய கூட்டுப்பசளைக் கருத்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு முன்னர் அதன் தொழில்நுட்ப ஒத்திசைவு மற்றும் பயன்பாட்டை உறுதிப்படுத்தும் தொழில்நுட்பப் பகுப்பாய்வு நடைமுறை பின்பற்றப்படும். கருத்திட்ட வளாகத்தின் தொடக்கநிலை இனங்காணலின் பின்னர் பிலிசறு அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் இந்தப் பகுப்பாய்வு தொழில்நுட்ப நிபுணத்துவக் குழுவினால் மிகவும் நுட்பமாக ஆராயப்படும்.

பிலிசறுக் கருத்திட்டம் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கும்போது தயாரிக்கப்படும் கருத்திட்ட அறிக்கை பின்வரும் படிநிலைகளைக் கொண்டிருக்கும்.

- எண்ணக்கருக்களைக் கட்டியெழுப்புதல்.
- கருத்திட்ட அறிக்கைத் தயாரிப்பு.
- சுற்றாடல் அனுமதி பெறல்.
- சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் அனுமதி பெறல்.
- கருத்திட்ட வளாகத்திற்குரிய மண் பரிசோதனை அறிக்கை மற்றும் ஏனைய அறிக்கைகளைப் பெறுதல்.
- கருத்திட்ட வளாகத்தின் அளவைப் படங்களைத் தயாரித்தல்.
- திட்டவமைப்புகள் (சகல கட்டடங்களினதும்)
- உடன்படிக்கைகளைத் தயாரித்தல்.
- உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல்.
- பெறுகை நடவடிக்கை முறையைப் பூர்த்தி செய்தல்.
- நிர்மாணப் பணிகளை ஆரம்பித்தல்.
- கண்காணிப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வு.
- கருத்திட்ட வளாகத்தை ஒப்படைத்தல்.

பிலிசறு கருத்திட்டத்தால் 2008 தொடக்கம் 2014ஆம் ஆண்டின் ஆரம்பம்வரை 125 உள்ளூராட்சி நிறுவனங்களிலும் பிற அரச நிறுவனங்கள் (இராணுவ முகாம்கள், கல்வி நிறுவனங்கள்) உள்ளடக்கும்படியாக 115 கூட்டுப்பசளைத் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பாரியளவிலானதும் நடுத்தர அளவிலானதுமான கூட்டுப்பசளைத் தளங்கள் காணப்படுகின்றன.

சில கூட்டுப்பசளைத் தளங்களின் நிர்மாணப் பணிகள் 2009, 2010 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததால் பிலிசறு கருத்திட்டம் அவற்றைப் பராமரித்தல் மற்றும் மேம்படுத்தலுக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை 2014ஆம் ஆண்டு வழங்கியது.

மேற்கூறியவாறு 2014ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அல்லது இறுதியில் தொழிற்பட ஆரம்பித்த கூட்டுப்பசளைத் தளங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகைப்படுத்தலானது சிறந்த தரத்திலுள்ள கூட்டுப்பசளைத் தளங்களை விருத்தி செய்வதற்குமான முயற்சியின் பெறுபேறாகும். பிலிசறு கருத்திட்ட பணியணி இந்தப் பணியினை மேற்கொண்டது.

**பாரிய அளவிலான கூட்டுப்பசளைத் தளங்கள்**





**கீரிக்குளம் கூட்டுப்பசளைத் தளம் அநுராதபுரம் - மெதிரிகிரிய கூட்டப்பசளைத் தளம் பொலனறுவை**

**சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கூட்டுப்பசளைத் தளங்கள்**





**தொம்பே பிரதேச சபை**

**தலவாக்கலை லிந்துல நகரசபை**





**இபலோகம பேராதனை நகரசபை**

**பதியதலாவ பிரதேச சபை**





**மஹஓயா பிரதேச சபை**

**அத்தனகல்ல பிரதேச சபை**

| மாகாணம் | மாவட்டம் | 2014 ஆரம்பம்/ இறுதி | கூட்டுப்பசளை உற்பத்தி வெற்றிகரமானது | கூட்டுடப்பசளை உற்பத்தி சாதாரணமானது | நிர்மாணம் முடிந்தும் கூட்டுப்பசளை தயாரிக்கப்படாதவை | நிர்மாணம் தொடர்கிறது | கைவிடப்பட்ட கூட்டுப்பசளைத் தளங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| வடமத்திய | அநுராதபுரம் | 2014 ஆரம்பம் | 2 | 3 | 7 | 4 | 1 |
| | | 2014 இறுதி | 2 | 6 | 4 | 4 | 1 |
| | பொலனறுவை | 2014 ஆரம்பம் | | 1 | | | |
| | | 2014 இறுதி | 1 | | | | |
| தென் | காலி | 2014 ஆரம்பம் | 5 | 3 | | 1 | |
| | | 2014 இறுதி | 5 | 3 | | 1 | |
| | மாத்தறை | 2014 ஆரம்பம் | 6 | 1 | | | |
| | | 2014 இறுதி | 6 | 1 | | | |
| | அம்பாந்தோட்டை | 2014 ஆரம்பம் | 4 | 2 | | 2 | |
| | | 2014 இறுதி | 6 | | 1 | 1 | |
| மத்திய | நுவரெலியா | 2014 ஆரம்பம் | 1 | | 1 | | |
| | | 2014 இறுதி | 1 | 1 | | | |
| | கண்டி | 2014 ஆரம்பம் | 2 | 1 | | | |
| | | 2014 இறுதி | 2 | 1 | | | |
| | மாத்தளை | 2014 ஆரம்பம் | 4 | | | | |
| | | 2014 இறுதி | 4 | | | | |
| சப்ரகமுவ | இரத்தினபுரி | 2014 ஆரம்பம் | 1 | 1 | | | 1 |
| | | 2014 இறுதி | 1 | 1 | | | 1 |
| | கேகாலை | 2014 ஆரம்பம் | 2 | 2 | 1 | 1 | |
| | | 2014 | 4 | 1 | | 1 | |

| மாகாணம் | மாவட்டம் | 2014 ஆரம்பம்/ இறுதி | கூட்டுப்பசளை உற்பத்தி வெற்றிகரமானது | கூட்டுடப்பசளை உற்பத்தி சாதாரணமானது | நிர்மாணம் முடிந்தும் கூட்டுப்பசளை தயாரிக்கப்படாதவை | நிர்மாணம் தொடர்கிறது | கைவிடப்பட்ட கூட்டுப்பசளைத் தளங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | இறுதி | | | | | |
| மேல் | கொழும்பு | 2014 ஆரம்பம் | 3 | 3 | | | |
| | | 2014 இறுதி | ழூ2 | 3 | | | |
| | கம்பஹா | 2014 ஆரம்பம் | 2 | 3 | 1 | 1 | |
| | | 2014 இறுதி | 3 | 4 | | 1ழூழூ | |
| | களுத்துறை | 2014 ஆரம்பம் | 5 | 2 | | | |
| | | 2014 இறுதி | 5 | 2 | | | |
| ஊவா | பதுளை | 2014 ஆரம்பம் | 3 | 1 | | 1 | |
| | | 2014 இறுதி | 3 | 1 | | 1 | |
| | மொனராகலை | 2014 ஆரம்பம் | 1 | | | 1 | |
| | | 2014 இறுதி | | 1 | 1 | | |
| கிழக்கு | அம்பாறை | 2014 ஆரம்பம் | | 2 | 2 | | |
| | | 2014 இறுதி | | 3 | 1 | | |
| | திருகோணமலை | 2014 ஆரம்பம் | | | | 1 | |
| | | 2014 இறுதி | | 1 | | | |
| வடமேல் | குருணாகல் | 2014 ஆரம்பம் | 8 | 3 | 5 | | |
| | | 2014 இறுதி | 8 | 7 | 1 | | |
| | புத்தளம் | 2014 ஆரம்பம் | 1 | 2 | 1 | 1 | |
| | | 2014 இறுதி | 2 | 2 | | 1 | |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 2014 ஆரம்பம் | | | 1 | 2 | |

| மாகாணம் | மாவட்டம் | 2014 ஆரம்பம்/ இறுதி | கூட்டுப்பசளை உற்பத்தி வெற்றிகரமானது | கூட்டுடப்பசளை உற்பத்தி சாதாரணமானது | நிர்மாணம் முடிந்தும் கூட்டுப்பசளை தயாரிக்கப்படாதவை | நிர்மாணம் தொடர்கிறது | கைவிடப்பட்ட கூட்டுப்பசளைத் தளங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2014 இறுதி | | 1 | 1 | 1 | | |
| முன்னேற்றம் | | 2014 ஆரம்பம் | 50 | 30 | 19 | 15 | 2 | 116 |
| | | 2014 இறுதி | 55 | 39 | 9 | 11 | 2 | 116 |

அட்டவணை 01 - கூட்டுப்பசளைத் தளங்கள் பற்றிய பின்தொடர் ஆய்வுக்குறிப்பு 2014-2015

அட்டவணை 01 - கூட்டுப்பசளைத் தளங்கள் பற்றிய பின்தொடர் ஆய்வுக்குறிப்பு 2014-2015

- ❖ கொலன்னாவை கூட்டுப்பசளைத் தளத்தின் தொழிற்பாடுகள் 2013ஆம் ஆண்டின் இறுதியில் நிறுத்தப்பட்டது.
- ❖ தொம்பே பிரதேச சபையின் கூட்டுப்பசளைத் தளத்தின் தொழிற்பாடுகள் 2013ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

2014ஆம் ஆண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் கூட்டுப்பசளைத் தளங்களின் தகுதிநிலை முன்னேற்றத்தை மேலுள்ள அட்டவணை காட்டுகிறது. இப்பெறுபேறுகளை எட்டுவதற்கு பிலிசறு அலுவலர்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் பல்வேறு நுட்பங்களைக் கையாண்டுள்ளனர். உரிய காலத்தில் கூட்டங்களை நடத்துதல், கூட்டுப்பசளைத் தயாரிப்பினை ஆரம்பிக்காத அல்லது கூட்டுப்பசளைத் தளத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவுறாத உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்குத் தொடர்ச்சியாக நினைவூட்டல் கடிதங்களை அனுப்பி உடன்படிக்கையின் அடிப்படையில் செயலாற்றத் தூண்டி நிர்மாணப் பணிகள் முடிவுற்றதும் கூட்டுப்பசளைத் தயாரிப்பை ஆரம்பிப்பதற்கு ஊக்கமளித்தல் போன்ற முக்கிய பணிகளை நிறைவேற்றியுள்ளனர். மேலும், நிர்மாணப் பணிகளுக்கான கொடுப்பனவுகள் செலுத்தப்படாத மற்றும் கொடுப்பனவு தாமதமாகியுள்ள கூட்டுப்பசளைத் தளங்களுக்கு கள விஜயம் மேற்கொண்டு அப்பணிகளைத் துரிதப்படுத்தியுள்ளனர். மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதேச சுற்றாடல் அலுவலர்களுடன் இணைந்து வழங்கிய ஒத்துழைப்பு மேற்படி கூட்டுப்பசளைத் தளங்களின் முறையான தொழிற்பாட்டுக்குப் பக்கபலமாக அமைந்துள்ளதென்பதைத் தெரிவிக்க வேண்டும்.

### 14.7.2 – மாவட்ட மட்டத்தில் கூட்டுப்பசளைத் தளங்களை ஒழுங்குமுறைப்படுத்தும் செயலமர்வு

கூட்டுப்பசளைத் தளங்களில் சில வெற்றிகரமாகவும் இன்னும் சில அடைவு மட்டத்தை அடையாத நிலையிலும் தொழிற்படுவதன் காரணமாக அவற்றை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மேற்படி அட்டவணை காட்டுகிறது. தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளும் உபகரணங்களும் இன்மை இந்நிலைக்குக் காரணமாகியுள்ளது. 2014ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்தில் காணப்படுகின்ற கூட்டுப்பசளைத் தளங்களில் தேவையான மேம்படுத்தல் பணிகளை மேற்கொள்வதற்கு மேலதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால், மாவட்ட மட்டத்தில்

மீளாய்வுக் கூட்டங்களை நாடாத்தி அவற்றின் கூட்டுப்பசளை உற்பத்தியை அதிகரிப்பதற்கு முடிவு காணப்பட்டது. உள்ளூராட்சி ஆணையாளர்களினால் இந்த மீளாய்வுக் கூட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டிந்ததுடன், அந்த நிறுவனங்களின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் கூட்டுப்பசளைத் தளங்களுக்குப் பொறுப்பானவர்களும் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர். இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களைப் பிரிதிநிதித்துவப்படுத்த பங்கேற்றிருந்தவர்கள் கூட்டுப்பசளை உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலில் கண்டுள்ள அடைவுகள், எதிர்நோக்கிய பிரச்சினைகள் மற்றும் அனுபவங்கள் பற்றி விளக்கமளித்தனர். இங்கு வெளிக்கொணரப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பு ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறான வேண்டுகோள்களை உள்ளூராட்சி ஆணையாளரின் ஒப்பத்துடன் பிலிசறு கருத்திட்டத்திற்கு மிக விரைவில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு சகல உள்ளூராட்சி அலுவலர்களும் அறிவுத்தப்பட்டனர். மாவட்ட மட்டத்தில் கூட்டுப்பசளைத் தளங்களை ஒழுங்கமைத்தல் பற்றி நடைபெற்ற செயலமர்வின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 02 – 2014ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட கூட்டுப்பசளைத் தளங்களை ஒழுங்கமைத்தல் பற்றிய மீளாய்வு அமர்வுகளின் விபரங்கள் வருமாறு.**

| இலக்கம் | மாகாணம்/மாவட்டம் | பங்கேற்ற உள்ளூராட்சி நிறுவனங்கள் | திகதி | பங்கேற்ற அலுவலர்கள் | பங்கேற்பு |
|---|---|---|---|---|---|
| **1.** | வடமேல் மாகாணம் குருணாகல் | பிங்கிரிய பி.ச.<br>பன்னல பி.ச.<br>பொல்கஹாவல பி.ச.<br>உடுபத்தாவ பி.ச.<br>நாமல் ஓயா பி.ச.<br>கல்கமுவ பி.ச.<br>வாரியப்பொல பி.ச.<br>கொபெய்கனே பி.ச.<br>மாவத்தகம பி.ச.<br>ரீதிகம பி.ச.<br>மஹவ பி.ச.<br>நிக்கவரட்டிய பி.ச.<br>அலவ்வ பி.ச.<br>பொல்பத்திகம பி.ச.<br>குருணாகல் மாநகரசபை (சுந்தராபொல)<br>குளியாப்பிட்டி நகரசபை | 2014.05.20 | உள்ளூராட்சிஆணையாளர், செயலாளர், மேற்பார்வையாளர், தொழில்நுட்ப அலுவலர் | 53 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | புத்தளம் | புத்தளம் நகரசபை<br>ஆனைமடு பி.ச<br>புத்தளம் பி.ச<br>வென்னப்புவ பி.ச<br>வனாத்தவில்லுவ பி.ச | 2014.06.06 | -அதே- | **27** |
| **2.** | மேல்மாகாணம்<br>கொழும்பு,<br>கம்பஹா | மீரிகம பி.ச<br>களணி பி.ச.<br>அத்தனகல்ல பி.ப<br>ஸ்ரீலங்கா விமானப்படை முகாம் - ஏக்கல<br>ஸ்ரீலங்கா விமானப்படை முகாம் - கட்டுநாயக்கா | | -அதே- | |
| | களுத்துறை | களுத்துறை பி.ச.<br>அகலவத்தை பி.ச.<br>பண்டாரகம பி.ச.<br>புளத்சிங்கள பி.ச.<br>ஹொரண பி.ச.<br>வலல்லாவிட்ட பி.ச<br>மத்துகம பி.ச. | 2014.07.04 | -அதே- | **52** |
| **3.** | தென்மாகாணம்<br>காலி,<br>மாத்தறை | ஹபராதுவ பி.ச<br>நாகொட பி.ச.<br>ரஜ்கம பி.ச.<br>யக்கலமுல்ல பி.ச<br>கரன்தெனிய பி.ச<br>நியாகம பி.ச<br>பத்தேகம பி.ச<br>அல்பிட்டி பி.ச.<br>கிரிந்த புஹுல்வெல்ல பி.ச | 2014.06.24 | -அதே- | **33** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கொட்டபொல பி.ச<br>வெலிகம நகர சபை<br>மாலிம்பட பி.ச<br>மாத்தறை பி.ச<br>முலட்டியன பி.ச<br>மாத்தறை பி.ச | | | |
| | அம்பாந்தோட்ட | திஸ்ஸமஹாராமய பி.ச.<br>அம்பாந்தோட்டை பி.ச<br>அம்பலாந்தோட்டை பி.ச<br>பெலியத்த பி.ச<br>தங்காலை பி.ச<br>லுணுகம்வெஹெர பி.ச.<br>வீரகட்டிய பி.ச.<br>அகுனுகொலபெலஸ்ஸ பி.ச. | 2014.06.27 | -அதே- | **28** |
| **4.** | சபரகமுவ<br>இரத்தினபுரி, கேகாலை | நிவித்திகல பி.ச<br>குருவிற்ற பி.ச.<br>களவான பி.ச<br>பலாங்கொட நகரசபை<br>கேகாலை பி.ச<br>ரம்புக்கன பி.ச.<br>யமின்தொட்ட பி.ச.<br>புலத்கொஹுபிட்டிய பி.ச.<br>ருவன்வெல்ல பி.ச. | 2014.10.15 | -அதே- | 2014.10.15 |

 

***கூட்டுப்பசளைத் தளத்தை ஒழுங்குபடுத்தும் செயலமர்வு – களுத்துறை கூட்டுப்பசளைத் தளத்தை ஒழுங்குபடுத்தும் செயலமர்வு – வடமத்திய மாகாணம்***

**14.7.3 சிறிய அளவிலான கூட்டுப்பசளைத் தளங்களை மேம்படுத்தல்.**

2008ஆம் ஆண்டு தொடக்கம் பிலிசறு கருத்திட்டத்தின் நிதியுதவியினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த கூட்டுப்பசளைத் தளங்களில் கூட்டுப்பசளையை உற்பத்தி செய்யத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நிதி, ஒத்துழைப்பு பெறுவதற்கான விண்ணப்பங்கள் 2014ஆம் ஆண்டிலிருந்து மாகாண அலுவலகங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட வண்ணமுள்ளன. எனவே, 2014 செயற்பாட்டுத் திட்டத்தின்கீழ் பொதுத் திறைசேரியிலிருந்து மேலதிக நிதி கோரப்பட்டதுடன் அதற்கென 178 மில்லியன் ரூபா நிதி கிடைத்தது. மேற்கூறப்பட்டவாறு தரநிலை மீளாய்வுகள் மாகாண ஆணையாளர் ஊடாக உள்ளூராட்சி நிறுவனங்களின் பங்கேற்புடன் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்டன. அதன்படி மாகாண ஆணையாளர் மற்றும் பொறியியலாளரின் ஒத்துழைப்புடன் உள்ளூராட்சி நிறுவனங்களை உள்ளடக்கும் வகையில் கீழ்க்காணும் விவரக் குறிப்புகளும் வேண்டுகோள்களும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. பிலிசறு கருத்திட்டத்தின் பொறியியலாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட கருத்திட்ட உத்தியோகத்தர்கள் களவிஜயம் மேற்கொண்டு கூட்டுப்பசளைத் தயாரிப்பை வெற்றிகரமாக முன்னெடுக்கத் தேவையான சிபாரிசுகளைச் செய்துள்ளனர். நியமிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பக் குழுவின் விரிவான மதிப்பீட்டின் பின்னர் அங்கீகரிக்கப்படும் மேம்படுத்தல் தொடர்பான வேண்டுகோள்கள் மத்திய அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்திற்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன. இச்செயற்பாடு நிறைவடைந்ததும் அரசாங்கத்தின் முறையான பெறுகை வழிமுறைக்கமைய ஒப்பந்தக்காரர்கள் தெரிவுசெய்யப்பட்டு உரிய காலத்தில் பணிகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையில் ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. கீழுள்ள அட்டவணைபடி 2014ஆம் ஆண்டின் இறுதியில் கூட்டுப்பசளைத் தளங்களை மேம்படுத்துவதற்கான கோரிக்கைகளுக்கு 20% முற்பணம் வழங்கப்பட்டது.

**அட்டவணை 03 - கூட்டுப்பசளைத் தளங்களின் மேம்பாட்டு உதவிக்கருத்திட்டம்**

| இலக்கம் | மாகாணம் | மாவட்டம் | உள்ளூராட்சி நிறுவனம் | செயற்பாடு | அங்கீகரிக்கப்பட்ட தொகை | முற்பணம் (20%) |
|---|---|---|---|---|---|---|
| 1. | சபரகமுக | கேகாலை | ருவன்வெல்ல பி.ச- II | மூடியுடன்கூடிய கொள்கலன் உற்பத்தி நிலையம் | 3,986,734.37 | 797,346.87 |
| | | | | கழிவுநீர் பரிகரிப்புத் தொகுதி | | |
| 2. | வடமேல் | குருணாகல் | அலவ்வ பி.ச - II | மூடியுடனான கொள்கலன் உற்பத்தி நிலையத்தை மேம்படுத்தல், மீள்சுழற்சிப் பொருட்களைக் களஞ்சியம் செய்யும் நிலையம். | 1,772,618.70 | 354,523.74 |
| 3. | வடக்கு | யாழ்ப்பாணம் | வலிகாமம் தெற்கு- II | பாதுகாப்பு சுற்றுமதில் | 624,909.32 | 124,981.87 |
| 4. | வடமேல் | குருணாகல் | நிக்கரவெட்டிய பி.ச - II | குப்பை கொட்டுமிடம் | 3,302,209.01 | 660,441.80 |
| | | | | மூடியற்ற கொள்கலன் உற்பத்தி நிலையம் | | |
| | | | | உக்காத பொருட்களின் களஞ்சியசாலை | | |
| | | | | வேறாக்குதல் | | |
| | | | | மின்சாரவேலி | | |
| 5. | தென் | மாத்தறை | மாலிம்பட பி.ச. - II | கொங்கிறீட் பாதம் | 1,231,454.50 | 246,290.90 |
| | | | | களஞ்சியசாலை | | |
| | | | | பாதுகாப்பு சுற்றுமதில் | | |
| 6. | தென் | மாத்தறை | கொட்டபொல | குப்பை கொட்டுமிடம் | 2,626,845.2 | 525,369.06 |

| இலக்கம் | மாகாணம் | மாவட்டம் | உள்ளூராட்சி நிறுவனம் | செயற்பாடு | அங்கீகரிக்கப்பட்ட தொகை | முற்பணம் (20%) |
|---|---|---|---|---|---|---|
| | | | பி.ச. - II | கூட்டுப்பசளை கொட்டுமிடம் | 9 | |
| | | | | உலர்த்தும் கூடம் | | |
| | | | | பாதுகாப்பு வேலி, படலை | | |
| | | | | வடிகால் தொகுதி | | |
| 7. | மேல் | கம்பஹா | அத்தனகல்ல | கொங்கிறீட்பாதம் | 482,545.50 | 96,509.10 |
| | | | | | | |
| 8. | மேல் | களுத்துறை | வலல்லாவிற்ற பி.ச. - II | மூடியுடனான கொள்கலன் உற்பத்தி நிலையம் | 730,441.95 | 146,088.39 |
| 9. | மேல் | களுத்துறை | புளத்சிங்கள பி.ச. - II | நீர்வழங்கல் | 662,509.430 | 132,501.89 |
| | | | | குழாய் நீர்க் கட்டமைப்பு | | |
| | | | | பாதுகாப்பு சுற்றுமதில் | | |
| | | | | படலை | | |
| | | | | வடிகால் தொகுதி | | |
| 10. | மேல் | களுத்துறை | ஹொரண பி.ச - II | கூரை | 1,572,181.25 | 314,436.25 |
| | | | | பழைய கட்டடம் பழுதுபார்ப்பு | | |
| | | | | தலைமை அலுவலகம் பழுது பார்ப்பு | | |
| 11. | தென் | மாத்தறை | வெலிகம நகரசபை - II | குப்பைகளைக் கொட்டுமிடம் | 6,073,138.70 | 1,214,627.74 |
| | | | | | | |

| இலக்கம் | மாகாணம் | மாவட்டம் | உள்ளூராட்சி நிறுவனம் | செயற்பாடு | அங்கீகரிக்கப்பட்ட தொகை | முற்பணம் (20%) |
|---|---|---|---|---|---|---|
| 12. | வடமத்திய | அநுராதபுரம் | இபலோகம பி.ச - II | குழாய்க் கிணறு | 710,720.00 | 142,144.00 |
| 13. | வடமேல் | புத்தளம் | வென்னப்புவ பி.ச. - II | மூடியற்ற கொள்கலன் உற்பத்தி நிலையம் | 1,815,560.00 | 363,112.00 |
| 14. | தென் | மாத்தறை | முலட்டியன II | மூடியுடனான கொள்கலன் உற்பத்தி நிலையம் | 1,616,323.32 | 323,264.66 |
| | | | | மூடியற்ற கொள்கலன் உற்பத்தி நிலையம் | | |
| | | | | களஞ்சியசாலை | | |
| | | | | நீர்த்தாங்கி | | |
| 15. | தென் | அம்பாந்தோட்டை | வீரகட்டிய பி.ச - II | மூடியுடனான கொள்கலன் உற்பத்தி நிலையம் - 01 | 1,846,879.43 | 369,375.89 |
| | | | | மூடியுடனான கொள்கலன் உற்பத்தி நிலையம் - 02 | | |
| | | | | களஞ்சியசாலை | | |
| 16. | கிழக்கு | அம்பாறை | தமன பி.ச. - II | பாதுகாப்பு சுற்றுமதில், படலை | 2,317,646.42 | 463,529.28 |
| | | | | குழாய்க் கிணறு | | |
| 17. | தென் | மாத்தறை | திஹகொட பி.ச | குப்பை வேறாக்குமிடம் | 2,075,947.15 | 415,189.43 |
| | | | | தலைமை அலுவலக ஓய்வறை | | |
| | | | | மலசலகூடம் கழுவுமிடம் | | |

| இலக்கம் | மாகாணம் | மாவட்டம் | உள்ளூராட்சி நிறுவனம் | செயற்பாடு | அங்கீகரிக்கப்பட்ட தொகை | முற்பணம் (20%) |
|---|---|---|---|---|---|---|
| 18. | வடமேல் | குருணாகல் | பொல்பதிகம பி.ச. | மீள்சுழற்சிப் பொருட்கள் கொட்டுமிடம் | 584,066.20 | 116,813.24 |
| 19. | வடமத்திய | அநுராதபுரம் | கஹட்டகஸ் திகிலிய பி.ச. - II | மின் இணைப்பு | 86,594.00 | 86,594.00 |
| 20. | வடமத்திய | குருணாகல் | கல்கமுவ - II | பம்பிக் கிணறு<br>மூடியுடனான கொள்கலன் தெரிவிடம் | 1,665,745.23 | 333,149.05 |
| 21. | வடமத்திய | புத்தளம் | புத்தளம் நகரசபை | மூடியுடனான கொள்கலன் தெரிவு உற்பத்தி | 3,868,321.73 | 773,664.35 |
| **மொத்தம்** | | | | | | **13,192,089.83** |

**14.7.4 2014ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்ட கூட்டுப்பசளைத் தளங்கள்.**

காணி, சுற்றாடல் உரிமம், உள்ளூராட்சி நிறுவனங்களின் முகாமைத்துவம் தொடர்பில் ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற தேவைகள் மற்றும் 2014ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ள விதம் ஆகியவற்றைக் கவனத்திற்கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் வேண்டுகோள்படி 08 புதிய கூட்டுப்பசளைத் தளங்களை அமைப்பதற்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 04 – 2014 ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்ட கூட்டுப்பசளைத் தளங்கள்**

| இல | இடம் | உள்ளூராட்சி ஆளுகையின் சனத்தொகை | உள்ளூராட்சி ஆளுகையின் பரப்பளவு | கொள்ளவு (மெற்றிக்தொன்) | ஊடன்படிக்கைத் தொகை / 20% முற்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | உடுநுவர பிரதேச சபை | 110,905 | 68 | 8 | 3,625,217.63<br>725,043.53 – 20% |
| 2 | தொம்பே பிரதேச சபை | 154,105 | 176 | 5 | 11,755,648.50 |
| 3 | லங்காபுர பிரதேச சபை | 42,128 | 184 | 2 | 5,497,557.95<br>1,099,511.59 – 20% |
| 4 | பிட்டபத்தர பிரதேச சபை | | | | |
| 5 | சம்மாந்துறை பிரதேச சபை | 60,465 | 229 | 9 | 12,769,137.38<br>2,553,827.48 – 20% |

மேலுள்ள அட்டவணைப்படி உடுநுவர பிரதேச சபை, லங்காபுர பிரதேச சபை மற்றும் சம்மாந்துறை பிரதேச சபையுடன் உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டுள்ளதோடு, 2014 இறுதியில் குறித்த கருத்திட்ட நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்காக கருத்திட்ட பெறுமதியில் தலா 20% வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் மூன்று கருத்திட்டங்கள் பாத்தி முறையில் கூட்டுப்பசளைத் தயாரிப்பனவாகும். தொம்பே கூட்டுப்பசளைத் தள நிர்மாணம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதுடன் வீதி நிர்மாணமும் நிறைவு பெறவுள்ளது. நிலவிய சீரற்ற காலநிலையில் மண் தர பரிசோதனை மேற்கொள்வதில் சிக்கல் எழுந்ததுடன், நிர்மாணப் பணிகளும் தாமதமாயின. இறுதியில் பரிசோதனையின்றி பட்டியல் செலுத்தித் தீர்க்கப்பட்டது.

**14. 7.5 நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற சிறிய அளவிலான கூட்டுப்பசளைத் தளங்களுக்கென செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள்.**

**14.7.5.1தொழிற்படும் கூட்டுப்பசளைத் தளங்களின் நிர்மாணத்திற்காக கணக்கின்படியான கொடுப்பனவுகள்.**

பல கூட்டுப்பசளைத் தளங்களின் நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்ததால் 2014ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து "பிலிசறு" கருத்திட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியல்களைச் செலுத்தி தீர்க்க வேண்டியிருந்தது. இது 2014 செயற்பாட்டுத் திட்டத்தில் கூட்டுப்பசளைத் தளங்களுக்காக செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளாக இனங்காணப்பட்டிருந்தது. 2014ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுப்பசளைத் தள நிர்மாணங்களுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்துமாறு உள்ளூராட்சி நிறுவனங்களும் ஒப்பந்தக்காரர்களும் தொடர்ச்சியாகக் கோரி வந்தனர். கணிய அளவையாளர் ஒருவர் இல்லாமை பிரதான தடையாக இருந்ததுடன், நேர்முகப் பரீட்சைகளை நடத்தி தெரிவு செய்யப்பட்டவர்கள் கடமைகளைப் பொறுப்பேற்க வராததால் அதற்கான ஆட்சேர்ப்புகள் 2014ஆம் ஆண்டு யூலை மாதத்தின் பின்னர் வரை தாமதமானது. நிர்மாணத்திற்குரிய பட்டியல்கள் கருத்திட்ட அலுவலகத்திற்கு கிடைத்திருந்தபோதும் கணிய அளவையாளர் இன்றி அவற்றைச் சரிபார்க்க முடியவில்லை. இந்தச் சிக்கல் நிலை காரணமாக கணிய அளவையாளர் ஒருவர் அத்தாட்சிப்படுத்தும் வரை பெறுமதியில் 50% செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, அதனால் ஒரு சில கூட்டுப்பசளைத் தளங்களின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கும் அதன் பின்னர் கூட்டுப்பசளைத் தயாரிப்பிற்கும் இயலுமானது.

அட்டவணை – 05 கணக்குகளின் அடிப்படையில் பணிகள் நடைபெற்று வந்த கூட்டுப்பசளைத் தளங்கள்

| இல. | உள்ளூராட்சி நிறுவனம் | மாவட்டம் | கணக்கீட்டுத் தொகை | பட்டியல் பெறுமதியில் 50% |
|---|---|---|---|---|
| 1 | திரப்பனே பி.ச | அநுராதபுரம் | 5,573,025.61 | 1,231,268.52 |
| 2 | கெபெதிகொல்லாவ பி.ச. | அநுராதபுரம் | 6,441,989.85 | 308,596.35 |
| 3 | கஹட்டகஸ்தீகிலிய பி.ச. | அநுராதபுரம் | 6,497,638.42 | 249,999.50 |

| இல. | உள்ளூராட்சி நிறுவனம் | மாவட்டம் | கணக்கீட்டுத் தொகை | பட்டியல் பெறுமதியில் 50% |
|---|---|---|---|---|
| 4 | களனிய பி.ச | கம்பஹா | 13,890,860.25 | 835,622.75 |
| 5 | ருவன்வெல்ல பி.ச | கேகாலை | 5,219,922.89 | 1,172,071.46 |
| 6 | வனாத்தவில்லுவ பி.ச | புத்தளம் | 3,875,896.63 | 619,350.48 |
| 7 | மாவத்தகம பி.ச. | குருணாகல் | 6,070,157.65 | 254,312.63 |
| 8 | தலவகலேலிந்துல பி.ச. | நுவரெலியா | 6,910,472.63 | 1,066,278.87 |
| 9 | றம்பாவ பி.ச. | அநுராதபுரம் | 6,497,938.42 | 450,894.34 |
| 10 | லுணுகம்வெஹர பி.ச. | அம்பாந்தோட்டை | 5,171,133.72 | 333,061.91 |
| 11 | இலங்கை வான்படை தியதலாவ | பதுளை | 2,649,942.78 | 195,848.17 |
| 12 | புத்தளம் - மதுரன்குளிய | புத்தளம் | 7,389,377.35 | 79,361.71 |
| 13 | ரீதிகம பி.ச. | குருணாகல் | 4,034,531.09 | 134,674.66 |
| 14 | பதவிய பி.ச. | அநுராதபுரம் | 6,918,065.07 | 1,059,283.43 |
| 15 | ஜா- எல நகர சபை | கம்பஹா | 8,539,326.48 | 2,087,333.73 |
| **மொத்தம்** | **95,680,278.84** | **10,077,958.51** | | |

### 14.7.5.2 கூட்டுப்பசளைத் தளங்களுக்கான நிறுதிவைக்கப்பட்ட தொகையைச் செலுத்துதல்.

2014ஆம் ஆண்டுக்கு முன்னர் அமைக்கப்பட்ட கூட்டுப்பசளைத் தளங்களுக்கான நிறுத்தி வைக்கப்பட்ட தொகை உள்ளூராட்சி நிறுவனங்களால் விடுவிக்க வேண்டிய ஒரு கொடுப்பனவாகும். இத்தொகை பொதுவாக உடன்பட்ட தொகையில் 5% காணப்படுவதுடன், அட்டவணை 06இல் காட்டப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் நிர்மாணப் பணிகள் முடிவுற்றதற்கான சான்றிதழைச் சமர்ப்பித்து நிறுத்தி வைக்கப்பட்ட தொகையைச் செலுத்துமாறு ‘பிலிசறு’ கருத்திட்டத்திற்கு கோரிக்கைகளை முன்வைத்திருந்தன. 2014 செயற்பாட்டுத் திட்டத்தின்படி கூட்டுப்பசளைத் தளங்களுக்கான கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட தொகையைச் செலுத்துவதற்கான நிதியும் கிடைத்தது. பிலிசறு கருத்திட்டத்தில் தலா ஒரு கணிய அளவையாளர்,

பொறியியலாளர் மட்டுமே இருந்த காரணத்தால் சகல கூட்டுப்பசளைத் தளங்களையும் சோதனைக்குட்பத்தல் பலத்த சவாலாக அமைந்தது. இறுதியாக இரண்டு வெளியக நிறுவனங்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் குழு அங்கீகாரம் வழங்கியது. அதன்படி, பொறியியலாளர் மற்றும் கணிய அளவையாளர் குழுவினால் சகல கூட்டுப்பசளைத் தளங்களும் சோதனை இடப்பட்டு இறுதியறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

**அட்டவணை 06 – நிறுத்தி வைக்கப்பட்ட தொகையை விடுத்த உள்ளூராட்சி நிறுவனங்கள்**

| இல. | உள்ளூராட்சி நிறுவனம் | உடன்பட்ட தொகை ரூ. | விடுவிக்கப்பட்ட நிறுத்தி வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | வீரக்கட்டிய பி.ச. | 2,221,348.05 | 111,067.40 |
| 2 | பெலிஅத்த பி.ச. | 5,412,993.54 | 270,649.68 |
| 3 | பொல்பதிகம பி.ச | 3,981,693.02 | 199,084.65 |
| 4 | கஹட்டகஸ்திகிலிய பி.ச. | 6,497,638.42 | 324,881.92 |
| 5 | நாமல்ஓயா பி.ச. | 4,284,957.00 | 189,126.58 |
| 6 | கேகாலை நகர சபை - II | 3,113,647.71 | 129,661.97 |
| 7 | பதியதலாவ பி.ச. | 4,572,661.38 | 376,618.39 |
| 8 | ராங்ஜாகனய பி.ச. | 5,295,245.90 | 264,762.29 |
| 9 | அலவ்வ பி.ச. | 5,366,118.38 | 268,305.91 |
| 10 | நிக்கவரட்டிய பி.ச. | 2,465,256.48 | 150,636.89 |
| 11 | மாத்தளை மாநகர சபை | 2,680,943.12 | 132,478.59 |
| 12 | கல்னாவ பி.ச | 5,295,245.90 | 264,762.29 |
| 13 | உக்குவெல பி.ச | 3,439,156.00 | 171,957.78 |
| 14 | ருவன்வெல்ல பி.ச | 5,979,322.89 | 298,966.14 |

| | | | |
|---|---|---|---|
| 15 | அகுண பி.ச | 5,394,964.10 | 253,441.14 |
| 16 | பாஹுதஹேவாஹட்ட பி.ச. | 4,144,757.50 | 207,237.88 |
| 17 | பதவிய பி.ச. | 6,918,065.00 | 345,903.25 |
| 18 | ஹாலி - எல பி.ச. | 6,498,553.93 | 324,927.70 |
| 19 | பண்டாரவளை மாநகர சபை | 8,245,776.50 | 409,528.92 |
| 20 | மாலிம்பட பி.ச | 5,647,289.49 | 282,364.47 |
| 21 | தணமல்வில பி.ச. | 1,801,506.27 | 40,809.88 |
| 22 | தமன பி.ச | 3,901,116.00 | 195,055.82 |
| 23 | கிரிந்த புஹுல்வெல்ல பி.ச | 5,630,391.73 | 281,519.59 |
| 24 | கரன்தெணிய பி.ச | 1,089,760.84 | 54,488.04 |
| 25 | மஹஓயா பி.ச. | 4,727,725.18 | 236,386.26 |
| 26 | கல்குளம் | 1,726,373.78 | 86,318.69 |
| | **மொத்தம்** | | **5,870,942.12** |

### 14.7.5.3 செலுத்தப்படாத பட்டியல்களை செலுத்தித் தீர்த்தல்.

பிலிசறு கருத்திட்டத்தின் கீழ் நிதியின்மை, 2013ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டப் பணியாளர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டமை மற்றும் 2014ஆம் ஆண்டின் நீண்ட காலமாக பொறியியல் பிரிவில் அலுவலர்கள் இல்லாமை போன்ற காரணங்களினால் 2014க்கு முன்னர் அமைக்கப்பட்ட கூட்டுப்பசளைத் தளங்களின் நிர்மாணப் பணிகளுக்கான கொடுப்பனவுகள் செலுத்தப்படாமை தெரிய வந்தது. எனவே, 2014ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுப்பசளைத் தளங்கள் பலவற்றின் நிர்மாணப் பணிகள் தாமதமாயின. இதனால் கூட்டுப்பசளை உற்பத்தி தடைப்பட்டதுடன், 2014 யூலை மாதத்தின் பின்னர் பிலிசறு கருத்திட்டத்தின் பொறியியல் பிரிவு வெளிக்களப் பரிசோதனைகளை மேற்கொண்டு கருத்திட்ட செயற்பாட்டை அங்கீகரித்ததுடன் பட்டியல்களைச் செலுத்தவும் சிபாரிசு செய்தது. அவ்வாறு கொடுப்பனவு செலுத்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் அட்டவணை 07இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 07 – 2014ஆம் ஆண்டில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்ட பட்டியல்கள்.**

| இலக்கம் | உள்ளூராட்சி நிறுவனம் | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தொம்பே பி.ச. | பட்டியல் இல - 01 | 3,318,267.97 |
| 2 | லுணுகம்வெஹர பி.ச | பட்டியல் இல - 01 | 331,322.24 |
| 3 | வனாத்தவில்லுவ பி.ச. | பட்டியல் இல - 03 | 490,139.64 |
| 4 | வீரகட்டிய பி.ச. | பட்டியல் இல - 02 | 55,000.00 |
| 5 | ருவன்வெல்ல பி.ச | பட்டியல் இல - 02 | 1,012,512.72 |
| 6 | கஹட்டகஸ்திகீலிய பி.ச. | பட்டியல் இல - 04 | 249,990.50 |
| 7 | திரப்பனே பி.ச | பட்டியல் இல - 02 | 1,130,287.06 |
| 8 | பதவிய பி.ச | பட்டியல் இல - 03 | 755,333.92 |
| 9 | தொம்பே பி.ச | பட்டியல் இல - 02 | 2,557,834.34 |
| 10 | கெப்பெதிகொல்லாவ பி.ச | பட்டியல் இல - 03 | 188,115.38 |
| 11 | ருவன்வெல்ல பி.ச. | பட்டியல் இல - 03 | 623,863.17 |
| 12 | திஸ்ஸமஹாராமய பி.ச. | இறுதிப் பட்டியல் | 365,665.79 |
| 13 | புத்தளம் பி.ச | பட்டியல் இல - 02 | 852,886.86 |
| 14 | ஹம்பாந்தோட்டை பி.ச. | பட்டியல் இல - 04 | 730,624.24 |
| 15 | ஜா-எல நகரசபை | இறுதிப் பட்டியல் | 519,880.25 |
| 16 | மீரிகம பி.ச. | இறுதிப் பட்டியல் | 833,789.93 |
| 17 | ஹொரவப்பொத்தான பி.ச. | பட்டியல் இல - | 1,312,703.59 |

| இலக்கம் | உள்ளூராட்சி நிறுவனம் | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| | | 01 | |
| 18 | துலாவ தம்புத்தேகம பி.ச. | பட்டியல் இல - 02 | 1,133,024.81 |
| 19 | தலவகலே லிந்துல பி.ச. | பட்டியல் இல - 02 | 2,700,617.60 |
| 20 | தலவகலே லிந்துல பி.ச. | பட்டியல் இல - 01 | 1,122,671.77 |
| 21 | தணமல்வில செவணகல பி.ச. | பட்டியல் இல - 01 | 613,693.91 |
| 22 | கல்குளம பி.ச | இறுதிப் பட்டியல் | 72,822.40 |
| 23 | தொம்பே பி.ச | பட்டியல் இல - 03 | 933,479.36 |
| **மொத்தம்** | | | **21,904,527.45** |

### 14.7.6 உயிர்வாயு அலகுகள்

சமயலறை மற்றும் உணவகங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற சேதனக் கழிவுகளைப் பயன்படுத்தி காற்றின்றிய நிலையில் பிரிகையடைதல் செயற்பாட்டுக்கு உட்படுத்துவதன் மூலம் உயிர்வாயு தயாரிக்க முடியும். இவ்வாறு கழிவுப்பொருட்களில் நுண்ணங்களினால் பிரிகையடையச் செய்யப்படும் பகுதிகளை முகாமைத்துவம் செய்வதற்கான வெற்றிகரமான ஒரு முறையாகக் காற்றின்றிய பிரிகையடைதல் முறை அறியப்படுகிறது. காற்றின்றிய பிரிகையடைதலின் மூலம் சேதனக் கழிவுப்பொருள்களில் நிகழும் மாற்றத்தின் அளவு பயன்படுத்தப்படுகின்ற கழிவுப்பொருட்களில் தங்கியிருப்பதுடன், அது குடிமனைசார் வாயு கூட்டுப்பசளைத் தயாரிப்பில் பெறப்படும் அளவுக்குச் சமனாகும். பிரிகையடையும் சேதனக்கழிவுப் பொருளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் சக்திவலு அண்ணளவாக 90% மீதேன் வாயுவாக அமையும். நகரத் திண்மக் கழிவுப் பொருளினால் அதிகளவு மீதேன் வாயு உற்பத்தி செய்யப்படுவதோடு, அது நகர சேதன திண்மக் கழிவுப்பொருள் மெக்றிக் தொன் ஒன்றுக்கென சராசரியாக உயிர்வாயு கனமீற்றர் 100 தொடக்கம் 200 வரையான அளவைக் கொண்டிருக்கும். சுகாதார அமைச்சின் வேண்டுகோள்படி அரச வைத்தியசாலைகளின் சமயலறைகள் மற்றும் காவறைகளிலிருந்து வெளியேற்றப்படும் உணவுக் கழிவுகளுக்கான தீர்வாக அங்கு உயிர்வாயு அலகுகள் தாபிக்கப்பட்டன.

நிர்மாணப்பணிகள் முழுமையடைந்தாலும் பல அலகுகள் உரிய முறையில் தொழிற்படவோ அல்லது பராமரிக்கப்படவோ இல்லை. இதனால் பல ஆண்டுகளாக அவை கைவிடப்பட்ட நிலையில் இருந்ததுடன், அவற்றை மீண்டும் இயங்கச் செய்வதற்கு ஏதேனும் மாற்றத்தைச் செய்ய நேரிட்டது. இவ்வாறான அலகுகளைச் சீராக்கி மீண்டும் அந்தந்த நிறுவனங்களுக்குக் கையளிக்கப்படுமுகமாக 2014ஆம் ஆண்டில் ஒப்பந்தக்காரர்களுடன் பல சுற்றுக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன், மூன்றுமாத காலத்தினுள் எதிர்பார்த்த மாற்றத்தைச் செய்வதற்கு பிலிசறு கருத்திட்டம் ஒப்பந்த

நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டது. உடன்பட்ட காலத்தினுள் ஒப்பந்தக்காரர் வேலைகளை நிறைவுசெய்யத் தவறியமை அல்லது ஆரம்ப உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏதேனும் மாற்று நடவடிக்கைக்குச் செல்ல அமைச்சு பெறுகை குழுவின் ஆலோசனையைக் கோரியது. இதனிடையே 05 உயிர்வாயு அலகுகளின் பணிகள் முடியும் தறுவாயில் உள்ளதாகவும் அவற்றைப் பிலிசறு கருத்திட்டத்தின் மேற்பார்வையின் கீழ் அந்தந்த நிறுனங்களிடம் ஒப்படைக்க உள்ளதாகவும் பிலிசறு கருத்திட்டம் அறிவித்துள்ளது.



பொலனறுவை உயிர்வாயு அலகு



திருகோணமலை உயிர்வாயு அலகு

### 14.7.7 மாத்தறை கொட்டவில காற்றின்றிய பிரிகையாக்க கூட்டுப்பசளைத் தளம்

தேசத்திற்கு மகுடம் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்தறை மாநகரசபை ஆளுகையின் கொட்டவில பிரதேசத்தில் பாரியளவிலான உயிர்வாயு கருத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சும் தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்ப அமைச்சும் இணைந்து 2014 ஆகஸ்ட் 08ஆம் திகதி கூட்டாக சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தின்படி இது அரசு மற்றும் தனியார் இணைவு கருத்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. இதையொட்டி மாத்தறை மாநகர சபை, பயோகிறீன் சயிக்கிள் (தனி) நிறுவனம், மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகிய நிறுவனங்கள் முத்தரப்பு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டன. உடன்படிக்கைக்கமைய மத்திய சுற்றாடல் அதிகாரசபை 126.36 மில்லியன் ரூபாவினையும் பயோகிறீன் சயிக்கிள் (தனியார்) நிறுவனம் 123.44 மில்லியன் ரூபாவினையும் முதலீடு செய்ய வேண்டியிருந்தது. கருத்திட்ட ஆலோசனைச் சேவைகள் மொறட்டுவை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டன. திறைசேரியிலிருந்து மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முதலீட்டுத் தொகை நேரடியாகக் கிடைத்தது.

இந்த அலகு கொட்டவில பிரதேசத்தில் அமைந்துள்ள மாத்தறை மாநகர சபையின் கூட்டுப்பசளைத் தளத்தை விருத்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் பிலிசறு கருத்திட்டம் 64.36 மில்லியன் ரூபாவினை ஒப்பந்தகாரருக்கு வழங்கியிருந்தது. இதன்மூலம் நீண்ட காலப் பயனாக பசுமை சக்தியும் சேதன பசளை உற்பத்தியும் காணப்படுகின்றன.

### 14.7.8 கழிவுப் பொருள்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் வழங்கல்

குடியிருப்புகள், வியாபார நிலையங்கள் மற்றும் பொது இடங்களிலிருந்து கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் பொறுப்பு உள்ளூராட்சி நிறுவனங்களைச் சாரும். எனவே, கழிவுப்பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான வாகனங்கள் இன்மை உடனடியாகத் தீர்வு காண வேண்டிய ஒரு பிரச்சினையாகும். 2014ஆம் ஆண்டிறுதியில் பிலிசறு கருத்திட்டத்தால் 60 ரக்ரெர்கள், 60 ரெயிலர்கள், 60 லோடர்கள் மற்றும் 03 கம்பெக்ரர்கள் கீழ்காணும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.





உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உழவு இயந்திரம் வழங்கள்

ஸ்கியற் லோடர், கம்பெக்ரர் வழங்கள்



சனாதிபதி அவர்களால் ரக்ரெர்கள் வழங்கி வைக்கப்பட்ட நிகழ்வு

அட்டவணை 08 – உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ரெக்டர்கள், ரெயிலர்கள், லோடர்கள் மற்றும் கம்பெக்ரர்கள் வழங்குதல்.

| இலக்கம். | மாகாணம் | மாவட்டம் | ரெக்ரர் | ரெயிலர் | லோடர் | கம்பெக்ரர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| 1 | மத்திய சுற்றாடல் அ. ச | | **1** | **1** | **1** | |
| 2 | மத்திய | மாத்தளை | 1 | 1 | | |
| 3 | மத்திய | கண்டி | 7 | 7 | 1 | |
| 4 | மத்திய | நுவரெலியா | | | 1 | 1 |
| 5 | கிழக்கு | அம்பாறை | 1 | 1 | | |
| 6 | வடமத்திய | அநுராதபுரம் | 5 | 5 | 1 | |
| 7 | வடமேல் | புத்தளம் | 1 | 1 | | |
| 8 | வடமேல் | குருணாகல் | 5 | 5 | 1 | |
| 9 | வடக்கு | கிளிநொச்சி | 1 | 1 | | |
| 10 | வடக்கு | மன்னார் | 1 | 1 | | |
| 11 | வடக்கு | முல்லைத்தீவு | 1 | 1 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | வடக்கு | யாழ்ப்பாணம் | 2 | 2 | | |
| 13 | வடக்கு | வவுனியா | 2 | 2 | | |
| 14 | சபரகமுவ | கேகாலை | 1 | 1 | | |
| 15 | சபரகமுவ | இரத்தினபுரி | 1 | 1 | | |
| 16 | தெற்கு | திஸ்ஸமஹாரா மய | 1 | 1 | | |
| 17 | தெற்கு | காலி | 2 | 2 | | |
| 18 | தெற்கு | ஹம்பாந்தோட்ை ட | 2 | 2 | | |
| 19 | தெற்கு | மாத்தறை | 9 | 9 | | |
| 20 | ஊவா | பதுளை | 1 | 1 | | |
| 21 | மேல் | களுத்துறை | 3 | 3 | 1 | |
| 22 | மேல் | கம்பஹா | 4 | 4 | | |
| 23 | மேல் | கொழும்பு | 8 | 8 | | |
| | **மொத்தம்** | | **60** | **60** | **6** | **1** |

### 14.7.9 கூட்டுப்பசளைத் தளங்களுக்கான உபகரணம் வழங்கல்.

2014ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சில கூட்டுப்பசளைத் தளங்களுக்கு கொட்டும் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. சேகரிக்கப்படும் கழிவு அதிகரிப்பிற்கு நிகராக இயந்திரங்கள் போதுமானதாக இருக்கவில்லை. எனவே, அரிதட்டுகளுக்கான கோரிக்கையைக் கவனத்தில் கொண்டு 2014 செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் பின்வரும் நிறுவனங்களுக்கு 21 அரிதட்டுக்கள் விநியோகிக்கப்பட்டன.

**அட்டவணை -08-** உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இயந்திரங்கள் வழங்குதல் - 2014

| இலக்கம் | உள்ளூராட்சி நிறுவனம் | இயந்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சாவகச்சேரி நகரசபை | 1 |
| 2 | தொம்பே பிரதேச சபை | 1 |
| 3 | கல்னாவ பிரதேச சபை | 1 |
| 4 | ஜா-எல நகர சபை | 1 |
| 5 | கஹட்டகஸ்திகீலிய பிரதேசசபை | 1 |
| 6 | கிரிந்த – புஹுல்வெல் பிரதேச சபை | 1 |
| 7 | காத்தான்குடி நகர சபை | 1 |
| 8 | கெப்பிதிகொல்லாவ பிரதேச சபை | 1 |
| 9 | குருணாகல் மாநகர சபை | 1 |
| 10 | மஹஓயா பிரதேச சபை | 1 |
| 11 | மாலிம்பட பிரதேச சபை | 1 |
| 12 | நாமல்ஓயா பிரதேச சபை | 1 |
| 13 | பொல்பத்திகம பிரதேச சபை | 1 |
| 14 | ராங்ஜாகனய பிரதேச சபை | 1 |
| 15 | ரம்புக்கண பிரதேச சபை | 1 |
| 16 | ருவன்வெல்ல பிரதேச சபை | 1 |
| 17 | தலவகலே லந்துல நகரசபை සභාව | 1 |
| 18 | உக்கவெல பிரதேச சபை | 1 |
| 19 | வலிகாகம் தெற்கு பிரதேச சபை | 1 |
| 20 | வீரக்கட்டிய பிரதேச சபை | 1 |
| 21 | உடுநுவர பிரதேச சபை | 1 |

| இலக்கம் | உள்ளூராட்சி நிறுவனம் | இயந்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **மொத்தம்** | | **21** |



**உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அரிதட்டு**

### 14.8. கல்வி, விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

2014 செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மிகவும் அவசியமானவை என இனங்காணப்பட்டுள்ளதோடு அவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. எனவே அதன் அடைவுகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

அ) கண்டி எசல பெரகராவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட சமூக நற்பணி பொசொன் தினத்தையொட்டி மிகிந்தலையில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்ற மக்கள் பெருமளவில் ஒன்றுகூடும் விழாக்களின் போது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அலுவலர்களை வழிப்புணர்வு செய்யுமுகமாக ஈடுபடுத்தல், கழிவுத் தொட்டிகளில் பக்தர்களால் வெளியேற்றப்படும் குப்பைகளைச் சேகரித்தல், பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் போன்றவற்றை கையுதிர்க்காது சுற்றாடலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வுப் பதாகைகளைக் காட்சிப்படுத்துதல் என்பன இதிலடங்கும். இத்திட்டங்கள் அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டன.



தலதா நற்பணி



பொசொன் தின நிகழ்ச்சித் திட்டம்.

ஆ) பிலிசறு கருத்திட்டம் அந்தந்த மாவட்டத்திலுள்ள கூட்டுப்பசளைத் தளங்களுடன் ஓர் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி பிரதேச சுற்றாடல் அலுவலர்களின் உதவியுடன் உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் வீடுவீடாகச் சென்று விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியுள்ளது. நாடளாவிய ரீதியில் இவ்வாறான 25 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதோடு அதன்போது பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. இதன் பின்னர் உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுப்பொருள்களை வெவ்வேறாக சேகரிக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதுடன் உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுப்பொருள்களை கழிவு சேகரிக்கும் உள்ளூராட்சி கழிவு சேகரிப்பு வண்டிக்கு ஒப்படைக்கவும் ஏற்பாடானது.

**அட்டவணை 10 – கழிவுப்பொருள் வேறாக்கம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.**

| இலக்கம் | திகதி | ස්ථානය நிலையம் | | | | விழிப்புணர்வு செய்யப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | மாகாணம் | மாவட்டம் | உள்ளூராட்சி நிறுவனம் | நிறுவனம்/கிராமம் | |
| 1 | 2014.08.11 | மேல் | கொழும்பு | கடுவலை மாநகர சபை | கஹன்தொட்ட வீதி | 200 |
| 2 | 2014.11.23 | மேல் | கொழும்பு | கஸ்பாவ நகர சபை | இசுறுபுர | 900 |
| 3 | 2014.09.15 | மேல் | கம்பஹா | அத்தனகல்ல பி.ச. | | 1000 |
| 4 | 2014.08.15 | மேல் | கம்பஹா | களணிய பி.ச. | ஹுனுப்பிட்டிய | 650 |
| 5 | 2014.09.15 | மேல் | களுத்துறை | அகலவத்தை பி.ச. | பிரதேச செயலக ஆளுகை | 432 |
| 6 | 2014.09.11 | மேல் | களுத்துறை | புளத்சிங்கள பி.ச. | வேயன்கல | 232 |

| | திகதி | ஜ්ථානය நிலையம் | | | | விழிப்புணர்வு செய்யப்பட்ட |
|---|---|---|---|---|---|---|
| 7 | 2014.08.21 | மேல் | களுத்துறை | ஹொரண பி.ச. | | 250 |
| 8 | 2014.09.15 | வடமேல் | குருணாகல் | பொல்காவெல பி.ச. | நகரம் சார்ந்ததாக | 150 |
| 9 | 2014.08.20 2014.09.12 | வடமேல் | குருணாகல் | வாரியப்பொல பி.ச | நகரம் சார்ந்ததாக | 200 |
| 10 | 05-06/10/2014 | வடமேல் | குருணாகல் | மஹுவ பி.ச | நகரம் சார்ந்ததாக | 545 |
| 11 | 2014.08.29 | வடமேல் | குருணாகல் | ஆனமடுவ பி.ச | நகரம் சார்ந்ததாக | 200 |
| 12 | 2014.08.28 | வடமேல் | புத்தளம் | வனாத்தவில்லுவ பி.ச | நகரம் சார்ந்ததாக | 100 |
| 13 | 2014.09.12 | வடமேல் | குருணாகல் | அலவ்வ பி.ச | நகரம் சார்ந்ததாக | 40 |
| 14 | 19-20-21/08/2014 | தென் | காலி | யக்கலமுல்ல பி.ச | நகரம் சார்ந்ததாக | 660 |
| 15 | 2014.08.25 | தென் | காலி | நூகொட பி.ச. | நகரம் சார்ந்ததாக | 150 |
| 16 | 2014.08.26 | தென் | காலி | ஹபராதுவ பி.ச. | நகரம் சார்ந்ததாக | 1000 |
| 17 | 2014.09.24 | தென் | காலி | பத்தேகம பி.ச | நகரம் சார்ந்ததாக | 600 |
| 18 | 2014.08.25 | தென் | மாத்தறை | மாத்தறை பி.ச | நகரம் சார்ந்ததாக | 500 |
| 19 | 2014.08.22 | தென் | ஹம்பாந்தோட்டை | திஸ்ஸமஹாராமய பி.ச | நகரம் சார்ந்ததாக | 1000 |
| 20 | 2014.09.15 | தென் | ஹம்பாந்தோட்டை | தங்காலை நகர சபை | நகரம் சார்ந்ததாக | 1500 |
| 21 | 2014.08.17-25 | தென் | கேகாலை | ரம்புக்கண பி.ச | நகரம் | 100 |

| | திகதி | ස්ථානය நிலையம் | | | | விழிப்புணர்வு செய்யப்பட்ட |
|---|---|---|---|---|---|---|
| | | | | | சார்ந்ததாக | |
| 22 | 2014.08.25 | சபரகமுவ | கேகாலை | மானவனெல்ல பி.ச. | நகரம் சார்ந்ததாக | 100 |
| 23 | 2014.08.22 | சபரகமுவ | கேகாலை | ருவன்வெல்ல பி.ச. | நகரம் சார்ந்ததாக | 100 |
| 24 | 2014.09.05 | வடமத்திய | அநுராதபுரம் | குஹட்டகஸ்திகீலிய பி.ச. කහටගස්දිගිලිය ප්‍රා.ස | நகரம் சார்ந்ததாக | 150 |
| 25 | 2014.08.26 | வடமத்திய | அநுராதபுரம் | கல்னாவ பி.ச. | நகரம் சார்ந்ததாக | 150 |
| | 2014.08.25 | வடமத்திய | பொலனறுவை | மெதிரிகிய பி.ச. | நிறுவனம் சார்ந்ததாக | 200 |
| | | | | | | 11,109 |





**வீடுவீடாகச் சென்று விழிப்புணர்வு செய்தல்**

இ) சூழல் நேய கழிவு முகாமைத்துவ வழிமுறையை பாடசாலைக் கலைத்திட்டத்தில் உள்வாங்கி இலங்கையிலுள்ள 9000 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களை விழிப்புணர்வு செய்தல் மூன்றாவது நிகழ்ச்சித் திட்டமாகும். இல்லத்திலும் பாடசாலையிலும் உற்பத்தியாகின்ற கழிவுப்பொருள்களை முகாமை செய்தல், 3R எண்ணக்கருவை வெற்றியாக்கிக் கொள்வதற்கு வயது வந்தவர்களும் விழிப்புணர்வு செய்யப்படுவர். பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வு செய்தல் மிகவும் பயனுள்ள வேலைத்திட்டமென இனங்காணப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தைப் பாடசாலைக் கலைத்திட்டத்தைத் தயாரிக்கும் நிறுவனமாக தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. தேசிய கல்வி நிறுவகம் இதற்கென தமது ஒத்துழைப்பை வழங்கியதன் விளைவாக பாடசாலை பாடவிடயங்கள் பலவற்றுடன் தொடர்புடைய விரிவுரையாளர்களுடன் தொடர் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. இதையொட்டி மத்திய சுற்றாடல் அதிகார சபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரண்டு நாட்களைக் கொண்ட செயலமர்வின் பின்னர் பாடசாலை மட்டத்தில் சூழல் நேய கழிவு முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துமுகமாக விஞ்ஞானம், சுகாதாரம், விவசாயம், செயன்முறைத் தொழில்நுட்பம், புவியியல் மற்றும் குடியுரிமைக் கல்வி ஆகிய பாடங்களில் உள்வாங்குவதற்கும் தரம் 6 மற்றும் 07இல் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் உடன்பாடு காணப்பட்டது. இச்செயலமர்வில் பரீட்சைத் திணைக்கள கல்வி அமைச்சின் அலுவலர்களும் பங்கேற்று தமது கருத்துரைகளை வழங்கினர். செயலமர்வின் இறுதியில் பாடத்திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டிய கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான பாடவிடயத்தைத் தயாரிக்கும் பொறுப்பு தேசிய கல்வி நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.





கழிவுமுகாமைத்துவத்தை பாடசாலை கலைத்திட்டத்தில் உள்வாங்குதல் பற்றிய இரண்டு நாள் செயலமர்வு

### 14.9 **குடியிருப்பாளர்களுக்கான கூட்டுப்பசளைத் தயாரிப்பு கொள்கலன்களைத் தயாரிக்கும் நிலையங்களை அமைத்தல்.**

கூட்டுப் பசளைக் கொள்கலன்களின் மூலம் சமயலறையின்கழிவுகளை சூழல் நேய முறையில் முகாமைத்துவம்செய்ய முடியும். நாட்டில் நிலவும் உற்பத்தி விலை அதிகரிப்பு மற்றும் போக்குவரத்துக் கட்டணம் போன்றவற்றால் சந்தையில் கூட்டுப்பசளை கொள்கலன்களைக் கொள்வனவு செய்யுமாறு மக்களையும் உள்ளூராட்சி நிறுனங்களையும் ஊக்குவிக்க முடியாத நிலை காணப்பட்டது. இதற்குத் தீர்வாக 2014 செயற்பாட்டுத் திட்டத்தின் நிதியினைப் பயன்படுத்தி பிலிசறு கருத்திட்டம் கூட்டுப்பசளைக் கொள்கலன்களை உற்பத்தி செய்யும் நிலையமொன்றை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமை அலுவலக வளாகத்தில் தாபித்தது. பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் படி இருவர் இதற்கென ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். இவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்ற கொள்கலன்கள் அதன் உற்பத்தி விலை மட்டும் ஈடுசெய்யப்படும் வகையில் பொது மக்களுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. பிலிசறு கருத்திட்டத்தின் வேண்டுகோளுக்கமைய கிருமிநாசினி கட்டுப்பாட்டாளரின் அனுமதியின்பேரில் சுத்தமான மற்றும் வெற்று இரசாயன கொள்கலன்களை (லீற்றர் 200) மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு வழங்க சில இரசாயனப் பொருள் உற்பத்தி கம்பனிகள் உள்ளன. இவ்வாறு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் உற்பத்தி செய்யப்படும் கொள்கலன்களுக்கு மிகுந்த கேள்வி நிலவுகிறது.

2014 திசெம்பர் 31 திகதியன்று உள்ளவாறான முன்னேற்றங்களை கீழுள்ள அட்டவணை காட்டுகிறது.





மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கூட்டுப்பசளை கொள்கலன் உற்பத்தி நிலையத்தில் கொள்கலன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**அட்டவணை 11 – குறைந்த விலையில் கூட்டுப்பசளைக் கொள்கலன் உற்பத்தியும் விநியோகமும்**

| உள்ளூராட்சி நிறுவனம் | கோரிய திகதி | வழங்கிய திகதி | கோரிய தொகை | வழங்கிய தொகை | 1 கொள்கலனின் விலை | மொத்தம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| மீரிகம பிரதேச சபை | 05.11.2014 | 2014.12.16 | 500 | 200 | 500.00 | 100,000.00 | செலுத்தப் பட்டுள்ளது. |
| ஜா-எல பி.ச. | 29 .10.2014 | 2014.12.16 | 500 | 200 | 500.00 | 100,000.00 | செலுத்தப் பட்டுள்ளது. |
| கொட்டபொல பி.ச | 17 .11. 2014 | | 250 | 100 | | | விநியோகிக்கப்படவில்லை. |
| திவுலப்பிட்டிய பி.ச | 04 .11. 2014 | | 500 | | 500.00 | | |
| பண்டாரகம நகரசபை | 19 .11. 2014 | 2014.12.23 | 500 | 100 | 500.00 | 50,000.00 | விநியோகிக்கப்படவில்லை. |
| பண்டாரகம பிரதேச சபை | 12.11. 2014 | | 300 | | 500.00 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| யட்டியந்தோட்டை பிரதேச சபை | 04 .11. 2014 | | 200 | | 500.00 | | |
| முலட்டியன பிரதேச சபை | 10.11. 2014 | | 119 | | 500.00 | | |
| பியகம பிரதேச சபை | 02.12.2014 | | 2000 | | | | |
| **மொத்தம்** | | | **5169** | **600** | | | |

14.10 **எஞ்சிய கழிவுகளை வெளியேற்றுவதற்கான சுகாதாரத்துடனான நிலமூடுகையை அமைக்க உதவுதல்.**

**14.10.1 மொன்றோரியாவத்த தற்காலிக நிலமூடுகை**

மொன்றோவியாவத்த கூட்டுப்பசளைத் தளத்திற்குக் கொண்டுவரப்படுகின்ற நகரத்து திண்மக் கழிவுகள் பகுதியளவான இயந்திர முறைகொண்டு வேறாக்கப்படுவதுடன் அதன் சேதனப் பகுதிகள் கூட்டுப்பசளையாக மாற்றப்படுகிறது. அசேதனப் பொருட்கள் மேலும் தரம்பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் வரை களஞ்சியப்படுத்தி வைக்கப்படுகிறது. மீள்சுழற்சி செய்ய முடியாத பொருட்களை சூழல் நேய முறையில் அகற்றுவதற்கான ஒரு வழிமுறை அவசியமாகிறது. திண்மக் கழிவுப் பொருள்களை அகற்றும் கருத்திட்டத்தின் (SDF) நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியின் அதே இடத்தில் சுகாதாரத்துடனான நிலமூடுகையொன்றை அமைப்பதற்கு அதிக காலம் தேவைப்படுமென்பதால் அதுவரை எஞ்சிய கழிவுகளை அகற்றுவதற்குப் பொருத்தமான தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறு ரத்கம பிரதேச சபை மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் கோரியுள்ளது. தென் மாகாண முதலமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற விசேட சந்திப்பில் மொன்றோவியாவத்த கூட்டுப்பசளைத் தளத்தை ஒரு கூட்டுக் கருத்திட்டமாக நடைமுறைப்படுத்த பிரதான சகல பங்காளர்களும் உடன்பாடு தெரிவித்தனர். கூட்டுப்பசளைத் தளத்தை அண்டிய பிரதேசத்து மக்கள் எதிர்கொள்ளும் சுற்றாடல் ரீதியான பிரச்சினைக்குத் தீர்வு காணுமுகமாக தற்காலிக நில மூடுகை ஒன்றை அமைக்க பிலிசறு கருத்திட்டம் இணங்கியதுடன் நிர்மாணத்திற்கென 64 மில்லியன் ரூபாவினை வழங்கியது. தென்மாகாண சபை அடுத்த கட்ட திட்டவமைப்புகள் மற்றும் கொள்வனவுகளைச் செய்துள்ளது. எனவே, ஒப்பந்தகாரர் ஊடாக நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



தற்காலிக நிலமூடுகைக்கான நில பரிசோதனை

### 14.10.2 பதுளை வில்சன் டயஸ் விளையாட்டு மைதானத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பதுளை மாநாகர சபை கடந்த 30 வருடங்களாக நகரத் திண்மக் கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கு நகரத்தின் விளையாட்டு மைதானத்தை பயன்படுத்தி வந்துள்ளது. அந்த மைதானத்தைச் சீரமைக்க வேண்டுமாயின் அங்கு கொட்டப்பட்டுள்ள கழிவுகளை அகற்றி சுத்தம் செய்ய வேண்டும்.

மேம்படுத்தல், 2014 ஆண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு கூட்டுப்பசளைத் தளங்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் வில்சன் டயஸ் மைதானத்தில் கழிவுப்பொருள்களை அகற்றுவதற்கான 39 மில்லியன் ரூபா அடங்கலாக பொதுத் திறைசேரி மேலதிகமாக 178 மில்லியன் ரூபாவினை பிலிசறு கருத்திட்டத்திற்கென ஒதுக்கியிருந்தது. 2014 செயற்பாட்டுத் திட்டத்தின்படி மைதானத்தைச் சுத்தப்படுத்தலுக்கான 39 மில்லியன் ரூபா கொடுப்பனவு பற்றி பிலிசறு கருத்திட்டம் கலந்துரையாடி உள்ளது.

### 14.11. இணைந்த கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கான நிறுனங்களுக்கிடையிலான ஒன்றிணைப்பு

மத்திய சுற்றாடல் அதிகாரசபை பிலிசறு தேசிய திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவக் கருத்திட்டத்திற்கு மேலதிகமாக உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சின்கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து செயற்படுகிறது. இம்மூன்று நிறுவனங்களும் உள்ளூராட்சி ஆளுகைப் பிரதேசங்களில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் மற்றும் ஆற்றல் விருத்தி மூலம் சூழல் நேய கழிவுப்பொருள் முகாமைத்துவ வழிமுறைகளை செயற்படுத்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகிறது. எனவே, திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்போது திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ உதவி நிலையம், மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை மற்றும் புரநெகும கருத்திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயலாற்ற பிலிசறு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. அதனூடாக அனுபவ பரிமாற்றத்திற்கான வாய்ப்புக் கிடைப்பதுடன், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கான வசதிகளை வழங்கும்போது அவை ஒன்றையொன்று மேவிச் செல்வதைத் தடுக்க முடியும். எனவே, இம்மூன்று நிறுவனங்களின் பங்கேற்புடன் மூன்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு சகல தரப்பும் உள்வாங்கப்படும் வழிப்படுத்தல் குழுவொன்றை அமைப்பதற்கும் உள்ளூராட்சி விசேட பிரதேசங்களில் இணைந்த கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் முடிவு காணப்பட்டது.

மேலும், கூட்டு செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரித்து கூட்டாக அதனை நடைமுறைப்படுத்தவும் முடிவு காணப்பட்டது.



நிறுவனங்களுக்கிடையிலான பிரதிநிதிகள் பங்கேற்ற கூட்டம்.

**14.12. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதேச சுற்றாடல் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட கூட்டுப்பசளைத் தள பின்தொடர் ஆய்வு.**

நாடெங்கிலுமுள்ள 115 கூட்டுப்பசளைத் தளங்கள் பற்றிய பின்தொடர் ஆய்விற்கென அதிகார சபையின் மாகாண அலுவலகங்களில் பணியாற்றும் 16 பிரதேச அலுவலர்களின் உதவியும் காத்திரமான பங்களிப்பும் பெறப்பட்டடது. பிலிசறு கருத்திட்ட அலுவலர்களுடன் இணைந்து கூட்டுப்பசளைத் தளங்களுக்கான வெளிக்கள விஜயம் மேற்கொண்டு அதுபற்றி அறிக்கையிட்டு, கூட்டுப்பசளைத் தளங்களின் பராமரிப்பு மற்றும் தொழிற்பாடு பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களை ஊக்கப்படுத்துமுகமாக இவர்கள் ஆற்றிய பணிப்பொறுப்பு பயன்மிக்கது.



பிரதேச சுற்றாடல் அலுவலர்களுடன் நடாத்தப்பட்ட மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

| இலக்கம் | திகதி | பங்கேற்ற அலுவலர்கள் | உள்ளூராட்சி நிறுவனம் | பங்கேற்றோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 2014.09.17 | தலைவர், மேற்பார்வையாளர், செயலாளர், கூட்டுப்பசளைத்தள தொழிலாளர்கள் | புத்தளம் நகர சபை<br>ஆனமடுவ பி.ச.<br>புத்தளம் பி.ச.<br>வென்னப்புவ பி.ச.<br>வனாத்தவில்லுவ பி.ச. | 40 |
| 2 | 2014.10.30 | -அதே- | பிங்கிரிய பி.ச.<br>பன்னல பி.ச.<br>பொல்காவெல பி.ச.<br>உடுபத்தாவ பி.ச.<br>நாரம்மள பி.ச.<br>கல்கமுவ பி.ச.<br>வாரியப்பொல பி.ச.<br>கொபெய்கனே பி.ச.<br>மாவத்தகம பி.ச.<br>ரீதிகம் பி.ச.<br>மஹஓயா பி.ச.<br>நிக்கரவெட்டிய பி.ச.<br>அலவ்வ பி.ச.<br>பொல்பத்திகம பி.ச. | 55 |

| இலக்கம் | திகதி | பங்கேற்ற அலுவலர்கள் | உள்ளூராட்சி நிறுவனம் | பங்கேற்றோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | | குருணாகல் பி.ச.<br><br>குருணாகல் மாநகர சபை<br><br>குளியாப்பிட்டிய நகரசபை | |
| 3 | 2014.10.24 | -அதே- | தலவாகலே லிந்துல நகர சபை | 22 |
| 4 | 2014.11.26 | -அதே- | ஹொரண பி.ச. | 35 |

**14.13. பாரிய மற்றும் நடுத்தர அளவிலான கூட்டுப்பசளைத் தளங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான பயிலமர்வு.**

கூட்டுப் பசளைத் தளங்களை நிர்மாணிப்பதற்காக பிலிசறு கருத்திட்டத்தால் நிதி உதவி வழங்கப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் பணியாளர்களை பயிற்றுவிப்பதற்கான பல நிகழ்ச்சித் திட்டங்கள் 2014 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கூட்டுப்பசளைத் தளங்கள் பற்றிய அறிமுறை மற்றும் செய்முறை அறிவைப் பெறக்கூடியதாக இதற்கான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. இதுபற்றிய தகவல்களை மேலுள்ள அட்டவணையில் காணலாம்.

**14. 14.1 ஆய்வுகளும் ஆராய்ச்சிகளும்**

கூட்டுப்பசளையின் தரத்தை மேம்படுத்துவதற்கு கூட்டுப்பசளைத் தளங்களின் தரம் பேணப்பட வேண்டும். எனவே, கூட்டுப்பசளைத் தளங்களைக் கொண்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்க மேலும் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக சர்வதேச வலையமைப்பு முகவராண்மை (IWMI) பிலிசறு கருத்திட்டத்திற்கு உதவ முன்வந்துள்ளது. பொசுபேற்றுப் படிமம் மற்றும் மலக் கழிவைப் பயன்படுத்திக் கூட்டுப்பசளையின் தரத்தை மேம்படுத்தல் பற்றிய ஆய்வை மேற்கொள்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை சர்வதேச வலையமைப்பு முகவராண்மையுடனும் குருநாகல் மாநகர சபையுடனும் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது. இந்த உடன்படிக்கையின் ஓர் அங்கமாக சர்வதேச வலையமைப்பு முகவராண்மை துண்டாக்கும் இயந்திரமொன்றை குருநாகல் மாநகர சபைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.



### 14.14.2 கொழும்பு மாநகர சபை ஆளுகை பிரதேசத்தில் கூட்டுப்பசளைத் தளங்கள் பற்றிய ஆய்வு.

சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரின் தலைமையில் கொழும்பு மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் உற்பத்தியாகும் உக்காத கழிவுப்பொருள்களைக் கொண்டு கூட்டுப்பசளை தயாரித்தல் பற்றிய சாத்தியவள ஆய்வொன்றை நடாத்துவதற்கு நிபுணத்துவக் குழுவொன்றை அமைப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று சம்பந்தப்பட்ட தரப்பினரின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது.

இந்த ஆய்வினை சர்வதேச வலையமைப்பு முகவராண்மையின் (IWMI) ஒத்துழைப்புடன் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.



IWMI நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

### 14. 15. கருத்திட்ட ஒருங்கிணைப்பும் முகாமைத்துவமும்

சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரின் வழிகாட்டலுக்கமைய சகல பங்கீடுபாட்டாளர்களினதும் ஆலோசனைப்படி நகர கழிவுப்பொருள் முகாமைத்துவத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டதுடன், மேலதிக நிதியைப் பெறுவதற்காக கருத்திட்டக் காலத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடிக்குமாறு கோரி அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி 2014ஆம் ஆண்டுக்கென 200 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டுடன் அதற்கான அங்கீகாரம் கிடைத்தது. பின்னர் எமது வேண்டுகோளுக்கமைய 2014க்கு முன்னர் அமைக்கப்பட்ட கூட்டுப்பசளைத் தளங்களைத் தரமுயர்த்தல், செலுத்தப்படாத பட்டியல்களை செலுத்தித் தீர்த்தல் அத்துடன் நிறுத்தி வைக்கப்பட்ட தொகையை விடுவிப்பதற்கெனவும் 178 மில்லியன் ரூபாய் மேலதிகமாக ஒதுக்கப்பட்டது.

பிலிசரு கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை ஆரம்பிப்பதற்காக 2014ஆம் ஆண்டில் புதிய பணியணி ஆட்சேர்ப்பு இடம்பெற்றது. 2014ஆம் ஆண்டின் இறுதியளவில் பின்வருமாறு ஆட்சேர்ப்பு

இடம்பெற்றிருந்ததுடன் அவசியமான பதவி வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாதிருந்தன. 2014க்கு முன்னர் அமைக்கப்பட்ட கூட்டுப்பசளைத் தளங்களுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதல் மற்றும் புதிய தளங்களை அமைப்பது தொடர்பில் பொறியிலாளர் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் கருத்திட்ட திட்டமிடல் பிரிவுகளில் உரிய பதவியணி இல்லாமை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. எவ்வாறாயினும், இந்த வெற்றிடங்கள் 2014 யூலை மாத்தின் பின்னர் நிரப்பப்பட்ட போதிலும் அது போதுமானதாக அமையவில்லை. பட்டியல் செலுத்தும்போது ஒருசில பொறியியல் துறைசார்ந்த பணிகளை முகாமை செய்ய முடிந்தது.

அட்டவணை 12 – 2014 ஆண்டில் நிலவிய பதவி வெற்றிடங்கள்.

| பதவி | பதவி வெற்றிடங்கள் | ஆட்சேர்த்த எண்ணிக்கை | ஆட்சேர்த்த மாதம் | நிலவும் வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் | 01 | 01 | ஜனவரி 2014 | -- |
| பிரதிப் பணிப்பாளர் | 01 | 01 | ஏப்ரல்- 2014 | -- |
| பிரதி முகாமையாளர் | 01 | 01 | யூலை 2014 | -- |
| சிரேஷ்ட பொறியியலாளர் | 01 | - | - | 01 |
| கணக்காளர் | 01 | 01 (resigned) | மார்ச் - செப்ரெம்பர் 2014 | 01 |
| கருத்திட்ட உத்தியோகத்தர் | 04 | 03 (One resigned) | யூலை 2014 | 02 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | மார்ச் 2014 | -- |
| கணிய அளவையாளர் | 01 | 01 | யூலை 2014 | |
| கருத்திட்டப் பொறியியலாளர் | 02 | 01 | ஏப்ரல் 2014 | 01 |
| கருத்திட்ட உத்தியோகத்தர் | 04 | 03 (one resigned) | மார்ச், செப்ரெம்பர் - 2014 | 02 |
| கருத்திட்டச் செயலாளர் | 01 | - | - | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| திட்டமிடல் உத்தியோகத்தர் | 01 | 01(resigned) | - | 01 |
| பெறுகை அலுவலர் | 01 | 01 | மார்ச் 2014 | -- |
| உதவி பெறுகை அலுவலர் | 01 | 01 | மார்ச் 2014 | -- |
| சட்ட உதவியாளர் | 01 | 01 | யூலை 2014 | -- |
| கணக்கு உதவியாளர் | 01 | 01 | மார்ச் 2014 | -- |
| எழுதுவினைஞர் | 05 | 03 | திசெம்பர் 2013 | 02 |
| சூரதி | 03 | 03 | - | 01 |
| அலுவலக உதவியாளர் | 02 | 01 | நவம்பர் 2013 | 01 |
| **மொத்தம்** | **33** | **25 (04 resigned)** | | **13** |

**14. 16. நிதி முன்னேற்றம்**

2014ஆம் ஆண்டுக்கென 200 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. 2014க்கு முன்னர் அமைக்கப்பட்ட கூட்டுப்பசளைத் தளங்களின் மேம்பாட்டுப் பணிகளுக்கான பட்டியல்களைச் செலுத்துதல், நிறுத்தி வைக்கப்பட்ட தொகையைச் செலுத்துவதற்காக கடிதமூலம் கோரப்பட்டிருந்த 178 மில்லியன் ரூபாய் 2014ஆம் ஆண்டில் மேலதிக நிதியாகக் கிடைத்தது. 2015 தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்தறையில் தனியார் நிறுவனமொன்றுடன் இணைந்து உயிர்வாயு அலகு ஒன்றை அமைப்பதற்கென அமைச்சரவைப் பத்திரம் மூலம் 126 மில்லியன் ரூபாய் அங்கீகரிக்கப்பட்டது. எனினும், திறைசேரி 2014ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட தொகையிலிருந்து 91 மில்லியன் ரூபாவை விடுவித்திருந்தது. இத்தொகையில் 10 மில்லியன் ரூபாய் கூட்டுப்பசளைத் தரத்தை சோதனையிடுவதற்கான ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. 2014 செயற்பாட்டுத் திட்டத்திலுள்ள செயற்பாடுகளுக்கென 342 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 75% ஆக இருப்பதோடு இது பெறுமதியில் ரூபாய் 459 மில்லியனாகும்.

# 15. நிதிக்கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஎம்/எல்/சீஎ/1/14/31 | ඔබේ අංකය / உமது இல. / Your No. } | දිනය / திகதி / Date } 2015 செப்தம்பர் 14

தலைவர்
மத்திய சுற்றாடல் அதிகாரசபை.

**மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 6(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் ஓராண்டு காலப்பகுதியில் தீர்வு செய்ய முடியாத ரூபா 7,887,531 தொகையான கொம்போஸ்ட் தொட்டி ஒதுக்கம் மற்றும் ரூபா 66,286,032 தொகையான சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கைக்கான வைப்புக்கள் நடைமுறைப் பொறுப்பின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிரந்தது.

(ஆ) கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற சொத்துக்கள் நியாயமான பெறுமதிக்கு காண்பிப்பதற்காக மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

அரசின் மூலம் வருடாந்தம் வழங்கப்படுகின்ற மானியங்களுக்கான கணக்கு வைத்தல் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படுவதாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் இந்நியமங்களின் பிரகாரம் அரசின் மானியங்கள் கணக்கு வைத்தல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மானியமாகக் கிடைத்த ரூபா 132,787,410 தொகையான 11 வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூலதன மானியமாக கிடைத்த மோட்டார் வண்டியொன்றை கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 21,151,875 தொகையால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நாளாந்த உணவுப் படியாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 10,131,559 தொகை சம்பளம் மற்றும் படிகளாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக பிரயாணச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கொயிகா செயற்திட்ட நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்த காணிக்காக மீளாய்வாண்டிற்குரித்தான வன பரிபாலனத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 900,000 ஆன மதிப்பிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகை செலுத்த வேண்டிய செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் ஒவ்வொரு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) பிளிசரு செயற்திட்டம் செலுத்த வேண்டிய ஒப்பந்த செலவினம் | 121,440,642 | பற்றுச்சீட்டு, செய்யப்பட்ட வேலை |
| (ஆ) பிளிசரு செயற்திட்டம் கூடைகள் கொள்வனவு | 1,188,000 | பொருள் பெறுவனவு பத்திரம் (GRN) இருப்பு பதிவேடு |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

கொயிகா செயற்திட்டத்திலிருந்து 2012 ஆம் ஆண்டில் பிளிசரு செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 2,318,106 தொகையான முற்பணத் தொகை, பெறவேண்டிய ரூபா 81,579,241 ஆன செலுத்த வேண்டிய செலவினம், ரூபா 71,769,174 தொகை என்பவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டம் | பிளாஸ்ரிக் மீள்சுழற்சி செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்களுக்காக பணிக்கொடை கொடுப்பனவிற்காக ரூபா 603,000 தொகை ஒதுக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 109,775 தொகை ஒரு உத்தியோகத்தர் விலகிச் செல்லும் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 1466/5 ஆம் இலக்க வர்த்தமானி | தடிப்பில் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைந்த பொலித்தீன் உள்நாட்டுப் பாவனைக்காக உற்பத்தி செய்தல், பொலித்தீன் உற்பத்திகளை விற்பனை செய்தல் அல்லது |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

| | | |
|---|---|---|
| | | பயன்படுத்துதல் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் இந்தக் கட்டளையை அமுல்படுத்தலின் செயல்முன்னேற்றத்தை பரீட்சிப்பதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 10.3 ஆம் பிரிவு | உத்தியோகத்தர்களின் இடர் கடன் அளவு 10 மாத ஆரம்ப சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு செலுத்த வேண்டிய போதிலும், அதிகாரசபையால் அக்கடன் அளவு 10 மாதங்களின் மொத்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதிகாரசபையினால் மீளாய்வாண்டில் 90 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 9,748,685 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபம் | அதிகாரசபையின் 23 பிரதி பணிப்பாளர்களுக்காக போக்குவரத்துப் படியாக 2,421,000 தொகையும், அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்காக உணவுப் படிகளாக ரூபா 10,131,559 தொகையும், உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு உத்தியோகத்தர்களுக்காக ரூபா 282,500 தொகையும் திறைசேரி அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தன. |
| (உ) | 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | செயற்திட்ட பதவியணியினர் தொடர்பான போக்குவரத்து வசதிகள் செயற்திட்ட பணிப்பாளர்களுக்கு மாத்திரம் உரித்தாக இருந்த போதிலும், பிரதி செயற்திட்ட பணிப்பாளருக்கும் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் பிரிவு | நிர்மாண ஒப்பந்தங்களுக்காக பெறுமதி சேர் வரி (VAT) மீளளிப்புச் செய்தல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட |

வேண்டிய போதிலும், கொயிகா செயற்திட்டத்தின் நில நிரப்பல் நிர்மாணங்களுக்குரிய நிர்மாணக் கம்பனிக்கு மீளளிக்கப்பட்டிருந்த ரூபா 3,610,027 தொகை தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (எ) | 2007 பெப்ரவரி 28 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை | ஹொட்டெல் கட்டணங்கள் அரசின் நிதியிலிருந்து தீர்க்கப்படக் கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக பிளாஸ்ரிக் செயற்திட்டத்தின் மூலம் செயலமர்வுகள், கூட்டங்கள் நடாத்துதல் என்பவற்றிற்காக மீளாய்வாண்டின் போது ஹொட்டெல் கட்டணங்களுக்காக ரூபா 324,965 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 2.5 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தாத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டிலிருந்து "சுற்றாடல் கல்வி தொடர்பான சர்வதேச நிலையம் இலங்கை" என்ற பெயரில் நிறுவனமொன்று ஸ்தாபிக்கப்பட்டு சான்றுப்பத்திர பாடநெறி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் பாடநெறிக்காக பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்காக உள்வாரி மற்றும் வெளிவாரி விரிவுரையாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இப்பாடநெறிகள் அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் புறம்பான நிறுவனமொன்றாக செயற்படுத்தப்படாமல் திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 19,185,000 தொகையான நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி செயற்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறான நடவடிக்கைகளுக்காக தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் "(ப)" இன் பிரகாரம் அறவிடும் அதிகாரம் அதிகாரசபைக்கு இல்லாதிருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் அதிகாரசபையினதும் அதற்குரிய 03 செயற்திட்டங்களினதும் நிதி விளைவுகள் ரூபா 52.7 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் ரூபா 49.4 மில்லியன் மிகையுடன் ஒப்பீடு செய்த போது நிதி விளைவுகளில் ரூபா 102.1 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் திரட்டிய வருமானம் 150.6 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும், செயற்பாட்டுச் செலவினம் ரூபா 252.7 மில்லியனால் அதிகரித்திருந்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

3.2 அதிகாரசபைக்கு எதிராக அல்லது அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் சுற்றாடலை மாசுபடுத்துதல் மற்றும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாமை தொடர்பாக வெளி நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நபர்களுக்கு எதிராக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நீதிமன்றங்களில் 116 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(ஆ) வெளி நிறுவனமொன்று ரூபா 460 மில்லியன் இழப்பீடொன்றும் நபரொருவரால் வழக்கு தொடரப்பட்ட தினத்திலிருந்து நாளொன்றுக்கு ரூபா 10,000 வீதமும் இழப்பீடு கோரி அதிகாரசபைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும், அவ்வழக்குகளிலிருந்து எழக்கூடிய நிகழத்தக்க பொறுப்புக்களின் தன்மை தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

04. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

அதிகாரசபையினால் அது உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பல்வேறு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது

செயற்படுத்தப்பட்டு வந்த 04 பிரதான செயற்திட்டங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் செயலாற்றல் பின்வருமாறு.

(அ) பிளாஸ்ரிக் மீள்சுழற்சி செயற்திட்டத்தின் மீளாய்வாண்டின் செயற்பாடுகளுக்காக ரூபா 45 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 42.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பின்னர் பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் ஆகஸ்ட் மாதம் திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காணப்பட்ட 22 செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 17,413,000 தொகை அச்செயற்பாடுகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

(ii) மேலும் ஆரம்ப செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 02 செயற்பாடுகளுக்காக ரூபா 12,073,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 42.8 மில்லியன் செலவினத்தில் ரூபா 11.6 மில்லியன் அதாவது 27 சதவீதம் செயற்பாட்டு மற்றும் பதவியணியினர் அபிவிருத்தி செலவினமாக செலவிடப்பட்டிருந்தது.

(iv) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 03 செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 50 சதவீதம் அதாவது ரூபா 1,930,000 சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) தொம்பே சுகாதார கழிவுப்பொருள் நிலத்தை நிரப்பும் செயற்திட்டம்**

செயற்திட்டத்திற்காக கிடைக்கப் பெற்ற மானியங்களில் கழிவுப்பொருள் போக்குவரத்து காபேஜ் டிரக் வண்டி மற்றும் டோசர் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக 02 டபிள் கெப் வண்டிகளும் 01 இசுசு கெப் வண்டியும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், அவ்வண்டிகள் சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்ட வாகனங்களாக இணைக்கப்பட்டிருந்தன. மேலும் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ஜீப் வண்டியொன்றும் வான் வண்டியொன்றும் பிளிசரு செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்ததுடன், 02 கெம்பெக்டர்கள் அங்கீகாரமின்றி கடுவல நகர சபைக்கு வழங்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் செயற்திட்டத்தின் அடிப்படை

நோக்கம் கழிவுப்பொருள் முகாமைத்துவமாக இருந்த போதிலும், அச்செயற்திட்டத்தின் சொத்துக்கள் வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் மார்ச் 24 ஆம் திகதி நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமல் ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் விளைவற்று காணப்பட்டமை 2015 மார்ச் 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் கடன் வசதிகளின் அடிப்படையில் கழிவுப்பொருள் அகற்றும் வசதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் (EDCF)

---

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கொரிய அரசாங்கத்திடமிருந்து 33.536 மில்லியன் டொலரும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து 8.350 மில்லியன் டொலரும் ஈடுப்படுத்தப்பட்டு செயற்திட்டம் 2013 நவம்பர் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்டம் 48 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். 2015 யூன் வரையிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 01 வருடமும் 06 மாத காலம் கடந்திருந்த போதிலும், உத்தேச 04 நில நிரப்பும் நிலையங்களின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இத்தாமதத்தினால் மீளாய்வாண்டின் போது கொரிய அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு இணங்கப்பட்டிருந்த 1,340,608 ஐ.அ.டொலரை செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

**(ஈ) பிளிசறு செயற்திட்டம்**

---

2008 – 2010 வரையான 03 வருட காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த செயற்திட்டத்திற்காக திறைசேரியினால் ரூபா 5.633 பில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) செயற்திட்டம் 2010 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2015 ஆகஸ்ட் இறுதி வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 5.633 பில்லியன் தொகையிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 2.352

பில்லியன் தொகை அல்லது 42 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) செயற்திட்டத்தின் நோக்கமொன்றான திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ ஆக்கக்கூறின் கீழ் 117 பிரதேச சபைகளில் கூட்டுப்பசளைத் தளங்களை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம் ரூபா 1,533.34 மில்லியன் நிதி அனுசரணை வழங்கியிருந்தது. இத்தளங்களிலிருந்து சிக்கலுடன் மேற்கொள்ளப்பட்ட 23 தளங்களும், நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும், கூட்டுப்பசளை உற்பத்தி செய்யப்படாத 06 தளங்களும், நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டு வரும் 04 தளங்களும், செயற்பாடற்ற 04 தளங்களும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(iii) இதற்கு மேலாக 03 பிரதேச சபைகளில் கூட்டுப்பசளை தளங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 6,772,253 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ஒரு தளத்தின் நிர்மாணம் 2015 யூன் 15 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 02 தளங்களின் நிர்மாணம் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் கூட்டுப்பசளை தளமொன்று வெளிநாட்டு உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் இடமொன்றில் தற்காலிக தளமொன்றை நிர்மாணிப்பதற்காக இச்செயற்திட்டத்திலிருந்து ரூபா 04 மில்லியன் சிக்கனமற்ற முறையில் செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த அடிப்படையில் பின் பாவனை பிளாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவ தேசிய செயற்திட்ட பணிப்பாளருக்கு அனைத்து படிகளுடன் ரூபா 45,000 ஆன மாதாந்த சம்பளம் மற்றும் வாழ்க்கை செலவினப் படியொன்று மாத்திரம் உரித்தாக இருக்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனத்திற்காக வாகன வாடகை மற்றும் எரிபொருள் படியாக 2013 ஆம் ஆண்டின் போது மாதமொன்றுக்கு ரூபா 70,000 வீதம் 13 சந்தர்ப்பங்களின் போது ரூபா 690,967 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், 2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் அதிகாரசபையின் மோட்டார் வண்டியொன்றும் 140 லீற்றர் பெற்றோலுக்குரிய எரிபொருள் படியும் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) பின் பாவனை பிளாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் மூலம் 2009 ஆம் ஆண்டிலிருந்து களஞ்சியமொன்றிற்காக வீடொன்று வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், இதற்காக 2014 ஆம் ஆண்டின் போது மாதாந்த வாடகையாக ரூபா 30,000 தொகையும், மின்சாரம் மற்றும் நீருக்காக ரூபா 600 தொகையும் காவலாளி ஒருவருக்காக ரூபா 15,000 தொகையுமாக மாதமொன்றிற்கு ரூபா 45,600 வீதம் ரூபா 2,699,400 தொகை 2009 சனவரி முதல் 2014 ஆகஸ்ட் வரை செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டிற்காக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. உரிய பாதுகாப்புப் படி மாதமொன்றிற்கு ரூபா 15,000 வீதம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வினால் பௌதீக ரீதியாக பரிசோதனை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் எந்தவொரு பாதுகாப்பு உத்தியோகத்தரொருவரும் களஞ்சியத்திற்கு பொறுப்பாக காணப்படாததுடன், வருகைப் பதிவேடொன்றும் காணப்படவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிளிசரு செயற்திட்டத்தின் நோக்கங்களிலிருந்து விலகி மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 4,350,717 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பதுளை மாநகர சபையில் பாரியளவிலான கூட்டுப்பசளை தளமொன்றை நிர்மாணிப்பதற்காக 2008 – 2010 ஆண்டுகளில் ரூபா 60,867,560 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த நிர்மாணம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதனால் ரூபா 39,000,000 தொகையொன்று கழிவுகளை அகற்றுவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. கழிவுகளை அகற்றுவது நகர சபையின் செயற்பாடொன்றாக இருப்பதால் இக்கொடுப்பனவானது செயற்திட்ட நிதியம் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) ரூபா 183,000 கிரயத்திலான 13 மோட்டார் சைக்கிள்கள் சலுகை கடன் அடிப்படையில் ரூபா 91,500 வீதம் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், இந்த அடிப்படையில் பெற்றுக்கொண்ட 13 மோட்டார் சைக்கிள்களினால் அதிகாரசபைக்கு ரூபா 1,189,500 ஆன நட்டமொன்றை ஏற்க நேர்ந்திருந்தது.

4.4 **வெளிப்படையான மோசடிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) பின் பாவனை பிளாஸ்ரிக் செயற்திட்டத்தின் மூலம் பொலித்தீன் தயாரிக்கும் இயந்திரமொன்றையும் பிளாஸ்ரிக் பொலித்தீன் கூறு தயாரிக்கும் இயந்திரமொன்றையும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 6,215,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், திட்டமிடலொன்று இல்லாமல் அவசர தேவைப்பாடொன்றாக கருதி இயந்திரத்தை விமான மூலமாக கொண்டு வந்தமையால் ரூபா 1,225,000 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 176,696 கிரயத்திலான 13 கமராக்கல் பிளிசரு செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு அதிகாரசபையின் சுற்றாடல் உத்தியோகத்தர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு நிலையான சொத்துப் பதிவேட்டிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) விபத்திற்குட்பட்ட வாகனமொன்றிலிருந்து ரூபா 270,545 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்த போதிலும், அந்நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

4.5 **விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 20 மைக்ரோனுக்கு குறைவான பொலித்தீன் உற்பத்தி பரிசோதனைக்காக 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 452,660 தொகையான செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 10 பரிசோதனை உபகரணங்கள் 2015 ஏப்ரல் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குழாம் வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 40 மோட்டார் சைக்கிள்கள் 06 மாதங்கள் விளைவற்றிருந்ததுடன், அதில் 27 மோட்டார் சைக்கிள்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தொம்பே சுகநலன் கழிவுப்பொருள் போடப்படுகின்ற நிலத்தை நிரப்பும் செயற்திட்டத்தின் கழிவுகளை தாங்கி நிர்மாணிப்பிற்குரிய நீர் தரத்தின் பரிசோதனை (Baseline data on water quality) மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ள முடியுமாக இருந்த போதிலும், வெளி நிறுவனமொன்றுக்கு ரூபா 108,735 தொகை செலுத்தி பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.7 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாயுவற்ற அமுக்க தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கழிவுப்பொருள் முகாமைத்துவம் செய்யும் செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக அதிகாரசபை 2012 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்றை மேற்கொண்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் 2015 சனவரி மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன், அதன் மதிப்பிடப்பட்டிருந்த கிரயம் ரூபா 121,782,000 ஆக இருந்தது. இம்மதிப்பிடப்பட்ட தொகையில் 53 சதவீதம் அதாவது ரூபா 64,356,400 தொகையான செலுத்தக்கூடிய ஆகக்கூடிய முற்பண எல்லை 20 சதவீதமான அளவை விஞ்சி செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக ரூபா 121 மில்லியன் முதலீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டம் தொடர்பாக சாத்திய வள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2015 யூலை 30 ஆந் திகதி வரை செயற்திட்டம் தொடர்பாக செயன்முன்னேற்ற அறிக்கையொன்று கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பின் பாவனை பிளாஸ்ரிக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக தேவைக்கான மதிப்பீடொன்றில்லாமல் மீளாய்வாண்டின் போது 2,000 கழிவு சேகரிக்கும் தொட்டிகள் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்வதற்காக ரூபா 6,797,976 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அதற்காக தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. இதனால் 1,400 தொட்டிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இரண்டு மாதங்கள் தாமதமாகியிருந்த போதிலும், அதற்காக தாமதக் கட்டணம் அறவிட

முடியாதிருந்தது. குப்பைத் தொட்டிகளின் பெறுவனவுகள் மற்றும் விநியோகத்திற்காக பொருட் பதிவேடொன்று முறையாக பேணப்பட்டிருக்கவில்லை.

## 4.8 ஆளணி நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1,151 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 854 ஆக இருந்தது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் வெற்றிடங்கள் 297 ஆக இருந்தன. காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அங்கீகாரம் கிடைக்காத 08 பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக ரூபா 3,366,535 தொகையான சம்பளம் மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் பதவிகளுக்காக இருக்க வேண்டிய குறித்துரைக்கப்பட்ட தகைமைகளுடன் கூடிய ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றைத் தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனிக்குரிய விபரங்களின் பிரகாரம் 02 அந்தரங்க செயலாளர் பதவிகள் காணப்பட்ட போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனியிலிருந்து விலகி கடமை ஒப்படைப்பு அடிப்படையில் மேலதிக அந்தரங்க செயலாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 33 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் கடன் வசதிகளின் அடிப்படையில் கழிவுகளை அகற்றும் வசதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் முகாமையாளர் (வழங்கல் மற்றும் சேவைகள்) பதவிக்காக குறித்த தகைமைகள் இல்லாத உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்த்து மாதாந்தம் ரூபா 95,000 வீதம் படிகளாக ரூபா 2,203,379 கூட்டுமொத்த சம்பளம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்றக்கூடிய வகையில் 11 ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்வில்லை.

(உ) அமைச்சு அலுவலகத்தின் ஊடக ஒருங்கிணைப்பாளராக இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு 2013 மே முதல் 2014 திசெம்பர் வரை சம்பளம் மற்றும்

மேலதிக நேரக் கொடுப்பனவாக ரூபா 435,146 தொகை பின் பாவனை பிளாஸ்ரிக் செயற்திட்டத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) உரிய தகைமைகளைக் கொண்டிராத மூன்று உத்தியோகத்தர்கள் பிளிசரு செயற்திட்டத்தின் உயர் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், 2015 யூன் 30 வரை செயற்திட்டத்தின் பூர்த்தி செய்யப்படாதிருந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 14 ஆக இருந்தது.

## 4.9 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதிகாரசபையிலிருந்து சம்பளம் பெறுகின்ற போதிலும் அதிகாரசபைக்கு வெளியே வேறு நிறுவனங்களில் சேவைக்காக மூன்று உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) அமைச்சின் அமைச்சருடைய அலுவலகத்தின் ஊடக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவாக ரூபா 435,146 தொகை 2013 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் வரை பின்பாவனை பிளாஸ்ரிக் முகாமைத்துவ செயற்திட்டத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

செயற்திட்டம் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் இவ் அறிக்கைத் திகதி வரை தீர்வுசெய்யப்படாதிருந்த கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) தொம்பே சுகநலன் கழிவுப்பொருள் நிலத்தை நிரப்பும் செயற்திட்டத்தின் நிர்மாண பணிகளுக்குரியதாக ஏற்பட்ட ரூபா 49,623,542 தொகையான

நட்டத்தை அறவிடுவது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை.

(ஆ) தொம்பே சுகாதார கழிவுப்பொருள் போடப்படுகின்ற நிலத்தை நிரப்பும் செயற்திட்ட வளவின் நுளைவு வீதியை நிர்மாணிப்பதற்கு ரூபா 22.26 மில்லியன் தொகையான மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தக்காரருக்கு ரூபா 8.15 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை மற்றும் நுளைவு வீதி நியம தரத்திற்கு இல்லாமை.

(இ) தேசிய இரசாயன பொருட் கழிவுகளை நாளதுவரையாக்கும் செயற்திட்டம் மீளாய்வாண்டின் சனவரி மாதத்தின் போது பூர்த்தியாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டடிருந்த போதிலும் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் திட்டத்தைத் தயாரித்தல் 2015 ஏப்ரல் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமை.

(ஈ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் திருத்தப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு தேவையான இனங்காணப்பட்ட 18 துறைகளுக்காக அதிகாரச்சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்காமை.

**5.3 சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கை

நாய கங்க சிறிய அளவிலான நீர் மின் செயற்தித்திட்டத்தின் மூலம் சமநல காட்டில் எளி 07 என்ற பெயரில் அழைக்கப்படும் 07 நீர் வீழ்ச்சிகளில் 06 ஆம் நீர் வீழ்ச்சிக்கு மேலாக அணைக்கட்டொன்றை நிர்மாணித்து நீரைத் திருப்பி மின்நிலையத்தினை அமைத்தல் மூலம் சுற்றடாலுக்கு ஏற்பட்டிருந்த பாதிப்பு தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பாக அதிகாரசபை எதுவித நடவடிக்கையொன்றையும் எடுத்திருக்கவில்லை. இதன் பிரகாரம் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கைக்காக அங்கீகாரத்தை வழங்கும் போது சுற்றாடல் பாதிப்பு நிலைமை கவனத்திற்கொள்ளப்படாமையால் இவ்வாறான சுற்றாடல் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. இதன் பிரகாரம் அதிகாரசபை அடிப்படை சமூகப் பொறுப்பிலிருந்து விலகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

---

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக சுற்றாடல் அங்கீகாரத்தை வழங்குவதற்குரிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கு செயற்திட்ட உத்தேச நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு தவறியிருந்தமை வெளிக்கள பரிசோதனைகளின் போதும் பின்தொடர் பரிசோதனைகளின் போதும் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த அவதானிப்புக்களை கருத்திற் கொள்ளாமல் 2011 ஏப்ரல் 12 ஆந் திகதி முதல் 2017 ஏப்ரல் 12 ஆந் திகதி வரை சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 113 பொதுமக்கள் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், அது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**(இ) சுற்றாடல் முறைப்பாடுகள்**

---

மீளாய்வாண்டினுள் 2053 சுற்றாடல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அதில் 1614 அல்லது 79 சதவீதம் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் முறைப்பாடுகளை தீர்வு செய்யும் செயன்முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) செயற்திட்டங்களை அமுல்படுத்துதலும் கட்டுப்படுத்தலும்
(ஆ) கணக்கீடு
(இ) சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதின் செயன்முன்னேற்றம்
(ஈ) மனிதவள முகாமைமைத்துவம்
(உ) உள்ளகக் கணக்காய்வு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)